367

சக்தி மலர்

ந. வெங்கடராமன், பி. ஏ., பி. எல்

இந்தியக் குடியரசின் அரசியல் அமைப்பு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 NOV 1951

195[illegible] வருடம் ஜனவரி மாதம் 26-உ முதல் அமுலுக்கு வரும் நம் குடியரசின் அரசியலின் முக்கிய அம்சங்களை சாதாரண மக்களும் இந்தப் புத்தகத்தின் மூலம் புரிந்து கொள்ளலாம்.

V2:2
N50
110484

சக்தி

ந்தியக் குடியரசின்
ரசியல் அமைப்பு

ஆசிரியர்
ந. வேங்கடராமன்; பி. ஏ., பி. எல்.,

சக்தி காரியாலயம்
ராயப்பேட்டை, : : சென்னை 14

முதற் பதிப்பு : நவம்பர், 1950
உ ரி மை ப தி வு
செய்யப்பெற்றது.

விலை ரூ. மூன்று
(தபால் செலவு தனி)

சாந்தி பிரஸ், சென்னை–1.

பதிப்புரை

இதுவரை அரசியல் சம்பந்தமாகப் பல வெளியீடுகளை வெளியிட்டிருக்கிறோம்.

இப்பொழுது இந்தியக் குடியரசின் அரசியல் அமைப்பு வெளியிடுகிறது.

இந்தப் புத்தகம் ஒரு வருடத்திற்குமுன் வெளி வந்திருக்க வேண்டியது. சில தடுக்க முடியாத தடைகளால் இப்பொழுதுதான் வெளியிடுகிறது.

இதன் ஆசிரியர் சட்ட நுணுக்கங்களில் திறமையானவர்.

இந்த நூலுக்கு சிறப்புரை எழுதிய ஹைகோர்ட் நீதிபதி ஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரி அவர்களுக்கு எங்கள் நன்றி.

பதிப்பாளர்

APPRECIATION

This bock in easy flowing Tamil is a clear, concise and accurate presentation of The Constitution of India. It is neither too brief nor too detailed. The essential and basic principles of the Constitution are set out fully and its main provisions are well summarised and expounded. The author has offered his criticisms and suggestions as well. He has compared the provisions of The Indian Constitution with the analogous provisions of other Constitutions and discussed, though briefly, their relative merits.

The historical account of the various stages of its growth, from the days of the East India Company onwards, is masterly and illuminating. The present Constitution is best understood in the light of that historical ground.

The introduction of adult suffrage is one of the great land marks of The Constitution. The Citizen's rights and duties must be fully realised, if the declared objects of The Constitution, as set out in its Preamble, have to be achieved. This book is a timely and fruitful Contribution.

I have no doubt that its many excellences will be appreciated.

Mylapore
Madras.

S. Panchapagesa Sastri,
9—11—'50.
(Judge, High Court, Madras.)

சிறப்புரை

இந்திய அரசியல் அமைப்பை ஸரளமான தமிழ் நடையில் தெளிவாகவும் சுருக்கமாகவும் நேரிய முறையில், எடுத்துக் கூறுகிறது, இந்நூல். இது ரத்தனச் சுருக்கமாகவும் இல்லை; ரொம்ப விரிவாகவும் இல்லை. அரசியல் அமைப்பில் முக்கியமான ஆதாரத் தத்துவங்களை பூர்ணமாக எடுத்துக் காட்டி, அதன் முக்கியமான அம்சங்களைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருக்கிறார், இதன் ஆசிரியர். அதனோடு அவர் தம்முடைய விமர்சனங்களையும் அபிப்பிராயங்களையும் கொடுத்திருக்கிறார். இந்திய அரசியல் அமைப்பின் அம்சங்களை இதர நாட்டு அரசியல் அமைப்புகளுடன் ஒப்பிட்டு, ஒப்புமைப் பகுதிகளைக் காட்டி, பரஸ்பரம் அவற்றின் பெருமைகளை, சுருக்கமாக இருந்தாலும், தெளிவாக ஆராய்ந்திருக்கிறார்.

கிழக்கு இந்தியக் கம்பெனி நாள் முதல், இந்த அரசியல் அமைப்பு உருப்பெற்றுப் படிபடியாக வளர்ந்து வந்திருக்கிற தென்பதைக் கூறும் சரித்திரப் பகுதி மிக திறம்படச் சிறந்த முறையில் இருக்கிறது. அந்தச்சரித்திரப் பின்னணியைக் கொண்டு பார்க்கும்போது தான் இப்போது உள்ள அரசியல் அமைப்பை நாம் நன்றாக .அறியமுடியும்.

வயது வந்தோருக்கு வோட்டுரிமை அளிக்கப்பட்டிருப்பது இந்த அரசியல் அமைப்பினால் சாதனையாகியிருக்கும் பேறுகளுள் முக்கியமானது. அரசியல் அமைப்பின் பூர்வ பீடிகையில் குறிக்கப் பெற்றுள்ள லட்சியங்களை அடையவேண்டுமானால் பிரஜா உரிமைகளையும் கடமைகளையும் பூர்ணமாக உணர்ந்து கொள்வது மிக்க அவசியமானது. அத்தகைய நிலையை அடைவதற்கு, இந்நூல் உரிய காலத்தில் வெளியாகி யிருப்பது பெரிதும் பயன்படும்.

இதில் காணும் சிறப்புகளை, வாசகர்கள் சுலபமாக அறிந்து, இந் நூலைப் போற்றுவார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை.

சென்னை,
9—11—'50

எஸ். பஞ்சாபகேச சாஸ்திரி
(நீதிபதி, ஹைகோர்ட்டு, சென்னை.)

முகவுரை

சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்பைப் பற்றி இரண்டு வருஷங்களுக்கு மேலாக விவாதம் நடந்து தீர்க்காலோசனைக்குப் பிறகு, அரசியல் நிர்ணய சபையால் சட்ட ரூபமாக அரசியல் அமைப்பு ஏற்பட்டு உள்ளது. 1950 ஆம் ஜனவரி மீ 26உ முதல் அமுலுக்கு வருகிறது. அரசியலின் முக்கிய அம்சங்களை மக்கள் எல்லோரும் தெரிந்துகொள்வது அவசியம். தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் நம் நாட்டின் புது அரசியலைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற அவாவுடன் இச்சிறு புத்தகத்தை எழுதலானேன்.

சாதாரண மக்கள் புரிந்துகொள்ளக் கூடிய நடையிலேயே எழுத முயற்சி செய்திருக்கிறேன். ஆங்கில அரசியல் சொற்களுக்கு தமிழ் மொழி பெயர்ப்புகள் அநேகமாக சென்ற 14, 15 வருஷங்களாக பத்திரிகைகளிலும் மேடைகளிலும் உபயோகிக்கப்படும் வார்த்தைகளே. கிராமங்களில் கூட வழமையில் வந்து விட்ட "ரயில்," "கோர்ட்டு" போன்ற ஆங்கில வார்த்தைகளுக்குப் பொருத்தமான தமிழ் வார்த்தைகள் இருந்தபோதிலும் மக்கள் பாஷையையே உபயோகிப்பது மேல் என்று கருதினேன். பாஷாபிமானிகள் சிலர் இதற்குக் குறை கூறலாம். பொருத்தமான அல்லது சுருக்கமான தமிழ் பதங்கள் அகப்படாத சொற்களை ஆங்கிலத்திலேயே கொடுத்து ஆங்காங்கு விளக்கம் செய்யப்பட்டு இருக்கிறது.

அசல் கையெழுத்துப் பிரதியைத் திருத்தி தமிழ் நடையைச் சீர்செய்து அரிய யோசனைகளையும் உதவிய, "தினசரி" துணை ஆசிரியர் ஸ்ரீ ரா. வேங்கடராஜுலு அவர்களுக்கும், அரசியல் சொற்களுக்குத் தமிழ் வார்த்தைகளைக் கண்டுபிடிப்பதில் உதவிய, "தினசரி" உதவி ஆசிரியர், ஸ்ரீ தி. ஙா. சுப்ரமணியம் அவர்களுக்கும் எனது நன்றி.

அரசியலின் வளர்ச்சியைப் புரிந்துகொள்ள சரித்திர முகவுரை சேர்க்கப்பட்டு இருக்கிறது. முக்கியமான சில அம்சங்க

ளில் நமது அரசியலைப் பிற நாட்டு அரசியல்களுடன் ஒப்பிட்டு விமர்சனமும் செய்யப்பட்டிருக்கிறது. இதர அரசியல்களைப்பற்றிய விஷயங்கள் [1] சி. எப். ஸ்ட்ராங் என்பவர் எழுதிய [2] புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டவை. இந்த அரிய நூலின் பந்தாவையும் பின்பற்றி இருக்கிறேன். சீரமைப்புக்குரிய யோசனைகளை வரவேற்கிறேன்.

சென்னை
1—12—'49

ஆசிரியர்.

---

1. C. F. Strong 2. Modern Political Constitutions

பொருள் அடக்கம்

அத்தியாயம்	பொருள்	பக்கம்
	பூர்வ சரித்திரம்	1
	முன்னுரை	73
1.	அரசியலின் பாவம் அல்லது ரூபம் - ஏகபாவ அரசா சமஷ்டியா. (Nature of the Constitution—Unitary or Federal). ...	74
2.	அரசியலின் குணம் லகுவானதா பிகுவானதா (Flexible or Rigid Constitution). ...	9
3.	சட்டம் இயற்றும் ஸ்தாபனங்கள் (Legislature). ...	101
4.	நிர்வாகம் (Executive). ...	127
5.	நீதி மன்றங்கள் (Judiciary). ...	138
6.	நிதி உறவுகள் (Financial Relations) ...	150
7.	(i) ராஜ்யங்களிடையே வியாபாரம், போக்குவரத்து (ii) ஜல வசதிகள் சம்பந்தமான தகராறுகள். (Inter-State Trade and Commerce, Interference with Water Supplies) ...	160
8.	நெருக்கடி காலங்களில் விசேஷ அதிகாரங்கள் (Emergency Provisions). ...	163
9.	சிறுபான்மையோர்களின் அக்கறைகள் (Minorities' Interests). ...	168

10.	பிரஜா உரிமை (Citizenship).	...	173
11.	ஜீவாதார உரிமைகள் (Fundamental Rights).	...	176
12.	அரசாங்கக் கொள்கைக்கு வழிகாட்டி சித்தாந்தங்கள் (Directive Principles of State Policy).	...	185
13.	சர்க்கார் ஊழியங்கள் (Public Services).	...	188
14.	தேர்தல்கள் (Elections).	...	195
15.	அரசாங்க பாஷை (Language of the State).	...	198
	திருத்தங்களும் விளக்கங்களும்.	...	205

அரசியல் உரிமைப்போரின் பூர்வ சரித்திரம்

இந்தியாவின் குடியரசு அரசியல் உருவெடுத்திருப்பது, பல சம்பவ சந்தர்ப்பங்களின் விளைவாகும். அதன் வளர்ச்சியை ஆராய்வதற்கு பிரிட்டிஷ் ஆட்சி எற்பட்ட காலம் முதற்கொண்டு கவனித்தால் மாத்திரம் போதுமானது. ஏனென்றால், அரசியல் நிர்ணய சபையால் சட்டமாக்கப்பட்டிருக்கும் அரசியல் பிரிட்டிஷ் ஆட்சியில் எற்பட்ட முந்திய சட்டங்களை அனுசரித்தே இருக்கிறது. நமது பார்லிமெண்டு (மத்திய சட்டசபைகள்), ஸ்டேட் (மாகாணம், சமஸ்தானம்) சட்டசபைகள், இவைகளின் நடைமுறை முதலியன பிரிட்டிஷ் பார்லிமெண்டின் நடைமுறையையும் சம்பிரதாயங்களையும் பெரும்பாலும் தழுவி இருக்கின்றன. தவிரவும், நம் நாட்டில் விரிவான பிரதேசங்களில் ஜனநாயக ஆட்சி முன் காலத்தில் நிலவி வந்தது என்று சொல்லிவிட இயலாது. செங்கல்பட்டு ஜில்லாவிலுள்ள உத்திரமேரூர் கல்வெட்டுக்களிலிருந்தும், இதர ஆதாரங்களிலிருந்தும், மத்திய அரசாங்கங்கள் எந்த நிலைமையில் இருந்தபோதிலும், பரிபூரண கிராம சுய ஆட்சி நீண்ட காலமாக இருந்து வந்திருக்கிறது என்று தெரிகிறது. சிறிய பிரதேசங்களில் குடியரசுகள் பார்லிமெண்டரி முறையில் ஆட்சி நடத்தி வந்தன என்பதற்கும் ஆதாரம் உள்ளது. ஆனால் பல நகரங்கள், கிராமங்கள் அடங்கிய தற்கால ஜில்லா அளவு விஸ்தீரணமாவது உள்ள அரசாங்கங்களில், பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் இயற்றப்பட்ட சட்டங்களின் மூலம் பிரதிநிதிகளின் விருப்பப்படி ஆட்சி செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. அரசன் சில சந்தர்ப்பங்களில் முக்கிய விஷயங்களிலெல்லாம் பெரியோர்களைக் கலந்துகொண்டான், அல்லது தான் உத்தேசிக்கும் காரியங்களுக்கு ஆதரவு தேடினான் என்று பண்டைய நூல்கள் கூறுகின்றன

என்றாலும், அப்படிப்பட்ட பெரியோர்கள் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை. மேலும் அம்மாதிரியாகக் கலந்து ஆலோசிப்பது என்பது நிரந்தரமாக நடைபெற்று வந்தது என்று சொல்வதற்கில்லை. நம் நாட்டில் மட்டும் அல்ல, எந்நாட்டிலுமே 150 வருஷங்களுக்கு முன்னால் சாதாரண மக்களுக்கு வோட்டுரிமை வழங்கப்பட்டு அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டப் பிரதிநிதிகள் அடங்கிய சபையின் தீர்மானங்களின்படி ஆட்சி நடந்து வந்ததாகத் தெரியவில்லை. ஐரோப்பாவில் கிரேக்க தேசத்தில் இருந்த நகர குடியரசுகளும் நம் நாட்டில் இருந்த குடியரசுகளும் மிகச் சிறிய பிரதேசங்களில் ஆட்சி புரிந்தன. இப்பொழுது ஜில்லாவிற்குள்ள பரப்போ ஜனத்தொகையோ அவைகளுக்கு இருந்ததாகத் தெரியவில்லை. பல நூற்றாண்டுகளாக பார்லிமெண்டரி ஆட்சி நடைபெறும் இங்கிலாந்திலே கூட, 1832-ம் வருஷத்து ரிபார்ம் ஆக்டுக்கு (Reform Act)ப் பிறகுதான் வோட்டுரிமை தாராளமாக வழங்கப்பட்டு சாதாரண மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் பார்லிமெண்டு கீழ் சபையில் கலந்து கொள்ளுகிறார்கள். அமெரிக்கா (U. S. A.) வில் 18-வது நூற்றாண்டு முடிவில் தான் ஜனநாயக ஆட்சிமுறை ஏற்பட்டது. போக்கு வரத்து வசதி சரியாக இல்லாமல் இருந்தது அத்தகைய நிலைமைக்கு முக்கியமான காரணங்களில் ஒன்று. ரயில் வண்டி ஏற்பட்ட பிறகுதான், சாதாரண மக்கள் சுலபமாக பிரயாணம் செய்யவும் நாட்டின் பொதுக் காரியங்களில் ஈடுபடவும் சௌகரியம் இருக்கிறது. இந்தக் காலமும், பிரிட்டிஷ் ஆட்சி காலமும் நம் தேசத்தைப் பொறுத்தவரை ஒரே சமயத்தில் ஏற்பட்டவை. ஆகவே, பிரிட்டிஷார் வந்த காலத்திலிருந்தே நமது பரிசிலனையைத் தொடங்குவதே சரி. அப்பொழுதுதான் இன்று குடியரசு ஆட்சியை அடைந்திருக்கும் மக்கள் இந்த ஜனநாயக உரிமைக்காக எவ்விதம் போராடி, படிப்படியாகப் பெற்று, பரிபூர்ண குடியரசை அடைந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகும்.

பிரிட்டிஷார் வியாபாரத்திற்காக வந்த அக்காலத்தில், அதாவது 17-வது நூற்றாண்டில் மொகலாய சக்கிரவர்த்திகள் இங்கு ஆட்சி புரிந்து வந்தார்கள். அந்நூற்றாண்டு முடிவில் மொகல் ஆதிக்கம் க்ஷீணிக்க ஆரம்பித்து 18-வது நூற்றாண்டு ஆரம்பத்தில் சிதறுண்டு போயிற்று. வியாபார வசதிகளைத் தேடி

வந்த பிரிட்டிஷார் நாளடைவில் தேசம் முழுவதையும் கைப்பற்றினார்கள். அப்படிக் கைப்பற்றியது, ராணுவ வெற்றிகளின்

1600—1765

மூலமும், கடைசி மொகல் சக்கிரவர்த்தியுடனும் இதர சிற்றரசர்களுடனும் ஏற்பட்ட ஒப்பந்தங்கள், சாஸனங்கள் மூலமும் சாத்தியமாயிற்று. சரித்திர பூர்வமாகப் பார்த்தால் இந்தியாவில் பிரிட்டிஷ் அதிகாரத்தின் மூலங்கள் இரண்டாகும்—பிரிட்டிஷ் மன்னரும் பார்லிமெண்டும் ஒன்று; மொகல் சக்கிரவர்த்தியும், இதர சிற்றரசர்களும் இரண்டாவது.

முதலில், 1600 முதல் 1765 கி. பி. வரையில் பிரிட்டிஷார் அநேகமாய் வியாபாரத்திலேயே ஈடுபட்டிருந்தார்கள். 1765-ம் வருஷத்தில் வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா மாகாணங்களின்

1765-ம் ௵ வங்காளம், பீஹார், ஒரிஸா, திவானி

திவானியை, அதாவது நிலவரி வசூல் செய்யும் உரிமையைக் கடைசி மொகலாய சக்கிரவர்த்தியிடமிருந்து சாஸன மூலமாய் பெற்றார்கள். இந்த வியாபார காலத்தில் ஈஸ்டு இந்தியா கம்பெனி என்ற கூட்டுக் கம்பெனியால் வியாபாரம் நடத்தப்பட்டு வந்தது. வியாபாரத்தை நடத்த இங்கிலாந்தில் அவ்வப்பொழுது ஆட்சி புரிந்த மன்னர்களிடம் அனுமதிசாஸனம் பெற்று, மேற்படி பெயர் கொண்ட கம்பெனியால் வியாபாரம் நடத்தப்பட்டு வந்தது. வியாபார விஷயமாயும், தங்கள் வியாபார ஸ்தலங்களான பாக்டரிகளுக்குள் தங்கள் ஜாதியினர்களின் விவகாரங்களைத் தீர்க்கவும் ஷரத்துக்கள் முதல் சார்டரில் இருந்தன; பிந்தி பார்லிமெண்டு ஆக்டுகள் மூலமாய் அதிகாரம் அளிக்கப்பட்டது. மேற்படி கம்பெனியார்தான் 1765-ம் வருஷத்தில் திவானி சாஸனம்பெற்றார்கள்.

இந்நாட்டின் நிலைமையையும் சுதேச அரசர்களுக்குள்ள விரோதங்களையும் பயன்படுத்திக்கொண்டு, ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் பிரிட்டிஷ் சர்க்காரின் உதவியுடன் நாடுகளைக் கைப்

1765—1850 நாடுகளைக் கைப்பற்றல்

பற்ற அக்காலத்திலேயே ஆரம்பித்தார்கள். நாளடைவில் வியாபாரத்தை ஒடுக்கிக்கொண்டு, தேசம் பூராவையும் 1850-ம் ஆண்டிற்குள் கைப்பற்றி விட்டார்கள். இந்தக் காலத்தை சரித்திர ஆசிரியர்கள் "இரட்டை கவர்ன்மெண்டு" (Double Government) காலமென்று கூறு

வார்கள். கம்பெனி கவர்ன்மெண்டும், பிரிட்டிஷ் மன்னருடன் கூடின பார்லிமெண்டு கவர்ன்மெண்டும் நம் நாட்டில் அமுலில் இருந்துவந்த காலம் அது.

1857-ம் வருஷத்தில் நடந்த சிப்பாய் கலகம் என்று ஆங்கிலேயரால் கூறப்பட்ட இந்தியாவின் முதல் சுதந்திரப் போரின் பயனாக கம்பெனி ஆட்சி ஒழிக்கப்பட்டு இந்தியாவின் ஆட்சி பிரிட்டிஷ் மன்னரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1858-ம் வருஷத்தில் பிரிட்டிஷ் பார்லிமெண்டு சபையால் இயற்றப்பட்ட இந்தியா கவர்ன்மெண்டு ஆக்ட்படி, நேர்முகமாக மன்னரின் பெயரால் இந்தியா ஆளப்படுமென்று கூறப்பட்டது. இந்தியாவுக்கென்ற தனி மந்திரியின் மூலம் மன்னர் அதிகாரம் செலுத்தப்படவேண்டும். அந்த மந்திரிக்கு ஒத்தாசையாக பதினைந்து அங்கத்தினர்கள் அடங்கிய கவுன்ஸில் அமைக்கப்பட்டது. கலந்து ஆலோசனை செய்வதற்கு மட்டில் கவுன்சிலே ஒழிய, கவுன்ஸில் யோசனைக்குக் கட்டுப்பட்டு இந்தியா மந்திரி நடக்கவேண்டும் என்ற கட்டாயமில்லை. முக்கியமான உத்தியோகங்களுக்கு நியமனம் செய்யும் அதிகாரம் மன்னரிடத்தில் அல்லது கவுன்ஸிலில் உள்ள காரியதரிசிபடத்தில் இருந்தது. உயர்தர உத்தியோகங்களைப் (ஸிவில் ஸர்விஸ்) பூர்த்தி செய்ய சக்கிரவர்த்தியின் எல்லா பிரஜைகளும் போட்டி போடக்கூடிய பரீக்ஷை நடத்தப்பட வேண்டுமென்று விதிக்கப்பட்டது. அப் பரீக்ஷை இங்கிலாந்திலேயே நடைபெற்றது. அவ்வுத்தியோகங்களில் குறிப்பிட்ட பங்குக்கு இந்தியாவிலும் 1923-ம் வருஷம் முதல் பரீக்ஷை நடத்தப்பட்டு அபேக்ஷகர்கள் பொறுக்கப்பட்டு வந்தார்கள். கம்பெனியின் சேனையும் மன்னரின் ஆதிக்கத்திற்கு மாற்றப்பட்டது. மேற்படி ஆக்டால் ஏற்பட்ட மாறுதல் 1858-ம் வருஷம் நவம்பர் மாதம் 1-ம் தேதியில் சக்கிரவர்த்தினியின் பிரகடன மூலம் பகிரங்கப்படுத்தப்பட்டது.

1857-ம் வருஷத்துக்குப் பின்

மேற்படி ஆக்டுக்கு முன், 1853-ம் வருஷத்தில், சட்டம் இயற்றும் காரியங்களுக்காக, கவர்னர் ஜெனரலும் நான்கு கவுன்ஸிலர்களும் அடங்கிய கவர்னர் ஜெனரலின் கவுன்ஸிலானது புது அங்கத்தினர்களைச் சேர்த்து விரிவு செய்யப்பட்டது. அப்படிச் சேர்க்கப்பட்டவர்கள், வங்காள பிரதம நீதிபதியும், இதர நீதிபதிகளில் ஒருவரும், மாகாண கவர்ன்மெண்டுகளால் நியமிக்கப்பட்ட

நான்கு அங்கத்தினர்களுமாவர். அப்படி அமைக்கப்பட்ட கவுன்ஸிலின் மொத்த மெம்பர்கள் 12 பேர். எல்லோரும் உத்தியோகஸ்தர்கள். கவுன்ஸில் நடவடிக்கைகள் வெளியிடப்பட்டு வந்தன; உத்தியோக முறையில் பிரசுரமும் செய்யப்பட்டன. பிரிட்டிஷ் ஆட்சியில் முதன் முதலில் ஏற்படுத்தப்பட்ட சட்டசபை இதுதான். ஆனால், 1853-ம் வருஷத்து ஆக்டுப்படி அமைக்கப்பட்ட கவுன்ஸிலின் அதிகாரங்கள் நீடிக்கவில்லை. பிரிட்டிஷ் பார்லிமெண்டு முறையை அனுசரித்து, நிர்வாக கவர்ன்மெண்டின் காரியங்களைப்பற்றி கேள்விகள் கேட்டும் சரியானவையா அல்லவையா என்று சர்ச்சை செய்தும் நிர்வாக கவர்ன்மெண்டுக்கு அந்த கவுன்ஸில் கஷ்டங்களை ஏற்படுத்தியதென்று, அந்த ஆக்டு 1861-ம் வருஷத்தில் மற்றொரு ஆக்டால் ரத்து செய்யப்பட்டு விட்டது. கவுன்ஸிலின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன.

முதல் சட்டசபையின் அமைப்பு

சட்டம் இயற்றும் விஷயங்களில் மட்டும் கவுன்ஸிலுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இதர அலுவல்கள் யாதொன்றையும் அது செய்யலாகாது என்று தெளிவாக விதிக்கப்பட்டது. மசோதா கொண்டுவருவது சம்பந்தமான தீர்மானங்களைத் தவிர இதர தீர்மானங்களை கொண்டுவரலாகாது. சர்க்காரின் ரெவினியூ (வரி வருமானம்), கடன், மதம், ராணுவ விஷயங்கள், அயல்நாட்டு உறவுகள் இவைகளைப் பொறுத்த நடவடிக்கைகள், கவர்னர் ஜெனரலின் முன்னனுமதி அன்னியில் அக்கவுன்ஸிலில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாகாது. இந்தவித தடை ஐம்பது வருஷங்களுக்கு மேல் இருந்துகொண்டே இருந்தது. கவுன்ஸிலால் நிறைவேற்றப்பட்ட ஒவ்வொரு ஆக்டும் கவர்னர் ஜெனரலின் அங்கீகாரம் பெற வேண்டும். அப்படி அங்கீகாரம் பெற்ற ஆக்டு மன்னரால் நிராகரிக்கப்படலாம். இவ்வித ஷரத்துக்கள் 1947-ம் வருஷம் ஆகஸ்டுமாதம் வரை இருந்தன. கவுன்ஸிலிலுள்ள கவர்னர் ஜெனரலின் சட்டமியற்றும் அதிகாரம், இந்தியாவில் சக்கிரவர்த்தியின் நேர் ஆதிக்கத்திலுள்ள எல்லா பகுதிகளுக்கும் வியாபிக்கும். அப்படிப்பட்ட பகுதிகளிலுள்ள நீதி மன்றங்கள், இடங்கள், வஸ்துக்கள், சக்கிரவர்த்தியின் மேலாதிபத்தியத்துக்கு உள்பட்ட இந்திய

1861-ம் வருஷத்து ஆக்ட்

சமஸ்தானங்களிலுள்ள இந்தியா கவர்ன்மெண்டு சேவகர்கள், இவைகளைப்பற்றி சட்டம் இயற்றலாம். ஆனால், பார்லிமெண்டின் பொது அதிகாரம், பிரஜைகளின் ராஜ விசுவாசத்துக்கு ஆதாரமான எழுத்திலில்லாத சட்டங்கள், அரசியல் அமைப்பு இவைகளைப் பற்றி சட்டமியற்ற அதிகாரம் இல்லை. நெருக்கடியான நிலைமைகளில் தானாகவே அவசரச் சட்டங்களை பிறப்பிவிக்க கவர்னர் ஜெனரலுக்கு விசேஷ அதிகாரம் அளிக்கப்பட்டது. இவ்வதிகாரம் 1935-ம் வருஷத்து ஆக்டில் இன்னும் விரிவடைந்து மாகாண கவர்னர்களுக்கும் அதே அதிகாரம் அளிக்கப்பட்டது. இப்பொழுது அரசியல் நிர்ணய சபை செய்திருக்கும் அரசியலிலும் சட்டசபைகள் கூடியிராத காலத்தில் ஜனாதிபதியோ, அல்லது ஒரு மாகாணமானால் கவர்னரோ, சமஸ்தான யூனியன்களானால் ராஜப்பிரமுகரோ ஒரு குறுகிய காலத்திற்கு அவசரச் சட்டங்களை பிறப்பிக்கலாம்.

புதிதாகச் சேர்க்கப்படும் பிரதேசங்களுக்கு கவுன்ஸில் ஆர்டர்கள் மாதிரி நிர்வாக உத்தரவுகளால் கவுன்ஸிலுடன் கூடின கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரம் இருப்பதாக நடவடிக்கைகள் நடத்தப்பட்டு வந்தன. அப்படிப்பட்ட மாகாணங்கள் "நான்-ரெகுலேஷன் மாகாணங்கள்" என்று அழைக்கப்பட்டன. புது அரசியல் ஆரம்பமாகும்வரை சீப்கமிஷனர் மாகாணங்களுக்கும், இந்தியா கவர்ன்மெண்டு மூலம் நிர்வகிக்கப்படும் விலக்கப்பட்டப் பிரதேசங்களுக்கும் சட்டஞ் செய்ய கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரம் உண்டு.

மேற்கண்ட 1861-ம் வருஷ ஆக்டுப்படி மதராவிலும் (சென்னையிலும்) பம்பாயிலும் லெஜிஸ்லேடிவ் கவுன்ஸில்கள் சட்டசபைகள் ஏற்படுத்தப்பட்டன. அகில இந்தியா சட்டசபை மாதிரியே கவர்னர் அடங்கிய நிர்வாகக் கவுன்ஸிலுக்கு அட்வொகேட் ஜெனரலையும் இதர நியமன உத்தியோக அங்கத்தினர்களையும் சேர்த்து அந்த லெஜிஸ்லேடிவ் கவுன்ஸில் அமைக்கப்பட்டது. இந்திய சட்டசபைக்கு சட்டமியற்ற அதிகாரமுள்ள விஷயங்கள் இன்னவை, மாகாணச் சபைக்கு சட்டமியற்ற அதிகாரமுள்ள விஷயங்கள் இன்னவை என்று வரையறுக்கப்படவில்லை. மாகாணச் சட்டசபைகள் செய்யும் ஆக்டுகளும் கவர்னர் ஜெனரலின் சம்மதத்துக்கு சமர்பிக்கப்பட வேண்டும். இவை சக்கிரவர்த்தியால் நிராகரிக்கப்படலாம். நடவடிக்கைகளைப்

பொறுத்தவரையில் அதே தடைகள் மாகாண சபைகளுக்கும் இருந்தன.

ஹைகோர்ட்டுகளின் ஸ்தாபனம்

அதே வருஷத்தில் (1861) ஹைகோர்ட்டுகளை ஸ்தாபிக்க சக்கிரவர்த்தினிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இதற்காக 1861-ம் வருஷ இந்திய ஹைகோர்ட்டுகள் ஆக்ட் என்ற சட்டமும் செய்யப்பட்டது.

1861-ம் வருஷத்துக்குப் பிறகு சில்லறை விஷயங்களில் 1858-ம் வருஷம், 1861-ம் வருஷத்து ஆக்ட்களைத் திருத்தி சில சட்டங்கள் பிரிட்டிஷ் பார்லிமெண்டால் இயற்றப்பட்டன. 1892-ம் வருஷ இந்திய கவுன்ஸில்கள் ஆக்ட் மூலம் சட்ட சபைகளின் அங்கத்தினர்களின் தொகையை அதிகரிக்க அதிகாரம் அளிக்கப்பட்டது.

1892-ம் வருஷத்து ஆக்ட்

அந்த அங்கத்தினர்களின் நியமன நிபந்தனைகளைப் பொறுத்து கவுன்ஸிலோடு கூடிய இந்தியா காரியதரிசியின் (மந்திரியின்) அனுமதியின்பேரில் கவுன்ஸிலுடன் கூடின கவர்னர் ஜெனரல் விதிகளை ஏற்படுத்தவும் அதிகாரம் அளிக்கப்பட்டது. முக்கியமாக கவுன்ஸிலின் நடவடிக்கைகளைப் பொறுத்த தடைகள் சில நீக்கப்பட்டன—வருஷாந்தர வரவு செலவு (பட்ஜெட்) பிரசங்கத்தின் பேரில் விவாதம் செய்யவும், குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டு கேள்விகள் கேட்கவும் விதிகள் செய்யலாம் என்று கூறப்பட்டது. மாகாணச் சட்டசபைகள் சம்பந்தப்பட்டவரையில், கவர்னர் ஜெனரலின் முன்னனுமதியுடன் கவர்னர் ஜெனரலின் கவுன்ஸிலின் சட்டங்களை மாகாணங்களைப் பொறுத்தமட்டில் ரத்து செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டது.

இந்தக் காலத்தில்தான் இந்திய தேசியவாதிகள் தேசீய காங்கிரஸ் என்ற ஸ்தாபனத்தை ஆரம்பித்து பிரதி வருஷமும் கிறிஸ்துமஸ் விடுமுறை நாட்களில் கூடி கவர்ன்மெண்டில் இந்தியர்கள் பங்கெடுத்துக்கொள்ள வசதிகளளிக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டுக்கு மனு செய்து கொண்டார்கள். காங்கிரஸ் ஆரம்பமாகி சுமார் 20 வருஷங்கள் வரை (1885—1905) சீர்திருத்தங்களுக்கு விண்ணப்பம் செய்துகொள்வதே காங்கிரஸின் போக்காக இருந்தது. முக்கியமாக ஸிவில் உத்தியோகங்கள் முதலிய உயர்தர உத்தியோகங்களுக்கு திறமை வாய்ந்த

இந்திய நாஷனல் காங்கிரஸ் (1885—1905)

இந்தியர்களை நியமிக்கவேண்டும் என்றும், ஸிவில் ஸர்விஸ் போட்டிப் பரீக்ஷையை இந்தியாவிலும் நடத்தவேண்டுமென்றும் தீர்மானங்கள் செய்து கவர்னர் ஜெனரலுக்கும், பார்லிமெண்டுக்கும் சமர்ப்பித்துக் கொண்டிருந்தார்கள். பிரிட்டிஷ் ஆட்சி முறையில் ஸிவில் ஸர்விஸைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் அதிக அதிகாரமும் செல்வாக்கும் படைத்தவர்களாயிருந்தார்கள். ஜில்லா கலெக்டரானவர்கள், ரெவினியூ, மாஜிஸ்டிரேட் அதிகாரங்களைப் பெற்றிருந்ததோடு போலீஸ் மேன்பார்வை முதலிய ஒழுங்கு அமைதிக்கு வேண்டிய காரியங்களை நிர்வகித்துக்கொண்டு, ஜில்லாவுக்கு சிற்றரசர்கள் போலிருந்தார்கள். நீதியிலாகாவில் ஜில்லா ஸெஷன்ஸ் நீதிபதிகள் பெரும்பாலும் ஸிவில் சர்விஸைச் சேர்ந்தவர்களே. அன்றாட நிர்வாகத்தில் அவர்களுக்கிருந்த அதிகாரங்களையும் செல்வாக்கையும் பார்த்து, அவ்வுத்தியோகங்கள் நம் நாட்டினர்களுக்குக் கிடைத்துவிட்டால் அன்னிய ஆட்சியின் கொடுக்குக்குள்ள விஷத்தை எடுத்ததாகிவிடும் என்று கருதினார்கள். ஆனால், இந்தியர் உத்தியோகம் பெற்றாலும் உத்தியோகவர்க்கமுறை ஆட்சியை அனுசரித்து இவர்களும் நடந்து வந்தால், உத்தியோகவர்க்கத்தில் வெள்ளையர்களுக்குப் பதிலாக இந்தியர்கள் புகுவதைத் தவிர, பொது ஜனங்களுக்கு எப்படிப் பயனேற்படும், பொதுஜன வாக்குக்கு மதிப்பு எப்படி உண்டாகிவிடும் என்பதை அவர்கள் கவனிக்கவில்லை. தவிரவும், அக்காலத்து தேசியவாதிகள், ஜனங்களுக்குள் பொருளாதார நிலைமையில் உள்ள மேடு பள்ளங்களை சரிசமனாக்கி அதன்மூலமாய் சமூகத்தில் நியாயமான பொருளாதார நிலைமை ஏற்படவேண்டும் என்ற முக்கியத்தை ஆராயவே இல்லை. இப்படியிருக்கையில் இந்த நூற்றாண்டு ஆரம்பத்தில் வங்காள மாகாணத்தில் தேசீய உணர்ச்சியும் வங்க பாஷாபிலாஷையும் அதிகரித்தன. இந்த முன்னேற்றம் தங்களுடைய ஏகாதிபத்திய முறைக்கு அபாயமென்று கருதி, அப்பொழுது வைஸ்ராயாயிருந்த லார்டு கர்ஸான் வங்காள மாகாணத்தை இரு பாகமாகப் பிரித்து, தனித்தனி மாகாணங்களாக்கினார். இந்தச் செய்கையால் வங்காள மாகாணம் முழுவதிலும் அதிகக் கொதிப்பு உண்டாகி சர்க்காரின் போக்கைக் கண்டிப்பதற்காக வங்காளிகள் "சுதேசி" அயல்நாட்டு சாக்குகளின் " பகிஷ்காரம் " என்ற பொருளாதார

உபாயங்களை பிரயோகஞ் செய்ய மகத்தான கிளர்ச்சியை ஆரம்பித்தார்கள். அதை அடக்க சர்க்கார் கடுமையான அடக்குமுறைச் சட்டங்களை இயற்றி உபயோகித்தார்கள். இந்தக் கிளர்ச்சி வங்க மாகாணத்தோடு மட்டும் நின்றுவிடாமல் நாடு முழுவதும் பரவி, நமது தேசீய உணர்ச்சி தீவிரமாவதற்கு சாதனமாயிருந்தது.

1908-ம் வருஷ மிண்டோ-மார்லி சீர்திருத்தங்கள்

அப்படிப்பட்ட கிளர்ச்சிகளைச் சமாளிப்பதற்கு அரசியலில் இந்தியர்களுக்கு மேற்கொண்டும் கொஞ்சம் பங்கு கொடுக்க சில திருத்தங்களைச் செய்யவேண்டுமென்று பிரிட்டிஷ் சர்க்கார் கருதியது. 1908-ம் வருஷத்தில் மிண்டோ-மார்லி சீர்திருத்தங்களென்று சொல்லப்படும் திருத்தங்களடங்கிய பார்லிமெண்டு ஆக்ட் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் இயற்றப்பட்டது. அந்தச் சீர்திருத்தங்களின் முக்கியமான கருத்து, முன்னிருந்ததை விட சர்க்காரில் பொது ஜனங்களுக்கு மேலும் கொஞ்சம் பங்கு கொடுப்பது என்பதே.

1. கவர்னர் ஜெனரலுடைய நிர்வாக சபையிலும், கவர்னர்களின் நிர்வாக சபைகளிலும் ஒரு ஸ்தானம் இந்தியர்களுக்காக ஒதுக்கப்பட்டது.

2. எல்லா சட்ட சபைகளும் விரிவாக்கப்பட்டன. அங்கத்தினர்களில் ஒரு பகுதியினர் தேர்ந்தெடுக்கப் படவேண்டுமென்று முதன் முதலாகக் கூறப்பட்டது. 1892-ம் வருஷத்துச் சட்டப்படி சில அங்கத்தினர்கள் ஸ்தல ஸ்தாபனங்களின் சிபார்சின் பேரில் நியமிக்கப்பட்டார்கள். நடைமுறையில் ஸ்தல ஸ்தாபனங்களின் சிபார்சு நிராகரிக்கப் படாவிட்டாலும் சிபார்சை ஏற்றுக்கொண்டாக வேண்டுமென்ற கட்டாயம் எதுவும் கிடையாது. 1909-ம் வருஷத்து ஆக்டுப்படி மேற்படி ஸ்தாபனங்கள், வியாபார சபை, சர்வகலாசாலை செனேட், போன்ற இதர ஸ்தாபனங்கள், இவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், விதிகள் படியுள்ள யோக்கிய தாம்சங்கள் பெற்றிருந்தால் சர்க்கார் அங்கீகார மன்னியில் சட்ட சபை அங்கத்தினர் களாவார்கள். நேர்முகமான தேர்தல் கிடையாது. நிலச்சுவான்தார்களுக்கும், தோட்ட முதலாளிகளுக்கும், முகம்மதியர்களுக்கும் உயர்தர யோக்கியதைகள் விதிக்கப்பட்ட சொற்ப எண்ணிக்கையுள்ள வாக்காளர்களால் நேர்முகமான,

தேர்தல், பொதுஸ்தானங்கள் ஸ்தல ஸ்தாபனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களால் பூர்த்தி செய்யப்பட வேண்டியவை.

வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை முதன் முதலில் ஏற்படுத்தியது இந்த ஆக்ட் தான். தேசீய வளர்ச்சிக்குத் தடைபோட ஏகாதிபத்தியத்தால் கண்டுபிடிக்கப்பட்ட உபாயமே இது. பிரிட்டிஷ் சர்க்கார் இந்த முறையை நாளுக்கு நாள் விருத்தி செய்து வகுப்பு வாதத்தைப் பெருக்கிக்கொண்டே வந்திருக்கிறார்கள்.

பெரிய மாகாணங்களில் சட்ட சபைகளில் நிர்வாக கவுன்சிலர்களுக்கு அதிகப்பட்ச அங்கத்தினர்களின் தொகை 50 என்றும், அவர்களில் உத்தியோகஸ்தர்களல்லாத நபர்கள் மெஜாரிட்டியினர் என்றும் நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், உத்தியோகஸ்தரல்லாத நபர்களில் சிலர் சர்க்காரால் நியமனம் செய்யப்படுபவர்கள். உத்தியோகஸ்தர்களும் இதர நியமன அங்கத்தினர்களும் சேர்ந்த தொகை தேர்தல் மூலம் வரும் அங்கத்தினர்களின் தொகைக்கு கொஞ்சம் அதிகமாக இருக்கும்படியாக இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

அகில இந்தியாச் சட்ட சபையும் விரிவாக்கப்பட்டது. சட்ட சபையின் மெம்பர்கள் தொகை 60 என்று நிர்ணயிக்கப்பட்டது. அவர்களில் நியமனம் பெறும் உத்தியோகஸ்தர்களான அங்கத்தினர்களே பெருவாரியாவார்கள். தேர்தல் மூலம் வருவோரின் ஸ்தானங்களின் மொத்தம் 27. அவை, மாகாண கவுன்ஸிலுக்கு செய்யப்பட்ட மாதிரியில் வகுப்புவாரியாகவும், தொழில்வாரியாகவும் விநியோகிக்கப்பட்டன. பொதுஸ்தானங்கள், மாகாண சட்டசபை அங்கத்தினர்கள் தேர்ந்தெடுப்பது மூலம் பூர்த்தி செய்யப்பட வேண்டியவை.

3. 1861-ம் வருஷத்து, 1892-ம் வருஷத்து ஆக்ட்கள் படி சட்டசபைகள் சட்டங்களை ஆலோசனை செய்யும்கமிட்டிகளாகவே யிருந்தன. அவைகளுக்கு இதர அலுவல்களில்லை. 1892-ம் வருஷத்து சட்டத்தில் வரவுசெலவு திட்டத்தை விவாதிக்க மட்டில் அதிகாரமளிக்கப்பட்டிருந்தது. 1909-ம் வருஷத்து ஆக்டில் வரவுசெலவு திட்டத்தை தீர்க்கமாக விவாதிக்கலாமென்றும், தீர்மானங்கள் கொண்டுவந்து சபையில் வோட் எடுக்கலாமென்றும் கூறப்பட்டது. வரவுசெலவு திட்டத்தைப் பற்றி மட்டுமில்லாமல், பொது விஷயங்கள் எல்லாவற்றையும் பொறுத்துத் தீர்

மானங்கள் கொண்டுவரவும், கேள்விகள் கேட்கவும், கேள்விகளுக்கு அளிக்கப்படும் பதில்களின் பேரில் உபகேள்விகள் கேட்கவும் அதிகாரம் அளிக்கப்பட்டது. ஆனல், சில குறிப்பிட்ட விஷயங்களைப்பற்றி மாத்திரம் சர்ச்சை செய்வதோ அல்லது கேள்விகள் கேட்பதோ முடியாது. மற்ற விஷயங்களிலும் கூட தீர்மானம் அல்லது கேள்விக்கு அனுமதி மறுத்துவிட கவர்னருக்கு அதிகாரமுண்டு. சட்டசபைகள் செய்யும் தீர்மானங்களெல்லாம் கவர்ன்மெண்டுக்கு சிபார்சு செய்யும் முறையில்தானே யன்றி கவர்ன்மெண்டைக் கட்டுப்படுத்தக் கூடியவைகளல்ல, அந்தத் தீர்மானங்கள்.

மேற்படி சீர்திருத்தங்களில் புதுக்கொள்கை யாதொன்றும் அனுஷ்டிக்கப்படவில்லை. முன்னிருந்த ஏற்பாட்டிலே கொஞ்சம் முன்னேற்றம், அவ்வளவுதான். "இச் சீர்திருத்தங்கள் நேரடியாகவோ, அல்லது மறைவாகவோ இந்தியாவில் பார்லிமெண்டரி ஆட்சிமுறையை ஏற்படுத்துகிறவைகளாக இருக்குமானல் நான் அவைகளில் சம்பந்தப்படமாட்டேன். என் மனதுக் கெட்டிய வரையில் ஜனநாயக ஆட்சி இந்தியாவில் ஏற்படக் கூடியதென்று எனக்குத் தோன்றவில்லை" என்று இந்தியா மந்திரி லார்டு மார்லி சொன்னர்.

இச் சீர்திருத்தங்களின் பயனக இந்திய தேசியவாதிகளுக்குள் இரண்டு கட்சிகள் ஏற்பட்டன. மிதவாதிகள், தீவிரவாதிகள் என்பவையே அக்கட்சிகள். மிதவாதிகள் மிண்டோ-மார்லி சீர்திருத்தங்களை வரவேற்று, அவைகளை நடத்திக்காட்டி நல்ல பெயர் வாங்கி நாளடைவில் சுய ஆட்சி பெறவேண்டும் என்று சொன்னர்கள். நமது லட்சியங்களை அடைய நாம் அனுஷ்டிக்கும் முறை சட்ட வரம்புக்கு உட்பட்டதாக இருக்க வேண்டுமென்றும், பொருளாதார உபாயங்களில் சுதேசிக் கைத்தொழில்கள் விருத்தியடைய வேண்டியதை ஏற்றுக் கொண்டாலும் பிரிட்டிஷ் சரக்குகளை பகிஷ்கரிப்பதென்ற கொள்கையை அரசியல் பாணமாக உபயோகப் படுத்தலாகாதென்றும் மிதவாதிகள் வற்புறுத்தினர்கள். ராஜீய கிளர்ச்சி முறைகள் சட்டவரம்புக் குட்பட்டவைகளா யிருக்கவேண்டும் என்ற அவசியமில்லை என்றும், பிரிட்டிஷ் சர்க்கார் நமது வேண்டுகோளுக்கு இணங்குமாறு பிரிட்டிஷ் சரக்குகளின் பகிஷ்காரத்தை பலப்படுத்த வேண்டுமென்றும், தீவிரவாதிகள் சொன்னர்கள். தேசீய காங்கிரஸில் பிளவு ஏற்

பட்டு, 1907-ம் வருஷத்திய சூரத் காங்கிரஸில் குழப்பமுண்டாகி அது நடைபெறுமல் போயிற்று. அக்காலத்தில் காங்கிரஸில் மிதவாதிகள் பெரும்பான்மையோராய் இருந்தபடியால், தீவிரவாதிகள் விலக்கப்பட்டு 1908-ம் வருஷ முதல் 1914-ம் வருஷம் வரை காங்கிரஸ் மகாசபையானது மிதவாதிகளாலேயே நடத்தப்பட்டு வந்தது.

1914-8 ஐரோப்பிய மகாயுத்தம்

1914-ம் வருஷத்தில் ஐரோப்பாவில் மகாயுத்தம் ஆரம்பமாகி, பிரிட்டனும் ஐரோப்பாவின் முக்கிய நாடுகளும் அதில் ஈடுபட்டிருந்தன. 1918-ம் வருஷ முடிவு வரை யுத்தம் நடந்தது. யுத்த நெருக்கடியை சமாளிக்க பிரிட்டிஷாருக்கு நமது ஒத்தாசை தேவையாயிருந்தது. தவிரவும், வெளி நாடுகளுடன் மகத்தான யுத்தத்திலிருக்கும் காலத்தில் இந்தியாவின் உள்நாட்டு நிலைமை கவலைக்கிடமானல் பிரிட்டிஷாரின் ஏகாதிபத்தியம் ஆபத்தான சங்கடத்தில் சிக்கிக்கொள்ளுமென்று பிரிட்டிஷ் சர்க்கார் உணர்ந்தது. இந்தியாவின் உதவிக்கும் விச்வாஸத்திற்கும் பிரதிப்பிரயோஜனமாக, இந்தியாவுக்கு சுய ஆட்சி அளிப்பதாகவும், ஏகாதிபத்தியத்தில் சுயாட்சி நாடுகளின் அந்தஸ்துக்கு நமது தேசத்தை உயர்த்துவதாகவும், பிரிட்டிஷார் வாக்களித்தார்கள். 1914-ம் வருஷத்தில் மற்றுமொரு சம்பவம் நடந்தது. காங்கிரஸிலிருந்து விலகியிருந்த தீவிரவாதிகள் மறுபடியும் காங்கிரஸில் சேர்ந்து பலம் பெற்றதால் காங்கிரஸ் முக்கியமான தேசீய ஸ்தாபனமாயிற்று. காங்கிரஸின் கொள்கை சுயராஜ்யம் பெறுவதென்று விளக்கப்பட்டது. இரு கட்சியினரையும் திருப்திசெய்வதற்காக சுயராஜ்யம் எத்தகையதென்பது வியக்தமாகச் சொல்லப்படாமல் விடப்பட்டது. இந்தக் காலத்தில்தான் (1914—18) இந்தியாவுக்கு "ஹோம் ரூல்" (சுயாட்சி) வேண்டும் என்ற இயக்கம் பலமாயிற்று. மகாயுத்தம் நமக்கு பல படிப்பினைகளைப் புகட்டியது. பாமர ஜனங்களுக்கு சர்க்காரிடத்திலிருந்த பீதியும் மரியாதையும் குறைந்தன. பிரிட்டிஷ் சர்க்கார் வில்லாதிவில்லர்களென்ற நம்பிக்கை அற்றுப் போயிற்று. மகாயுத்தத்தின் பயனாக, ஒடுக்கப்பட்ட பல தேசத்தவர்களுக்கும் சுயராஜ்யம் கிடைத்து ஐரோப்பாவில் சிறு சிறு தனி ராஜ்யங்கள் பல ஏற்பட்டன, ரஷ்யாவில் பெரிய புரட்சி ஏற்பட்டு ஜார் சக்கிரவர்த்தி, பிரபுக்கள், உத்தியோக வர்க்கம்

இவைகளின் ஆதிக்கம் நிர்மூலமாக்கப்பட்டு, தொழிலாளர்கள் ஆட்சி ஏற்பட்டது. இவையெல்லாம் இத்தேசத்திலிருந்த மிதவாதப் போக்கை ஒழித்தது. 1918-ம் வருஷத்துக்குப் பிறகு மிதவாதிகள், லிபரல்களென்று சொல்லிக் கொள்ளுபவர்கள், பிரிட்டிஷ் சர்க்கார் தயவில் கௌரவ பட்டம் பெற்ற வயது முதிர்ந்த சில நபர்களேயாவார்கள்.

1919-ம் ௵ இந்தியா கவர்ன்மெண்டு ஆக்ட்

யுத்த நெருக்கடியில் தாராளமாய் வாக்களித்த பிரிட்டிஷ் அரசியல்வாதிகள் அபாயம் நீங்கி சமாதானம் ஏற்பட்ட பிறகு, இந்த நாட்டுக்கு டொமினியன் அந்தஸ்து அளிக்க வேண்டுமென்ற வாக்குறுதிகளைப் புறக்கணித்துவிட்டு பலவிதமாய் அவைகளுக்கு வியாக்கியானம் செய்ய ஆரம்பித்தார்கள். சீர்திருத்தங்கள் விஷயமாய் என்ன ஏற்பாடுகள் செய்யலாமென்று இந்தியா மந்திரி இந்நாட்டுக்கு வந்து பலரை விசாரித்து, அதன் பயனாக மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் என்று சொல்லப்படும் அரசியல் மாறுதல்கள், 1919-ம் வருஷத்து இந்தியா கவர்ன்மெண்டு ஆக்ட் மூலமாய் சட்டப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டன. அந்த ஆக்டின் முகவுரையில், இந்நாட்டில் "பொறுப்பாட்சி" (Responsible Government) ஏற்படுத்த வேண்டியதுதான் பிரிட்டிஷ் மன்னருடன் கூடின பார்லிமெண்டின் கொள்கையென்றும், ஆனால் அந்த ஆட்சிமுறை உடனே ஸ்தாபிக்கப்பட இந்தியாவின் நிலைமை இடங்கொடுக்கவில்லையென்றும், அம்முறையில் இந்தியர்களை பயிற்சி செய்து படிப்படியாக பொறுப்பாட்சி ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்றும், அப்படி படிப்படியாக ஏற்றுவதில் ஒரு படியிலிருந்து மேல் படி ஏறுவதற்கு இந்தியர்கள் தகுதியுள்ளவர்களா என்று முடிவு செய்ய பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்குத்தான் உரிமையென்றும் கூறப்பட்டிருந்தது. இந்தக் கொள்கையை அனுசரித்து முதல் தவணையாக அந்த ஆக்டில் கண்ட அரசியல் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. தவிரவும் பத்து வருஷத்துக்கொருதடவை, அச் சீர்திருத்தங்கள் சரியாகப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளப்பட்டனவா, சரியான முறையில் இந்தியர்கள் அரசியலில் வேலைசெய்கிறார்களா என்று, ஒரு கமிஷன் மூலமாய் விசாரணை செய்து, அக்கமிஷன் யாதாஸ்தின் பேரில் மேற்கொண்டு அரசியலில் ஏற்படுத்தவேண்டிய மாறுதல்கள் கவனிக்கப்படுமென்றும் கூறப்பட்டது.

மின்டோ—மார்லி திருத்தங்களின்படி சட்டசபை அங்கத்தினர்கள் சொற்ப வாக்காளர்கலாலும், மறைமுகமானதோர் தேர்தல் முறைப்படியும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஜனங்களுக்கு தாங்கள் ஜவாப்தாரிகள் என்று அவ்வங்கத்தினர்கள் உணர்வதற்கில்லை. தவிர, நிர்வாகத்தைக் கண்டிக்கத்தான் அவர்களுக்கு உரிமையே ஒழிய, நிர்வாகத்தை நடத்தவேண்டுமென்கிற பொறுப்பு இல்லை. ஆகையால், இந்த அரசியல் சீர்திருத்தத்தின்படி அமைந்த சட்டசபையில் தீர்மானங்களும், கேள்விகளும் தகுந்த அதிகாரமுள்ளவையாகவும், பொறுப்பு வாய்ந்தவையாகவும் இல்லை. இந்திய அரசியலின் லக்ஷியம் பொறுப்பாட்சி என்று தெளிவான பிறகு முன்முறை முற்றிலும் அசம்பாவிதமாகும்.

1. பொறுப்பு ஆட்சியில் பயிற்சி ஏற்படவேண்டுமானல் முதன் முதலாக ஸ்தல ஸ்தாபனங்களில் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு பூர்ண அதிகாரம் அளிக்கப்பட வேண்டியது என்று முடிவு செய்யப்பட்டது.

ஸ்தல ஸ்தாபனங்களில் பூர்ண சுதந்திரம்

முனிஸிபாலிடி, தாலுக்கா போர்டு, ஜில்லா போர்டு முதலிய எல்லா ஸ்தாபனங்களிலும் தேர்தல்மூலம் வரும் அங்கத்தினர்களே மெஜாரிடியாக இருக்க வேண்டுமென்றும், நியமன அங்கத்தினர்கள் கால்வாசிக்குமேல் இருக்கலாகாது என்றும், அச் சபைகளின் தலைவர்கள் அங்கத்தினர்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாய் இருக்கவேண்டுமென்றும் மாகாண கவர்ன்மெண்டால் குறிப்பிடப்பட்ட வரிகளை குறிப்பிட்ட எல்லைகளுக்குள் விதித்து செலவு செய்வது அந்த ஸ்தாபனங்களின் பொறுப்பு என்றும், ஸ்தல ஸ்தாபனங்களின் நடவடிக்கைகளில் மாகாண சர்க்கார்கள் சாதாரணமாக தலையிடலாகாதென்றும், பொதுவான கொள்கைகளைக் குறித்து இந்திய சர்க்கார் தீர்மானங்கள் வெளியிடப்பட்டன. கிராமங்களில் பஞ்சாயத்துக்களை ஏற்படுத்தி, பஞ்சாயத்துக்களுக்கு சின்ன சிவில், கிரிமினல் கேஸ்களில் நீதி அதிகாரமும், கல்வி, சுகாதாரத் துறைகளில் நிர்வாக அதிகாரங்களும் அளிக்கப்பட வேண்டுமென்றும் அத் தீர்மானத்தில் கண்டிருந்தது. அந்தத் தீர்மானத்தை அனுசரித்து அந்தந்த மாகாணத்துக்குத் தக்கபடி சட்டமியற்ற புது கவுன்ஸில்களுக்கு சிபார்சு செய்யப்பட்டது. அப்படியே தேர்தல் நடந்து புதுக் கவுன்ஸில்கள் கூடினதும் ஒவ்வொரு மாகாணத்திலும் சட்டங்கள் இயற்றப்பட்டன.

மாகாண சர்க்காரில் ஓரளவு பொறுப்பு

2. "பொறுப்பாட்சி படிப்படியாக ஏற்படுவதற்கு மாகாணங்களில் ஆரம்பம் செய்யவேண்டும்'—மாகாண சர்க்கார்களில் ஓரளவு பொறுப்பு உடனே ஏற்படவேண்டும். சரியான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டவுடன் பூர்ண பொறுப்பு அளிப்பது எங்களுடைய நோக்கம். இந்தியா கவர்ன்மெண்டினுடைய அலுவல்களை சமாளிப்பதற்கு பாதகம் அன்னியில் மத்திய சர்க்கார் ஆதிக்கத்திலிருந்து மாகாண சர்க்கார்களுக்கு சுயாட்சி உடனே கொடுக்கப்படவேண்டும்" என்றது மாண்டேகு செம்ஸ்போர்டு யாதாஸ்து.

இந்தக் கொள்கையை யனுசரித்து வரவுசெலவு இனங்களிலும், சட்டமியற்றும் விஷயங்களிலும், மாகாணங்களுக்கும் மத்திய சர்க்காருக்கும் வரையறைகள் செய்யப்பட்டன.

மாகாண சர்க்கார் நிர்வாகம் இரு பாகங்களாகப் பிரிக்கப்பட்டன. ஒரு பாகம், ஒதுக்கி வைத்துக்கொள்ளப்பட்ட பாகம்; அதாவது, உத்தியோகஸ்தர்களான எக்ஸிகூடிவ் கவுன்ஸிலர்கள் ஆதிக்கத்தில் வைக்கப்பட்ட இலாக்காக்கள்; உதாரணமாக நிலவரி, நீதி, சட்டம், ஒழுங்கு, போலீஸ், ஜெயில்கள் வகைரா ஜனப்பிரதிநிதிகளுக்கு சம்பந்தமில்லாது ஒதுக்கிவைத்துக்கொள்ளப்பட்ட விஷயங்கள். மற்றொரு பாகம், மாற்றப்பட்ட பாகம். அதாவது சட்டசபை அங்கத்தினர்களிலிருந்து பொறுக்கப்படும் மந்திரிகள் வசம் ஒப்படைக்கப்பட்ட இலாக்காக்கள்; உதாரணமாக, கல்வி, சுகாதாரம், ஸ்தல ஸ்தாபனங்கள், விவசாயம், தொழில், கூட்டுறவு முதலியவை மாற்றப்பட்ட பாகத்தைச் சேர்ந்தவை. மந்திரிகள், சட்டசபை அங்கத்தினர்களில் பெருவாரியான ஆதரவு பெற்ற கட்சியிலிருந்து கவர்னரால் நியமிக்கப்படவேண்டும். மந்திரிகளை விலக்க சபைக்கு அதிகாரம் அளிக்கப்படாவிட்டாலும், மந்திரிகளிடத்தில் நம்பிக்கை இல்லை என்று சபை தீர்மானம் நிறைவேற்றினால், கண்யமுள்ள மந்திரிகள் தங்கள் பதவிகளை ராஜீநாமா செய்வார்கள், அல்லது கவர்னர் மந்திரிகளை விலக்கலாம். இந்த ஆட்சி முறைக்குத்தான் "இரட்டை ஆட்சி" என்ற பெயர் வழங்கலாயிற்று.

பொறுப்பாட்சி என்பது உண்மையானால், ஜனங்களின் பிரதிநிதிகள் ஜனங்களால் நேரில் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். ஆகவே, இதுவரை வழங்கின மறைமுகமான தேர்தல் முறை கைவிடப்பட்

டது. தொகுதிகள் நிர்ணயிக்கப்பட்டு, தொகுதிகளில் பதிவான வாக்காளர்களால் ரகஸ்யமாக வோட்டுப் போடுவது முறையில் சபை அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று கூறப் பட்டது. வாக்காளர் யோக்யதாம்சத்தைக் குறைத்து கூடுமான வரை வாக்காளர் தொகை அதிகரிக்கப்பட்டது. சட்டசபைகளில் தேர்தல் மூலம் வரும் அங்கத்தினர்களின் தொகை அதிகரிக்கப் பட்டு உத்தியோகஸ்தர்களான அங்கத்தினர்களின் தொகை குறைக்கப்பட்டது. சட்டசபையின் மொத்த பலமும் அதிகரிக்கப் பட்டது.

ஜனப்பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கத் தொகுதிகள், வகுப்பு கள், மதங்கள், பலவித பர்த்யதைகள், இவைகளுக்கு பிரதிநிதித்து வம் அளிக்குமுறையில் தனித்தனியாக நிர்ணயிக்கப்பட்டன.

வகுப்புவாரி பிரதிநிதித்வம்

1909-ம் வருஷத்து ஆக்ட்படி முகமதியர்களுக்கு மட்டில் தனித் தொகுதிகள் ஏற்படுத் தப்பட்டிருந்தன. மாண்டேகு—செம்ஸ் போர்டு திருத்தங்களின்படி கிறிஸ்தவர், சீக் கியர், ஆங்கிலோ-இந்தியர் முதலிய எல்லா ஜாதிகளுக்கும் தனித் தொகுதிகள் ஏற்படுத்தப்பட்டன. வெவ்வேறு மதஸ்தர்களுக்கு மட்டில்லாமல் ஒரே மதத்திலும் பிளவுகள் ஏற்படுத்தப்பட்டன. ஹிந்துக்களில், பிராமணரல்லாதாருக்கு சென்னை மாகாணத்தி லும், மாராத்தியர்களுக்கு பம்பாய் மாகாணத்திலும், தொகுதிகள் தனிமையாய் இல்லாவிட்டாலும், பொதுஸ்தானங்களில் மேற்படி ஜாதியார்களுக்கு என்று ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டன. மாண் டேகு—செம்ஸ்போர்டு யாதாஸ்தில் வகுப்புத் தொகுதிகளைப் பற்றி பலமான கண்டன மிருந்தும் கடைசியில் பார்லிமெண்டு ஆக்டில் வகுப்புவாத விஷம் பல துறைகளில் விருத்தி யடைந்தது.

ஒதுக்கி வைத்துக்கொள்ளப்பட்ட இலாக்காக்கள் உள்பட எல்லா இலாக்காக்களைப் பொறுத்தும் நிர்வாகத்தினருக்கும் சபை அங்கத்தினருக்கும் தொடர்பு ஏற்படவும், நிர்வாகத்தின் முறை களை சபை அங்கத்தினர்கள் தெரிந்துகொள்ளும் பொருட்டும், ஒவ் வொரு இலாக்காவைப் பொறுத்தும் சபை அங்கத்தினர்களின் நிரந்தர கமிட்டிகள் ஏற்படுத்தப்பட்டன. கமிட்டிகளின் அபிப்பிரா யம் முடிவானதல்ல; சர்க்காரைக் கட்டுப்படுத்தாது. கொள்கை யைப் பொறுத்த எல்லா பிரச்னைகள், குறிப்பிட்ட அளவுக்கு

மேற்பட்ட செலவு ஏற்படக்கூடிய புதுத் திட்டங்கள், இலாக்காக்களின் வேலையைப்பற்றி வருஷாந்தர யாதாஸ்து இவைகளைப் பற்றி தங்கள் அபிப்பிராயங்களை கமிட்டியார் பதிவுசெய்யலாம். அவைகளை சர்க்கார் யோசனைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

சபையின் தீர்மானங்கள், ஒதுக்கி வைத்துக்கொள்ளப்பட்ட விஷயங்களைப் பொறுத்தவையா யிருந்தாலும், மாற்றப்பட்ட விஷயங்களைப் பொறுத்தவையா யிருந்தாலும், சர்க்காரைக் கட்டுப்படுத்தக்கூடியவை அல்ல. மாற்றப்பட்ட விஷயங்களில் சபைத் தீர்மானத்தை சர்க்கார் நிறைவேற்ருவிட்டால், மந்திரிகளுக்கு மான்யங்களை அளிக்க மறுத்தாவது, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றியாவது, மந்திரிகளின் நடத்தையை சபை கண்டிக்கலாம். அதன்பேரில் சாதாரணமாக மந்திரிகள் ராஜீநாமா செய்வார்கள்.

வரவு செலவு திட்டம், மந்திரிகளும் எக்ஸிகூடிவ் கவுன்ஸிலாகளும் அடங்கிய முழு சர்க்காராலும் தயாரிக்கப்பட்டு சட்டசபையில் ஆஜர் செய்யப்படவேண்டியது. மாகாணங்களிலிருந்து மத்திய சர்க்காருக்குக் கொடுபடவேண்டிய உதவிப்பணம், கடன் சுவர்த்தைகள், சர்விஸ்களின் சம்பளங்கள், படிகள், இச்சபையில் வோட்செய்து தீர்மானிக்கப்படக்கூடிய இனங்களல்ல. ஒதுக்கி வைத்துக்கொள்ளப்பட்ட விஷயங்களுக்குக் கோரப்படும் மான்யங்களை சட்டசபை குறைத்தாலும், நிராகரித்தாலும், கவர்னர் அத்தாட்சி செய்து செலவுடன் சேர்த்துவிடலாம். மாற்றப்பட்ட இலாக்காக்கள் விஷயமாய் சட்டசபை தீர்மானங்கள் சாதாரணமாக முடிவானவையாகும். அவைகளின்படி மந்திரிகள் நடக்க வேண்டும்.

வரவு செலவு திட்டத்துக்கு செய்வதைப்போல, ஒதுக்கி வைத்துக்கொள்ளப்பட்ட இலாக்காக்கள் சம்பந்தமான மசோதாவை சட்டசபை நிராகரித்தால் அல்லது திருத்தினுல், கவர்னர் தமது விசேஷாதிகாரத்தின்மூலம் அத்தாட்சிசெய்து அதை நிறைவேற்றலாம். அதன் பேரில் கவர்னர் ஜெனரல் ஆலோசனைக்கு அனுப்பப்படும். அவ்விதமாகவே மாகாணத்தின் அமைதி, ஒழுங்கு இவைகளை நிலைநிறுத்த கவர்னருக்கு விசேஷ அதிகாரம் அளிக்கப்பட்டது.

3. மாகாணங்களில் ஓரளவு பொறுப்பாட்சியை ஏற்படுத்துவதின் பலாபலன்கள் தெரியும் வரை மத்திய சர்க்கார் பிரிட்டிஷ்

பார்லிமெண்டுக்கே ஜவாப்தாரியானதாக இருக்கவேண்டும்.

மத்திய சர்க்கார்

ஆனால், அகில இந்திய சட்டசபையை விரிவாக்கி, சர்க்காரின் போக்கையும் கொள்கையையும் மாற்ற அதிகமான சந்தர்ப்பங்கள் இந்தியர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்று மாண்டேகு—செம்ஸ்போர்டு யாதாஸ்தில் கண்டிருந்தார்கள். இதை யனுசரித்து கவர்னர் ஜெனரலின் நிர்வாக சபையில் இரண்டாவது இந்திய கவுன்ஸிலர் நியமிக்க சிபார்சு செய்யப்பட்டது. இந்தியன் லெஜிஸ்லேடிவ் அசெம்பிளியின் மெம்பர்கள் தொகையை 140-க்கு உயர்த்தி, அதில் 100 நபர்கள் தேர்தல் மூலம் வந்தவர்களாக இருக்கவேண்டுமென்றும், சர்க்கார் நியமன அங்கத்தினர்கள் 40-ல், உத்தியோகஸ்தர்கள் 26-க்கு மேல்படலாகாதென்றும் கூறப்பட்டது. அசெம்பிளியின் ஆயுட்காலம் மூன்று வருஷங்கள். மத்திய லெஜிஸ்லேச்சரில் அசெம்பிளி மட்டுமில்லாமல் ராஜாங்க சபையென்று இரண்டாவது சபையும் சிருஷ்டிக்கப்பட்டது. இந்த சபையின் தொகை 60. அதில் 20 பேர்களுக்குமேல் உத்தியோகஸ்தர்கள் இருக்கலாகாது. இச்சபையின் ஆயுட்காலம் ஐந்து வருஷங்கள் என்று நிர்ணயிக்கப்பட்டது. இரு சபைகளிலும் தேர்தல் மூலம் வரும் அங்கத்தினர்கள் நேர்முகமான தேர்தல் மூலமாய் வரவேண்டும். ராஜாங்க கவுன்ஸில் வோட்டர்களின் யோக்யதாம்சம் அதியுன்னதமாக வைக்கப்பட்டது.

ஏதாவது ஒரு மசோதா சட்டமாக வேண்டுமானால், அது இரு சபைகளாலும் நிறைவேற்றப்படவேண்டும். இரு சபைகளும் ஒவ்வாவிட்டால், இரு சபைகளும் சேர்ந்த கூட்டத்தில் ஆலோசனை செய்யப்பட்டு வோட் எடுக்கப்படும். அவசர நிமித்தம் அல்லது நல்லாட்சி விஷயமாய் ஏதாவது மசோதா கவர்னர் ஜெனரலுக்கு அவசியமென்று தோன்றினால், அதைப் புகுத்த எந்த சபை அனுமதி மறுத்தாலும், அல்லது புகுத்தி விவாதித்து நிராகரித்தாலும், கவர்னர் ஜெனரல் அத்தாட்சிசெய்து மற்றொரு சபையின் மூலமாய் நிறைவேற்றலாம். அசெம்பிளிதான் முற்போக்கான சபையானதால் நிர்வாக சர்க்காருக்கு வேண்டிய சட்டங்களை அத்தாட்சி செய்து ராஜாங்க கவுன்ஸிலில் நிறைவேற்றுவது வழக்கம். இதைத் தவிர அவசரச் சட்டங்களைப் பிறப்பிக்கவும் கவர்னர் ஜெனராலுக்கு விசேஷ அதிகாரமுண்டு.

வரவு செலவு திட்டத்தில் பெரும்பாகம் சட்டசபை வோட்டுக்கு உட்பட்டவை அல்ல. அவைகளைப் பொறுத்து விவாதம் நடத்துவதும் கவர்னர் ஜெனரல் அனுமதித்தாலொழிய ஆகாது. மிகவும் சொற்ப பாகம் மட்டில் அசெம்பிளி வோட்டுக்கு விடக் கூடியவை. எந்தக் கோரிக்கையையாவது அசெம்பிளி மறுத்தால், அல்லது குறைத்தால் அத்தாட்சி செய்து அதைத் திட்டத்தில் சேர்க்க கவர்னர் ஜெனராலுக்கு விசேஷ அதிகாரம் அளிக்கப் பட்டது. தவிரவும், சட்டசபை சம்பந்தமன்னியிலே, நெருக்கடியான சந்தர்ப்பத்தில் பிரிட்டிஷ் இந்தியா அல்லது பிரிட்டிஷ் இந்தியாவின் ஒரு பாகத்தின் பந்தோபஸ்து அல்லது அமைதிக்கு அவசியம் என்று தனக்குத் தோற்றும் செலவை கவர்னர் ஜெனரல் அனுமதிக்கலாம்.

4. இந்த மாறுதல்கள் ஏற்படுமளவு இந்தியா சர்க்கார், மாகாண சர்க்கார்கள் இவைகளின் பேரில் பார்லிமெண்டு செலுத்தும் ஆதிக்கியம், தளர்த்தப்பட வேண்டுமென்றும் மாண்டேகு—செம்ஸ்போர்டு யாதாஸ்தில் கூறப்பட்டது.

1919-ம் வருஷத்து அரசியலமைப்பு அமலுக்கு வருமுன் சர்க்காரிடம் வெறுப்பும் அவநம்பிக்கையும் பொதுஜனங்களிடம் அதிகமாவதற்கான சம்பவங்கள் பல நடந்தன. அவ்வருஷத்தில் ஆப்கானிஸ்தானத்துடன் யுத்தமும் பஞ்சாப் மாகாணத்தில் கலகங்களும் நடந்தன. பஞ்சாபில் ராணுவ ஆட்சி தாண்டவமாடிற்று. ராணுவ அதிகாரிகள் பொதுஜனங்களை பல விதமாய் இழிவுபடுத்தி குரூரமான முறையில் நடத்தினார்கள். பல கோர சம்பவங்களில் முக்கியமாய் இங்கே குறிப்பிடவேண்டியது ஜலியன்வாலாபாக்கில் ஏற்பட்ட

1919-ம் ௵ ஜலியன்வாலா பாக் வதை—ஒத்துழையாமை இயக்கம்—மகாத்மாஜி

வதை. ஜலியன்வாலாபாக் என்பது, பஞ்சாப் மாகாணத்தில் சீக்கியர்களுக்குப் பிரதான நகரமான அமிருதசரஸில் பொது ஜனங்கள் கூடும் சதுக்கம். இதில் ஒரு பொதுக்கூட்டம் நடக்கையில் பிரிட்டிஷ் தளகர்த்தரான ஜெனரல் டயர் என்பான் துருப்புகளைக் கொண்டுவந்து சூழ்ந்துகொண்டு, நிராயுதபாணிகளும் நிரபராதிகளுமான பல்லாயிரம் ஜனங்கள் மத்தியில், கூட்டத்தைக் கலையும்படியாய் முதலில் எச்சரிக்கை செய்யாமல், பீரங்கிகளைப் பிரயோகம் செய்து ஈர இரக்கமன்னியில் சுட்டுத் தள்ளி

றன். இந்தச் சம்பவச் செய்தி பரவியதும் தேசமெங்கும் கொதிப்பு உண்டாயிற்று. மகாத்மா காந்தி தீவிரமாக ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தார். அதே காலத்தில் ஐரோப்பாவில் நடந்த யுத்தத்திற்குப் பிறகு ஏற்பட்ட சமாதான ஏற்பாடுகளின் பயனாக துருக்கி ராஜ்யத்தின் பல பாகங்கள் பிடுங்கப்பட்டு துருக்கி ராஜ்ய சுல்தானும் முகம்மதிய மதத் தலைவருமான கலிபாவின் கௌரவமும் அந்தஸ்தும் குறைக்கப்பட்டன. இந்தக் காரணத்தால் இந்திய முஸ்லிம்களில் அநேகருக்கு பிரிட்டிஷ் சர்க்காரிடம் வெறுப்புண்டாகி முஸ்லிம்கள் பெரும்பாலோரும் மகாத்மாஜியின் தலைமையில் காங்கிரஸால் துவக்கப்பட்ட ஒத்துழையாமை, கிலாபத் இயக்கங்களில் ஈடுபட்டார்கள்.

ஒத்துழையாமையின் அடிப்படையான கொள்கை என்னவென்றால், பிரிட்டிஷ் சர்க்காரானது பலாத்காரம், ஹிம்சை, தீமை இவைகளின் உருவாக இருப்பதால் அவர்களுடன் இந்தியர்கள் ஒத்துழைக்கலாகாதென்பது. சர்க்கார் ஸ்தாபனங்கள் எவையிலும் பங்கெடுத்துக் கொள்ளலாகாது. இதை யனுசரித்து சர்க்கார் சம்பந்தமான எல்லா ஸ்தாபனங்களும், கல்விச்சாலைகள், ஸ்தல ஸ்தாபனங்கள், லெஜிஸ்லேடிவ் கவுன்வில்கள், பகிஷ்கரிக்கப்பட்டன.

இந்த நிலையில் புகுத்தப்பட்ட அரசியல் சீர்திருத்த திட்டத்தில் ஈடுபட தேசியவாதி ஒருவருமில்லை. அத் திட்டத்தால் ஏற்பட்ட இரட்டையாட்சியை நடத்த சர்க்காருடன் ஒத்துழைக்க மிதவாதிகளும் வகுப்புவாதிகளுமே முன்வந்தார்கள். 1908-ம் வருஷத்து மிண்டோ—மார்லி சீர்திருத்தங்கள்படிதான் முகமதியர்களுக்கும் இந்தியாவிலுள்ள இதர மதஸ்தர்களுக்கும் சட்டசபைகளில் தனிப்பிரதிநிதித்துவம் முதன் முதலாக ஏற்பட்டதென்று முன்னால் கவனித்தோம். அதாவது அம்மதஸ்தர்களடங்கிய வோடர் ஜாப்தா தனியாக எடுக்கப்பட்டு அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த மதத்தைச் சார்ந்த பிரதிநிதிகள் சட்டசபைகளில் அமர்ந்தார்கள். இந்த வகுப்புமுறை 1919-ம் வருஷத்து ஆக்டில் இன்னும் விரிவடைந்தது.

வகுப்புவாதத்தை ஆதரிப்பது விருத்தி செய்வது அடிமை நாடுகளில் தங்கள் ஆதிக்கத்தை நீடிப்பதற்கான ஏகாதிபத்தியங்களின் முக்கியமான உபாயங்கள். 1905-ம் வருஷத்தில் தேசீய ஒற்றுமை புணர்ச்சி ஓங்க ஆரம்பித்தது முதல், சிறுபான்மை

யோர்களைக் கிளப்பி விடுவதில் பிரிட்டிஷ் சர்க்கார் ஈடுபட்டிருந்தனர்.

1919-௵ அரசியல்படி துரைத்தனம் ஸி. ஆர். தாஸும் ஸ்வராஜ்யக் கக்ஷியும்

வட இந்தியாவில் சில மாகாணங்களில் 1920-ம் வருஷத்து முதல் தேர்தலில் மிதவாதப் பிரமுகர்கள் சிலர் வெற்றியடைந்து மந்திரி பதவியையுமடைந்தார்கள். சீர்திருத்தங்களைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டியதென்று சொல்லி வந்த மிதவாதிகள் இரட்டை ஆட்சியை நடத்திப் பார்த்தபொழுது, அதன் மூலம் நாட்டுக்கு எவ்வித நன்மையையும் செய்ய முடியாதென்பதையும், தாங்கள் மந்திரி பதவியிலிருந்தபோதிலும் உத்தியோக வர்க்கத்தின் ஸிவில் ஸர்விஸின் செல்வாக்கும் அதிகாரமுமே ஓங்கி இருப்பதையும், ஸிவில் ஸர்விஸின் யோசனைக்கே கவர்னர்கள் செவி சாய்ப்பதையும் உணர்ந்தார்கள். அப்படி உணர்ந்தவுடன் அவர்களில் கண்யம் வாய்ந்தவர்கள் அநேகமாய் பதவிகளை ராஜீநாமா செய்துவிட்டார்கள். மிதவாதிகள் மேலே கண்டபடி பரீக்ஷை பார்த்த முதல் 2, 3 வருஷங்களுக்குப் பிறகு வகுப்புவாதிகளும் உத்தியோக வேட்டையில் இறங்கினவர்களுமே துரைத்தனத்தில் பங்கெடுத்துக்கொண்டார்கள். சென்னை ராஜதானியிலோ ஒரே மூச்சாக 16 வருஷ காலம் வகுப்புவாதமே பிரதான ராஜீயக் கொள்கையாகக் கொண்ட ஜஸ்டிஸ் கட்சி என்ற பிராம்மணரல்லாதார் கட்சி இரட்டையாட்சியில் ஈடுபட்டிருந்தது. காங்கிரஸில் ஒரு கட்சியான ஸ்வராஜ்யக் கட்சி வங்க மாகாணத்தில் ஸ்ரீ ஸி. ஆர். தாஸ் தலைமையில் சட்டசபையில் பெருவாரி ஸ்தானங்களைக் கைப்பற்றி மாற்றப்பட்ட இலாக்காக்கள் ஜனப்பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்படுகின்றன என்ற வேஷத்தைக் கலைத்து கவர்னரின் யதேச்சாதிகாரத்தை அம்பலப்படுத்தியது.

சட்ட மறுப்பு இயக்கம் 1921—23

இந்த 15, 16 வருஷ காலம் பூராவும் தேசீயக் காங்கிரஸ் ஒத்துழையாமையைக் கொண்டு சர்க்காருடன் சாத்வீக முறையில் போராடி வந்தது. 1921—23 வருஷங்களிலும் தீவிரமாக சட்டமறுப்பு இயக்கம் காங்கிரஸால் நடத்தப்பட்டது. காங்கிரஸின் லக்ஷியம் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சம்பந்தமில்லாத பூர்ண சுயராஜ்யமென்று விளக்கப்

பட்டது. காங்கிரஸை ஒடுக்க, சர்க்கார் அதாவது மாகாணங்களில் மாற்றப்பட்ட இலாக்கா மந்திரிகள் உள்பட பல அடக்குமுறைச் சட்டங்களைக் கையாண்டு வந்தார்கள். தேசம் முழுவதும் அல்லோல கல்லோலம் ஏற்பட்டு தேச மக்களின் சுதந்திர உணர்ச்சி நாளுக்குநாள் விருத்தியாகிக் கொண்டே வந்தது.

15 வருஷகாலம் இரட்டையாட்சி நடந்ததின் பலன்கள்—தேசத்தில் வறுமை ஜாஸ்தியாயிற்று, வரிகள் உயர்த்தப்பட்டன, உபரி வருமானங்கள் உத்தியோகஸ்தர்களின் சம்பளங்களையும் படிகளையும் அதிகரிப்பதற்கு உபபோகப்படுத்தப்பட்டன. பிரஜைகளின் ஜீவாதார உரிமைகளுக்கு சதாகாலமும் தீவினை ஏற்பட்டது. கல்வி, சுகாதாரம், சுபிட்சம் முதலிய நல்லாட்சிக்குள்ள அறிகுறிகள் யாதொன்றும் முன்னேற்றமடையவில்லை. 1919-ம் வருஷத்து இந்தியா கவர்ன்மெண்டு ஆக்ட்படி சீர்திருத்தங்களை பரிசோதிக்க நியமிக்கப்பட்ட ஸைமன் கமிஷன் இரட்டையாட்சி முறை சரியான பலன் அளிக்கவில்லையென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

ஸைமன் கமிஷன் 1927-29 வட்டமேஜை மகாநாடுகள் 1930-32

மாண்டேகு—செம்ஸ்போர்டு ஆக்ட்படி 10 வருஷ கெடுவில் பார்லிமெண்டரி கமிஷன் நியமிக்க வேண்டியதாயிருந்தாலும் இந்தியாவிலிருந்த நிலைமையின் காரணமாக இரண்டு வருஷம் முன்னதாகவே, அதாவது 1927-ம் வருஷத்தில் இந்திய அரசியல் விஷயமாய் விசாரணை நடத்த ஸர் ஜான் ஸைமன் தலைமையில் பார்லிமெண்டு மெம்பர்கள் அடங்கிய ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டது. எல்லாம் வெள்ளைக்கார மயமான இந்தக் கமிஷன் இந்தியாவுக்கு வந்த காலத்தில் மிதவாதிகள் உள்பட தேசீயவாதிகள் எல்லோரும் அக்கமிஷனை பகிஷ்கரித்தார்கள். வகுப்புவாதிகள், ஜமீந்தார்கள், பட்டதாரிகள் மட்டில் கமிஷன் முன் சாக்ஷியம் கொடுத்தார்கள். 1929-ம் வருஷத்தில் கமிஷன் பார்லிமெண்டுக்கு யாதாஸ்து சமர்ப்பித்தது. அதற்குப்பிறகு இந்தியப் பிரதிநிதிகளுடன் கலக்க வேண்டுமென்று வட்டமேஜை மகாநாடுகள் நடைபெற்றன. இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டில் காங்கிரஸின் பிரதிநிதியாக மகாத்மா காந்தியும் கலந்துகொண்டார். பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியப் பிரதிநிதிகளைக் கூப்பிட்டு அபிப்பிராயம்

கேட்டார்களே யொழிய அந்த அபிப்பிராயங்களுக்கு மதிப்புக் கொடுக்கவில்லை. காங்கிரஸ் விலகினபிறகு, மிதவாதிகளும் வகுப்புவாதிகளும் ஒன்றுசேர்ந்து ஆகாகான் தலைமையில் ஏகமனதாய் சமர்ப்பித்த குறிப்பில் (ஜாயிண்டு மெமோராண்டம்) கண்ட மிதமான கோரிக்கைகளைக்கூட ஏற்றுக்கொள்ளவில்லை. எட்டு வருஷ காலமாக பலவகை சர்ச்சைகள் நடந்தபிறகு புது அரசியல் திருத்தங்கள், 1935-ம் வருஷத்து இந்தியா கவர்ன் மெண்டு ஆக்டாக உருவெடுத்தன. இந்த ஆக்டால் நிர்மாணிக்கப் பட்டிருக்கும் மாகாண சுய ஆட்சி, உண்மையில் கிடைத்ததா? அதன் வரையறைகள் என்னவென்றும் ஆராய்ச்சி செய்ய வேண்டியது அவசியமாகும்.

1919-ம் வருஷத்து ஆக்டில், அடிப்படையான நான்கு தத்துவங்கள் உள்ளவையாகச் சொல்லப்பட்டன :—

1. முனிஸிபாலிடிகள் போன்ற ஸ்தல ஸ்தாபனங்களில் பூர்ணமான ஜனப்பிரதிநிதிகளின் ஆதிக்கியம்.

2. மாகாணங்களில் நாளடைவில் பொறுப்பாட்சி ஏற்பட முதல் ஏற்பாடுகள், ஆனால் கடைசி முடிவில் இந்தியா சர்க்கா ரானது பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு ஜவாப்தாரியானது.

3. மேலே கண்டபடி பார்லிமெண்டுக்கு ஜவாப்தாரித் வத்திற்குள்பட்டு இந்தியாவில் இந்தியா கவர்ன்மெண்டின் மேலாதிக்கியம்.

4. மாகாணத்தில் பொறுப்பு ஆட்சித்வம் விருத்தியாகு மளவு பார்லிமெண்டு ஆதிக்கியத்தைத் தளர்த்துவது.

இந்தத் துறைகளிலெல்லாம் 1935-ம் வருஷத்து ஆக்டில் மகத்தான மாறுதல்கள் இருந்ததாகச் சொல்லப்பட்டது.

சமஷ்டி

புது அரசியல் திட்டத்தில் முக்கியமான மாறுதல் என்ன வென்றால், பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களும் இந்திய சமஸ்தா னங்களும் சேர்ந்த சமஷ்டியை நிர்மாணிப்பது. இதுவரை இந்தியா சர்க்கார் பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்குக் கீழ்ப்பட்டு அந்தச் சர்க்காரின் ஆதிக்கியத்துக்குள்பட்ட மாகாண சர்க்கார் களுமடங்கிய (Unitary Govt.,) ஏகபாவ சர்க்காராக இருந்து

வந்தது. மாகாணங்களுக்கு நாளடைவில் பிரத்யேகமாக நிர்வாக அதிகாரங்களும் குறிப்பிட்ட வரி வருமான வசூலும் செலவும் செய்ய அதிகாரங்களும் அளிக்கப்பட்டன.

1935-ம் ௵ இந்தியா கவர்ன்மெண்டு ஆக்ட்

சுதேச மன்னர்களின் ஆதிக்கியத்திற்குள்பட்ட சமஸ்தானங்களில் உள்நாட்டு நிர்வாகத்தை அந்தந்த சமஸ்தானாதிபதிகளே நடத்திக்கொண்டு வந்தார்கள். வெளிநாடுகளுடன் ஒப்பந்தம் முதலியவை செய்ய சமஸ்தானங்களுக்கு உரிமை கிடையாது. இந்திய சர்க்கார் ராணுவ உதவி அளிப்பது விஷயமாயும், இந்திய சர்க்கார் உதவி அளித்திருக்கும் ராணுவங்களின் நிர்வாக விஷயமாயும், சமஸ்தானங்களுடன் பிரத்யேகமாய் ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் இருந்தன. உள்நாட்டு நிர்வாகத்தில் தலையிடுவதில்லை என்ற பொதுக்கொள்கையிருந்தாலும், சமஸ்தானாதிபதியின் கேவலமான நடத்தையாலும், அட்டூழியச் செயல்களாலும் கலவரம் எற்பட்டு, அல்லது தாங்கமுடியாத துராக்கிருத ஆட்சி நடந்து வந்தால், பிரிட்டிஷ் மன்னரின் பிரதிநிதியான வைஸ்ராய் மேலாதிக்கியத்தைச் செலுத்தி அப்படிப்பட்ட சமஸ்தானாதிபதியை அதிபதி ஸ்தானத்திலிருந்து விலகும்படியாகச் சொல்லவோ, அல்லது வைஸ்ராய் குறிப்பிடும் கவுன்ஸிலுக்கு அந்த சமஸ்தான நிர்வாக அதிகாரங்களை ஒப்படைக்கவோ நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வந்தன. இந்த சம்பிரதாயத்தை ஒட்டியே சமீபத்தில் 1948-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் இந்திய சர்க்கார் ஹைதராபாத்தில் போலீஸ் நடவடிக்கையை எடுத்தது.

இப்படிப்பட்ட சம அந்தஸ்து இல்லாத உறுப்புக்கள் சேர்ந்த சமஷ்டியின் விசித்திரம் ஒருபுறமிருக்க, அந்த உறுப்புக்களின் பொருளாதார நிலைமை, நிர்வாகத் தரம் முதலியவைகளும் வெவ்வேறு விதமாக இருந்தன. பிரிட்டிஷ் மாகாணங்களிலிருக்கும் பொருளாதார அபிவிருத்தியும் முன்னேற்றமும் ஒன்றல்லது இரண்டு சமஸ்தானங்களைத் தவிர இதர சமஸ்தானங்களிலில்லை. பொதுஜனங்களுக்கு பிரிட்டிஷ் மாகாணங்களில் அளிக்கப்பட்டிருந்த பிரதிநிதித்வம்கூட சமஸ்தானங்களில் ஒன்றிலும் அளிக்கப்படவில்லை; சமஸ்தானாதிபதிகளின் சுயேச்சாதிகாரத்திலேயே அங்கு ஆட்சி புரியப்பட்டு வந்தது. பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களிலுள்ள பிரஜா உரிமைகள்கூட சமஸ்தானங்களில் கிடையா.

1935-ம் வருஷ இந்திய சர்க்கார் சட்டப்பிரகாரம் சமஷ்டி ஏற்பட்டால் லெஜிஸ்லேச்சரில் அசெம்பிளி அங்கத்தினர்களின் மொத்த சங்கியை, 375-ல், 125-க்கு மேல்படாத அங்கத்தினர்கள் சமஸ்தானங்களின் பிரதிநிதிகள் ஆவார்கள். ராஜாங்க கவுன்ஸிலில் 250 ஸ்தானங்களில் 104-க்கு மேல்படாத ஸ்தானங்கள் சமஸ்தானங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருந்தன. இந்தியாவின் மொத்த ஜனத்தொகையில் சமஸ்தானங்களிலுள்ளது 25 அல்லது 26 சத விகிதந்தான், ஆனால் பிரதிநிதித்வம் அசெம்பளியில் 33.3 சத விகிதமும், கவுன்ஸிலில் 40 சத விகிதமும் நிர்ணயிக்கப்பட்டிருந்தன. பிரிட்டிஷ் இந்தியாவின் மாகாணப் பிரதிநிதிகள், அந்தந்த மாகாண ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளடங்கிய மாகாணச் சட்டசபைகளால் தெரிந்தெடுக்கப்படுவார்கள். சமஸ்தானப் பிரதிநிதிகளோ, அந்தந்த சமஸ்தானாதிபதியால் நியமனம் செய்யப்படுவார்கள். பிரிட்டிஷ் இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்திற்கும் தேசியத்திற்கும் முட்டுக்கட்டைகள் போடவேண்டுமென்கிற எண்ணத்துடனேயே இந்த சமஷ்டித் திட்டம் வகுக்கப்பட்டது என்பதற்கு இதைவிட வேறு அத்தாட்சியும் வேண்டியதில்லை.

அது மட்டுமல்ல; சமஷ்டிக்கும் அதன் உறுப்புக்களுக்கும் அதிகாரங்களையும் அலுவல்களையும் பகிர்வதிலும் வித்யாஸங்கள் இருந்தன. பார்லிமெண்டு ஆக்ட் 7-வது ஷெட்யூல்படி குறிப்பிட்ட சில அதிகாரங்கள் சமஷ்டியால் செலுத்தப்பட வேண்டியவை; மற்றொரு ஜாப்தாவில் கண்டவை சம்பந்தமாக இருவர்களுக்கும் அதிகாரமுண்டு. சமஷ்டிக்கும் மாகாணத்துக்கும் முரண்பாடு ஏற்பட்டால் சமஷ்டிச் சட்டம், சமஷ்டி அதிகாரமே செல்லுபடியுள்ளது. சமஸ்தானங்கள் விஷயத்திலோ ஒவ்வொரு சமஸ்தானமும் சமஷ்டியில் சேருவதற்கு அத்தாட்சியான சேர்க்கைப் பத்திரத்தில் குறிப்பிடும் அதிகாரங்களும் அலுவல்களுமே சமஷ்டிக்கு விட்டுக் கொடுக்கப்படும். அப்படி ஏற்படும் ஒவ்வொரு சேர்க்கைப் பத்திரத்திலும் வெவ்வேறு ஷரத்துக்கள் இருக்கலாம்.

பலவகையில் இவ்வளவு வேறுபாடுகளுள்ள உறுப்புக்களடங்கிய சமஷ்டித் திட்டம் உலகத்திலேயே விசித்திர சம்பவம். வேறு எந்த சமஷ்டியிலும் காணமுடியாத ஷரத்துக்கள் இதில் இருந்தன. இவ்வளவு சிக்கலான அரசியல் திட்டத்தின்

நோக்கம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் குரங்குப்பிடியை தளர்த்தாமலிருப்பதுதான் என்பதற்கு ஐயமில்லை.

அந்த சமஷ்டிக்கு மேலதிகாரி பிரிட்டனிலிருப்பார். அதாவது பார்லிமெண்டு சபையுடன் கூடின பிரிட்டிஷ் மன்னரே மேலதிகாரி. சமஷ்டியின் அமைப்பை மாற்றிக்கொள்ள சமஷ்டிக்கு அதிகாரமில்லை. பிரிட்டிஷ் பார்லிமெண்டால்தான் அதைச் செய்யமுடியும். பிரிட்டிஷ் இந்தியாவுக்கு சட்டமியற்ற பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு அதிகாரம் உண்டு என்றும் செய்யப்பட்டிருந்தது.

மாகாண சுய ஆட்சி

மாகாண சர்க்கார்களின் மீது மத்திய சர்க்காருக்கு, அதாவது இந்திய சர்க்காருக்குள்ள அதிகாரம் தளர்த்தப்பட்டிருந்தாலும், மாகாண சட்டசபைகளில் பெரும்பான்மைக் கட்சியிலிருந்து மந்திரிகள் தேர்ந்தெடுக்கப் பட வேண்டியதென்று கண்டிருந்தாலும், மாகாண சுய ஆட்சி ஏற்படுத்தப்பட்டிருந்தது, என்று திட்டத்தில் சொல்லப்பட்டது. சில்லறை அம்சங்களில் மத்திய சர்க்காரின் ஆளுகை குறைக்கப்பட்டிருக்கலாம்; ஆனால், முக்கியமான காரியங்களில், அதாவது சுயேச்சையிலும் சொந்தத் தீர்மானத்திலும் கவர்னர் நடத்த வேண்டிய அலுவல்கள்—(அவைதான் சர்க்காரின் பிரதான அலுவல்களாகும்) விஷயமாய் கவர்னரானவர் கவர்னர் ஜெனரலின் மேன்பார்வைக்கும் ஆதிக்கத்திற்கும் உட்பட்டிருந்தார்· 54-வது பிரிவுப்படி அந்த அலுவல்களைச் செய்வதில் கவர்னர், மந்திரிகளின் அபிப்பிராயப்படி நடக்கவேண்டியதில்லை. தவிரவும் மாகாணங்களுக்கு விடப்பட்டிருந்த வரி வருமானங்களையும், அந்த வருமானங்களின் பேரில் ஜவாப்தாரியாக்கப்பட்ட செலவுகளையும் பார்த்தால், நாகரிக ஆட்சிக்கு அறிகுறிகளான கல்வி அபிவிருத்தி, சுகாதாரம், தொழில் அபிவிருத்தி, வியாபாரப் பெருக்கு, விவசாயத்தில் நவீன முறைகளைப் புகுத்தி நிலத்தின் வள்ளாமையை விருத்தி செய்வது முதலிய காரியங்களைச் சாதிக்க வசதிகள் போதுமானபடி யில்லை.

பார்லிமெண்டு கூட்டுக் கமிட்டி இந்தத் திட்டத்தைப் பற்றிச் சொன்னது :—

"வியக்தமாக அறுக்கப்பட்ட வரைகளுக்குள் ஒவ்வொரு கவர்னர் மாகாணத்திலும் நிர்வாக அதிகாரிக்கும் சட்டசபைகளுக்

கும் ஏகதேச அதிகாரமிருப்பதும், அப்படிப்பட்ட ஏகதேச அதிகார எல்லைக்குள்பட்ட விஷயங்களில் மத்திய சர்க்காரும் லெஜிஸ்லேச்சரும் (சட்டசபைகள்) தாராளமாய் தலையிடாமல் இருப்பதும் இந்த மாகாண சுய ஆட்சி திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.''

49-வது பிரிவுப்படி சக்கரவர்த்தியின் பேரால், கவர்னரால் மாகாண நிர்வாக அதிகாரம் செலுத்தப்படவேண்டும். எவ்விஷயங்களில் சட்டமியற்ற மாகாணத்துக்கு அதிகாரமுண்டோ அவ்விஷயங்களுக்கு ஆக்டின் ஷரத்துக்குள்பட்டு நிர்வாக அதிகாரம் வியாபிக்கும். அடுத்த பிரிவுப்படி அந்த அதிகாரம் சுயேச்சையில் செலுத்தப்பட வேண்டிய அதிகாரங்கள் நீங்கலாக மந்திரிகள் சபையின் யோசனையின் பேரில் செலுத்தப்பட வேண்டியவை.

மாகாண நிர்வாகம்

கவர்னரின் நிர்வாக அலுவல்கள் மூன்று வகைப்பட்டன:—

1. மந்திரிகளின் யோசனைப்படி கவர்னர் நடத்தும் அலுவல்கள்.

2. கவர்னர் சொந்தத் தீர்மானத்தில் அதிகாரம் செலுத்தும் அலுவல்கள்; இவைகளில் மந்திரிகளை சாதாரணமாய் கலந்துகொள்ளவேண்டும்; ஆனல், மந்திரிகள் யோசனைப்படி நடக்க வேண்டிய அவசியமில்லை.

3. கவர்னர் சுயேச்சாதிகாரத்தில் செய்யும் அலுவல்கள், இவைகளைப் பொறுத்து மந்திரிகளைக் கலக்கவேண்டிய அவசியமே இல்லை; ஆனல், கவர்னர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஆக்ஞா பத்திரப்படி கூடுமானவரை இவ்விஷயங்களிலும் மந்திரிகளைக் கலந்து ஆலோசனை செய்யலாம்.

முதல் வகுப்பில் கண்ட, மந்திரிகளுடைய அபிப்பிராயப்படி செய்யவேண்டிய அலுவல்கள், எண்ணிக்கையில் அதிகமாயிருந்தாலும் அநேகமாய் அன்ருடம் நடத்தவேண்டிய காரியங்களைக் குறித்தவையேயாகும். மூலாதாரக் கொள்கையை மாற்றுவதற்காவது, தாராளமான திட்டங்கள் போடுவதற்காவது இடங்கொடாதவை. ஏகதேசத்திலாவது, சமஷ்டி சட்டசபையுடன் சட்டங்களியற்ற மாகாண சட்டசபைக்கு சம அதிகாரமுள்ள விஷயங்களில்தான் மந்திரிகள் அதிகாரம் செலுத்தக்கூடும். இவைகளில் சட்ட மியற்றப்பட்டால் சட்டத்திற்கு அமுல்

கொடுக்கவேண்டியது நிர்வாக அதிகாரியின் கடமை. ஆனால், சட்டமாகுமுன் தடைகளிருக்கின்றன—கவர்னர் ஜெனரலின் பொதுவான மேற்பார்வை இருக்கின்றது. (பிரிவு 54) மசோதாக்களையும் அல்லது அவைகளில் குறிப்பிட்ட ஷரத்துக்களையும் கொண்டுவர கவர்னரின் முன்னனுமதி வேண்டும். கவர்னர் லெஜிஸ்லேச்சருக்கு (சட்டசபைகளுக்கு) சில மசோதாக்கள் விஷயமாய் சிபார்சு செய்யலாம்; அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கலாம்; சட்டசபையால் நிறைவேற்றப்பட்ட மசோதாவுக்கு சம்மதம் அளிக்காமல் நிராகரிக்கலாம், அல்லது சக்ரவர்த்தியின் இஷ்டத்திற்கு நிறுத்தி வைக்கலாம். ஆகையினால், பார்வைக்குப் பெரிதாயிருந்தாலும் மந்திரிகளின் அலுவல்கள் பல பந்தங்களுக்குட்பட்டு செய்யப்பட வேண்டியதாயிருந்தன. ஆனால், அத்தடைகள், பந்தங்கள், பாதுகாப்புகள் எழுத்திலிருந்தாலும் நடைமுறையில் உபயோகப்படுத்தப்படமாட்டா என்றும், உண்மையிலே ஜனப்பிரதிநிதிகளான மந்திரிகளுக்கு விரிவான அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருப்பது நடைமுறையில் தெரியுமென்றும் பிரிட்டிஷார் தரப்பில் சொல்லப்பட்டது.

பிரஸ்தாப ஆக்டானது பரீக்ஷார்த்தமான முதலெடுப்பு என்பது கவர்னரிடம் ஆதீனப்படுத்தப்பட்ட விசேஷ அதிகாரங்களிலிருந்து தெளிவாகிறது. 53-வது பிரிவுப்படி மாகாண கவர்னர் ஒவ்வொருவருக்கும் ஆக்ஞா பத்திரங்கள் கொடுக்கப்படும். அப்பத்திரங்களைப்பற்றி பார்லிமெண்டரி கூட்டுக் கமிட்டி சொல்லுவதாவது :—

"சாதாரணமாக மந்திரிகளின் அபிப்பிராயப்படி கவர்னர் நடக்கலாம். ஆனால், சந்தர்ப்பங்களுக்குத் தக்கபடி, தன்னபிப்பிராயப்படி நிர்வாகம் நடத்த விரிவான அதிகாரம் அளிக்கும்படியாய் ஆக்ஞாபத்திரங்களில் ஷரத்துக்கள் ஏற்படுத்தலாம், அல்லது குறிப்பிட்ட விஷயங்களில் தன்னிஷ்டப்படி கவர்னர் நடக்கலாமென்று காணலாம்."

இந்த ஆக்ட்படி கவர்னருக்குள்ள சுயேச்சாதிகாரங்கள் சுமார் 30,32 பிரிவுகளில் காணப்பட்டிருந்தன. கவர்னரிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்த சுயேச்சாதிகாரங்களை ஒருங்கே சேர்த்துப் பார்த்தால், கவர்ன்மெண்டு நிர்வாகத்துறையில் முக்கியமான அதிகாரங்களெல்லாம் மந்திரிகளுக்கு சம்பந்தமில்லாமல் செய்யப்பட்டிருந்தன என்பது விளங்கும். சட்டமியற்றும் துறையிலும்

கவர்னர் ஆதிக்கம் விரிவாயிருந்தது. டொமினியன் அந்தஸ்துள்ள நாடுகளில் இருப்பது போல கவர்னர் பெயருக்குமட்டில் தலைவரல்ல. பிரிட்டனில் மன்னருக்குள்ள சிங்காரத் தலைமையல்ல கவர்னர் பதவி. உண்மையில் காரியாம்சத்தில் சர்வாதிகாரம் படைத்த ஆட்சித் தலைவரே கவர்னர்.

கவர்னரின் விசேஷப் பொறுப்புகள்

அடுத்தபடியாக, கவர்னரால் சொந்தத் தீர்மானத்தின் பேரில் செலுத்தப்படவேண்டிய அதிகாரங்களை, அதாவது மந்திரிகளுடன் கலந்துகொண்டு செய்ய வேண்டும் என்ற அவசிய மில்லாத அதிகாரங்களைக் கவனிக்கலாம். ஏற்கனவே குறிப்பிட்டபடி மந்திரிகளைக் கலக்கும்படியான நிபந்தனை யிருந்தாலும், மந்திரிகள் யோசனைப்படி கவர்னர் நடக்கவேண்டும் என்பதில்லை.

1. தனது வேலைகளைச் செய்வதில் கவர்னருக்குள்ள விசேஷப் பொறுப்புகள். பி. 52.

மாகாணத்தின் அமைதிக்கு அபாயமேற்படாமல் தடுப்பது;

சிறுபான்மையோர்களின் நியாயமான உரிமைகளைப் பாதுகாப்பது;

சர்விஸ்காரர்கள் (உயர்ந்த உத்தியோகஸ்தர்கள்) அவர்களை அடுத்தவர்கள் சம்பந்தமான நியாயமான உரிமைகளையும் பாதுகாப்பது;

ஆக்ட் 5-வது பாகம் 3-வது அத்தியாய ஷரத்துக்கள், (வேற்றுமை சம்பந்தமானவை) சட்டத்துறையில் உரியதாகிக் கொடுக்கும் காரியங்களை நிர்வாகத் துறையில் காபந்து செய்வது;

விலக்கப்பட்ட பிரதேசங்களில், அமைதி, நல்லாட்சி நிலைப்பது;

இந்திய சமஸ்தானத்தினுடையவும், சமஸ்தானாதிபதியினுடையவும் உரிமைகள், கௌரவம் இவைகளைப் பாதுகாப்பது;

6-வது பாகப்படி கவர்னர் ஜெனரல் பிறப்பிவிக்கும் உத்தரவுகளை அல்லது கட்டளைகளை நிறைவேற்றுவது;

சொந்தத் தீர்மானத்தில் கவர்னர் செலுத்தவேண்டிய அதிகாரங்களில் முக்கியமானவை கவர்னரின் விசேஷப் பொறுப்புகளைப் பற்றியவை. இவைகளைப் பரிசீலனை செய்து பார்த்தால்,

நிஷ்கர்ஷிக்கக்கூடியவரைகளுக்குள் அகப்படக்கூடியனவா யில்லே. மாகாணத்தின் அமைதிக்கு பங்கமேற்படாமல் தடுப்பதற்குள்ள அதிகாரத்தை ஏற்கனவே பிரிட்டிஷ் கவர்னர்கள் துஷ்பிரயோகம் செய்தார்கள். பயங்கர இயக்கத்திற்கும், பலாத்கார முறைகளுக்கும் மட்டில் அவ்வதிகாரங்கள் பிரயோகம் செய்யப்படுமா அல்லது நியாயமான சுதந்திர உணர்ச்சியை வளர்ப்பதும், சமூக அல்லது பொருளாதார முன்னேற்றங்களே அடிப்படையாகக் கொண்ட கொள்கையைப் பரப்புவதும் இந்த வலேக்குள் சிக்க வைக்கப்படுமா? உதாரணமாக: தேசீய காங்கிரஸின் ராஜீயக் கொள்கைகள், சோஷியலிஸ்டுகளின் பொருளாதாரக் கொள்கைகள் ஆகியவைகளே அனுஷ்டிக்கும் இயக்கங்களும், அமைதிக்கு ஹானி விளேவிக்கக்கூடியன என்று முன்போலவே கருதப்படுமா? பார்லிமெண்டு கூட்டுக் கமிட்டியின் ஜவாப் என்னவென்ருல் அமைதிக்குக் கடுமையான தீவினே என்ற வசனத்தில் பயங்கர இயக்கங்களும், பலாத்கார குற்றங்கள் மட்டும் அடங்கியவையல்ல என்பதுதான்.

சிறுபான்மையோர்களின் நியாயமான உரிமைகளேப் பாதுகாப்பதும் கவர்னரின் அதிகாரமாயிற்று. சிறுபான்மையோர் என்பவர் யார்? மதம், ஜாதி இவைகளே மட்டில் பொறுத்தவையா, அல்லது பொருளாதார நிலேமை, அபிப்பிராயங்கள்—இவைகளேயும் கவருமா?

உதாரணமாக ஜமீந்தாரிகள் விஷயத்தில் குடிகளின் நிலேமையைச் சீர்திருத்த ஏற்பாடுகள் செய்தால் அதில் நிலச்சுவாந்தார்களான ஜமீந்தார்கள் சிறுபான்மையோர் என்ற பேரில் பாதுகாப்புக்கு அருகர்களா? தவிரவும் நியாயமான உரிமையென்ருல் என்ன? இவைகள் தெளிவாய் விளக்கப்படவில்லே. நியாயமான உரிமைகள் என்பதைவிட தெளிவாகச் சொல்லமுடியாதென்றும், "சிறுபான்மையோர்கள்" என்ற பதத்திற்கு சட்டத்தில் அர்த்தம் கொடுப்பது சரியல்லவென்றும், கூட்டுக் கமிட்டி யாதாஸ்தில் கண்டிருந்தது. கவர்னருக்கு விடுத்திருந்த ஆக்ஞாபத்திரத்தில் மதம் அல்லது ஜாதியைப் பொறுத்த சிறுபான்மையோரென்று காணப்பட்டது. ராஜீயக் கக்ஷியையாவது அபிப்பிராயத்தையாவது பொறுத்ததல்லவென்றும் கண்டிருந்தது. ஆனல், அந்தப் பத்திரத்து 17-வது பிரிவு உட்பிரிவில் சாசுவத செட்டில்மெண்டைப் பொறுத்த மசோதாவை கவர்னர் ஜெனரல் ஆலோ

சனைக்கு ஒதுக்கி வைக்கவேண்டுமென்று கண்டிருந்தது. சமூக விஷயத்தில் அல்லது பொருளாதாரத் துறையில் பிரஸ்தாபிக்கப் படும் சீர்திருத்தம் சிறுபான்மையோரென்று கருதப்படும் கூட்டத் தாரால் எதிர்க்கப்படுகிறதென்ற காரணத்தால் சீர்திருத்தத் திற்கு முட்டுக்கட்டை போட கவர்னரின் விசேஷ அதிகாரம் செலுத்தலாகாதென்று கூட்டுக் கமிட்டி விளக்கினார்கள்.

சர்விஸ்கள் சம்பந்தமான ஷரத்துக்களும் மந்திரிகளின் அதிகாரத்தைக் குறைவு படுத்துபவையாகவே இருந்தன. சர்விஸ் களின் சம்பளம், படிகள், ஒழுங்கீன நடவடிக்கைகள் இவைகள் சம்பந்தமாய் கவர்னருக்கு விசேஷப் பொறுப்புகள் விதிக்கப் பட்டிருந்தன. இலாக்காக் காரியதரிசிகள் கவர்னரிடம் நேரில் போகலாம், நிர்வாக விஷயங்களைப் பற்றியும் நேர்முகமாய் போக்கு வரத்து வைத்துக் கொள்ளலாம். மந்திரிகளைப் பொறுக்குவதிலும் அவர்களைக் கலந்து கொள்வதிலும் சட்ட ஷரத்துக்கள் மந்திரிகளின் ஏகமனதான கூட்டு ஜவாப்தாரித்வத் தைப் பொறுத்தவையாயில்லை. இது சம்பந்தமாய் ஆக்ஞாபத்தி ரத்தின் 7-வது பிரிவு வியக்தமாயிருந்தும், அதன் ஷரத்துக் களுக்கு மாறாக முதன் முதலிலேயே சட்டசபைகளில் பெரும் பான்மையோரின் ஆதரவு பெறாத மந்திரிகளை இடைக்கால மந்திரிகளாய் நியமித்ததிலிருந்து கவர்னர்கள் யுக்தானுசாரம் நடந்துகொள்ளலாம் என்று தெரியவந்தது.

கவர்னரின் மகிமை

ஆகையால் மாகாண ஆட்சி பூராவும் கவர்னரைச் சுற்றித் தான் இருந்தது. கவர்னரின் மகிமையைப் பற்றிக் கூட்டுக் கமிட்டியார் சொன்னது எவ் விதத்திலும்சரி—“மாகாணங்களில் பொறுப் பாட்சி வெற்றிகரமாய் நடப்பது மாகாண கவர்னர்களின் குணங்களையும் அனுபவத்தையும் பொறுத்தது.”

மந்திரி சபை

1935-ம் வருஷ இந்திய சர்க்கார் அரசியல் சட்டத்தின் 50-வது பிரிவுப்படி மந்திரிசபை இருக்க வேண்டு மென்று விதிக்கப்பட்டிருந்தது. மந்திரிகளை நியமிப்பது நீக்குவது கவர்னரால் செய்யப்படவேண்டியவை.

மந்திரிகளைப் பொறுக்குவதில் கவர்னர் அனுஷ்டிக்க வேண்டிய முறைகள் சட்டத்தில் சொல்லப்படவில்லை. ஆனால், 53-வது பிரிவுப்படி கவர்னருக்குப் பிறப்பிவித்திருக்கும் ஆக்ஞா

பத்திரங்களில் மந்திரி நியமன முறை காண்பிக்கப்பட்டிருந்தது. ஆக்ஞா பத்திர 7-வது பிரிவுப்படி லெஜிஸ்லேச்சரில் (சட்ட சபைகளில்) பெருவாரியான அங்கத்தினர்களின் ஆதரவு ஸ்திரமாய் கிடைக்கக்கூடியவருடன் கலந்துகொண்டு மந்திரிகளை நியமிக்கவேண்டும். அதாவது மெஜாரிடி கக்ஷித் தலைவரின் யோசனைப்படி நியமனம் செய்யவேண்டும். அப்படிச் செய்வதில் சிறுபான்மையோர் வகுப்புகளுக்கும் மந்திரி சபையில் பிரதிநிதித்வம் கிடைக்குமாறு கூடியவரையில் பிரயத்தினம் செய்ய வேண்டும். மந்திரிகளைப் பொறுக்குவதில் மந்திரிகள் கூட்டாக ஜவாப்தாரித்வத்தை ஏற்றுக்கொள்பவர்களாகவும் இருக்க வேண்டுமென்ற விஷயங்களை கவர்னர் கவனிக்கவேண்டும். ஆக்ஞா பத்திரத்தின் ஷரத்துக்கள் கவர்னருக்கு வழிகாட்டிகளே யொழிய அவைகளுக்கு சட்ட அமுலில்லை. அந்த 53-வது பிரிவு 2-வது உட்பிரிவுப்படி கவர்னரின் செய்கை யாதொன்றும் ஆக்ஞாபத்திரத்துக்கு ஒத்ததாக இல்லை என்று பிரச்னை செய்யப் படலாகாது. 1937-ம் வருஷம் எப்ரல் மாதத்தில் காங்கிரஸ் கக்ஷியினர் பெருவாரியாக இருந்த மாகாணங்களில் காங்கிரஸ் தலைவர்கள் மந்திரி பதவியை ஏற்றுக்கொள்ள மறுத்ததின்பேரில் லெஜிஸ்லேச்சரில் ஆதரவு இல்லாதவர்களை இடைக்கால மந்திரிகளாக நியமித்தார்கள். அப்படிச் செய்தது அரசியல் சட்டத்திற்கு புறம்பானது என்று சொல்லப்பட்டது. ஆனால் அச் சட்டஷரத்துக்களைப் பார்த்தால், அப்படிப்பட்ட நியமனம் சட்ட எழுத்துக்கு விரோதமானதல்ல என்றே சொல்லவேண்டி யிருக்கிறது; சட்ட எழுத்துக்கு புறம்பாயில்லாவிட்டாலும் சட்டத்தின் கருத்துக்கும் ஜவாப்தாரி ஆட்சி தத்துவத்திற்கும் புறம்பானதென்பதில் ஐயமில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் காங்கிரஸ் வாதிகள் பதவி ஏற்குமுன் கேட்ட வாக்குறுதிகளைப் பற்றி ஏற்பட்ட ரஸமான பிரச்னையை இங்கு கவனிக்க வேண்டும். 1937-ம் வருஷத்து சட்டசபைத் தேர்தலில் பஞ்சாப் மாகாணத்தைத் தவிர இதர மாகாணங்களில் காங்கிரஸிற்கு பெருவாரியான ஆதரவு கிடைத்தது. ஆனால் ஆறு மாகாணங்களில் மட்டும், அதாவது மதராஸ், பம்பாய், மத்திய மாகாணம், பீஹார், ஒரிஸ்ஸா, ஐக்கிய மாகாணங்கள் ஆகிய இவைகளில் மற்ற கக்ஷியினர் உதவி இல்லாமல், சபையிலே தீர்மானமான மெஜாரிடி அங்கத்தினர்கள் காங்கிரஸ் கக்ஷியில் வெற்றியடைந்தார்கள். அதன் காரணமாக காங்கிரஸ் கக்ஷி

மந்திரி பதவிகளை ஏற்றுக்கொள்வதா என்கிற பிரச்னை வந்தது. புதிய அரசியலமைப்பு மகாமோசமானதென்பதும் அதை உடைக்கவேண்டுமென்பதும் காங்கிரஸின் கொள்கை. ஒத்துழையாமையை விட்டு சட்டசபைத் தேர்தல்களில் போட்டி போடுவதென்று காங்கிரஸ் தீர்மானித்ததுமுதல், பதவி ஏற்பதா கூடாதா என்ற பிரச்னை கிளம்பி, காங்கிரஸ் கக்ஷியினருக்குள் தீவிரமான அபிப்பிராய பேதம் இருந்துவந்தது. பல மாகாணங்களில் தேர்தல்களில் வெற்றியடைந்ததின் காரணமாக மேலும் அந்தப் பிரச்னையை முடிவு செய்யாமல் ஒத்திப் போட முடியவில்லை. கவர்னரின் விசேஷாதிகாரங்கள், அசைக்க முடியாத ஸிவில் ஸர்விஸ், நிதி வரவு செலவு சம்பந்தமான தடைகள், சட்டப்படி ஈடுவைக்கப்பட்ட வருமானங்கள், வருமானங்களை அதிகரிக்க வசதியில்லாமை, இந்தச் சங்கடங்களின் மத்தியிலே பதவி ஏற்றுக் கொண்டு காங்கிரஸ் திட்டத்தை நிறைவேற்ற முடியுமா என்பது காங்கிரஸ்காரர்களின் மனதில் கவலையை உண்டாக்கியது. இதை முடிவு செய்ய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியும், எல்லா மாகாண சட்டசபைக் காங்கிரஸ் அங்கத்தினர்களும் கூடி தீர்க்காலோசனை செய்ததின் பேரில் பதவி ஏற்பது என்று 18-3-37-ல் தீர்மானித்தார்கள். ஆனால், அந்தத் தீர்மானப்படி மந்திரி பதவிப் பொறுப்பை ஏற்பதற்குமுன் அந்தந்த மாகாண லெஜிஸ்லேச்சர் காங்கிரஸ் தலைவர் அந்தந்த கவர்னரிடம் ஒரு வாக்குறுதி பெற வேண்டியது என்றும் முடிவாயிற்று. அதாவது கவர்னரிடம் கலந்து பேசினதிலிருந்து மந்திரிகளுடைய சட்டத்துக்குள்பட்ட வேலைகள் சம்பந்தமாக கவர்னர் தன்னுடைய விசேஷ அதிகாரங்களைச் செலுத்தமாட்டாரென்றும், அன்றாட நிர்வாகத்தில் தலையிட மாட்டாரென்றும் தனக்கு வாக்களித்திருக்கிறார் என்று, காங்கிரஸ் கட்சித் தலைவர் பகிரங்கமாக சொல்ல முடிந்தால் பதவியேற்கலாம் என்பதுதான் அந்த முடிவு. இந்தத் தீர்மானத்தின்படி ஏழு மாகாணங்களில், காங்கிரஸ் தலைவர்கள் வாக்குறுதி கேட்டு, கவர்னர்களும் மறுத்தார்கள். வாக்குறுதி அளிக்க மறுத்ததின் பேரில் காங்கிரஸ் பதவி ஏற்காமல் போய்விடவே இடைக்கால மந்திரிகள் என்ற விசித்திரப் பிராணிகள் நியமிக்கப்பட்டார்கள். காங்கிரஸ் வாக்குறுதி கேட்டது சரியா, சட்டப்படி கவர்னர்கள் கொடுக்கக் கூடியதா, என்பதைப் பற்றி 2, 3 மாத காலம் ரஸமான விவாதங்கள் நடந்து வந்தன.

பிறகு மாகாணத்தில் நடந்த சில சம்பவங்களைப் பற்றி பார்லிமெண்டில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில், பிரிட்டிஷ் பிரதம மந்திரி, புது அரசியல் ஆக்டுக்குப் பிறகு அவ்விஷயங்கள் மாகாணத்தின் அதிகார வரம்புக்கு உட்பட்டவை, அவைகளைப்பற்றி பார்லிமெண்டு விசாரணை செய்ய பாத்யமில்லை, மாகாணப் பிரதிநிதிகளின் ஜவாப்தாரித்துவம் ஏற்பட்டுவிட்டதால், பார்லிமெண்டு ஜவாப்தாரித்துவம் சாதாரணமாக அற்றுப் போயிற்றென்று சொன்னார். பிந்தி 22-6-37-ல் வைஸ்ராய் இந்தப் பிரச்னையைப்பற்றி நீண்ட அறிக்கை விடுத்தார். இவைகளெல்லாவற்றையும் ஆலோசனை செய்து, தேசத்திலுள்ள நிலைமையின் காரணமாகவும், கடந்த மூன்று மாத சர்ச்சைகளின் பயனாக விசேஷ அதிகாரங்களை கவர்னர்கள் பிரயோகிப்பது நடைமுறையில் சாத்தியமாகாதென்ற காரணத்தாலும், காங்கிரஸ்காரர்கள் பதவி ஏற்றுக்கொள்ளலாமென்று காங்கிரஸ் காரியக் கமிட்டி அனுமதியளித்தது. அதன் பேரில் இடைக்கால மந்திரிகள் ராஜிநாமா செய்து அந்த ஆறு மாகாணங்களிலும் காங்கிரஸ் மந்திரிகள் நியமிக்கப்பட்டார்கள். பிந்தி வடமேற்கெல்லைப்புற மாகாணத்திலும் காங்கிரஸ் திட்டத்திற்கு உறுதியளித்த சில அங்கத்தினர்களைச் சேர்த்துக்கொண்டு காங்கிரஸ் மந்திரி சபை ஏற்பட்டது.

சட்டசபைகளின் ஆயுட்காலம்

சென்னை, பம்பாய், வங்கம், ஐக்ய மாகாணங்கள், பீஹார், அஸ்ஸாம் மாகாணங்களுக்கு அசெம்பிளி, கவுன்ஸில் என்ற இரு சட்டசபைகளும், இதர மகாணங்களுக்கு அசெம்பிளி என்ற ஒரு சபை மட்டும் விதிக்கப்பட்டன. அசெம்பிளியின் ஆயுட்காலம் ஐந்து வருஷங்கள்; ஐந்து வருஷ காலாவதியே அசெம்பிளியின் கலைத்தலாகும். கவுன்ஸிலோ கலைப்பில்லாத நிரந்தர சபை. கவுன்ஸில் அங்கத்தினர்களின் உத்தியோக காலம் ஒன்பது வருஷங்கள். ஆனால், முதல் தேர்தலில் வெற்றி பெற்ற அங்கத்தினர்களில் மூன்றிலொரு பங்கு நபர்கள் 5-வது ஷெட்யூல் ஷரத்துக்கள்படி மூன்றாவது வருஷத்தில் பதவியிலிருந்து விலகுவார்கள். அவர்களின் ஸ்தானங்களுக்கு மறு தேர்தல் நடக்கவேண்டியது. இன்னொரு மூன்றிலொரு பாக அங்கத்தினர்கள் ஆறாவது வருஷத்தில் விலகுவார்கள். அவர்களின் ஸ்தானங்களுக்கு தேர்தல் நடக்கும், பாக்கியுள்ளவர்களுக்கு குறிப்பிட்ட ஒன்பது வருஷ

காலம். இம்மாதிரியான ஏற்பாட்டில், கவுன்ஸில் அங்கத்தினர்களில் மூன்றிலொரு பங்கு ஸ்தானங்கள் பிரதி மூன்று வருஷத்தில் காலியாகி மறுதேர்தல் நடந்து பூர்த்தியாக வேண்டியது. அசெம்பிளியின் ஆயுட்காலம் ஐந்து வருஷங்களென்று கண்டிருந்தாலும் காலவரைக்கு முன் எக்காலத்திலும் கவர்னரால் கலைக்கப் படலாம்.

லெஜிஸ்லேச்சரில் ஸ்தானங்களின் ஜாதி வகுப்புவாரி விநியோகம்

மாகாணச் சட்டசபைகளில் ஸ்தானங்கள் மதம், ஜாதி வாரியாக விநியோகிக்கப்பட்டன. முகம்மதியர்கள், கிறிஸ்துவர்கள், ஆங்கிலோ—இந்தியர் போன்ற சிறுபான்மையோர்களுக்கு ஜனத் தொகையிலுள்ள வீதாசாரத்துக்கு மேல் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது. அந்தந்த மத, வகுப்புப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க அந்தந்த மத, வகுப்பு வாக்காளர்களைக் கொண்ட தொகுதிகள் நிர்ணயிக்கப்பட்டன. ஹிந்து மதத்தைச் சேர்ந்த ஷெட்யூல்ட் ஜாதியார் அல்லது ஹரிஜனங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கத் தேர்தல் இரண்டு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. முதலெடுப்பில் ஹரிஜனங்களை மட்டில் கொண்ட வோட்டர்களால் ஒவ்வொரு பிரதிநிதியுள்ள தொகுதிக்கு நான்கு பேர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அந்த நான்கு பேர்கள் மட்டில் ஜாதி ஹிந்துக்களும் ஹரிஜனங்களும் கலந்த தொகுதிகளின் தேர்தலில் போட்டியிடுவார்கள். அந்த நான்கு பேர்களில் பெருவாரி வோட்டுக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர் ஹரிஜனப் பிரதிநிதியாவார்.

மாகாண லெஜிஸ்லேச்சரின் சட்டமியற்றும் அதிகாரங்கள்

சட்டமியற்றும் விஷயங்களைப் பொறுத்து சமஷ்டிக்கும் மாகாணங்களுக்கும் தனித்தனி ஜாப்தாக்கள் ஆக்டின் 7-வது ஷெட்யூலில் காணப்பட்டு இருந்தன. முதல் ஜாப்தாவில் கண்டவை சமஷ்டி சட்டசபைகளுக்கு ஏகதேச அதிகாரமுள்ள விஷயங்கள்; அவைகளில் மாகாண லெஜிஸ்லேச்சருக்கு அதிகாரமேயில்லை. இரண்டாவது ஜாப்தாவில் கண்டவை மாகாணத்துக்கு ஏகதேச அதிகாரமுள்ளவை. மூன்றாவது ஜாப்தாவில் கண்டவை சமஷ்டிக்கும் மாகாணத்துக்கும் இருவர்களுக்கும் அதிகாரமுள்ள விஷயங்கள். இதுவரையில் இம்

மாதிரியாக மத்திய லெஜிஸ்லேச்சருக்கும் மாகாண லெஜிஸ்லேச்சருக்கும் அதிகாரங்கள் வியக்தமாக பாகுபாடு செய்யப்படவில்லை. குறிப்பிட்ட விஷயத்தில் அதிகாரம் சமஷ்டி அல்லது மாகாண லெஜிஸ்லேச்சருக்கா என்பதும் எந்த லெஜிஸ்லேச்சரிலாவது இயற்றப்படும் சட்டம் செல்லத்தக்கதா என்ற பிரச்னைகள் கிளம்பி சமஷ்டி கோர்ட்டு தீர்மானத்துக்கு வரக்கூடியவை.

99-வது பிரிவு—இந்த ஆக்ட் ஷரத்துக்களுக்குள்பட்டு மாகாண லெஜிஸ்லேச்சர் மாகாணம் பூராவுக்குமல்லது அதின் ஒரு பாகத்திற்கு சட்டமியற்றலாம், அடுத்த பிரிவுப்படி 7-வது ஷெட்யூல் 2-வது ஜாப்தா, மாகாணச் சட்ட ஜாப்தாவில் கண்ட விஷயங்களைப் பற்றி சட்டமியற்ற அதிகாரமுண்டு. மூன்றுவது ஜாப்தா, பொது ஜாப்தாவில் சொல்லப்படும் விஷயங்களைப் பற்றியும் சட்டமியற்ற அதிகாரமுண்டு. மாகாண ஜாப்தாவில் கண்டிருந்த விஷயங்கள் அநேகமாய் மாகாணத்தைப் பொறுத்தவையாகவும் அதன் நிர்வாகத்தை யொட்டினதாகவு மிருந்தன. பெரும்பாலும் அதே ஜாப்தாக்கள் புது அரசியலிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

பொது ஜாப்தாவில் கண்ட விஷயங்களைப்பற்றி சமஷ்டி சட்டத்திற்கும் அல்லது அப்பொழுது வழங்கும் அகில இந்திய சட்டத்திற்கும் மாகாணச் சட்டத்திற்கும் முரண்பாடுகள் இருந்தால், சமஷ்டி சட்டத்திற்கு அல்லது அக்காலம் வழங்கும் இந்தியச் சட்டத்திற்கே அமுல் கொடுக்கப்படும், முரண்பாடு இருக்குமளவு மாகாணச் சட்டம் செல்லாது. முரண்பாடுள்ள மாகாணச் சட்டமானது கவர்னர் ஜெனரலின் ஆலோசனைக்கு நிறுத்திவைக்கப்பட்டு அல்லது சக்கிரவர்த்தியின் இஷ்டத்திற்கு நிறுத்திவைக்கப்பட்டு கவர்னர் ஜெனரலின் அல்லது சக்கிரவர்த்தியின் சம்மதம் பெற்றுவிட்டால் அம்மாகாணத்தில் அச்சட்டத்திற்கு அமுல் கொடுக்கப்படும். (107 பிரிவு)

யுத்தம் அல்லது உள்நாட்டுக் கலவரத்தால் ஆபத்தான நிலைமை ஏற்படக்கூடியதாஞல் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று கவர்னர் ஜெனரல் சுயேச்சாதிகாரத்தில் பகிரங்கமாய் பிரகடனம் செய்யலாம். அப்படிச் செய்வதின் பேரில் மாகாணச் சட்ட ஜாப்தாவில் கண்ட விஷயங்களைப் பொறுத்தும் சட்டமியற்ற சமஷ்டி லெஜிஸ்லேச்சருக்கு அதிகாரமுண்டு; ஆனல், அவ்விஷயங்களைப் பற்றி சட்டமல்லது

நெருக்கடிப் பிரகடனம்

மசோதாவல்லது திருத்தம் கவர்னர் ஜெனரல் சுயேச்சாதிகாரத்தில் அளிக்கும் முன்னனுமதியன்னியில் லெஜிஸ்லேச்சர் எந்த சபையிலும் கொண்டுவரலாகாது. இதனால் மாகாணச் சட்டசபையின் சட்டமியற்றும் அதிகாரம் அந்தப் பிரகடனத்தால் நிறுத்தி வைக்கப்பட்டதாகாது. ஆனால், சமஷ்டி சட்டத்திற்கு முரணாய் மாகாணச் சட்டம் இருந்தால் மாகாணச் சட்டம் செல்லாது. அந்த நெருக்கடிப் பிரகடனம் பிரிட்டிஷ் பார்லிமெண்டு இரு சபைகளாலும் அங்கீகரிக்கப்பட்டாலொழிய ஆறு மாதங்களின் முடிவில் காலாவதியாகிவிடும். இந்நெருக்கடியில் சமஷ்டி சட்டசபையால் இயற்றப்படும் சட்டத்திற்கு நெருக்கடிப் பிரகடனம் காலாவதியான ஆறு மாதங்களுக்குப் பிறகு அமுல் கிடையாது. இந்த ஷரத்துப்படியுள்ள பிரகடனமானது 45-வது பிரிவுப்படி கவர்னர்-ஜெனரலாலும் 93-வது பிரிவுப்படி கவர்னராலும் செய்யக்கூடிய பிரகடனம் மாதிரியல்ல. 102-வது பிரிவுப்படியுள்ள பிரகடனம் இந்தியாவின் பாதுகாப்புக்கு அபாயத்தை சமாளிக்க ஏற்படுத்தியிருக்கும் உபாயம்-45 அல்லது 93-வது பிரிவுப்படியுள்ள அதிகாரங்கள் அரசியலமைப்புச் சட்ட ஷரத்துக்கள்படி துரைத்தனத்தை நடத்த முடியாமல்போனால் செலுத்தப்படவேண்டிய அதிகாரங்கள், அரசியல் சங்கடங்களை சமாளிப்பதற்கான ஷரத்துக்கள்.

மிச்ச அதிகாரங்கள்

ஆக்ட் 7-வது ஷெட்யூலில் கண்டிருக்கும் மூன்று ஜாப்தாக்களிலுமில்லாத எந்த விஷயத்தைப் பற்றியாவது, அந்த ஜாப்தாக்களில் காணாத வரி விதிக்கும் சட்டமுள்பட, சட்டமியற்ற, சமஷ்டி அல்லது மாகாண லெஜிஸ்லேச்சருக்கு கவர்னர் ஜெனரல் பகிரங்க அறிக்கை மூலமாய் அதிகாரமளிக்கலாம்.

சட்டமியற்றுவதில் தடைகள்

இந்தியா பூராவிற்கும் அல்லது எந்தப் பாகத்திற்கும் சட்டமியற்ற பார்லிமெண்டுக்குள்ள அதிகாரம் எவ்வகையிலும் பாதிக்கப்படவில்லை; 1. சக்கிரவர்த்தி அல்லது அவர் குடும்பம், 2. பிரிட்டிஷ் சிம்மாசனத்திற்கு வாரிசு உரிமைகள்; 3. இந்தியாவின் எந்த பாகத்திலும் மன்னரல்லது சக்கிரவர்த்திக்குள்ள மேலாதிபத்தியம்; 4. சில பார்லிமெண்டு

ஆக்டுகள்—இவைகளைப்பற்றி சட்டமியற்ற இந்தியாவில் எந்த லெஜிஸ்லேச்சருக்கும் அதிகாரமில்லை.

108-வதுபிரிவுப்படி சில மசோதாக்களைக் கொண்டுவர கவர்னர்ஜெனரல் அல்லது கவர்னரின் முன்னனுமதி வேண்டும். அந்த முன்னனுமதி கவர்னர் ஜெனரல் அல்லது கவர்னர் அளிப்பது மேற்படியாரின் சுயேசசாதிகாரத்தில் செய்வது—அவையாவன— 1. பிரிட்டிஷ் இந்தியாவுக்கு வியாபிக்கும் பார்லிமெண்டு ஆக்டை ரத்துசெய்யும்,அல்லது திருத்தும், அல்லதுஅதன் ஷரத்துகளுக்கு முரணான மசோதா; 2. கவர்னர் ஜெனரலின், அல்லது கவர்னரின் ஆக்ட், அல்லது ஆர்டினென்ஸுக்கு விரோதமானது; 3. கவர்னர் ஜெனரல் சுயேச்சாதிகாரத்தில் செய்யவேண்டிய விஷயங்களைப் பொறுத்தது; 4. போலீஸ் படை சம்பந்தமாக வழங்கி வரும் சட்டத்தைப் பொறுத்தது; 5. ஐரோப்பிய பிரிட்டிஷ் பிரஜைகளின் பேரில் குற்றக் கேஸ் விசாரணை முறையைப் பொறுத்தது; 6. நபர்கள் அல்லது கம்பெனிகளுக்கு வேற்றுமையான நடத்தை, வரி விதிப்பது; 7. ஐக்கிய ராஜ்ய (பிரிட்டிஷ்) வருமான வரிக்குள்பட்ட வருமானத்திற்கு சமஷ்டி வருமான வரி விலக்குப் பரிகாரத்தைப் பாதிப்பது. அந்த வகை மசோதாவுக்கு கவர்னர் ஜெனரல் முன்னனுமதி வேண்டும். அது போலவே மாகாண லெஜிஸ்லேச்சரில் கொண்டு வரப்படும் சில மசோதாக்களுக்கும் கவர்னர் ஜெனரல் சுயேச்சாதிகாரத்தில் அளிக்கும் முன்னனுமதி வேண்டும்.

தேர்தல் ஆகி, சட்டசபைகள் கூடினதும்,அந்தந்தசபை, தலைவரையும் உபதலைவரையும் தெரிந்தெடுக்க வேண்டும். சபைகளில் நடைமுறையைப்பற்றி விதிகள் செய்ய சபைகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. ஆனால்,கவர்னர் சுயேச்சையிலும் சொந்தத் தீர்மானத்திலும் செய்ய வேண்டிய அலுவல்களைப்பற்றியும், நிதி சம்பந்தமான வேலை சரியான காலத்திற்குள் முடிவு அடைவதற்கும், அயல் நாட்டு உறவுகள், விலக்கப்பட்ட பிரதேசங்கள், பூர்வீகக் குடிகளுள்ள பிரதேசங்கள், சமஸ்தானாதிபதிகளின் நடத்தை—இவைகளைப் பற்றி சபைகளில் கேள்விகள் கேட்பது சம்பந்தமாக ஒழுங்குபடுத்த, கவர்னர், சபைத் தலைவரைக் கலந்துகொண்டு, விதிகள் செய்ய உரிமையுள்ளவர். கவர்னர் செய்யும் விதிகளுக்கும்

லெஜிஸ்லேச்சரின் நடைமுறை, உத்தியோகஸ்தர்கள்

சபை செய்யும் விதிகளுக்கும் முரண்பாடு இருந்தால் கவர்னர் விதிகள் மேலானவை, முரண்பாடு அளவுக்கு சபை விதிகள் செல்லுபடியல்ல.

இரண்டு சபைகள் உள்ள இடங்களில் இரு சபைகளும் ஒவ்வாத விஷயங்களில் இரு சபைகளும் சேர்ந்த கூட்டத்தை அழைக்க கவர்னருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

நிதி விஷயங்களில் நடைமுறை

பிரதி வருஷமும் வரவு செலவுத் திட்டங்களைப் பற்றிய விவரம் சட்ட சபைகளில் ஆஜர்படுத்தப்படவேண்டும். செலவுகள் இருவகையாகப் பிரிக்கப்பட்டன. 1. மாகாண வருமானங்களின் பேரில் பொறுப்பான செலவுகள். 2. இதர செலவுகள். வருமானங்களின் பேரில் பொறுப்பான செலவுகள் என்னவென்று சட்டத்தில் கூறப்பட்டன. அவைகளைப் பொறுத்து சட்டசபை விவாதிக்கலாம். ஆனால், வோட் எடுத்து சபை தீர்மானத்துக்கு விடப்படமாட்டா. இதர செலவு இனங்கள் மான்யக் கோரிக்கைகள் மூலம் சபையின் தீர்மானத்திற்கு விடப்படவேண்டியவை. சபையால் நிராகரிக்கப்பட்ட கோரிக்கை எதாவது விசேஷப் பொறுப்புக்களுக்கு அவசியம் என்று கவர்னர் கருதினால், அவர் விசேஷ அதிகாரத்தைப் பிரயோகித்து அத்தொகையை செலவு ஜாப்தாவில் சேர்த்துவிடலாம்.

அங்கத்தினர்களின் யோக்யதாம்சங்கள், உரிமைகள். வோட்டர்களின் யோக்யதாம்சங்கள்

வோட்டர்களின் யோக்யதாம்சம் முன்னிருந்ததை விட மிகவும் தாழ்த்தப்பட்டது. வயது வந்தவர்கள்—1. எதாவது வரி சர்க்காருக்கோ ஸ்தல ஸ்தாபனத்துக்கோ கட்டினால் வோட்டுரிமையுண்டு. 2. ஸ்தாவர சொத்து, அனுபவ அடமானம், நிலக் குத்தகை அல்லது வீடு குடியிருப்பு—இவ்வித பாத்தியம் உள்ளவர்களுக்கும், 3. எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்கும், 4. 1, 2-ம் யோக்யதாம்சமுள்ள புருஷர்களின் மனைவிகளுக்கும், 5. படைகளில் சேவை செய்தவர்களுக்கும், அவர்கள் மனைவிகளுக்கும் வோட்டுரிமை அளிக்கப்பட்டது.

சட்டசபை அங்கத்தினர்களுக்கு பேச்சு சுதந்திரம்

சபைகளில் பேசியதற்கோ, வோட்டு செய்ததற்கோ, எவ்வித நடவடிக்கையும் எடுக்கலாகாதென்னும் ஷரத்துக்கள் இருந்தன.

1935-ம் வருஷத்து இந்தியா கவர்ன்மெண்டு ஆக்டு 5-வது பிரிவுப்படி இந்தியசமஸ்தானங்களில் ஜனத்தொகையில் பாதிக்குக்

1935-ம் ஆக்டு சமஷ்டித் திட்டம் அமுலுக்கு வரவில்லை

குறைவில்லாததும் மேல் சபை (Council of State) க்கு 52 அங்கத்தினர்களை அனுப்பக்கூடியவையுமான சமஸ்தானங்களின் அதிபதிகள், சமஷ்டியில் சேருவதாக சேர்க்கைப் பத்திரத்தில் கையெழுத்திட்டுப் பூர்த்தியானால் அல்லாது சமஷ்டி அமுலுக்கு வருவதாகப் பிரகடனம் செய்ய முடியாது. சுமார் 600 சமஸ்தானங்கள் இருந்தன. செல்வம், நிர்வாகத்தரம், நீதி செலுத்துவது, சட்ட சபைகள் இவைகள் எல்லாம் பலவிதமாக இருந்தன. பொருளாதாரத்திலும் நிர்வாகத்திலும் பலதரப்பட்ட உறுப்புக்கள் சேர்ந்த சமஷ்டி நிர்மாணிப்பதில் உள்ள சங்கடங்களைப்பற்றி ஏற்கனவே விவரித்திருக்கிறோம். தவிரவும் ஒவ்வொரு சமஸ்தானமும் குறிப்பிட்ட விஷயங்களை மட்டில் சமஷ்டிக்கு விட்டுக் கொடுப்பது என்பதில் சிக்கல்களும் நிறைந்துள்ளன. இந்திய சர்க்கார் ராஜீய இலாக்கா சேர்க்கைப் பத்திரத்தின் நகலைத் தயாரித்து, அதைச் சமஸ்தானாதிபதிகளின் பிரதிநிதிகளுடன் கலந்து திருத்தி, அப்படித் திருத்தப்பட்ட சேர்க்கைப் பத்திர நகலை சமஸ்தானாதிபதிகள் எல்லோருக்கும் அனுப்பினார்கள். ஆனால், 5-வது பிரிவுப்படியுள்ள குறைந்தபக்ஷ சமஸ்தானாதிபதிகள் அங்கீகரிக்கவில்லை. 1939-ம் வருஷம் ஜூன் மாதத்தில் பம்பாயில் கூடிய சமஸ்தானாதிபதிகளின் மகாநாடு திருத்தப்பட்ட சேர்க்கைப் பத்திரத்தையும் தாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்று தீர்மானித்தார்கள். காங்கிரஸ் மகா சபையும் முஸ்லிம் லீகும் வெவ்வேறு காரணங்களுக்காக சமஷ்டித் திட்டத்தை நிராகரித்தார்கள். ஆகவே, சமஷ்டித் திட்டம் அமுலுக்கு வரவில்லை. மத்திய சர்க்காரும் சட்டசபைகளும் 1919-ம் வருஷத்து ஆக்டு ஷரத்துக்கள்படியே நடத்தப்பட்டு வந்தன. அப்படியே நடந்துவர, புது ஆக்டில் இடைக்கால ஷரத்துக்களும் இருந்தன.

மாகாணங்களில் 1935-ம் வருஷத்து ஆக்டு அமுலுக்கு வந்து மாகாண ஆட்சி புது ஆக்டுப்படி நடந்துவந்தது என்று கண்டிருக்கிறோம். ஏழு மாகாணங்களில் காங்கிரசும், நான்கு மாகாணங்களில் முஸ்லிம் லீக் கட்சியும் மந்திரி பதவிகளை ஏற்று நிர்வாகம் நடந்து வந்தது. 1939-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் ஐரோப்பாவில் யுத்தம் துவங்கிற்று. பிரிட்டிஷ் அரசாங்கம் ஜெர்மனியின்பேரில் யுத்தப் பிரகடனம் செய்தது. பிரிட்டிஷ் சர்க்கார்

யுத்தப் பிரகடனத்தின் பலனுக இந்திய சர்க்காரும் யுத்தத்தில் ஈடுபட்டது. இந்திய மக்களின் சம்மதம் அன்னியில் இந்தியாவை யுத்தத்தில் ஈடுபடுத்தல் ஆகாது என்பது காங்கிரஸ் தலைவர்களின் அபிப்பிராயம். மகாத்மாவோ எக்காரணத்தைக் கொண்டும் பலாத்காரத்தை உபயோகிக்கக் கூடாது என்று அபிப்பிராயப்பட்டார். இத்தருவாயில் இந்திய மக்களின் ஆதரவைத் தேடும் பொருட்டு வைஸ்ராய் லார்டு லின்லித்கோ எல்லா ராஜீயக் கட்சிகளின் தலைவர்களையும் பிரதிநிதிகளையும் அழைத்து பிரத்யேகமாக ஒவ்வொருவரையும் கலந்துவிட்டு ஒரு அறிக்கையை வெளியிட்டார்.

ஐரோப்பாவில் யுத்த ஆரம்பம்

உசிதமான அரசியல் மாறுதல்களைத் தயாரிப்பதில் பல் வேறு சமூகங்கள், கட்சிகள், அக்கறைகள், சமஸ்தானதிபதிகள், இவர்களின் உதவியையும் ஒத்துழைப்பையும் பெற யுத்த முடிவில் அவர்களின் பிரதிநிதிகளைக் கலந்து ஆலோசிக்க, பிரிட்டிஷ் மன்னர் சர்க்கார் இசைவார்கள் என்று அவ்வறிக்கையில் காணப்பட்டது. உடனடியாக யுத்த நடவடிக்கைகள் சம்பந்தமான பிரச்னைகளில் இந்தியப் பொதுமக்கள் அபிப்பிராயத்தைக் கலந்துகொள்ள எல்லா முக்கிய கோஷ்டிகளின் பிரதிநிதிகள் அடங்கிய ஆலோசனைக் கவுன்ஸிலை நிறுவுவதாகவும், இந்திய அரசியலின் லட்சியம் 1919-ம் வருஷத்து ஆக்டின் பூர்வ பீடிகையில் கண்டபடி பொறுப்பாட்சி மூலம் பிரிட்டிஷ் காமன்வெல்த்திலுள்ள டொமினியன் அந்தஸ்து என்று உறுதி கூறுவதாகவும் கண்டிருந்தன.

வைஸ்ராய் அறிக்கை (17-10-39)

அந்த அறிக்கையில் இந்தியாவைப் பொறுத்து பிரிட்டிஷாரின் யுத்த லட்சியங்கள் வியக்தமாக இல்லை என்றும், இந்தியரின் அனுமதியன்னியில் பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவை யுத்தத்தில் இழுத்துவிட்டது தவறு என்றும் காங்கிரஸ் காரியக்கமிட்டி அபிப்பிராயப்பட்டது. தவிரவும், இந்தியாவின் அரசியலை யுத்தத்திற்குப் பிறகு மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட அரசியல் நிர்ணய சபை தயாரிப்பதுதான் நியாயமான முறை என்றும் சொல்லப்பட்டது. அரசியல் நிர்ணய சபை வேண்டும் என்று கேட்பது சரி அல்ல என்று இந்தியா மந்திரி

பார்லிமெண்டில் தெரிவித்தார். அதன் பேரில் மாகாணங்களில் உள்ள காங்கிரஸ் மந்திரிசபைகளை ராஜிநாமா செய்யும்படியாக காங்கிரஸ் காரியக்கமிட்டி ஆலோசனை கூறியது.

காங்கிரஸ் காரியக்கமிட்டியின் ஆலோசனையை ஏற்று எழு மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரிகள் ராஜிநாமா செய்தார்கள். அம்மாகாணங்களில் சட்டசபை அங்கத்தினர்கள் பெருவாரியாகக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தபடியால், வேறு மந்திரிசபைகள் மற்றவர்களால் அமைக்க முடியவில்லை. ஆகவே, அம்மாகாணங்களில் கவர்னர்கள் முழு அதிகாரத்தையும் எடுத்துக்கொண்டு, 93-வது பிரிவுப்படி நிர்வாகம் நடத்தப்பட்டு வந்தது. வங்கம், பஞ்சாப், ஸிந்து, அஸ்ஸாம் மாகாணங்களில் சட்டசபைகளில் காங்கிரஸுக்கு மெஜாரிடி இல்லாததால் இதர கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய மந்திரிசபைகள் நீடித்து இருந்தன.

1937—39-ல் காங்கிரஸ் மந்திரி சபைகள் சாதித்த காரியங்கள்

மாகாணங்களில் மந்திரி பதவி ஏற்குமுன் காங்கிரஸில் அபிப்பிராய பேதம் இருந்தது என்று முன்னால் கண்டிருந்தோம். கவர்னர்கள் தங்கள் யதேச்சாதிகாரங்களைப் பிரயோகித்து அடிக்கடி அன்றாட நிர்வாகத்தில் குறுக்கிடுவார்கள் என்ற அச்சம் ஒரு புறம். காங்கிரஸ் திட்டப்படி அடிப்படையான மாறுதல்கள் செய்யமுடியுமா என்ற சந்தேகம் மற்றொரு புறம். ஆனால், பதவி ஏற்ற சில மாதங்களுக்குப் பிறகு நிலைமையைப் பரிசீலனை செய்ததில் பதவி ஏற்றது சரி என்றும், பலன் அளிக்கக்கூடிய வகையில் இருந்தது என்றும் உறுதி செய்தார்கள். மந்திரிகள் பதவி ஏற்றதிலிருந்து காங்கிரஸ் மந்திரி சபைகள் 26 மாத காலம் மட்டில் நிர்வாகத்தை நடத்தி வந்தன. 1939-ம் வருஷம் அக்டோபர் — நவம்பர் மாதங்களில் ராஜிநாமா செய்துவிட்டார்கள். இந்தக் காலத்தில் பொருளாதார மந்தத்தினாலும் சட்டப்படி சர்க்கார் வருமானங்கள் பேரில் குறிப்பிட்ட இனங்கள் பொறுப்பு ஏற்படுத்தப்பட்டு இருந்ததாலும் தாராளமான கொள்கைகளைப் பின்பற்றி விரிவான முன்னேற்றம் அடைய முடியவில்லை. இருந்த போதிலும் காங்கிரஸ் கொள்கைகளை ஒட்டிய சீர்திருத்தங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

காங்கிரஸ்வாதிகள் முதலில் பயந்ததுபோல் கவர்னர்கள் மந்திரிகளின் அதிகாரங்களில் குறுக்கிடவில்லை. பிரிட்டிஷ் பார்லிமெண்டிலுள்ள சம்பிரதாயத்தைத் தெரிந்தவர்களாதலால், சட்டசபைக்கு ஜவாப்தாரியான மந்திரி சபைக்கு முட்டுக்கட்டை போடவில்லை. மொத்தத்தில் ஜனங்களுக்கு நம்பிக்கையும் உற்சாகமும் அதிகரித்தன. காங்கிரஸின் மதிப்பு உயர்ந்தது. அது வரை ஜனங்களுக்கும் சர்க்காருக்கும் சரியான தொடர்பு இல்லை. சர்க்கார் என்றால் பாமர ஜனங்களுக்கு அச்சந்தான் இருந்து வந்தது. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் என்றால் அதிகார தோரணையே மேலிட்டு இருந்தது. காங்கிரஸ் மந்திரிகள் வந்த பிறகு அந்த நிலை மறைய ஆரம்பித்தது. ஜனங்கள் தங்கள் குறைகளை மந்திரிகளுக்குத் தெரிவிக்க தாராளமாக முன்வந்தார்கள். தங்களுக்குள் வேலை செய்த பல ஸர்விஸ்காரர்களுக்குக் குறைவான சம்பளத்தையே மந்திரிகள் ஏற்றார்கள். சிக்கன முறைகளை அனுஷ்டித்தார்கள்.

அன்னிய அதிகாரி வர்க்கம் ராஜீய முன்னேற்றத்தை ஒடுக்க அடக்குமுறைகளைக் கையாண்டு வந்திருந்தார்கள். சாதாரண கோர்ட்டுகளில் விசாரிக்காமல் அநேகர்களை காவலில் வைத்திருந்தார்கள். பத்திரிகைகள், அச்சுக்கூடங்கள் இவைகளிடம் ஜாமீன் வாங்கப்பட்டு இருந்தன. காங்கிரஸ் மந்திரி சபை அதிகாரத்துக்கு வந்ததும் ராஜீயக் குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்டவர்களும், விசாரணை அன்னியில் காவலில் வைக்கப்பட்டவர்களும் விடுதலை செய்யப்பட்டார்கள். பத்திரிகைகளிடமும் அச்சுக்கூடங்களிடமும் வாங்கப்பட்ட ஜாமீன் தொகைகள் வாபீஸ் செய்யப்பட்டன. பேச்சு, எழுத்து சுதந்திரங்களுக்கு மதிப்புக் கொடுக்கப்பட்டது. ஆனால், குறிப்பிட்ட லட்சியத்தை அடைய பலாத்கார முறைகளைக் கையாளக்கூடாது என்பதுதான் காங்கிரஸ் மந்திரிகள் அனுஷ்டித்த ஒரு கண்டிப்பு.

பூர்ண மதுவிலக்கு லட்சியத்தை அடைய ஒவ்வொரு மாகாணத்திலும் ஒன்று அல்லது இரண்டு ஜில்லாக்களில் மதுவிலக்கு அமுல் செய்யப்பட்டது. அதனால் சர்க்காருக்கு வரி வருமானம் குறைந்தாலும் அதைப் பொருட்படுத்தவில்லை. ஏழை மக்களுக்கு நன்மை செய்யக்கருதி, மதுவிலக்கை ஆரம்பித்து வருமானத்தில் துண்டு விழுந்ததை ஈடுசெய்ய, விற்பனை வரி போட சட்டம் செய்தார்கள்.

விவசாயப் பொருள்களின் விலைவாசி படுமோசமாகப் போனதினாலும் இதர காரணங்களாலும் விவசாயிகளின் கடன் பளு தாங்கமுடியாமல் இருந்தது. கடன் சுமையைக் குறைக்க நிவாரணச் சட்டங்கள் இயற்றப்பட்டன. கிராமங்களின் அபி விருத்தித் திட்டங்களுக்கு முக்கியமாக நல்ல தண்ணீர் வசதிகளை ஏற்படுத்த தாராளமாக மான்யங்கள் கொடுக்கப்பட்டன. ஜமீந் தாரி முறையை சீர்திருத்துவதா அல்லது சமாப்தி செய்வதா என்பதைப்பற்றி பரிசீலனை செய்யப்பட்டது. தொழிலாளர் களின் நன்மைக்காக தொழில் தகராறுகளை மத்யஸ்தம் மூலமாக தீர்த்துக்கொள்ள பம்பாயில் சட்டம் இயற்றப்பட்டது. இந்துக் களில் தாழ்த்தப்பட்ட ஜாதியார்களின் அபிவிருத்திக்காக கல்வி ஸ்தாபனங்களிலும் ஸர்விஸ்களிலும் அதிகப்படியான சலுகைகள் வழங்கப்பட்டன. பொது மக்கள் கூடும் இடங்கள், உபயோகப் படுத்தும் ரஸ்தாக்கள், தமாஷ் நிலையங்கள், போஜனசாலைகள், சர்க்கார் வருமானங்களிலிருந்து நடத்தப்படும் கல்விக் கழகங்கள் இவைகளில் எல்லாம் தாழ்த்தப்பட்ட ஜாதியார்களுக்கு இதர ஜனங்களைப்போல உரிமைகள் அளிக்கப்பட்டன. தவிரவும் இந்து ஆலயங்களில் பிரவேச உரிமையில்லாத மக்களுக்கு கடவுளைத் தரிசிக்க உரிமையை ஏற்படுத்த, அந்தந்த ஆலயப் பிரதேசத்தி லுள்ள ஜாதி இந்துக்களின் அபிப்பிராயத்தை அறிய சட்டமூலம் ஏற்பாடு செய்யப்பட்டது. இவைகள் எல்லாம் நாகரிக ஆட்சிக்கு முதல் எடுப்புதான். அடிப்படையான மாறுதல்கள் முழுவதை யும் காங்கிரஸ் மந்திரிகள் சாதித்துவிட்டார்கள் என்று சொல்ல முடியாது.

1939-ம் வருஷ முடிவிற்குள் எல்லா மாகாணங்களிலும் காங்கிரஸ் மந்திரி சபைகள் ராஜிநாமா செய்துவிட்டன. அதற் குப் பிறகு 1940-ம் வருஷத்தில் ராம்காரில் கூடிய காங்கிரஸ் மகாசபை சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்கவேண்டியது என்று தீர்மானித்தது. சர்க்கார் இந்தியாவின் அனுமதி யன்னியில் யுத்தப் பிரகடனம் செய்ததற்கு கண்டன அறிகுறியாக மட்டில் சத்தியாக் கிரகம் செய்யவேண்டியது என்றும், பிரிட்டி ஷாருக்கு யுத்தகாலத்தில் சங்கடங்கள் விளை விப்பது நோக்கமல்லவென்றும், தெளிவாகக் கூறப்பட்டது. ஆகவே, மகாத்மா காந்தி பொறுக்கி எடுக்கும் குறிப்பிட்ட நபர்

1940-ம் வருஷ காங்கிரஸ் தீர்மானம்—தனிப்பட்ட சத்தியாக்கிரகம்

கள் மட்டில் தனித்தனியாக சத்தியாக்கிரகம் செய்ய வேண்டியது என்ற முடிவுக்கு வந்தார்கள்.

முஸ்லிம் லீக்—பாகிஸ்தான் முஸ்லிம்களின் லட்சியம்

அதே காலத்தில் முஸ்லிம் லீக் செய்த தீர்மானங்களையும் கவனிப்பது அவசியமாகிறது. முஸ்லிம் லீக்கும் ஒரு ராஜீய ஸ்தாபனம்; ஆனால், முஸ்லிம்களுக்கு மட்டில் ஏற்பட்ட ஸ்தாபனம்; காங்கிரஸோ மதச் சார்பற்ற ஸ்தாபனம், எல்லா சமூகத்தினரும் முஸ்லிம்கள் உள்பட அதில் கலந்து கொண்டார்கள். 1908-ம் வருஷத்தில்முதன் முதலில் மிண்டோ மார்லி சீர்திருத்தங்களில் முஸ்லிம்களுக்கு தனிப்பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது என்று ஏற்கனவே கண்டிருக்கிறோம். அதுமுதல் முஸ்லிம் லீக் முன்னுக்கு வந்தது; முஸ்லிம்களின் அக்கறைகளைக் கவனிக்க தனி ஸ்தாபனம் வேண்டும் என்று ஆரம்பிக்கப்பட்டது.

முக்கியமாக சர்க்கார் சேவைகளிலும் சட்டசபைகளிலும் தங்கள் சமூகம் மொத்த ஜனத்தொகையிலுள்ள வீதாசாரத்துக்கு மேல் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று கிளர்ச்சி செய்து வந்தது. அதுபோல இதர சமூக ஸ்தாபனங்களும் இருந்தன. ஆனால், அன்னிய சர்க்கார் முஸ்லிம் லீகுக்கு விசேஷ கௌரவம் அளித்து வகுப்பு வாதத்தை வளர்த்து வந்தார்கள். கடைசியாக ஜின்னா சாயபு தலைமையில், முஸ்லிம்கள் தனி இனம், அவர்களுக்கென்ற தனி தாயகம் வேண்டும், முஸ்லிம்கள் பெருவாரியாக உள்ள இந்தியாவின் வடமேற்கு வடகிழக்குப் பிரதேசங்களை பாகிஸ்தான் என்ற அரசாங்கமாக அமைக்கவேண்டியது முஸ்லிம்களின் லட்சியம் என்று 1940-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் நடந்த மகாநாட்டில் தீர்மானித்தார்கள்.

1940-ம் ௵ ஜூலை ௴

காங்கிரஸ் சபை ராம்காரில் செய்த தீர்மானப்படி சத்தியாக்கிரகம் தொடங்குமுன், 1940-ம் வருஷம் ஜூலை மாதத்தில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடி சர்க்காருக்கும் காங்கிரஸுக்கும் உண்டான பிளவால் ஏற்பட்ட முட்டுக்கட்டையைத் தீர்க்க வசதியான ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. அத்தீர்மானத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

1. இந்தியாவுக்கு பூர்ண சுதந்திரம் அளிப்பது என்று சந்தேகத்துக்கு இடமில்லாத பிரிட்டிஷ்சர்க்காரின் அறிக்கைவேண்டும்.

2. யுத்த முயற்சிகளில் காங்கிரஸின் ஒத்துழைப்பைப் பெற மத்திய சட்டசபைகளின் தேர்தல் அங்கத்தினர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான நபர்கள் அடங்கிய இடைக்கால தேசிய சர்க்காரை உடனடியாக அமைக்க வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளுக்கு இணங்க முடியாது என்று வைஸ்ராய் அறிவித்தார். இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் நீண்ட காலமான உறவுகளிலிருந்து ஏற்பட்ட பொறுப்புகளைத் தட்டிக் கழிக்க முடியாது என்றும், சிறுபான்மையோர்களுக்குப் பாது காப்பும் இந்திய சமஸ்தானாதிபதிகளின் உடன்படிக்கைகளுக்குக் கௌரவம் அளிப்பதும் தங்கள் கடமை என்றும், வைஸ்ராய் பதில் அளித்தார். ஜவாப்தாரியான தேசிய சர்க்கார் சாத்ய மில்லை என்றும், ஆனால் தனது நிர்வாக கவுன்ஸிலை விஸ்தரித்து, எல்லா ராஜீயக் கட்சிகளின் முக்கியஸ்தர்களை கவுன்ஸிலில் எடுத்துக்கொள்வதாகவும் வைஸ்ராய் தெரிவித்தார்.

காங்கிரஸ் கோரிக்கைகளுக்கு வைஸ்ராய் திருப்திகரமான ஜவாப் அளிக்கவில்லை என்று மகாத்மா காந்தி, தனிப்பட்ட நபர் சத்தியாக்கிரகத்தை ஆரம்பிப்பதுஎன்று 1940-ம்வருஷம் அக்டோபர் மாதத்தில் முடிவு செய்தார். அதை அனுசரித்து மகாத்மா தயாரித்த ஜாப்தாவில் கண்ட நபர்கள், இந்தியாவை யுத்தத்தில் ஈடுபடுத்தியது தவறு என்று பிரசாரம் செய்து சட்டத்தை மீறினார்கள். மிகவும் கட்டுப்பாடாகவும் சர்க்காருக்கு சங்கடங்கள் ஏற்படுத்தாமலும் காங்கிரஸ் பிரமுகர்கள் இந்த சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டார்கள். அவர்கள் எல்லோரும், சமீப காலம்வரை மந்திரிப் பதவி வகித்தவர்களுள்பட, கைது செய்யப்பட்டு சிறைத் தண்டனை அடைந்தார்கள்.

வைஸ்ராய் அறிக்கைப்படி காங்கிரஸ் அல்லாத இதர கட்சியினர்களில் முக்கியஸ்தர்களைச் சேர்த்துக்கொண்டு மத்திய சர்க்கார் நிர்வாகக் கவுன்ஸிலை விஸ்தரித்தார்கள். அதே காலத்தில் யுத்த நடவடிக்கைகளால் அரசாங்கவேலை அதிகரித்துவிட்டது. வைஸ்ரீகல் செக்ரிடேரியட் என்ற ஸிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தர்களைக்கொண்டு ஒவ்வொரு இலாக்காவையும் வைஸ்ராயே நிர்வகித்து வந்தார். வைஸ்ராயின் காரியதரிசிகளுக்கு உண்மையில் அதிகாரம்; ஆனால், வெளியில் நிர்வாகக்கவுன்ஸிலர்கள் இலாக்காத் தலைவர்கள் போல் பாவனை செய்யப்பட்டது. கவுன்ஸிலில் உத்தியோகம் வகித்த கொஞ்சக் காலத்திற்கெல்லாம் புது கவுன்ஸிலர்

களில் சிலர் தங்களின் மோசமான நிலையைக் கண்டு ராஜிநாமா செய்துவிட்டார்கள். ஆனால், பெரும்பாலோர் பதவியை விடாமல் ஒட்டிக்கொண்டே இருந்தார்கள். முஸ்லிம் லீக் வைஸ்ராய் அறிக்கையை பேச்சளவில் கண்டித்ததே ஒழிய, காரியத்தில் நான்கு மாகாண மந்திரிசபைகளிலும் கவர்னர்ஜெனரலின் நிர்வாகக் கவுன்ஸிலிலும் பங்கு எடுத்துக்கொண்டு பதவிகளால் எற்பட்ட செல்வாக்கை விருத்தி செய்து கொண்டார்கள்.

1941-ம் ௵ டிசம்பர் ௴ ஜப்பான் யுத்தம் தொடுத்தது

மேற்கே ஐரோப்பாவில் அச்சு நாடுகளுக்கும் நேச நாடுகளுக்கும் நடந்த யுத்தத்தில், ஜப்பான் அச்சுநாடுகள் பக்கத்தில் 1941-ம் வருஷம் டிசம்பரில் ஈடுபட்டது. யுத்தப் பிரகடனம் செய்யாமலேயே பேர்ல் ஹார்பர் என்ற அமெரிக்க ஆதிக்கத்திலுள்ள இடத்தைத் தாக்கி, அங்கே இருந்த அமெரிக்கக் கப்பல்களையும் விமானங்களையும் நாசம் செய்தது. மின்னல் வேகத்தில் பிலிப்பைன் தீவுகள், ஹாங்காங், கிழக்கு இந்தியத் தீவுகள் எல்லாவற்றையும் கைப்பற்றிற்று. பிரிட்டிஷாரின் கிழக்குக் கடற்படைத் தளமான சிங்கப்பூர் 1942-ம் வருஷம் ஆரம்பத்தில் வீழ்ந்தது. மலேயாவிலிருந்தும் சிங்கப்பூரிலிருந்தும் தலைதெறிக்க பிரிட்டிஷார் ஓடினார்கள். பர்மாவின் பிரதான நகரான ரங்கூனும் கைப்பற்றப்பட்டு, பர்மாவில் கடும் போர் நடந்தது.

மேலே கண்ட தேசங்களில் ஆதிக்கம் செலுத்திய பிரிட்டிஷாருக்கோ டச்சுக்காரருக்கோ எவ்வித ஆதரவும் இல்லை. ஜப்பானியர்கள் வந்ததும் சுதேசி ஜனங்கள் அவர்களை வரவேற்றார்கள். இந்தச் சம்பவங்களைக் கண்டு பீதியடைந்த பிரிட்டிஷ் சர்க்கார் இந்திய தேசியவாதிகளை விடுதலை செய்து மற்றோர் சமரஸ முயற்சி செய்தார்கள். ஆனால், காங்கிரஸ் தரப்பில் சுதந்திர இந்தியா தான் தேசத்தின் பாதுகாப்பை எற்றுக்கொள்ளமுடியும் என்று கச்சிதமாகச் சொல்லப்பட்டது. அதன்பேரில் இந்திய அபிலாஷைகளில் அனுதாபமுள்ள ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் என்ற பிரிட்டிஷ் மந்திரிமூலம் பிரிட்டிஷ் சர்க்கார் சிலயோசனைகளை அனுப்பிவைத்தார்கள். யுத்த நிலைமை நெருக்கடியாக இருந்ததால் கிரிப்ஸ் நேரில் இந்தியாவுக்கு வந்து எல்லாக் கட்சிப் பிரமுகர்களுடன் நேராகப் பேச்சு வார்த்தைகளை நடத்தினர்.

1942-ம் ௵ மார்ச்சு-ஏப்ரல் ஸ்ரீ கிரிப்ஸ் தூது

மன்னர் சர்க்கார் தன்மூலம் அனுப்பியுள்ள யோசனைகளை ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் 1942-ம் ௵ மார்ச்சு மாதம் 30-ம் தேதியில் பகிரங்க அறிக்கை மூலம் வெளிப்படுத்தினார். அவ்வறிக்கையின் முக்கிய விஷயங்கள் வருமாறு: 1. மன்னர் சர்க்காரின் லட்சியம்—மன்னருக்கு விசுவாஸம் என்பதை மட்டில் பொதுவாகக் கொண்ட பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் பிரிட்டனுடனும் இதர டொமினியன்களுடனும் சம அந்தஸ்து உள்ள இந்திய யூனியன் என்ற புது டொமினியனை ஏற்படுத்துவது.

2. (a) யுத்த நடவடிக்கைகள் முடிந்ததும் இந்தியாவின் புது அரசியலமைப்பை உருவாக்க, தேர்தல் மூலம் வந்தவர்கள் அடங்கிய ஒரு சபையை நிறுவுவது.

(b) இந்த அரசியல் நிர்ணய சபையில் சமஸ்தானங்கள் பங்கு எடுத்துக்கொள்ள ஏற்பாடு.

3. மேற்படி அரசியல் நிர்ணய சபை தயாரிக்கும் அரசியலை மன்னர் சர்க்கார் ஏற்றுக்கொண்டு சட்டம் செய்வார்கள்; ஆனால்,

(i) புது அரசியலை பொதுஜன வோட்டு மூலம் ஏற்காத பிரிட்டிஷ் இந்திய மாகாணம் எதுவும் தற்கால அரசியல் அந்தஸ்துடனே தொடர்ந்து இருக்கும்; பிந்தி யூனியனில் சேரவசதி உண்டு. சேராத மாகாணங்கள் தனி அரசாங்கமாக இணைக்கப்பட இஷ்டப்பட்டால், இந்திய யூனியனைப் போலவே டொமினியன் அந்தஸ்துள்ள தனி அரசாக மன்னர் சர்க்காரால் ஏற்கப்படும்.

(ii) இனம், மதம் இவை காரணமாக சிறுபான்மையோர்களாக உள்ள சமூகங்களின் பாதுகாப்பிற்காக மன்னர் சர்க்காருக்கும் அரசியல் நிர்ணய சபைக்கும் ஒப்பந்தம் கையெழுத்தாக வேண்டும்.

4. **அரசியல் நிர்ணயசபை அங்கத்தினர்கள் தேர்தல் முறை:** மாகாணச் சட்ட சபைகளின் தேர்தல் அங்கத்தினர்களைக் கொண்ட தொகுதியிலிருந்து அவர்களின் மொத்த எண்ணிக்கையில் 10-ல் ஒரு பங்கு நபர்கள், ஒற்றை மாற்று வோட்டு மூலம், வீதாசாரப் பிரதிநிதித்துவ முறைப்படி, அரசியல் நிர்மாண சபை அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

சமஸ்தானங்கள் தங்கள் ஜனத்தொகைக்குத் தக்கபடி பிரதிநிதிகளை அனுப்புவார்கள். ஆனால், சமஸ்தானப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும் முறை கூறப்படவில்லை.

அரசியல் நிர்ணய சபையின் தீர்மானங்கள் மாகாணங்களின் மெஜாரிடி வோட்டுப்படி இருக்கவேண்டும். அதாவது, வோட் எடுப்பதில் பிரதிநிதி ஒவ்வொருவருக்கும் வோட்டு கிடையாது, மாகாணத்துக்கு ஒரு வோட்டு.

யுத்த முயற்சியிலும் இந்தியாவின் பாதுகாப்பிலும் சர்க்காருக்கு ராஜீயக் கட்சிகளின் ஒத்துழைப்பு அவசியம். கவர்னர் ஜெனரல் நிர்வாகக் கவுன்வில் அங்கத்தினர்கள் எல்லோரும் இந்தியர்களாக இருப்பார்கள். பாதுகாப்பு நீங்கலாக எல்லா இலாக்காக்களும் இந்தியர்களின் கைகளிலேயே இருக்கும். யுத்த சந்தர்ப்பமாயிருப்பதால் பாதுகாப்பு இலாக்கா சேனாதிபதி வசம் இருக்கும். இந்தியாவின் பாதுகாப்பு மன்னர் சர்க்காரின் பொறுப்பாகவே இருக்கவேண்டும்.

இந்தத் திட்டத்தைப் பற்றி நடந்த பேச்சுவார்த்தைகளில் எதிர்காலத்தில் அரசியலை வகுப்பதின் முறையைப் பற்றியும் இந்தியாவின் அந்தஸ்தைப் பற்றியும் குறைகூறுவதற்கு இல்லை. ஆனால், உடனடியாக கவர்னர் ஜெனரலின் நிர்வாகக் கவுன்விலும் பிரிட்டனில் இருப்பது போல் தேசீய சர்க்காராக விளங்க வேண்டும்; காபிநெட் மந்திரிகளின் யோசனைப்படி மன்னர் நடப்பது போல் கவர்னர் ஜெனரல் கவுன்விலின் கூட்டு யோசனைக்கு இணங்கவேண்டும்; இந்தியப் பிரஜைகளிலிருந்து திரட்டப்படும் பிரஜா சேனையைப் பொறுத்தவரையில் அதன் ஆதிக்கம் இந்தியப் பாதுகாப்பு மந்திரி, அல்லது கவுன்விலர் வசம் இருக்கவேண்டும்; என்று காங்கிரஸ் தரப்பில் வற்புறுத்தப்பட்டது. இவ்விரண்டு நிபந்தனைகளுக்கும் வைஸ்ராயும் சேனாதிபதியும் இசையவில்லை. கிரிப்ஸ் திட்டத்தை காங்கிரஸ் நிராகரித்த பிறகு முஸ்லிம் லீகும் நிராகரிப்பதாகத் தீர்மானம் செய்தார்கள். இதற்கு முஸ்லிம் லீக் சொன்ன காரணம், தாங்கள் கேட்கும் பாகிஸ்தானை திட்டம் ஏற்கவில்லை என்பது தான். பொதுஜன வோட்டு எடுக்காமலேயே, முஸ்லிம்கள் மெஜாரிட்டியாக உள்ள பிரதேசங்களை தனி டொமினியனாக அமைக்கவேண்டும் என்பது முஸ்லிம் லீகின் வாதம்.

காங்கிரஸ் நிராகரிப்பு

முக்கியமான இரண்டு ராஜீயக் கட்சிகளும் திட்டத்தை நிராகரித்ததால் கிரிப்ஸ் மூலம் அனுப்பப்பட்ட யோசனைகளை வாபீஸ் வாங்குவதாக பிரிட்டிஷ் சர்க்கார் அறிவித்தார்கள். முன்போலவே நிர்வாகக் கவுன்ஸிலை வைத்துக்கொண்டு காரியதரிசிகள் மூலம் வைஸ்ராய் மத்திய சர்க்காரை நடத்தி வந்தார். காங்கிரஸ் மாகாணங்களில் கவர்னர்கள் 93-வது பிரிவுப்படி ஆட்சி நடத்தி வந்தார்கள். இதர மாகாணங்களில் முஸ்லிம் லீக், இந்து மகாசபை, பல்வேறு வகுப்புவாதிகளைக் கொண்ட மந்திரி சபைகள் பெயரளவில் இருந்தன. உண்மையான அதிகாரம் கவர்னர்களால் செலுத்தப்பட்டு வந்தது. 1939-ம் வருஷம் அக்டோபரிலிருந்து 1946-ம் வருஷம் மார்ச்சு—எப்ரல் மாதங்கள் வரை இந்த நிலை இருந்து வந்தது.

1942-ம் ௵ ஆகஸ்டு ௴ " இந்தியாவை விட்டு வெளியேறு "

கிரிப்ஸ் தூது முறிந்த பிறகு, பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறினால் ஒழிய இந்தியாவுக்கு விமோசனம் இல்லை என்று மகாத்மா 'ஹரிஜனி'ல் எழுதி வந்தார். இந்தியா சரியான நிலையை அடையவேண்டுமானால், எதிரி ஜப்பான் அருகில் வந்துவிட்டாலும் இந்தியாவை இந்தியர்களின் உபாயத்துக்கே விட்டுவிடவேண்டும், பிரிட்டிஷார் இந்தியப் பாதுகாப்புக்காக தாங்கள் பொறுப்பாளி என்று சொல்லிக்கொண்டிருந்தால் நிலைமையில் அபிவிருத்தி ஏற்படாது என்று தீவிரமாக எழுதினார். தமது அபிப்பிராயத்தை விளக்கி "இந்தியாவை விட்டு வெளியேறு என்றால் எல்லாப் படைகளையும் மூட்டை முடிச்சுகளையும் எடுத்துக்கொண்டு பிரிட்டிஷார் உடனே போகவேண்டும் என்ற அர்த்தமில்லை, அதிகாரப் பீடத்திலிருந்து விலகி இந்தியப் பாதுகாப்பு உள்பட இந்தியர் கையிலேயே ஒப்புவிக்கவேண்டும். அப்படிச் செய்தால் ஜப்பானியர் இந்தியாவின் பேரில் ஆக்ரமிக்காமலிருக்க, ஜப்பானுக்குத் தூது சென்று வாதாடுவேன்" என்றார் காந்திஜி. மகாத்மாவின் கருத்தை ஒப்புக்கொண்டு காங்கிரஸ் கமிட்டி 1942-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் "இந்தியாவை விட்டு வெளியேறு" என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது.

இத் தீர்மானம் நிறைவேறியது சர்க்காருக்குத் தெரிந்ததும் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்கள் பெரும்பாலும் கமிட்டி கூடின

பம்பாயிலேயே கைது செய்யப்பட்டார்கள். சிலர் அவரவர் ஊருக்குத் திரும்புகையில் கைது செய்யப்பட்டார்கள். ஒரு வாரத்திற்குள் தேசம் பூராவுமுள்ள காங்கிரஸ் பிரமுகர்கள் கமிட்டி மெம்பர்கள்பொதுஜனப்பாதுகாப்பு அவசரச் சட்டத்தின்படி கைது செய்யப்பட்டு விசாரணை யில்லாமல் சிறையில் வைக்கப்பட்டார்கள். தலைவர்களையெல்லாம் ஒரே க்ஷணத்தில் கைதுசெய்து காவலில் வைத்ததைக் கண்டு மக்கள் கொதிப்படைந்தனர். பல இடங்களில் கலவரங்கள் ஏற்பட்டன—சில இடங்களில் ரயில்வே ஸ்டேஷன்கள் கொளுத்தப்பட்டன, சில இடங்களில் தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டும் ரயில்வே தண்டவாளங்கள் பிடுங்கப்பட்டும், போக்குவரத்துக்கு இடையூறுகள் உண்டுபண்ணப்பட்டன. மற்றும் சில இடங்களில் கோர்ட்டுகள், ரிஜிஸ்டர் ஆபீஸ்கள் சூறையாடப்பட்டன. இந்த பலாத்காரச் செயல்கள் காங்கிரஸ் கொள்கைக்கு மாறானவை. தலைவர்களை ஒரேயடியாகக் கைது செய்ததால் பொது ஜனங்களுக்கு ஏற்பட்ட கொதிப்புக் காரணமாக ஏற்பட்டவையே இவையாகையால்,காங்கிரஸுக்கும் இவற்றிற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. ஆனால், அன்னிய சர்க்காரின் பிரதிநிதியாகிய வைஸ்ராய், காங்கிரஸுக்கு சம்பந்தம் இல்லை என்பதை பூர்ணமாக ஒப்புக்கொள்ளவில்லை. 1942-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் முதல் 1945-ல் யுத்த முடிவு வரை காங்கிரஸ் தலைவர்கள் எல்லோரும் காவலிலேயே இருந்தார்கள். 1945-ம் வருஷம் ஜூன் மாதத்தில் விடுதலை செய்யப்பட்டார்கள். மகாத்மா மட்டில் தேக அசௌக்கியத்தின் காரணமாக 1944-ம்வருஷத்திலேயே விடுவிக்கப்பட்டார். காவலில் இருந்த காலத்தில் மகாத்மாவுக்கு இரண்டு பெரிய துக்கங்கள் நேரிட்டன—அவர் தர்ம பத்தினி கஸ்தூரிபாயும், காரியதரிசி ஸ்ரீ மகாதேவ் தேசாயும் சிறையிலேயே காலகதியை அடைந்துவிட்டார்கள்.

1942-ம் ஸு ஆகஸ்டு மீ மக்கள் எழுச்சி

1942-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்திற்குப் பிறகு 1945-ம் வருஷம் ஏப்ரல் மாதம் வரை அரசியல் வளர்ச்சி சம்பந்தமாக இந்திய ராஜ்யத்தில் முக்கியமான சம்பவம் எதுவுமே நிகழவில்லை. 1939-ம் வருஷத்தில் அக்டோபர்-நவம்பர் மாதத்தில் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலிருந்த காங்கிரஸ் மந்திரிசபையும் இதர காங்கிரஸ் மந்திரி சபைகளைப் போல் ராஜீ

1945-ம் ஸு ஏப்ரல் மீ

ராமா செய்தது. அப்படி ஏற்பட்ட கொஞ்சக்காலத்துக்குப் பிறகு காங்கிரஸ் அங்கத்தினர்களில் சிலர் காவலில் வைக்கப்பட்டதால் சட்டசபையில காங்கிரஸ் அங்கத்தினர்களின் எண்ணிக்கை குறைந்து, முஸ்லிம் லீக் தட்டுத் தடுமாறி கவர்னரின் உதவியுடன் ஒரு மந்திரி சபையை அமைக்க முடிந்தது. 1945-ம் வருஷ ஆரம்பத்தில் பல காங்கிரஸ்காரர்கள் விடுதலை செய்யப்பட்டதின் பேரில் லீக் மந்திரி சபையின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அம்மாகாணத்திலுள்ள நிலைமை காரணமாக காங்கிரஸ் மந்திரி சபையை ஏற்படுத்த அனுமதி வேண்டும் என்று காங்கிரஸ் காரியக் கமிட்டியைக் கேட்டுக் கொண்டார்கள். அவ்வேண்டுகோளுக்கு இணங்கி காரியக் கமிட்டி அனுமதி அளித்தது. அதன்பேரில் காங்கிரஸ் மந்திரி சபை வடமேற்கு மாகாணத்தில் ஏற்பட்டது.

1945-ம் வருஷம் மே மாதத்தில் ஜெர்மனியும் இத்தாலியும் சரணகதி அடைந்ததின் காரணமாய் ஐரோப்பாவில் யுத்தம் முடிந்தது. நான்கு மாதங்களுக்கு அப்பால், செப்டம்பர் மாதத்தில், அமெரிக்கா அணுகுண்டைப் பிரயோகம் செய்ததின் விளைவாக, ஜப்பானும் சரணகதி அடைந்தது. யுத்தம் முடியுமுன், 1945-ம் வருஷம் ஏப்ரல் மாதக் கடைசியில் சான்பிரான்ஸிஸ்கோவில் சர்வதேச மகாநாடு கூடி உலக சமாதானத்தைப் பாதுகாக்க ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தத் தீர்மானித்தார்கள். உலகத்தில் பல நாடுகள் அடிமைப்படுத்தப்பட்டு அன்னிய ஆதிக்கத்தின் கீழ் இருக்கும்வரை, உலக சமாதானத்தைப் பற்றி பேசுவது அர்த்தமற்ற விஷயம் என்று காங்கிரஸ் காரியக் கமிட்டி அபிப்பிராயப்பட்டது.

யுத்த முடிவு

ஜெர்மனி சரணடைந்து ஐரோப்பாவில் யுத்தம் முடிந்து நெருக்கடி தளர்ந்ததும், காவலில் வைக்கப்பட்டிருந்த காங்கிரஸ்காரர்கள் 1945-ம் வருஷம் ஜூன் மாதத்தில் விடுதலை செய்யப்பட்டார்கள். இந்தியாவின் அரசியலில் இருந்துவந்த முட்டுக்கட்டையைத் தீர்க்க வைஸ்ராய் லார்டு வேவல், விடுதலையான காங்கிரஸ் பிரமுகர்களையும் இதர கட்சித் தலைவர்களையும் சிம்லாவுக்கு அழைத்து மத்திய நிர்வாகக் கவுன்ஸில் அமைப்பு விஷயமாய் கலந்து பேசினர். காங்கிரஸிற்கும் லீகுக்கும்

உடன்பாடு ஏற்படாததால் பேச்சுக்கள் முறிந்தன, (1945-ம் வருஷம் ஜுலை மீ) காங்கிரஸ் கவுன்ஸிலர்களில் ஒரு தேசீய முஸ்லிமையும் நியமிக்க தங்களுக்கு உரிமை உண்டு என்று காங்கிரஸ் வற்புறுத்தியது. முஸ்லிம் லீக்கோ தானே முஸ்லிம்களுக்குப் பிரதிநிதியான ஸ்தாபனம் என்றும், காங்கிரஸ் இந்துக்களை நியமிக்கலாமே ஒழிய முஸ்லிமை நியமிக்கலாகாது என்றும் வாதித்தது.

யுத்தம் முடிந்ததும் பிரிட்டனில் பார்லிமெண்டு கலைக்கப்பட்டு மறு தேர்தல்கள் நடந்தன. 1945-ம் வருஷம் ஜுலை மாதத் தேர்தலில் ஸ்ரீ வின்ஸ்டன் சர்ச்சில் தலைமையிலுள்ள கன்சர்வேடிவ் கட்சி படு தோல்வியை அடைந்தது. தொழிற்கட்சி அங்கத்தினர்கள் 390 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டதால் தொழிற்கட்சி சர்க்கார் அதிகாரத்தில் அமர்ந்தது.

1945-ம் வருஷ ஜுலை மீ பிரிட்டிஷ் தேர்தல்கள், தொழிற்கட்சி வெற்றி

தொழிற்கட்சித் தலைவர்கள், இந்தியா பூர்ண சுதந்திரம் அடைவதில் தங்களுக்கு அனுதாபம் உண்டு என்று சொல்லி வந்தார்கள். தொழிற்கட்சி சர்க்கார் பிரட்டனில் ஏற்பட்ட பிறகு, வைஸ்ராய் வேவல் பிரிட்டிஷ் சர்க்காரைக் கலந்துகொண்டு 1945-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் ஒரு அறிக்கையை வெளியிட்டார். கூடிய சீக்கிரத்தில் இந்தியாவின் அரசியலை நிர்மாணிக்க ஒரு சபையைக் கூட்டுவது மன்னர் சர்க்காரின் நோக்கமென்றும், சட்டசபைகளுக்குப் புதுத் தேர்தல்கள் நடத்த ஏற்பாடு செய்வதாகவும், மாகாணச் சட்டசபைகளில் வரும் புதுப் பிரதிநிதிகளை கிரிப்ஸ் திட்டத்தைப் பற்றி அல்லது அதில் செய்யக்கூடிய மாறுதலைப்பற்றி கலந்து ஆலோசிக்கப் போவதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டது.

பிறகு, டிஸம்பர் மாதத்தில், பிரிட்டிஷ் பார்லிமெண்டிலுள்ள பல கட்சியினர்களின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு கோஷ்டியை, இந்தியப் பிரச்னையை நேரில் அறிய, இந்தியாவுக்கு அனுப்பினார்கள். அவர்கள் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்து, பலருடன் பேசிய பிறகு, தங்கள் அபிப்பிராயங்களை பிரிட்டிஷ் சர்க்காருக்கும் பார்லிமெண்டுக்கும் தெரிவித்தார்கள்.

வைஸ்ராய் அறிக்கைப்படி 1946-ம் வருஷ ஆரம்பத்தில் மாகாணச்சட்டசபைகளுக்கும் மத்தியசட்டசபைகளுக்கும்தேர்தல்

கள் நடந்தன. பொதுத் தொகுதிகளிலெல்லாம் அநேகமாக காங்கிரஸ் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். முஸ்லிம் ஸ்தானங்களில் பெருவாரியாக முஸ்லிம் லீக் பிரதிநிதிகள் வெற்றி அடைந்தார்கள். ஆனல், சிந்து மாகாணத்திலும், வங்க மாகாணத்திலும் மட்டும் முஸ்லிம் லீக் மந்திரிசபைகளை அமைக்க முடிந்தது. வங்கத்திலும் ஐரோப்பிய அங்கத்தினர்களின் ஆதரவைக் கொண்டுதான் முஸ்லிம் லீக் மந்திரிசபை அதிகாரத்துக்கு வந்தது. பஞ்சாபில் கூட முஸ்லிம் லீகால் மந்திரி சபை அமைக்க முடியவில்லை. காங்கிரஸும் கம்யூனிஸ்டுகளும் சேர்ந்த கூட்டு மந்திரி சபை ஏற்பட்டது. இதர மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரி சபைகள் நிறுவப்பட்டன.

இந்தியாவில் புதுத் தேர்தல்கள்

தேர்தல்கள் முடிந்த பிறகு, இந்தியா மந்திரியான லார்டு பெதிக் லாரன்ஸ் தலைமையில் ஸர். ஸ்டாபோர்ட் கிரிப்ஸ், ஹோரேஸ் அலெக்ஸாண்டர் ஆகிய மூன்று பிரிட்டிஷ் மந்திரிகள் அடங்கிய தூது கோஷ்டியை இந்தியாவுக்கு அனுப்ப, பிரிட்டிஷ் சர்க்கார் தீர்மானித்தார்கள். அந்தத் தூதுகோஷ்டி இந்தியாவுக்குப் புறப்படுமுன், 1946-ம் வருஷம் மார்ச்சு மாதம் 15-ம் தேதி பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஸ்ரீ ஆட்லி சொன்னதாவது :—“ இந்தியா பூர்ண சுதந்திரத்தை கூடிய சீக்கிரத்தில் அடைவதற்கு ஒத்தாசை செய்ய எனது சகாக்கள் இந்தியாவுக்குப் பயணமாகிறார்கள். இப்பொழுது உள்ள ஆட்சிக்குப் பதிலாக எவ்வித அரசியல் வேண்டும் என்பது இந்தியாவே தீர்மானம் செய்யவேண்டிய விஷயம். அந்தத் தீர்மானம் செய்வதற்கு வேண்டிய ஸ்தாபனத்தை நிறுவ ஒத்தாசை செய்வதே நமது விருப்பம்............பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் இருக்கவே இந்தியர்கள் தீர்மானிப்பார்கள் என்று நான் நம்புகிறேன். அப்படிச் செய்வதில் அந்தத் தேசத்துக்கு மகத்தான அனுகூலங்கள் உண்டு..............ஆனல்,இந்தியாவே சுயேச்சையாக வெளி நிர்ப்பந்தம் எதுவும் அன்னியில் அப்படித் தீர்மானம் செய்யவேண்டும். ஆனல், அந்தத் தேசம் தனித்த சுயேச்சை நாடாக இருக்கத் தீர்மானித்தால், அப்படிச் செய்ய அந்தத் தேசத்துக்கு உரிமை உண்டு. மாறுதலுக்கு மார்க்கத்தை செப்பனிடுவது நமது கடமை.”

பிரிட்டிஷ் மந்திரி சபை தூது கோஷ்டி

இதை அனுசரித்து லார்டு பெதிக் லாரன்ஸ், ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ், ஹோரேஸ் அலெக்சாண்டர் ஆகியவர் அடங்கிய பிரிட்டிஷ் மந்திரிகள் கோஷ்டி, இந்தியாவுக்கு வந்து பல ராஜீய கட்சிகளின் பிரதிநிதிகளையும் சமஸ்தான மன்னர்களின் பிரதிநிதிகளையும் கலந்தார்கள். முக்கியமாக இந்தியாவைத் துண்டு போடாமல் காங்கிரஸ் கட்சியும் முஸ்லிம் லீக் கட்சியும் ஒப்புக்கொள்ளக்கூடிய திட்டத்தைத் தயாரிக்க அவர்கள் முயற்சி செய்தார்கள். ஆனால், இரு கட்சிப் பிரதிநிதிகளும் பல விஷயங்களில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தும் முடிவான ஒற்றுமைக்கு வர இயலவில்லை. அதன் பேரில் புது அரசியலை உருவாக்க தங்களுக்கு யுக்தமென்று தோன்றும் ஏற்பாட்டை 1946-ம் வருஷம் மே மாதம் 16-ம் தேதியில் பிரிட்டிஷ் மந்திரி சபை தூதுகோஷ்டி அறிக்கை மூலம் வெளியிட்டார்கள்.

பிரிட்டிஷ் மந்திரிசபை தூதுகோஷ்டி அறிக்கை 1946 மே 16

"இந்தியர்கள் தங்கள் எதிர்கால அரசியலை நிர்மாணிக்க உடனடியான ஏற்பாடு செய்யவேண்டியது, அப்படி புது அரசியல் நிர்மாணமாகும் வரை, ஆட்சி நிர்வாகத்தை நடத்த இடைக்கால சர்க்கார் நியமிக்கப்படவேண்டும். ஜனங்களின் எல்லா வகுப்பினர்களுக்கும் நீதி வழங்கும்படி முயற்சி செய்திருக்கிறோம். இந்தியாவைக் காரியசாத்தியமான வகையில் ஆள சவுகரியமான முறையை சிபார்சு செய்கிறோம். தற்காப்புக்குச் சிறந்ததாகவும் சமூக ராஜீய பொருளாதாரத் துறைகளில் அபிவிருத்திக்குச் சந்தர்ப்பம் அளிக்கக்கூடியது."

"சாச்வதமான பெருவாரியான இந்துக்களின் ஆட்சியில் முஸ்லிம்களுக்குள்ள உண்மையான அச்சத்தை உணர்ந்து, அப்படிப்பட்ட அச்சம் அரசியலில் உள்ளப் பாதுகாப்புகளால் தவிர்க்கக்கூடியது அல்லவென்றும் உணர்ந்து, அவர்களின் கலாசாரம், மதம், பொருளாதார இதர அக்கறைகளுக்கு அவசியமான விஷயங்களில் முஸ்லிம்களின் ஆதிக்கத்தை உறுதி செய்யும் உபாயங்களைத் தேடவேண்டும்."

"ஆகவே, முஸ்லிம் லீக் கோரிய தனித்த பூர்ண சுயேச்சையான பாகிஸ்தான் சாத்தியமானதா என்று யோசித்தோம். முஸ்லிம் லீக் கோரிய வடமேற்குப் பிரதேசத்தில், அதாவது பஞ்சாப், வடமேற்கு எல்லைப்புற மாகாணம், ஸிந்து, பிரிட்டிஷ் பலுசிஸ்

தான், இந்த மாகாணங்களில் 62 சதவிகிதம் முஸ்லிம்களும், 38 சதவிகிதம் முஸ்லிம் அல்லாதார்களும் இருக்கிறார்கள்; வடகிழக்குப் பிரதேசத்தில் அதாவது வங்கம், அஸ்ஸாம் மாகாணங்களில் 51.7 சதவிகிதம் முஸ்லிம்களும், 48.3 சதவிகிதம் முஸ்லிம் அல்லாதார்களும் இருக்கிறார்கள். தவிரவும், இந்தியாவின் இதர பாகங்களில் 19 கோடி ஜனத்தொகையில் சுமார் 2 கோடி முஸ்லிம்கள் இருக்கிறார்கள். ஆகவே, முஸ்லிம் லீக் கோரிய பாகிஸ்தான் சிறுபான்மையோர் பிரச்னையைத் தீர்க்காது என்ற முடிவுக்கு வந்தோம்.''

''முஸ்லிம்கள் பெருவாரியாக உள்ள பிரதேசங்கள் அடங்கிய பாகிஸ்தானை ஏற்படுத்துவதின் உசிதத்தையும் யோசித்தோம். அப்படிப்பார்த்தால் பஞ்சாப் மாகாணத்தையும், வங்க மாகாணத்தையும் இரு பாகங்களாகப் பிரிக்கவேண்டி வருகிறது. பிரதான நகரமான கல்கத்தாவும் கிழக்குப் பாகிஸ்தானில் சேராது. அஸ்ஸாம் மாகாணத்தில் ஸில்ஹெட் ஜில்லா ஒன்றுதான் பாகிஸ்தானுக்குக் கிடைக்கும். இந்தப் பாகிஸ்தானை முஸ்லிம் லீக் ஒப்புக்கொள்ளத் தயாராயில்லை.''

''தவிரவும்,நிர்வாகத்திலோ, பொருளாதாரத் துறையிலோ, ராணுவத் துறையிலோ கவனித்தால் தேசத்தை துண்டாடுவதற்கு மகத்தான ஆக்ஷேபணைகள் இருக்கின்றன. போக்குவரத்து தபால் தந்தி இலாக்காக்கள், இந்தியா ஒரு தேசம் என்ற கோட்பாடின் பேரில் நிறுவப்பட்டவை; அவைகளைப் பிரிப்பது இந்தியாவின் இரு பாகங்களையும் கடுமையாக பாதிக்கும். தற்காப்பும் ஒன்றாயிருப்பது அதைவிட முக்கியமானது; நீர், நில, வானப் படைகளின் திறமை பிரிவினையால் பாதிக்கப்படும். பாகிஸ்தானின் இரு பகுதிகளும் அபாயத்துக்குள்பட்ட எல்லைகளை உடையன; தற்காப்புக்கும் போதுமான விசாலப் பிரதேசம் இல்லை.''

''மேலும், இந்தியா இரண்டு அரசாங்கங்களாகப் பிரிக்கப்பட்டால், எந்த அரசாங்கத்தை சமஸ்தானங்கள் சேருவது என்பதிலும் கஷ்டங்கள் நிறைந்துள்ளன. பாகிஸ்தானின் கிழக்குப் பகுதிக்கும் மேற்குப் பகுதிக்கும் மத்தியில் 700 மைல் ஹிந்துஸ்தான் பிரதேசம் இருக்கின்றது. யுத்த காலத்திலும் சமாதான காலத்திலும் இரு பகுதிகளுக்கும் இடையில் போக்குவரத்து ஹிந்துஸ்தானின் நல்லெண்ணத்தைப் பொறுத்து இருக்கிறது.''

“ஆகவே, இரண்டு ஸ்டேட்டுகளாக இந்தியாவைப் பிரிக்க வேண்டும் என்கிற யோசனையை நாங்கள் பிரிட்டிஷ் சர்க்காருக்குக் கூறமுடியாது.”

“ஆனால், ஐக்கிய இந்தியாவில் தங்கள் கலாசாரமும் சமூக வாழ்க்கையும் பாதிக்கப்படும் என்று முஸ்லிம்களுக்குள்ள அச்சத்தை நாங்கள் உணராமல் இல்லை. இதற்குப் பரிகாரமாக காங்கிரஸ் சொல்லும் யோசனை என்னவென்றால், அயல் நாட்டு விவகாரங்கள், தற்காப்பு, போக்கு வரத்து போன்ற சில விஷயங்களில் மட்டும் அதிகாரமுள்ள மத்திய சர்க்காரும் இதர விஷயங்களில் பூர்ண சுயேச்சையுள்ள மாகாணங்களும் அடங்கிய அரசியலமைப்பு. மாகாணங்கள் இஷ்டப்பட்டால் இதர விஷயங்களிலும் மத்திய சர்க்காருக்கு அதிகாரங்கள் அளிக்கலாம். இதை அனுஷ்டிப்பதில் சிக்கல்கள் இருக்கின்றன—சில மந்திரிகள் மட்டும் அகில இந்தியாவுக்கு ஜவாப்தாரியாவார்கள், சிலர் அதிகாரங்களை அளித்திருக்கும் மாகாணங்களுக்கு மட்டும் மந்திரிகள். சட்ட சபைகளில் பல மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் மத்திய சர்க்காரின் மூன்று விஷயங்களைத் தவிர இதர விஷயங்களைப் பற்றிய ஆலோசனையில் கலந்து கொள்ள முடியாது.

பிரிட்டிஷ் மந்திரிசபை தூதுகோஷ்டி விடுத்த எதிர்கால அரசியலின் அடிப்படை

“கவனிக்கவேண்டிய மற்றொரு அம்சம்—சமஸ்தானங்களுக்கும் இந்தியாவுக்குமுள்ள உறவுகள், பிரிட்டிஷ் இந்தியா பூர்ண சுயேச்சை நாடாக ஆனதும், பிரிட்டிஷ் மன்னருக்கும் சமஸ்தானாதிபதிகளுக்குமுள்ள உடன்படிக்கைகள் ரத்தாகும். மேலாதிபத்தியத்தை பிரிட்டிஷ் மன்னர் வைத்துக் கொள்ளவும் முடியாது, சுயேச்சையான இந்தியாவுக்கு மாற்றவும் முடியாது. சமஸ்தானங்களுக்கும் புது இந்தியாவுக்குமுள்ள உறவுகள் புது உடன்படிக்கைகள் மூலம் ஏற்பட வேண்டும். எல்லோருடைய பாத்தியங்களுக்கும் நியாயமான வகையில், காரிய சாத்தியமான அரசியலமைப்பு அடியிற்கண்ட அடிப்படையின் பேரில் இருக்கவேண்டும் :—

1. பிரிட்டிஷ் இந்தியாவும் சமஸ்தானங்களும் அடங்கிய யூனியன்—அதன் அதிகாரங்கள்—அயல்நாட்டு விவகாரங்கள், தற்காப்பு, போக்கு வரத்து, இவ்விஷயங்களை நடத்த நிதி வரவு செலவுக்கான அதிகாரமும் வேண்டியது.

2. மேற்கண்ட நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய நிர்வாகமும் லெஜிஸ்லேச்சரும் (சட்டசபைகள்) இருக்க வேண்டும். லெஜிஸ்லேச்சரில் முக்கியமான வகுப்புப் பிரச்னை ஏற்பட்டால், பெருவாரியாயுள்ள இரண்டு சமூகங்களில் ஒவ்வொரு சமூகத்தின் அங்கத்தினர்களின் பெருவாரியாலும் மொத்த அங்கத்தினர்களின் பெருவாரியாலும் தீர்மானிக்கப்படவேண்டும்.

3. முதல் பாராவில் சொல்லப்பட்ட யூனியன் விஷயங்கள் நீங்கலாக இதர விஷயங்களும் மிச்ச அதிகாரங்களும் மாகாணங்களுக்கு ஆதீனப்பட்டவை.

4. யூனியனுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்கள் நீங்கலாக இதர விஷயங்களும் அதிகாரங்களும் சமஸ்தானங்களுக்கு.

5. மாகாணங்கள் தங்கள் இஷ்டப்படி கூட்டு நிர்வாகமும் லெஜிஸ்லேச்சரும் வைத்துக்கொள்ளலாம். ஒவ்வொரு கூட்டும் எந்தெந்த விஷயங்களைப் பொதுவாக வைத்துக்கொள்வது என்பதைத் தீர்மானித்துக்கொள்ளும்.

6. முதல் பத்து வருஷத்துக்குப் பிறகும் பிந்தி பத்து வருஷ கால முடிவுகளில் அரசியலைத் திருத்த எந்த மாகாண லெஜிஸ்லேச்சரும் பெருவாரியான வோட்டுகளால் கோரலாம்.

இந்த அடிப்படையை வைத்துக்கொண்டு அரசியல் நிர்ணய சபையைக் கூட்ட யோசனைகளைக் கூறினர்கள். நேர்முகமான தேர்தல்கள் நடத்துவது மிகவும் சிரமமானதாலும் மாகாணங்களுக்கும் புதுத் தேர்தல் முடிவாகி மாகாண லெஜிஸ்லேச்சர்கள் அமைந்துவிட்டதாலும், அந்தந்த மாகாணத்து ஜன சங்கியை விகிதப்படி வகுப்புக்களுக்குப் பிரதிநிதித்துவம் அளித்து, மாகாண லெஜிஸ்லேச்சரில் அந்தந்த சமூகத்தைச் சார்ந்த அங்கத்தினர்களால், அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும், என்று யோசனை கூறினர்கள். சமஸ்தானங்களின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கும் முறையை சமஸ்தானங்களுக்காக பேச்சு வார்த்தை நடத்தும் கமிட்டியுடன் கலந்து செய்யவேண்டியது என்று விடப்பட்டது.

மாகாணங்கள் மூன்று கோஷ்டிகளாகப் பிரிக்கப்பட்டன. முதல் கோஷ்டியில் சென்னை, பம்பாய், ஐக்கிய மாகாணங்கள், பீஹார், மத்தியமாகாணங்கள், ஒரிஸ்ஸா சேர்க்கப்பட்டன; இரண்டாவது கோஷ்டியில் பஞ்சாப், வடமேற்கு எல்லைப்புற

NOV 1951

மாகாணம், ஸிந்து; மூன்றாவது கோஷ்டியில் வங்கம், அஸ்ஸாம் மாகாணங்கள். இப்படிப் பிரிந்து அரசியல் நிர்ணய சபையின் நடைமுறையைப் பற்றி சில ஷரத்துக்கள் கூறப்பட்டன.

முதல் பூர்வாங்கக் கூட்டத்தில் வேலை, ஒழுங்கு முறை நிர்ணயம், தலைவர், உபதலைவர் முதலிய உத்தியோகஸ்தர்களின் தேர்தல், பிரஜா-உரிமைகள், சிறுபான்மையோர்கள், பூர்வீகக் குடிகளுள்ள பிரதேசங்கள், விலக்கப்பட்ட பிரதேசங்கள், இவைகள் சம்பந்தமாக யோசனை கூற கமிட்டிகளை ஏற்படுத்துவது. பிறகு பிரதிநிதிகள் மேலே கண்டபடி மூன்று கோஷ்டிகளாகப் பிரிவார்கள்.

ஒவ்வொரு கோஷ்டியும் தங்கள் மாகாணங்களின் அரசியலை நிர்ணயம் செய்வார்கள், கோஷ்டியில் குறிப்பிட்ட மாகாணங்களுக்குப் பொதுவான கூட்டு அரசியலை ஸ்தாபிப்பதா, அப்படியானால் எவ்விஷயங்களில் கூட்டு ஸ்தாபனத்துக்கு அதிகாரம், இவைகளை நிர்ணயிப்பது.

பிறகு எல்லாப் பிரதிநிதிகளும் சமஸ்தானப் பிரதிநிதிகள் உள்பட, யூனியன் அரசியலைத் தயார் செய்யவேண்டியது. யூனியன் நிர்ணய சபையில், மேலே அடிப்படையானவை என்று சொல்லப்பட்ட ஆறு அம்சங்களில் ஏதாவது மாற்றித் தீர்மானம் நிறைவேறினால்—அல்லது முக்கியமான வகுப்புப் பிரச்னையைப் பொறுத்து தீர்மானம் நிறைவேறினால், இரண்டு பெரிய (ஹிந்து முஸ்லிம்) சமூகத்துப் பிரதிநிதிகளில் ஒவ்வொரு சமூகத்துப் பிரதிநிதிகளின் மெஜாரிடியால் நிறைவேற வேண்டும், எந்தப் பிரச்னை யாவது முக்கியமான சமூகப் பிரச்னையா என்றதை சபைத் தலைவர் முடிவு செய்யவேண்டும். அதைத் தீர்மானம் செய்ய, மேற்கண்ட இரு சமூகங்களில் எந்த சமூகத்தினரின் பிரதிநிதிகளாவது, பெருவாரியாக, சமஷ்டி கோர்ட்டின் அபிப்பிராயம் தேவை என்று கோரினால், அப்பிரச்னையை சமஷ்டி கோர்ட்டு தீர்மானத்துக்கு அனுப்பவேண்டும்.

புது அரசியல் ஏற்பாடுகள் அமுலுக்கு வந்தவுடன் கோஷ்டியில் சேர்க்கப்பட்ட எந்த மாகாணமும் அந்த கோஷ்டியை விட்டு விலக உரிமையுண்டு. அப்படிப்பட்ட முடிவு புது அரசியல்படி தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் லெஜிஸ்லேச்சரால் செய்யப்பட வேண்டியது.

அரசியல் நிர்ணய சபைக்குத் தேர்தல்களை உடனே நடத்தி அரசியலைத் துரிதமாக கூடுமானவரை நிர்ணயம் செய்ய வேண்டியது என்றும், அதிகாரம் மாற்றுதல் விஷயமாய் யூனியன் நிர்ணய சபைக்கும் பிரிட்டனுக்கும் உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அறிக்கையில் கூறப்பட்டது.

அறிக்கை வியாக்கியானம்

இந்த அறிக்கையை வியாக்கியானம் செய்வதில், முக்கியமாக, மாகாண கோஷ்டிகள் சேருவது, எந்த சந்தர்ப்பத்தில் ஒரு மாகாணம் கோஷ்டியை விட்டு விலகலாம் என்பவைகளைப் பொறுத்து அபிப்பிராய பேதங்கள் இருந்தன. காங்கிரஸ் வியாக்கியானப்படி அடிப்படையான ஐந்தாவது அம்சமாக மாகாணங்கள் தங்கள் நோக்கப்படி கோஷ்டிகள் சேரலாம் என்று கண்டிருப்பதால், பிந்தி மூன்று கோஷ்டிகளில் குறிப்பிட்ட மாகாணங்கள் கண்டிருப்பது முரணானது, அரசியல் நிர்ணய சபை கூடின உடன் மாகாணப் பிரதிநிதிகள், அறிக்கையில் கண்ட கோஷ்டியில் இருக்கிறது, இல்லாததைப் பற்றித் தீர்மானம் செய்யலாம். இந்த வியாக்கியானத்தை முஸ்லிம் லீக் பலமாக ஆட்சேபித்தது, இவைகளின் விளைவாக பிரிட்டிஷ் மந்திரி சபை தூது கோஷ்டி தங்கள் மே மாதம் 16-ந் தேதி அறிக்கைக்கு விமர்சனம் அல்லது விளக்கம் செய்யும் வகையில் 25-ந் தேதியன்று ஒரு அறிக்கையை வெளியிட்டார்கள். அதில் காங்கிரஸின் வியாக்கியானம் தங்களுடைய அபிப்பிராயங்களை பிரதிபலிக்கவில்லை என்றும் கோஷ்டிப் பிரிவினை முதலில் கட்டாய முறை என்றும், கோஷ்டியை விட்டு விலகுவது புது அரசியல்படி தேர்ந்தெடுக்கப்படும் லேஜிஸ்லேச்சரால்தான் முடிவு செய்யப்பட வேண்டியது என்றும் கூறப்பட்டது.

மே மாதம் 16-உ அறிக்கை ஏற்கப்பட்டது

இந்த விமர்சனத்துக்குப் பிறகு முஸ்லிம் லீக் அறிக்கையை ஏற்றுக் கொள்வதாகத் தீர்மானம் செய்தது. வியாக்கியான சம்பந்தமாக சமஷ்டி கோர்ட்டின் அபிப்பிராயத்தைப் பெற உரிமையுண்டு என்ற வாக்குறுதியைப் பெற்றுக்கொண்டு காங்கிரஸும் அறிக்கையை ஏற்றது. ஆனால், இடைக்கால சர்க்கார் நிறுவும் விஷயமாய் ஒப்பந்தம் ஏற்படவில்லை. காங்கிரஸ் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஸ்தானங்களில் ஒன்றை தேசிய முஸ்லிமுக்குக் கொடுக்க வேண்

டும் என்றது, ஏனென்றால் காங்கிரஸ் மதச்சார்பற்ற தேசிய ஸ்தாபனம். முஸ்லிம் லீகோ இந்திய முஸ்லிம்களுக்கு தாங்கள் தான் ஏகதேசப் பிரதிநிதிகள் என்றும், தேசிய முஸ்லிமை நியமிக்கக் கூடாது என்றும் ஆட்சேபித்தது. காங்கிரஸ் கடைசித் தீர்மானத்தில், மே மாதம் 16-ந்தேதி அறிக்கையை தாங்கள் ஏற்றுக்கொள்வதாகவும், இடைக்கால சர்க்காரில் கலந்துகொள்ள இஷ்டமில்லை யென்றும், கூறினது. அதன் பேரில் முஸ்லிம் லீக் தாங்கள் இடைக்கால சர்க்காரை நடத்தத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்கள். ஆனால், பிரிட்டிஷ் மந்திரி சபை கோஷ்டியின் மே மாதம் 16-ந் தேதி அறிக்கையை ஏற்றுக்கொண்ட கட்சிகள் எல்லோரையும் சேர்த்து இடைக்கால சர்க்கார் அமைய வேண்டும் என்பது அறிக்கையின் கருத்தாகையால், கொஞ்சகாலம் எல்லாக் கட்சிகளுக்கும் ஆலோசிக்க அவகாசம் அளிப்பதாக வைஸ்ராய் வேவல் பதில் அளித்துவிட்டார். அப்படி வைஸ்ராய் செய்தது முஸ்லிம் லீகுக்குத் துரோகம் செய்ததாகும் என்று கடுமையான வாக்குவாதங்கள் நடந்தன.

இரு கட்சிகளும் மே மாதம் 16-ந் தேதி அறிக்கையை ஏற்றுக் கொண்டுவிட்டதால், அவ்வறிக்கைப்படி அரசியல் நிர்ணய சபைக்குத் தேர்தல்கள் நடந்தன. அந்தத் தேர்தலில் முஸ்லிம் லீகும் கலந்து கொண்டது. தேர்தலில் வெற்றிபெற்ற அபேட்சகர்கள் பொதுப் பிரதிநிதிகளைப் பொறுத்த வரையில் ஒன்பது நபர்கள் நீங்கலாக காங்கிரஸ் ஆதரவு பெற்றவர்கள். முகம்மதிய வகுப்புப் பிரதிநிதிகள் ஐந்து நபர்கள் நீங்கலாக முஸ்லிம் லீகின் ஆதரவு பெற்றவர்கள். அரசியல் நிர்ணய சபையில் அப்பொழுது கட்சிவாரி பலம் வருமாறு-காங்கிரஸ் 207 (இரண்டு முஸ்லிம்கள் உள்பட); முஸ்லிம் லீக் 73; சுயேச்சைப் பிரதிநிதிகளுக்கு, பொது ஸ்தானங்களில் 9ம், முஸ்லிம் ஸ்தானங்களில் 3ம், ஆக 12.

அரசியல் நிர்ணய சபை தேர்தல்

காங்கிரஸ் காரியக் கமிட்டி நீண்டகால திட்டத்தை ஏற்றுக் கொண்டு இடைக்கால சர்க்காரில் கலந்து கொள்ள சம்மதம் இல்லை என்று தெரிவித்ததும், முஸ்லிம் லீக் கமிட்டி தாங்களே சர்க்காரை இதரக் கட்சிகளுடன் நடத்துவதாகச் சொன்னார்கள். அதை வைஸ்ராய் ஏற்காததால் ஆத்திரம்

முஸ்லிம் லீக் வீம்பு

கொண்ட முஸ்லிம் லீக் கமிட்டி அரசியல் நிர்ணய சபைத் தேர்தல்களுக்கு அப்பால் கூடி, அரசியல் நிர்ணய சபையை பகிஷ்காரம் செய்வதென்றும் சர்க்காருடனும் காங்கிரஸுடனும் ஒத்துழைப்பது இல்லை என்றும் தீர்மானித்தார்கள். (29-7-46).

முஸ்லிம் லீக் நீண்டகாலத் திட்டத்தையும் புறக்கணித்து விட்டதால், நீண்ட காலத் திட்டத்தை ஒப்புக்கொண்ட காங்கிரஸும் இதர கட்சிகளும் சேர்ந்த தேசீய சர்க்காரை அமைக்க, பண்டிட் ஜவஹர்லால் நேருவை வைஸ்ராய் அழைத்தார். அதன் பேரில் பண்டிட் ஜவஹர்லால் சர்க்காரில் பங்கு எடுத்துக் கொள்ள ஐந்து நபர்களின் பெயர்களை சமர்ப்பிக்கும்படியாக முஸ்லிம் லீகைக் கேட்டுக் கொண்டார். ஆனல் லீக் மறுத்துவிட்டது. முஸ்லிம் லீகைச் சாராத மூன்று முஸ்லிம்கள் கொண்ட மந்திரிகளின் ஜாப்தா வைஸ்ராய்க்கு அனுப்பப்பட்டது. முஸ்லிம் லீக் இஷ்டப்பட்ட பொழுது சர்க்காரில் சேர வசதி உண்டு என்றும் சொல்லப் பட்டது.

தேசீய சர்க்கார் அமைப்பு-1946 ஆகஸ்டு

ஏற்கனவே ஜுலை மாதம் 29-ம் தேதியில் முஸ்லிம் லீக் கமிட்டி செய்த தீர்மானப்படி ஆகஸ்டு 16-ம் தேதி நேரடியான நடவடிக்கை தினமாகக் குறிப்பிட்டிருந்தது. அப்படிப்பட்ட நேரடி நடவடிக்கைக்கு வங்க மாகாண பிரதம மந்திரியான சுஹ்ரவார்தி தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார். தான் பிரதமராக இருப்பதைப் பயன்படுத்திக் கொண்டு வங்காளத்தில் ஆகஸ்டு 16-ம் தேதி சர்க்கார் விடுமுறை நாளென்று உத்தரவு செய்தார். வங்க சட்ட சபைகளிலுள்ள லீகைச் சாராத அங்கத்தினர்கள், ஐரோப்பியர்களுள்பட, அப்படிச் செய்வது கலகத்திற்கு ஆஸ்பதமாகுமென்று எச்சரிக்கை செய்தார்கள்; பிரதமர் சுஹ்ரவர்த்தி ஆக்ஷேபணைக்குச் செவி சாய்க்கவில்லை. ஆகஸ்டு மாதம் 16-ம் தேதியன்று கல்கத்தாவில் கோரமான வகுப்புக் கலகம் ஏற்பட்டது. பல இந்துக்களும் சீக்கியரும் தாக்கப்பட்டார்கள். பதிலுக்காக இந்துக்களும் சீக்கியரும் முஸ்லிம்களைத் தாக்கினர்கள். நான்கு நாட்கள்வரை கட்டுக்கு அடங்காமல் கலகம் நடந்தது. பல இந்துக்களும், சீக்கியர்களும், முஸ்லிம்களும் பலியானர்கள்.

முஸ்லிம் லீக் தூண்டிய வகுப்புக் கலவரம்—1946 ஆகஸ்டு

தான் செய்த தீவினையின் பலாபலனை சக்ரவர்த்தி பிந்தி உணர்ந்தார் என்றே தோன்றுகிறது. இந்த முஸ்லிம் நட்பை அபிவிருத்தி செய்யவேண்டும் என்று பிற்காலத்தில் இவரே பிரசாரம் செய்ய ஆரம்பித்தார்.

தேசீய சர்க்கார் பதவி ஏற்பு—செப்டேம்பர்

ஆகஸ்டு மாதம் 24-ம் தேதியன்று வைஸ்ராய் செய்த ரேடியோப் பிரசங்கத்தில், பண்டிட் ஜவஹர்லால் சமர்ப்பித்த ஜாப்தாப்படி புது மந்திரிகளை ஒப்புக்கொள்வதாகவும் அன்றாட நிர்வாகத்தில் மந்திரிகளுக்கு அதிகப்படியான அதிகாரம் இருக்கும் என்றும், தான் குறுக்கிடுவதில்லை என்றும் தெரிவித்தார். புது மந்திரிகள், 2-9-46-ல் பதவிகளில் அமர்ந்தார்கள்.

முஸ்லிம்லீக் தேசீய சர்க்காரில் புகுந்தது

காங்கிரஸ் மந்திரிகள் பதவிகளில் இருப்பதைக் கண்டு முஸ்லிம் லீகால் பொறுக்க முடியவில்லை, முந்திய முடிவை வாபீஸ் செய்து கொண்டு 25-10-46-ல் மத்திய சர்க்காரில் முஸ்லிம் லீகினரும் மந்திரி பதவி ஏற்றார்கள். முஸ்லிம்களின் நலன்களைப் பாதுகாக்க சர்க்காருக்குள்ளேயே காவலாளிகள் முறையில் முஸ்லிம் லீக் பிரதிநிதிகள் இருக்க வேண்டியது அவசியம் என்று ஜின்னா சொன்னார். ஆனால், பதவி ஏற்றதில் முஸ்லிம் லீக் வைஸ்ராய் வேவலை ஏமாற்றி விட்டதாகவே எண்ண வேண்டியிருக்கிறது. அக்டோபர் மாதம் 4-ம் தேதியில் ஜின்னாவுக்கு வைஸ்ராய் எழுதிய கடிதத்தில், "மே மாதம் 16-ந் தேதி காபினெட் தூது கோஷ்டி விடுத்த அறிக்கையை ஒப்புக்கொள்வதன் அடிப்படையின் பேரில்தான் இடைக்கால சர்க்காரில் முஸ்லிம் லீக் கலந்து கொள்ள முடியும்" என்று கண்டிருந்தது.

அரசியல் நிர்ணய சபை முஸ்லிம் லீக் பகிஷ்காரம்

லீகர்களை மந்திரிகளாக நியமிக்குமுன், இடைக்கால சர்க்காரிலும் அரசியல் நிர்ணய சபையிலும் ஒத்துழைக்கும் நோக்கத்துடன் லீகர்கள் இடைக்கால சர்க்காரில் பங்கு எடுத்துக் கொள்வார்கள் என்று ஜின்னா உறுதிகூறினதாக, வைஸ்ராய் பண்டிட் நேருவுக்கு எழுதினார். ஆனால், பதவி ஏற்றபின்தான் அதுமாதிரி எந்தவிதமான உறுதி மொழியும் கூறவில்லை என்றும், அரசியல் நிர்ணய சபைக்

கூட்டத்திற்கு லீகர்கள் போகக்கூடாதென்றும் லீகர்ளுக்கு ஜின்னா தாக்கீது அனுப்பினார்.

பிரிட்டிஷ் சர்க்காரின் சமரஸ முயற்சி

அரசியல் நிர்ணய சபை முதல் கூட்டத்தை 9–12–46 க்கு நடத்துவதென்று அழைப்புக்கள் அனுப்பப்பட்டிருந்தன. அதற்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்து எடுத்த பிறகும், இடைக்கால சர்க்காரில் பதவிகளையும் ஏற்ற பிறகும், அரசியல் சபையை பகிஷ்கரிக்க தாக்கீது அனுப்பியது மாகியவல்லி, சாணக்யர், இவர்கள் போதித்ததாகச் சொல்லும் மோசமான ராஜீய தந்திரமாகும். தவிரவும் அரசியல் நிர்ணய சபையில் முஸ்லிம் லீகைச் சேர்ந்தவர்கள் தனியாகக்கூடி அரசியலை உருவாக்குவார்கள் என்றும் ஜின்னா தெரிவித்தார். ஜின்னாவின் சாணக்யம், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு, வைஸ்ராய், இடைக்கால சர்க்கார், இவர்களுக்குத் தலைவலியை உண்டாக்கியது. அரசியல் நிர்ணய சபை கூட அழைப்புப் போய்விட்டதால் அது கூடியே தீரும், அதற்கு பூர்ண ஆதிபத்தியம் உண்டு, லீகர்கள் வந்தாலும் வராவிட்டாலும் சபை நடவடிக்கைகளைத் தொடங்கும் என்று காங்கிரஸ் சார்பில் சொல்லப்பட்டது. முஸ்லிம் லீகுக்கும் காங்கிரஸுக்கும் மற்றொரு சமரஸம் ஏற்படுத்த பிரிட்டிஷ் பிரதமமந்திரி காங்கிரஸ், சீக்கியர், முஸ்லிம் லீக் பிரதிநிதிகளை லண்டனுக்கு அழைத்தார். டிஸம்பர் மாதம் 9-ம் தேதி கூட இருக்கும் அரசியல் நிர்ணய சபைக்கு முட்டுக்கட்டைபோட சூழ்ச்சி என்று அழைப்பை ஏற்றுக்கொள்ள ஜவஹர்லால் நேரு மறுத்து விட்டார். ஆனால், அப்படிப்பட்ட நோக்கம் இல்லை என்றும், குறிப்பிட்ட தேதியில் அ. நி. சபை வெற்றிகரமாக நடப்பதை உத்தேசித்தே பேச்சு வார்த்தைகள் நடத்தப்படும் என்றும், ஆட்லி உறுதி அளித்ததின் பேரில், நேருஜீ லண்டனுக்குப் பிரயாணமானார். லண்டன் மகாநாடு பலன் அளிக்கவில்லை. ஜின்னாவுக்கும் இதர இந்தியப் பிரதிநிதிகளுக்கும் உடன்பாடு ஏற்படவில்லை.

அம்மகாநாடு முறிந்தவுடன் பிரிட்டிஷ் சர்க்கார் வெளியிட்ட அறிக்கையில், மே மாதம் 16-ம் தேதி பிரிட்டிஷ் மந்திரிசபை தூதுகோஷ்டி வெளியிட்ட அறிக்கை வியாக்கியான விஷயமாய் முஸ்லிம் லீக் வாதம் சரியென்று திரும்பவும் தெரிவித்தார்கள். சட்ட ஆலோசகர்களைக் கலந்ததின் பேரிலும், மாகாணப் பிரதிநிதிகள் முதலில் கோஷ்டிகளாகப் பிரிவது

டிஸம்பர் ௴ 6௳ பிரிட்டிஷ் சர்க்கார் அறிக்கை

கட்டாயமுறை என்றும், அந்தக் கோஷ்டிகள் மாகாண அரசியலை நிர்ணயிப்பதில், 'முடிவுகள், பிரதிநிதிகளின் பெருவாரியால் செய்யப்படுவது என்றும் வற்புறுத்தினார்கள். இந்த வியாக்கியானத்தைப் பொறுத்து பெடரல் கோர்ட்டின் அபிப்பிராயத்தைக் கோர காங்கிரஸ் கட்சிக்கு உரிமையுண்டென்றும் அறிக்கையில் காணப்பட்டது. ஆகவே, முஸ்லிம் லீக் யாதொரு பயமும் அன்னியில் அரசியலை உருவாக்குவதில் பங்கு எடுத்துக் கொள்ளலாம் என்று தைரியம் கூறப்பட்டது.

பிரிட்டிஷ் சர்க்கார் அறிக்கையை காங்கிரஸ் ஏற்றது—5-1-47

இவ்வறிக்கைக்குக் கொஞ்ச நாட்களில் டிஸம்பர் மாதம் 9-ம் தேதி யன்று அரசியல் நிர்ணய சபை கூடிற்று. திறப்புப் பூர்வாங்க பிரசங்கங்கள் முடிந்தபின் தலைவரும் உபதலைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மற்ற நடவடிக்கைகள் எடுக்குமுன் லீகர்களும் கலந்து கொள்வதற்காக சபைக்கூட்டம் ஒத்திப் போடப்பட்டது. ஒத்திப் போடப்பட்ட தேதிக்குமுன் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிகூடி பிரிட்டிஷ் சர்க்காரின் டிஸம்பர் மாதம் 6-ம் தேதி அறிக்கையை ஒப்புக்கொண்டார்கள். தங்கள் வியாக்கியானத்திற்கு முரணாயிருந்தாலும், அரசியல் நிர்ணய சபையின் வேலை ஸ்தம்பித்துப் போகாமல் இருப்பதை உத்தேசித்து, அறிக்கையை ஒப்புக் கொண்டார்கள்.

அரசியல் நிர்ணய சபையைக் கலைக்க லீக் கோரிக்கை-1947-ம் ௵ ஜனவரி ௴ 29-ம் ௳

தங்களுக்கு விரோதமானதானாலும் அந்த வியாக்கியானத்தை காங்கிரஸ் ஒப்புக்கொண்ட பிறகுங்கூட 23-1-47-ல் கூடின அரசியல் நிர்ணய சபைக்கூட்டத்திற்கு லீகர்கள் வரவில்லை. இனி நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க முடியாது என்று சபை வேலை ஒழுங்கு படுத்தும் கமிட்டியை தேர்தல் மூலம் நியமித்து, பிந்தி ஜீவாதார உரிமைகள், சிறுபான்மையோர் உரிமைகள், விலக்கப்பட்டவையும் பூர்வீகக் குடிகள் வசிக்கும் பிரதேசங்கள், யூனியனுக்கு அதிகாரமுள்ள விஷயங்கள், இவைகள் சம்பந்தமாக ஆலோசனைக் கமிட்டிகளை அரசியல் நிர்ணயசபை ஏற்படுத்தினார்கள்.

ஜனவரி மாதம் 29-ம் தேதியில் கூடின முஸ்லிம் லீக் கமிட்டி, மன்னர் சர்க்காரின் அறிக்கையை காங்கிரஸ் ஏற்றுக்கொள்வதாகச் சொன்னது வெறும் தந்திரம் என்றும், நல்லெண்ணத்துடன் செய்தது அல்லவென்றும், பிரிட்டிஷ் சர்க்கார் அறிக்கைப்படி தேசத்தின் எல்லாப் பிரதிநிதிகளும் ஏற்கக்கூடிய அரசியலை நிர்மாணிப்பது சாத்தியமில்லை என்றும், ஆகவே அரசியல் நிர்ணய சபையை பிரிட்டிஷ் சர்க்கார் கலைத்துவிட்டு 1946-ம் வருஷம் மே மாதம் 16-ம் தேதி அறிக்கையில் கண்ட யோசனைகளை வாபஸ் வாங்கவேண்டும் என்றும் தீர்மானங்களை நிறைவேற்றினார்கள்.

லீக் மந்திரிகளின் மாரீசம்

தவிரவும், லீக் மந்திரிகள் இடைக்கால சர்க்காரில் வந்தது முதல் சர்க்கார் வேலை நடக்கமுடியாமல் குழப்பம் செய்யும் வகையில் பல முறைகளைக் கையாண்டார்கள். தங்கள் இலாக்காக்களில் வேலை செய்துவந்த இந்துக்களையும் சீக்கியர்களையும் மாற்றி முஸ்லிம்களைக் கொண்டுவந்தார்கள். சர்க்காரின் அன்றாட வேலையில் ஊழலும் காலஹரணமும் அதிகரித்தன. இந்த மாரீசத்தைப் பார்த்துவிட்டு லீகரல்லாத மந்திரிகள், லீக் மந்திரிகள் அரசியல் நிர்ணய சபையை பகிஷ்கரித்து விட்டதால் இடைக்கால சர்க்காரில் இருக்கத் தகுதியில்லை; ஆகவே அவர்களை வெளியேற்றவேண்டும் என்று 1947-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் பிரிட்டிஷ் சர்க்காருக்குக் கடிதம் எழுதினார்கள். இதற்குப் பதில் அளிக்கும் முறையில் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் சர்க்காரின் சார்பாக பிரதம மந்திரி ஆட்லி ஒரு பிரகடனம் செய்தார். அதாவது 1948-ம் வருஷம் ஜூன் மாதத்தில் இந்தியாவை விட்டு பிரிட்டிஷ் சர்க்கார் வெளியேறிவிடுவார்கள், அதற்குள் இந்தியாவின் எல்லாப் பகுதிகளுக்கும் பிரதிநிதித்துவம் உள்ள சபை அரசியலை நிர்மாணிக்காதுபோனால், பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவிலுள்ள ஒரு சர்க்காருக்கோ, சிலப் பிரதேசங்களிலுள்ள மாகாண சர்க்கார்களுக்கோ, தங்கள் அதிகாரங்களை ஒப்படைத்துவிட்டு தங்கள் கைகளைக் கழுவிவிடுவார்கள். இந்த பிரகடனத்தின் நோக்கம் என்னவென்றால் குறிப்பிட்ட தேதிக்குள் (1948 ஜூன்) இந்தியாவிலுள்ள எல்லா கட்சியினரும் ஒன்று சேருவதுதான் என்றும் ஆட்லி சொன்னார்.

எதிர்பார்த்தபடி ஒன்று சேராமல், சில மாகாணங்களில்

தங்களிடம் அதிகாரம் மாற்றப்படும் என்று, லீகர்கள் பிளவுகளை ஏற்படுத்துவதில் ஈடுபட்டார்கள். பஞ்சாப் மாகாணத்தில் யூனியனிஸ்டு கட்சியைச் சேர்ந்த சில முஸ்லிம்களை மந்திரி சபையிலிருந்து விலகும்படியாகத் தூண்டிவிட்டார்கள். அதன் விளைவாக காங்கிரஸ்-யூனியனிஸ்டு கூட்டு மந்திரி சபை கவிழ்ந்தது. உடனே அம்மாகாணத்தில் பல பாகங்களில் வகுப்புக் கலகங்கள் ஏற்பட்டன. இக்கலகங்களை அடக்குவதில் பிரிட்டிஷ் அதிகாரிகள் ஜரூரான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவே இல்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் லார்டு வேவல் வைஸ்ராய் பதவியை ராஜிநாமா செய்தார்.

1947-ம் ஸூ மார்ச்சு மீ வேவல் ராஜிநாமா

வேவல் ராஜிநாமாவுக்குக் காரணம் வெளிப்படையாகச் சொல்லப்படவில்லை. ஆனால், பிரிட்டிஷ் சர்க்காரின் பிப்ரவரி மாதப் பிரகடனத்தை அவர் ஒப்புக்கொள்ளாதது, அல்லது பிரிட்டிஷ் சர்க்காருக்கு அவரிடத்தில் நம்பிக்கை குறைந்தது, காரணமாக இருக்கலாம் என்று ஊகிக்கலாம். அவருக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட லார்டு மவுண்ட்பாட்டன், இந்தியர்களுக்கு அதிகாரத்தை மாற்றுவதற்குத் துரிதமாக ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்ற பிரிட்டிஷ் சர்க்கார் ஆக்ஞையுடன், பதவிக்கு வந்தார்.

புதிய வைஸ்ராய் இங்கு வந்து கொஞ்சகாலம் நிலைமையைக் கவனித்தார். மன்னர் சர்க்கார் எதிர்பார்த்தபடி ஒற்றுமை ஏற்படாது போகவே, தேசத்தைப் பிரிப்பதுதான் ஒரே வழி என்று அவருக்குத் தோன்றியது. தவிரவும், இரு தரப்பினர்களும் பிரிட்டிஷார் சீக்கிரத்தில் தங்களிடம் அதிகாரத்தை மாற்றும்படியாக ஆவல் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அறிந்து கொண்டார். ஆகவே, பாகிஸ்தான் தனி அரசாங்கமாக ஏற்படவேண்டுமானால் பஞ்சாப், வங்க மாகாணங்களைப் பிரிப்பது தவிர்க்க முடியாத விஷயம் என்ற முடிவுக்கும் வந்தார். இது சம்பந்தமாக இடைக்கால சர்க்கார் மந்திரிகளையும் கலந்துகொண்டு, இங்கிலாந்துக்குச் சென்று தமது யோசனைகளை பிரிட்டிஷ் சர்க்காருக்குத் தெரிவித்தார்.

மவுண்ட் பாட்டன் சிபார்சுகள்

1947-ம் வருஷம் ஜூன் மாதம் 2-ம் உ பிரிட்டிஷ் சர்க்கார் பிரகடனம்

மவுண்ட்பாட்டன் செய்த சிபார்சுகளை பிரிட்டிஷ் சர்க்கார் ஏற்று, ஜூன் மாதம் 2-ம்தேதி யன்று இந்தியர்களிடம் அதிகார மாற்றம் விஷயமாய் ஒரு அறிக்கையை வெளியிட்டார்கள் :—

இந்தியாவைப் பிரிப்பதா அல்லவா என்ற விஷயம் அடியிற்கண்ட முறைப்படி தீர்மானம் செய்யப்பட வேண்டும்.

1. வங்காளம், பஞ்சாப் மாகாணங்களின் சட்டசபைகளில் (கீழ் சபைகள்) முஸ்லிம்கள் பெருவாரியாக உள்ள ஜில்லாக்களின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு கோஷ்டியும், இதரப் பிரதிநிதிகள் மற்றொரு கோஷ்டியாகவும் இரு கோஷ்டிகளாகக் கூடி மாகாணத்தைப் பிரிப்பதா அல்லவா என்று தீர்மானம் செய்ய வேண்டியது ; தவிரவும் இந்திய அரசியல் நிர்ணய சபை மூலம் அரசியலை வகுத்துக்கொள்வதா, தனி அரசியல் சபை மூலம் வகுப்பதா என்பதையும் தீர்மானிக்க வேண்டியது ; எந்த கோஷ்டி பிரிவினைக்கு சாதகமாக வோட் செய்தாலும் பிரிவினை ஏற்படவேண்டும்.

2. வடமேற்கு எல்லை மாகாணம் பாகிஸ்தானைச் சேருவதா இந்தியாவைச் சேருவதா என்ற பிரச்னையைத் தீர்க்க மேற்படி மாகாணத்தில் கவர்னர் ஜெனரலின் மேற்பார்வையில் ஸர்வஜன வோட்டு எடுக்கப்படும்; சட்டசபை வோட்டர்களின் வோட்டுப்படி முடிவு கட்டப்படவேண்டும்.

3. பிரிட்டிஷ் பலுசிஸ்தானத்திலும் அம்மாகாணத்தார்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்க சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

4. வங்காளம் பிரிக்கப்பட வேண்டியது என்று முதல் பாராவில் கண்டபடி தீர்மானமானல், அஸ்ஸாம் மாகாணத்தைச் சேர்ந்த ஸில்ஹெட் ஜில்லா பாகிஸ்தானைச் சேர்ந்த கிழக்கு வங்காளத்தோடு சேர விருப்பமா, இந்தியாவுடன் சேர விருப்பமா என்பது பற்றி பொதுஜன சட்டசபை வோட்டர்கள் வோட் எடுப்பது.

மேற்கண்ட முறையில் தீர்மானமாகிறபடி ஒரு சர்க்காருக்கோ இரு சர்க்கார்களுக்கோ, பிரிட்டிஷ் டொமினியன் அடிப்படையில், இந்தியாவில் தங்கள் அதிகாரத்தை பிரிட்டிஷ் சர்க்கார்

மாற்றுவதற்கு வசதியான சட்டத்தை பார்லிமெண்டில் அப்பொழுது நடக்கும் செஷனிலேயே கொண்டுவந்து நிறைவேற்றப்படும் என்று பிரிட்டிஷ் பிரதம மந்திரி தெரிவித்தார்.

எல்லோரும் எதிர்பார்த்தபடி வங்காளமும் பஞ்சாபும் பிரிவினை ஆகவேண்டும் என்ற முடிவுக்கு சட்டசபை கோஷ்டிகள் வந்தார்கள். கிழக்கு வங்காளமும் மேற்கு பஞ்சாபும் பாகிஸ்தானைச் சேர இஷ்டப்பட்டன. வடமேற்கு எல்லை மாகாணம், பிரிட்டிஷ் பலுசிஸ்தான், ஸில்ஹெட் ஜில்லா—இவைகளில் எடுக்கப்பட்ட பொதுஜன வோட்டு பாகிஸ்தானில் சேருவதற்குச் சாதகமாக இருந்தது.

இந்திய சுதந்திர சட்டம்—1947 ஜுலை 18

வங்காளமும் பஞ்சாபும் பிரிவினையை விரும்பின என்று தெரிந்ததும், பிரிட்டிஷ் பார்லிமெண்டின் ஜூன் மாதத்திய பிரகடனத்தை அனுசரித்து, இந்திய சுதந்திர ஆக்ட் நிறைவேறியது. (Indian Independence Act 18-7-49.) இந்த ஆக்டுப்படி 1947-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி முதல், இந்தியா, பாகிஸ்தான் என்று அழைக்கப்படும் இரண்டு சுயேச்சையான டொமினியன்கள் ஏற்படுத்தப்படும். பாகிஸ்தான் நாடுகள்—(*a*) கிழக்கு வங்காளம், மேற்கு பஞ்சாப், என்று 15-8-47-ல் அழைக்கப்படும் மாகாணங்கள் (*b*) சிந்து மாகாணம், பிரிட்டிஷ் பலுசிஸ்தானம் என்ற சீப் கமிஷனர் மாகாணம் (*c*) கவர்னர் ஜெனரலின் மேற்பார்வையில் வடமேற்கு எல்லை மாகாணத்தில் எடுக்கப்பட்ட பொதுஜன வோட்டு பாகிஸ்தானுக்கு சாதகமாய் இருந்தால் வடமேற்கு எல்லை மாகாணம்—பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள இதர நாடுகள் இந்திய டொமினியனைச் சாரும். இந்திய சமஸ்தானங்கள் மேற்படி இரு டொமினியன்களில் எதிலாவது சேருவதில் எவ்விதத் தடையும் கிடையாது.

வங்காளம், பஞ்சாப் மாகாணங்களைப் பிரிக்க எல்லைக் கமிஷன்கள் நியமிக்கப்பட்டன, அக் கமிஷன்களின் அங்கத்தினர்கள் ஏகோபித்த முடிவுக்கு வராவிட்டால் கமிஷன்களின் தலைவர் ராட்கிளிப்பின் மத்தியஸ்தத் தீர்ப்பு முடிவானதாகும்.

இவ்விரு டொமினியன் லெஜிஸ்லேச்சர்களுக்கும் அந்தந்த டொமினியனைப் பொறுத்து கட்டமியற்ற பூர்ண அதிகாரம் உண்டு என்று கூறப்பட்டது. புது டொமினியன்

கள் ஸ்தாபிக்கப்படுவதின் விளைவாக, 1947-ம்வருஷம் ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி முதல் (a) பிரிட்டிஷ் இந்தியாவில் அடங்கிய நாடுகளின் ஆட்சி சம்பந்தமாக மன்னர் சர்க்காரின் பொறுப்பு கழிந்துபோகும்; (b) இந்திய சமஸ்தானங்கள் பேரிலுள்ள மேலாதிபத்தியமும் அந்தந்த சமஸ்தானங்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் கழிந்துபோகும்; (c) அவ்விதமாகவே பூர்வீகக் குடிகள் உள்ள பிரதேசங்கள் சம்பந்தமான ஒப்பந்தங்களும் கழிந்துபோகும்; சுங்கங்கள், போக்குவரத்து, தபால் தந்தி இவைகள், சம்பந்தமாக சமஸ்தானங்களுடனும் பூர்வீகக்குடிப்பிரதேசங்களுடனும் இருந்த ஒப்பந்தங்கள் புது ஒப்பந்தம் ஏற்படும் வரை அல்லது முந்திய ஒப்பந்தம் ரத்து செய்யப்படும் வரை அமுலிலேயே இருந்து வரவேண்டும்; (d) பிரிட்டிஷ் மன்னரின் பட்டத்திலிருந்து "இந்திய சக்கிரவர்த்தி" என்ற பதங்கள் நீக்கப்படும்.

புது டொமினியன்கள் ஆட்சியைப் பொறுத்து இடைக்கால ஏற்பாடுகள் :—புது அரசியல் உருவாகி அவ்வரசியல்படி தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபைகள் ஏற்படுமுன், அந்தந்த டொமினியன் பிரதேசங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அடங்கிய அரசியல் நிர்ணய சபை, அந்தந்த டொமினியன் மத்திய சட்டசபையாக விளங்கும். இந்திய சுதந்திர ஆக்டு ஷரத்துக்களை அனுசரித்த மாறுதல்களுடன் 1935-ம் வருஷத்து இந்தியா கவர்ன்மெண்டு ஆக்டு ஷரத்துக்கள்படியே ஆட்சி நடைபெறும். 1935-ம் வருஷத்து ஆக்டில் இந்திய சட்டசபை ஆக்டுகள் சம்பந்தமாக மன்னருக்குள்ள அதிகாரங்கள் ரத்து செய்யப்பட்டன. கவர்னர் ஜெனரலுக்கும் மாகாண கவர்னர்களுக்கும் சுயேச்சையிலும் சொந்தத் தீர்மானத்திலும் குறிப்பிடப்பட்ட விசேஷ அதிகாரங்களும் ரத்து செய்யப்பட்டன. புது ஆக்டு ஷரத்துக்களுக்கு அமுல் கொடுக்க கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

ஸர்விஸ்கள் :—இந்தியா காரியதரிசியின் (பிரிட்டிஷ் சர்க்காரில் இந்தியா மந்திரி) ஆதிக்கத்திலுள்ள ஸர்விஸ்கள் சம்பந்தமான ஷரத்துக்கள் ரத்து செய்யப்பட்டன. ஆனால், அந்த ஸர்விஸ்களுக்கு ஏற்பட்ட சேவா நிபந்தனைகளின் பேரில், புது டொமினியன்களில் தொடர்ந்து சேவை செய்ய அவரவர் விருப்பத்திற்கு விடப்பட்டது.

இந்தியாவின் ஆயுதப்படைகள்:—இந்தியாவின் ஆயுதப்படைகளை இரு டொமினியன்களும் பாகம் செய்யும் விஷயமாய் உத்தரவுகள் ஏற்படுத்த கவர்னர் ஜெனராலுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் படைகளை வாபஸ் பெறுவது என்னும் ஏற்பாடு செய்யப்பட்டது.

தவிரவும், இந்தியக் காரியதரிசி (பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியா மந்திரி), பிரிட்டனிலிருந்த இந்தியக் கணக்குகளின் ஆடிட்டர், இந்தியக் காரியதரிசி பேரில் கோர்ட்டுகளில் பைசல் ஆகாமல் தங்கியிருந்த நடவடிக்கைகளின் தொடர்ச்சி, விவாகரத்து ஜூரிஸ்டிக்ஷன் இவைகளைப் பொறுத்து ஷரத்துக்களும் சேர்க்கப்பட்டிருந்தன. 15-8-47-ல் அமுலிலுள்ள சட்டங்கள் புது அரசியல் அந்தஸ்தால் ஏற்படும் மாறுதல்களுடன் அமுலிலேயே இருக்கும் என்று கண்டிருந்தது.

ஏடென் இந்திய சர்க்கார் அதிகாரத்திலிருந்து விலக்கப்பட்டது.

பிரிவினையால் ஏற்பட்ட துன்பங்கள்

இந்த ஆக்டை அனுசரித்து 15-8-47 முதல் பிரிட்டிஷ் அதிகாரம் வாபஸாகி, இந்தியாவில் இரு புது டொமினியன்கள் உதயமாயின. இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் சுதந்திர தினத்தை உற்சாகத்துடன் கொண்டாடினார்கள். இந்தியாவில் எங்கும் தேசிய மூவர்ணக் கொடி ஏற்றப்பட்டது. ஆனால், உடனடியாக பஞ்சாப் மாகாணத்தில் கோரமான வகுப்புக் கலவரங்கள் தோன்றின. மேற்குப் பஞ்சாப் மாகாணத்தில் இந்துக்களும் சீக்கியர்களும் முகம்மதியர்களால் தாக்கப்பட்டார்கள். உயிர் நீத்தவர்கள் போக பாக்கி யுள்ளவர்கள் வீடுவாசல்களை விட்டுவிட்டு கிழக்குப் பஞ்சாபுக்கும் ஐக்கிய மாகாணங்களுக்கும் ஓடிவரும்படியாய் நேரிட்டது. அதற்குப் பதிலாக கிழக்குப் பஞ்சாபிலுள்ள முஸ்லிம்கள் தாக்கப்பட்டு அவர்களும் பாகிஸ்தானுக்கு ஓடும்படியான கதி ஏற்பட்டது. பிந்தி வகுப்புக் கலவரங்கள் விரிந்து, வடமேற்கு எல்லை மாகாணம், பலுசிஸ்தான் இவைகளுக்குப் பரவி அங்கிருந்த இந்துக்களும் சீக்கியர்களும் இந்தியாவுக்கு ஓடிவரும்படியாக நேரிட்டது. இந்த நிலைமையை சமாளிக்க இரு டொமினியன்களின் சர்க்கார்கள் கலவரமில்லாமல் ஒழுங்காக ஜனங்களை வெளியேற்றுவதை நடத்தினார்கள். பிரிவினையின் விளைவாக மேற்குப் பாகிஸ்தானி

லிருந்து அநேகமாய் எல்லா இந்துக்களும் சீக்கியர்களும் வெளியேறிவிட்டார்கள். கிழக்கு வங்காளத்தில் பிரிவினைக்குப் பிறகு கலவரங்கள் அதிகப்படியாக இல்லாது போனாலும், இந்துக்களின் உடலுக்கும் உடமைகளுக்கும் போதிய பாதுகாப்பு பாகிஸ்தான் சர்க்கார் அளிக்காததால் இந்துக்கள் லக்ஷக்கணக்கில் மேற்கு வங்காளத்திற்கு வந்துவிட்டார்கள். இரண்டு டொமினியன்களிலும் அகதிகளின் புனருத்தாரணம் பெரும் பிரச்னையாக இருக்கிறது ; பாகிஸ்தானில் சிறுபான்மையோர்களுக்குப் பாதுகாப்பு ஏட்டில் மட்டும் இருக்கிறது; பாகிஸ்தானின் அன்றாட நிர்வாகத்தில் பாரபட்சமற்ற நடத்தை கிடையாது. இஸ்லாமிய அரசாங்கம் என்று எப்பொழுதும் பறைசாற்றுகிறார்கள். இந்திய சர்க்காரோ மதச்சார்பற்ற சர்க்கார் என்று வியக்தமாகச் சொல்கிறார்கள். இரண்டு கோடிக்கு மேலுள்ள முஸ்லிம்கள் நிர்ப்பந்தம் அன்னியில் வாழ்கிறார்கள். சர்க்கார் பதவிகளில் ஏராளமான முஸ்லிம்கள் இருக்கிறார்கள். பாகிஸ்தானால் முகம்மதியர்களுக்கு சுவர்க்கலோகம் ஏற்பட்டிருக்கிறது என்று பிரிவினை காலத்தில், 1947 ஆகஸ்டில், பாகிஸ்தானுக்குப் போன முகம்மதிய உத்தியோகஸ்தர்களில் பெரும்பாலோரும் உத்தியோகஸ்தரல்லாத முகம்மதியர்களில் பெருவாரியும், மூன்று நான்கு மாதங்களுக்குப் பிறகு அந்த சுவர்க்கத்தை விட்டுவிட்டு இந்தியாவுக்குத் திரும்பிவிட்டார்கள். ஆனால், பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு வந்த இந்து, சிக் எவரும் பாகிஸ்தானுக்குத் திரும்பவில்லை. திரும்பிப்போய் அவரவர் சொத்துக்களை வைத்துக்கொண்டோ, தொழில் நடத்தியோ, அச்சமற்ற வாழ்வை நடத்துவதற்கான வசதிகள் பாகிஸ்தான் சர்க்கார் செய்யவில்லை.

பிரிவினையால் ஏற்பட்ட கலகங்கள், ஜனமாற்றம், பிரிபடாத இந்தியாவின் ஆஸ்திகள், கடன்கள், படைகள் இவைகளின் பாக ஏற்பாடுகள், எல்லாம் தீர பல மாதங்கள் பிடித்தன. மேற்கண்ட நெருக்கடிகள் கொஞ்சம் தளர்ந்ததும், அரசியல் நிர்ணய சபை தொடர்ந்து வேலை செய்து, அரசியல் திட்டத்தை 1948-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் டிராப்டிங் கமிட்டி வெளியிட்டார்கள். அரசியல் நகலைப் பற்றி பொதுஜனங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கப் போதிய அவகாசம் அளித்து 1948-ம் வருஷம் நவம்பர் மாதத்தில், அரசியல் திட்டம் அரசியல் நிர்ணய சபையில் சர்ச்சைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நீண்ட விவாதங்

களுக்கு அப்பால், பல திருத்தங்களுடன், கடைசியாக, 1949 நவம்பர் மாதம் 26-ம் தேதி யன்று இந்திய அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இவ்வளவு கஷ்ட நஷ்டங்களுடன் புனர் ஜன்மம் பெற்ற சுதந்திர இந்தியாவின் அரசியலை இனி கவனிப்போம்.

முன்னுரை

புது அரசியலின் லட்சியங்கள்

சுதந்திர இந்தியக் குடியரசின் லட்சியங்கள் அரசியலமைப்புச் சட்டத்தின் பூர்வ பீடிகையில் தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறப்பட்டிருக்கின்றன. பீர்வ பீடிகை—

"இந்தியாவின் மக்களாகிய நாம் இந்தியாவை பூர்ண ஆதிபத்யமுள்ள ஜனநாயகக் குடியரசாக, அமைக்க மனப்பூர்வமாக சங்கல்பம் செய்துகொண்டு, இந்தியாவின் எல்லாப் பிரஜைகளுக்கும்; சமூக, பொருளாதார ராஜீய நீதியும்; சிந்தனை, பேச்சு, நம்பிக்கை, மதம், வழிபாடு ஆகியவற்றில் சுதந்திரமும்: அந்தஸ்து, வசதி ஆகியவற்றில் சமத்துவமும், உரியதாக்குவதையும் ;

தனி நபரின் கௌரவத்தையும் இந்திய இனத்தின் ஐக்கியத்தையும் உறுதிபடுத்துவதற்கான சகோதரத்வத்தை வளர்க்கும் பொருட்டும்; நமது அரசியல் நிர்ணய சபை மூலம், 1949-ம் வருஷம் நவம்பர் மாதம் 26-ந் தேதியன்று இந்த அரசியல் அமைப்பை ஏற்று, சட்டமாக இயற்றி, நமக்கே அளித்துக்கொள்கிறோம்." என்கிறது.

1947 ஆகஸ்டு 15-ம் தேதிமுதல் பிரிட்டிஷ் அதிகாரம் வாபஸாகி, நம் நாடு பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் "டொமினியன்" என்று அழைக்கப்படும் அந்தஸ்துள்ள சுதந்திர நாடாயிற்று என்று சரித்திர முகவுரையில் கூறியுள்ளோம். இனி,

குடியரசு

அதாவது புது அரசியல் சட்டம் அமுலுக்கு வரும் தேதியான 1950 ஜனவரி 26 லிருந்து, இந்தியா பூர்ண ஆதிபத்தியமுள்ள ஜனநாயகக் குடியரசாக மாறுகிறது; பிரிட்டிஷ் சக்ரவர்த்தியின் தொடர்பு கிடையாது, சக்ரவர்த்தியின் சின்னங்கள் அகற்றப்படும். ஆனால் பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் சம்பந்தப்பட்ட நாடாகவே இந்தியா தொடர்ந்து இருக்கும். "முடியரசு" போய் "குடியரசு" வருகிறது. குடிகளே அரசு செலுத்துவார்கள்; ஆளுகிறவர்களும் ஆளப்படுகிறவர்களும் நம் நாட்டு மக்களே.

குடிகளே ஆட்சி செலுத்துவார்கள் என்றால் அது எப்படி? பண்டைய காலத்திலிருந்த நகரக் குடியரசுகளிலும் கிராம சமூகங்களிலும், முதியோர்கள் எல்லோரும் ஆலமரத்தடியிலோ அல்லது கோயில் பிராகாரங்களிலோ கூடி, பொது விஷயங்களைப் பற்றி சர்ச்சை செய்து முடிவு கட்டினது போலவா என்ற கேள்வி எற்படுகிறது. அப்படி, முதியோர்கள் ஆட்சி புரிவதில் நேராகப் பங்கு எடுத்துக்கொள்வது, விரிவான பிரதேசங்களில் சாத்தியமான காரியமல்ல; ஏனென்றால் அப்படிப்பட்ட முதியோர்களின் எண்ணிக்கைப் பல லக்ஷக்கணக்கிலோ கோடிக்கணக்கிலோ இருக்கும். புது அரசியல் படி, இந்தியாவில் 16 கோடிக்கு மேல்பட்ட மக்களுக்கு வோட்டுரிமை இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது; சென்னை மாகாணத்தில் மட்டும் சுமார் இரண்டுகோடி முதியோர் வாக்காளர்கள் இருப்பார்கள். ஆகவே மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் மூலம் தான் குடிகள் அல்லது மக்கள் அரசாங்கத்தை நடத்த முடியும். "பிரதிநிதித்வ ஜனநாயக ஆட்சி" என்று சொல்லப்படும் இம்முறை முன்னேற்றம் அடைந்த நாடுகளில் வழங்கிவருகிறது. பிரதிநிதிகளின் தேர்தலில் வாக்கு அளிப்பது அல்லது "வோட்டு"ப் போடுவது, அதாவது இன்னார் பிரதிநிதியாக இருக்கவேண்டும் என்று அபிப்பிராயத்தைத் தெரிவிப்பது மூலம், ஜனங்கள் தங்கள் அரசு உரிமையை உபயோகப்படுத்துகிறார்கள்.

பிரதிநிதித்வ ஜனநாயக ஆட்சி

ஜனநாயக ஆட்சியில் இறுதி அதிகாரம் ஜனப் பிரதிநிதி சபைகளில்தான் உள்ளது. நூற்றுக்கணக்கான அங்கத்தினர்களைக் கொண்ட அச்சபைகளால் பொதுவாகக் கொள்கைகளை நிர்ணயிக்கவும் சட்டங்களை இயற்றவும் முடியுமே ஒழிய, அன்றாட நிர்வாகத்தை நடத்த இயலாது. ஜனப் பிரதிநிதி சபை அங்கத்தினர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான சில தலைவர்களை மந்திரிகளாக நியமித்து, மந்திரிகளின் தலைமையில் நிர்வாகம் நடத்தப்பட்டு வருகிறது. மந்திரிகள் ஜனப் பிரதிநிதி சபைக்கு ஜவாப்தாரி யானவர்கள். குடியரசுகளில் நிர்வாகத்தின் உயர் தலைவர் பொதுஜன வோட்டர்களால் நேரடியாகவோ மறைமுகமாகவோ தேர்ந்தெடுக்கப் படுகிறார். குறிப்பிட்ட கால அளவுக்கு ஆட்சிப் பதவிக்கு தங்கள் தலைமைப் பிரதி

அரசாங்க உறுப்புக்கள்

நீதி ஜனங்களாலேயே தேர்ந்தெடுக்கப்படுவதால் "ஜனாதிபதி" என்று அழைக்கப்படுகிறார்.

நீதி மன்றங்கள் அவசியம்

பூர்வபீடிகையில் கூறப்பட்ட லட்சியங்களை அடைய ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டப் பிரதிநிதிகள் அடங்கிய சட்ட மியற்றும் ஸ்தாபனங்கள், நிர்வாக அதிகாரிகள், இவை மட்டுமுள்ள சர்க்கார் போதாது. ஜனப்பிரதிநிதி சர்க்காரும் அடக்கு முறைகளைக் கையாடுண் தனி நபரின் சுதந்திரங்களைப் பறிக்கலாம். ஆகவே நீதி, சமத்துவம், தனி நபரின் கௌரவம் ஆகியவற்றை நிலைநாட்ட நிர்வாகத்தினருக்கு உள்படாத நீதிமன்றங்கள் அவசியம்.

அரசியல் சட்டத்தில் அடங்கியவை

சர்க்கார் அல்லது அரசின் முக்கியமான அங்கங்கள், மூன்று என்று தெளிவாகிறது. அவையாவன—சட்டமியற்றும் ஸ்தாபனங்கள் (Legislature,) நிர்வாகம் (Executive), நீதிமன்றங்கள் (Judiciary), இவைகளின் அமைப்பு, அதிகாரங்கள், பரஸ்பர உறவுகள், ஆகியவற்றை, வகுப்பதுதான் அரசியல் சட்டம். மேலும் தனி நபரின் கௌரவத்திற்கு உறுதி யளிக்கும் சுதந்திரங்கள், அல்லது ஜீவாதார உரிமைகள், யாவை; அப்படிப்பட்ட உரிமைகள் பொது ஒழுங்கு ஒழுக்கம் முதலிய காரணங்களால் எத்தகைய கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டன, என்பவையைப் பற்றியும் ஷரத்துக்கள் அரசியலமைப்புச் சட்டங்களில் காணப்படுகின்றன.

சமஷ்டி அரசியல்

நம் நாட்டு அரசியல் "சமஷ்டி" முறையில் அமைக்கப்பட்டு உள்ளது, அதாவது ஒரு பிரதான மத்திய சர்க்காரும் பல உப சர்க்கார்களும் அதிகாரங்களைச் செலுத்தும். உப சர்க்கார்களை சமஷ்டியின் "உறுப்புக்கள்" (Units) என்று சொல்லுவார்கள். சமஷ்டி அரசியலமைப்பின் விசேஷ அம்சம் என்னவென்றால், சர்க்கார் அதிகாரங்களை, சமஷ்டி மத்திய சர்க்காருக்கும் உறுப்புக்களான உபசர்க்கார்களுக்கும் இடையே விநியோகிப்பது தான். தேசத்தின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதற்கும், தங்கு தடையன்னியில் வியாபாரம், போக்குவரத்துகள் இருக்கவும், பொருளாதாரத் துறையில் கூடிய

வரை ஓர்மையை ஏற்படுத்துவதற்கும் வேண்டிய அதிகாரங்களை பிரதான மத்திய சர்க்காருக்கும், பிரதேச சுயாட்சிக்கு வேண்டிய அதிகாரங்களை உறுப்புக்களுக்கும் வழங்குவது, சமஷ்டி அரசியல் சட்டத்தை உருவாக்குபவர்களுக்குக் கடினமான பிரச்னை. நம் அரசியல் சமஷ்டி "யூனியன்" என்று பெயரிடப்பட்டிருக்கிறது. "யூனியனுக்கும்" "உறுப்புக்களான ராஜ்யங்களுக்கும்" இடையே அதிகார விபாகம், நிதி உறவுகள், அரசியல் சட்டத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

இந்த அரசியல் சட்டம் புதிதாக இயற்றப்பட்டு இருந்தாலும், முந்திய சட்டங்களாலும் நிகழ்ச்சிகளாலும் உருவாக்கப்பட்டது. அரசியல் வளர்ச்சியை நன்கு புரிந்துகொள்ள அவா கொண்டவர்கள், இதற்கு முந்திய அத்தியாயத்தில் கண்ட சரித்திர வாலாற்றையும் படிப்பது உசிதம்.

I. பாவம்—ஏகபாவ அரசா சமஷ்டியா ?

(Unitary or Federal)

நவீன அரசியல்கள் இரு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன :—(1) ஏகபாவ அரசியல், (2) சமஷ்டி அரசியல். ஏகபாவ அரசியலில், நாடு முழுவதிலும் ஒரே சர்க்காரின் அதிகாரம் வியாபிக்கிறது; எல்லாத் துறைகளிலும் அந்த அதிகாரம்தான் மேலானது; சட்டமியற்றும் ஸ்தாபனம் நாடு முழுதுக்கும் ஒன்றேதான், ஒரே நிர்வாகமே. ஆனால், சமஷ்டியிலோ ஒரு மத்திய சர்க்காரும் இதர உபசர்க்கார்களும் அடங்கி இருக்கின்றன. ஒவ்வொரு சர்க்காருக்கும் அவரவர்களுக்கென்று குறிப்பிடப்பட்டிருக்கும் விஷயங்களில் ஆதிபத்திய அதிகாரம் உண்டு. பிரதேச அதிகாரங்களை விட்டுக்கொடுக்காமல் தேசிய ஐக்கியத்தைப் பிரதிபலிப்பதே சமஷ்டி. உலக அரசியல் சரித்திரத்தில் ஏற்பட்ட எல்லா சமஷ்டிகளிலும், பூர்ண ஆதிபத்யம் படைத்த பல ஸ்டேட்கள் (ராஜ்யங்கள்) குறிப்பிட்ட சில விஷயங்களில் மாத்திரம் அதிகாரங்களை சமஷ்டி சர்க்காருக்கு விட்டுக்கொடுத்தன. முக்கியமாக, அயல் நாட்டு உறவுகள், பாதுகாப்பு, போக்குவரத்து இவைகளைப் பொறுத்து தனி அதிகாரங்களை விட்டுக்கொடுத்து ஒன்று சேர்ந்து, மத்திய சர்க்கார் அல்லது ஆட்சியை ஏற்படுத்தியவைகளே இந்த சமஷ்டிகளாகும்.

அமெரிக்கா (யுனைடெட் ஸ்டேட்ஸ்) ஐக்கியநாடுகள், சுவிட்ஸர்லாந்து, கனடா, ஆஸ்டிரேலியா முதலிய தேசங்களில் தனித் தனி சுயேச்சையான ராஜ்யங்களாக விளங்கிய பாகங்கள் ஒன்று சேர்ந்து சமஷ்டியை ஸ்தாபித்தார்கள். ஆனால், பிரிட்டனிலோ, இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாந்து, அயர்லாந்து ஆகியவை சேர்ந்து ஐக்கிய ராஜ்யம் என்ற யூனிடரி (ஏகபாவ) சர்க்காரை ஸ்தாபித்தார்கள். தென்னாப்பிரிக்காவிலும், போயர் காலனிகளும் ஆங்கிலேய காலனிகளும் ஒன்று சேர்ந்து ஏகபாவ அரசையே ஏற்படுத்தினார்கள்.

இந்தியாவில் இனியே உண்மையான சமஷ்டி

இந்தியாவின் அரசியல் 1935-ம் வருஷம்வரை ஏகபாவ அரசாகவே இருந்தது. இப்படிக் கூறுவது, சுதேச சமஸ்தானங்களல்லாத பிரிட்டிஷ் இந்தியாவைப் பொறுத்த மட்டில்தான் சரியாகும். 1935-ம் வருஷத்து இந்தியா கவர்ன்மெண்டு ஆக்டுப்படி சமஷ்டியை ஸ்தாபிக்க சட்டம் இயற்றப்பட்டது. ஆனால், அந்த ஆக்டின் சமஷ்டி பாகம்தான் அமுலுக்கு வரவில்லை. சுதந்திர புது அரசியல் அமுலுக்கு வரும் தேதியிலிருந்துதான் உண்மையான சமஷ்டி (ஐக்கிய அல்லது யூனியன் ஆட்சி) நம் நாட்டில் ஏற்படும்.

சமஷ்டிக்குஅவசியமானவை

சமஷ்டியின் மத்திய சர்க்காருக்கும் உபசர்க்கார்களான உறுப்புக்களுக்கும் அதிகாரங்களை அரசியல் சட்ட மூலமாகப் பிரிக்கப்பட வேண்டியது அவசியம். ஆகையால் சமஷ்டி அரசியலில் சம்பிரதாயத்தை நம்பி இருக்கமுடியாது. ஆகவே, உறுப்புக்களான ராஜ்யங்களிடையே (ஸ்டேட்டுக்களிடையே) இதற்காக ஏற்படும் ஒப்பந்தத்துக்கு அத்தாட்சியாக எழுத்து மூலமான அரசியல் அமைப்பு அவசியம். மேலும் குறிப்பிட்ட ஒரு விஷயத்தில் அதைப்பற்றிய அதிகாரம் சமஷ்டிக்கா அல்லது உறுப்பு (ஸ்டேட்டு)க்கா என்ற பிரச்னை அடிக்கடி ஏற்படக் கூடுமாகையால், இத்தகையத் தகராறுகள் அரசியல் சட்டத்தை வியாக்கியானம் செய்து பிரச்னைகளைத் தீர்க்க சுப்ரீம் கோர்ட்டும் அவசியம்.

இந்திய யூனியன் அதன் நாடும் அதிகார எல்லையும்

நமது தேசம் புராதனமாக வழங்கி வந்திருக்கிறபடி பாரத நாடு என்று இனி அழைக்கப்படும். ஆனால், வெளிநாட்டார்களுக்கு இந்தியா என்றுதான் வெகு நாட்களாகத் தெரிந்தபடியாலும், இது வரை உத்தியோக தஸ்தாவேஜிகளிலும் சரித்திரங்களிலும் இந்தியா என்றே அழைக்கப்பட்டிருப்பதாலும், இந்தியா என்ற பெயரும் நமது புதிய குடிஅரசு அரசியலில் வைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தியா என்கிற பாரதநாடு ராஜ்யங்கள் (மாகாணங்கள், சமஸ்தானங்களான ஸ்டேட்டுகள்) அடங்கிய யூனியன் (சமஷ்டி) ஆகும். இந்திய யூனியனில்

சேர்ந்த உறுப்புக்கள் (யூனிட்டுகள்) அரசியல் சட்டத்தின் முதல் ஷெட்யூலில் நான்கு பாகங்களில் விவரிக்கப்பட்டு இருக்கின்றன: (i) முதல் பாகத்தில் (A பகுதியில்) கண்ட ராஜ்யங்கள் ஏற்கனவே மாகாணங்கள் என்று அழைக்கப்பட்ட பிரதேசங்கள்—அவை யாவன—அஸ்ஸாம், மேற்கு வங்கம் (பிரிவினையான வங்காளம்) பீஹார், பம்பாய், மத்தியப் பிரதேசம் (மத்திய மாகாணங்கள்), சென்னை, ஒரிஸ்ஸா, பஞ்சாப்(பிரிவினையான கிழக்குப் பஞ்சாப்), ஐக்கிய மாகாணங்கள். (ii) இரண்டாவது (B பகுதி) பாகத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் ராஜ்யங்கள் ஏற்கெனவே இந்திய சமஸ்தானங்கள் என்று அழைக்கப்பட்டவை. ஆனால், சுமார் 560 சமஸ்தானங்களுக்குப் பதிலாக இப்பொழுது ஒன்பது ராஜ்யங்களாக காணப்படுகின்றன. சில்லறை சமஸ்தானங்கள் பிரதேச வாரியாக இணைக்கப்பட்டு ஆறு கூட்டு ராஜ்யங்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன. விஸ்தீர்ணத்திலும், ஜனத்தொகையிலும் வருமானத்திலும் பலமிக்கத் தனி ராஜ்யங்களாக விளங்கக்கூடிய மூன்று பெரிய சமஸ்தானங்களே தனி உறுப்புக்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அவை, ஹைதராபாத், ஜம்மு—காஷ்மீர், மைசூர் சமஸ்தானங்களாகும். இந்த இரண்டாவது பாகத்தில் (B பகுதியில்) கண்ட பாக்கி ஆறு ராஜ்யங்கள் இணைக்கப்பட்ட கூட்டு சமஸ்தானங்கள்—மத்திய பாரத், பாடியாலா—கிழக்குப் பஞ்சாப் சமஸ்தானங்கள், ராஜஸ்தான், சௌராஷ்டிரா, திருவாங்கூர்-கொச்சி, விந்தியப் பிரதேசம். (iii) மூன்றாவது பாகத்தில் (C பகுதியில்) காணப்பட்டிருக்கும் ராஜ்யங்கள் ஏற்கனவே டில்லி, ஆஜ்மீர்-மர்வாரா, குடகு என்று அழைக்கப்பட்ட சீப் கமிஷனர் மாகாணங்களும், மத்திய சர்க்கார் நிர்வாகத்தில் விடப்பட்ட சமஸ்தானங்களும்-போபால், பிலாஸ்பூர், கூச்-பீஹார், ஹிமாசல் பிரதேசம், கட்சு, மணிப்பூர், திரிபுரா. (iv) நான்காவது பாகத்தில்(D பகுதியில்) குறிப்பிட்டவை, அந்தமான், நிகாபர் தீவுகள். புதிய பிரதேசமும் இந்திய யூனியனில் சேரலாம்.

உறுப்புக்களின் நாமதேயங்களிலிருந்த வித்தியாசத்தை நீக்கி, ஒரே விதமாக ராஜ்யங்கள் (ஸ்டேட்டுகள்) என்று அழைக்கப்படுகின்றன. ஆனால், ஒரே நாமதேயத்திலிருந்து உறுப்புக்கள் எல்லாம் சம அந்தஸ்து உள்ளவை என்று அனுமானித்துவிடக் கூடாது. மேலே கூறப்பட்ட யூனியன் உறுப்புக்களில், அரசியல் அமுலுக்கு வரும் தேதியான 1950-ம் வருஷம் ஜனவரி மாதம்

26-ம் தேதிக்குள், பிரதேச மாறுதல்கள் ஏற்படக்கூடியவை; அப்படிப்பட்ட மாறுதல்கள் 1935-ம் வருஷத்து இந்தியா கவர்ன்மெண்டு ஆக்டில் கண்ட ஷரத்துக்கள்படி செய்யப்படும். அவ்விதமாக ஏற்படும் மாறுதல்களை அனுசரித்து ராஜ்யங்களை வர்ணிக்கும் ஷெட்யூல்களில் மாறுதல் செய்ய ஜனாதிபதிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டு இருக்கிறது.

உறுப்புக்களில் வித்தியாசம்

3, 4 பாகங்களில் (C, D, பகுதிகளில்) விவரிக்கப்பட்டிருக்கும் ராஜ்யங்கள், ஜனாதிபதியின் நிர்வாகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன; சீப் கமிஷனர் அல்லது லெப்டினன்ட் கவர்னர் மூலம், ஜனாதிபதி அவற்றின் நிர்வாகத்தை நடத்துவார். சில சமஸ்தானாதிபதிகள் மத்திய சர்க்காரிடம் தங்கள் அதிகாரங்களை ஒப்படைத்திருக்கின்றனர். அச் சமஸ்தானாதிபதிகளின் ஆதிக்கத்தில் இருந்த பிரதேசங்களும் மூன்றாவது ஜாப்தா (C பகுதி) ராஜ்யங்களைப்போல் சீப் கமிஷனர் மூலம் யூனியன் மத்திய சர்க்காரால் நிர்வகிக்கப்படும். அப்படிப்பட்ட சமஸ்தானங்கள்—ஹிமாசல் பிரதேசம், பிலாஸ்பூர், கட்சு, போபால், கூச்பீஹார், மணிபூர், திரிபுரா. முதலியவை. முதல் ஜாப்தாவிலும் இரண்டாவது ஜாப்தாவிலும் (A, B பகுதிகளில்) உள்ள ராஜ்யங்களைப்போல் சட்டமியற்றும் ஸ்தாபனங்கள் (சட்டசபைகள்), மந்திரிசபை, ஹைகோர்ட்டு, முதலியன 3, 4 ஜாப்தாக்களில் உள்ள ராஜ்யங்களுக்கு இல்லை. சட்டசபை, நிர்வாக தலைமை அதிகாரிக்கு யோசனை கூறும் சபை, இவைகளை பார்லிமெண்டு சட்டமூலம் மூன்றாவது ஜாப்தா ராஜ்யங்களுக்கு ஏற்படுத்தலாம். அவைகளின் அமைப்பு, அதிகாரங்கள் அப்படிப்பட்ட சட்டப்படி பிறப்பிவிக்கப்படும் உத்தாவில் நிர்ணயிக்கப்படும். குடகு ராஜ்யத்திலுள்ள சட்டசபை தொடர்ந்து இருக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இரண்டாவது பாகத்தில் (B பகுதியில்) குறிப்பிடப்பட்டிருக்கும் ராஜ்யங்கள் (இதுவரை சமஸ்தானங்களாக இருந்தவை) பிரிட்டிஷார் வாபஸான தேதியில், அதாவது 1947-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15-ம் தேதியில், மூன்று விஷயங்களைப் பொறுத்தமட்டில் சுதந்திர இந்திய சர்க்காருக்கு அதிகாரங்களை விட்டுக் கொடுத்தன. அயல்நாட்டு விவகாரங்கள், பாதுகாப்பு, போக்குவரத்து ஆகிய இம் மூன்று விஷயங்களும், இவ்விஷயங்களுக்கு

அனுசரணையான விஷயங்களுமே. அவை, 1946-ல் பிரிட்டிஷ் மந்திரி சபையின் தூதுகோஷ்டி வெளியிட்ட திட்டத்திலும், பிந்தி 1947-ல் பிரிட்டிஷ் பார்லிமெண்டு நிறைவேற்றிய இந்திய சுதந்திரச் சட்டத்திலும், சமஸ்தானங்களின் பேரிலுள்ள மேலாதிபத்திய அதிகாரம் சுதந்திர இந்தியாவுக்கோ, பாகிஸ்தானுக்கோ மாற்றப்படாது என்று கண்டிருந்தார்கள். ஆனால், பிரிட்டிஷ் மந்திரி சபை தூது கோஷ்டியின் யோசனைகளின் அடிப்படையின் பேரில் மேலே கூறப்பட்ட மூன்று விஷயங்களில் மட்டும் அதிகாரங்களை புது டொமினியன் சர்க்காருக்கு விட்டுக் கொடுத்து எந்த டொமினியனையாவது (இந்தியா அல்லது பாகிஸ்தான்) சேருவது உசிதம், என்று பிரிட்டிஷ் சர்க்காரால் சமஸ்தானாதிபதிகளுக்கு புத்திமதி கூறப்பட்டது.

சமஸ்தானங்கள் சுயேச்சை நாடுகள் என்று சொன்னதின் விளைவு

எனினும் சட்டரீதியில் சமஸ்தானங்கள் சுயேச்சை நாடுகள் என்று பிரிட்டிஷ் சர்க்கார் கூறியதில், பெருங் குழப்பம் உண்டாகி, சில சமஸ்தானாதிபதிகள், தனித்துஇருந்துவிடவும் யோசனை செய்தார்கள். இந்நிலைமையை சமாளிக்க மேலே கண்ட மூன்று விஷயங்களில் மட்டும் இந்திய சர்க்காருக்கு அதிகாரங்களை விட்டுக் கொடுத்தால் போதும், என்று சமஸ்தானசேர்க்கைப் பத்திரம் சுதந்திர இந்திய சர்க்காரால் தயாரிக்கப்பட்டது. அதை மூன்று சமஸ்தானங்கள் (ஹைதராபாத், காஷ்மீர், ஜுனகாத்) நீங்கலாக, மற்றெல்லா சமஸ்தானங்களும் அங்கீகரித்து, 15-8-47 (சுதந்திர தினம்)க்குள் இந்திய யூனியனில் சேர்ந்துவிட்டன.

அந்நிய ஆட்சி நீங்கி ஜனநாயக சர்க்கார் இந்தியாவில் ஏற்பட்டதின் பயனாக சமஸ்தானங்களிலும் பொதுஜனங்கள் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தார்கள். பல சில்லரை சமஸ்தானங்களில், முக்கியமாக ஒரிஸ்ஸா, குஜராத் பிராந்தியங்களில், அவற்றின் நிர்வாகம் சீர்குலைந்துவிட்டது. அராஜகத்தைத் தடுக்க இந்திய சர்க்கார் தலையிட வேண்டி நேர்ந்தது. அதன் விளைவாக, புதுக்கோட்டை போன்ற சில்லரை சமஸ்தானங்கள், அவற்றிற்கு அடுத்துள்ள மாகாணங்களுடன் சேர்க்கப்பட்டன; மாகாணங்களைப் போலவே அவற்றை ஆளவும் 1935-ம் வருஷத்து இந்தியா கவர்ன்மெண்டு ஆக்டில் இதற்காக வேண்டிய மாறுதல்களும் செய்யப்பட்டன.

இப்படிப்பட்ட குட்டி சமஸ்தானங்களுக்கு இனி தனி அந்தஸ்து கிடையாது, அந்தந்த மாகாணங்களில் (முதல் ஷெட்யூலின் முதல் பாக (A பகுதி) ராஜ்யங்களில்) அவை ஒன்றாகிவிட்டன.

மேலும் அக்கம் பக்கத்திலுள்ள சில்லரை சமஸ்தானங்களை ஒன்றாகச் சேர்த்து சமஸ்தான யூனியன்கள் அமைக்கப்பட்டன. இவ்விதம் இணைக்கப்பட்ட சமஸ்தானங்கள், தங்களுடைய தனிப்பட்ட அரசாங்கங்களை கைவிட்டு, பொது நிர்வாகம், பொது சட்டமியற்றும் ஸ்தாபனம், பொது நீதிமன்றங்கள் முதலியவைகளை ஏற்றுக்கொண்டன. இக்கூட்டில் ஐக்கியமான சமஸ்தானங்களின் அதிபதிகளில் ஒருவர் இந்திய சர்க்காரின் சம்மதத்துடன் சமஸ்தான—ஐக்கியத்திற்குத் தலைமை நிர்வாக அதிகாரியாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். அவர் "ராஜப்பிரமுகர்" என்று அழைக்கப்படுகிறார். மாகாணத்தில், அதாவது முதல் பாக (A பகுதி) ராஜ்யத்தில், கவர்னருக்குள்ள அந்தஸ்தும் அதிகாரமும், சமஸ்தானம் அதாவது இரண்டாவது பாக (B பகுதி) ராஜ்யத்தில் ராஜப்பிரமுகருக்கு உண்டு. இவ்விதமாக ஆறு சமஸ்தான யூனியன்கள் அல்லது ஐக்கியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவை—சௌராஷ்டிரா, ராஜஸ்தான், மத்திய பாரத், விந்தியபிரதேசம், பாடியாலா—கிழக்குப் பஞ்சாப் சமஸ்தானங்கள், திருவாங்கூர்-கொச்சி.

சமஸ்தானங்கள் இணைப்பு ஏற்பட்டதில் மத்திய சர்க்காருக்கும் சமஸ்தான இணைப்புக்கும் அதிகார விபாக விஷயமாக முக்கியமான மாறுதல் ஏற்பட்டது. 15-8-47-ல் ஒவ்வொரு சமஸ்தானமும் அயல்நாட்டு உறவுகள், பாதுகாப்பு, போக்குவரத்து ஆகிய மூன்று விஷயங்களில் மட்டும் இந்திய சர்க்காருக்கு அதிகாரங்களை விட்டுக்கொடுத்தன என்று முன்பு கூறினோம். சமஸ்தான இணைப்புக்களில் ஒவ்வொன்றும் அரசியல் சட்டத்து ஏழாவது ஷெட்யூலில் விவரிக்கப்பட்டுள்ள யூனியன், பொது, இரு ஜாப்தாக்களில் வரிவிதிப்பு சம்பந்தமான இனங்களைத் தவிர இதர விஷயங்களில் எல்லாம், இந்திய சர்க்காருக்கு அதிகாரங்களை சமர்ப்பித்து புதிய சேர்க்கை சாஸனத்தில் கையெழுத்திட்டன. மைசூரும் அப்படிப்பட்ட சாஸனத்தில் கடைசியாக கையெழுத்து செய்தது.

புது அரசியல் உருவாகிய இறுதி கட்டத்தில் சமஸ்தானங்கள், அதாவது முதல் ஷெடியூலின் இரண்டாவது (B) பாகத்தில் கண்ட ராஜ்யங்களைப் பொறுத்து, நிதி விஷயங்களில் இந்தியா

வுடன் இணைத்து ஓர்மை ஏற்படுத்தும் வண்ணம், பல சமஸ்தானங்களில் திவானாக அனுபவம் பெற்ற ஸ்ரீ V. T. கிருஷ்ணமாச்சாரியார் தலைமையில் நிபுணர்கள் கமிட்டி நியமிக்கப்பட்டு, அக்கமிட்டி செய்த சிபார்சுகளை அனுசரித்து, மேற்படி ராஜ்யங்களும் யூனியனுடன் இணைக்கப்பட்டுவிட்டன. வரிவிதிப்பு இனங்களைத் தவிர இதர இனங்களை சமஸ்தானங்கள் ஏற்றுக்கொண்டன என்று முன் பாராவில் சொன்னோம். இறுதியில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி அவ் விதிவிலக்கும் எடுபட்டு எவ்வகையிலும் மாகாணங்கள் என்ற முதல் (A) பாக ராஜ்யங்களைப் போலவே சம அதிகாரங்கள் உள்ள உறுப்புக்களாகவே சமஸ்தானங்கள் என்று அழைக்கப்பட்ட இரண்டாவது (B) பாக ராஜ்யங்களும் விளங்கும்.

சமஸ்தான நிதி இணைப்பு

ஆனால், மாகாணங்களில் உள்ளது போல திறமையான நிர்வாகம் பல சமஸ்தானங்களில் இல்லை. இதை சமாளிக்க கணக்குத் தணிக்கை வேலைகளை மத்திய சர்க்காரே மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது. சில சமஸ்தானங்கள் தரைச் சுங்கவரி போட்டு, அதன் வருவாயையே முக்கிய வருமானமாக உள்ளவை. ஒரே நிதிநிர்வாகம்என்று தீர்மானித்த பிறகு உள்நாட்டு சுங்கம் ஒழிக்கப்பட வேண்டியதாயிற்று. கடல் சுங்கம், வருமான வரி, ரயில்வே, தபால்-தந்தி இவை மூலம் கிடைக்கும் வருமானம் எல்லாம் மத்திய சர்க்காருக்குச் சேரும். இந்த ஏற்பாட்டால் பாதிக்கப்படும் சமஸ்தானங்களுக்கு இடைக்காலத்தில் மான்யங்கள் மூலம் மத்தியசர்க்கார் உதவியளிக்கும். பலசமஸ்தானங்களில் வருமான வரி கிடையாது. அவைகளில் இந்தியாவில் வழங்கும் விகிதப்படி வருமானவரி விதிப்பது யுக்தம் அல்ல. ஆகவே, படிப்படியாக இந்திய விகிதத்திற்குக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. பல சமஸ்தானங்களில் வருமானவரி இல்லாததால் இந்திய சர்க்காருக்கு உரிய வருமான வரியைக் கொடாமல் ஏமாற்றும் பெரும் பேர்வழிகளுக்குப் புகல் இடங்களாக அந்த சமஸ்தானங்கள் இருந்தன. எல்லாப் பிரதேசங்களும் இந்திய சர்க்காரின் வரி விதிப்பு ஆதிக்கத்தில் வந்துவிட்டதால், வரி ஏமாற்றல் இனி நடப்பது சுலபம் அல்ல. இணைப்பு சம்பந்தமாக மத்திய சர்க்காரால் அங்கீகரிக்கப்படும் திட்டங்களில் நிறைவேற்றப்படுவதை கவனிக்க, நிபுணர்கள் அடங்கிய விசேஷ கமிட்டியை ஜனாதிபதி நியமிக்கவேண்டும் என்றும், அக்கமிட்டி

யின் வருஷாந்தர அறிக்கைகளின்படி விஷயங்களை சீர்செய்ய வேண்டும் என்றும் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. இனி, மான்யம், உதவி, வரி விபாகங்கள் முதலிய விஷயங்களில் மாகாணங்களும் முதல் பாக (A) ராஜ்யங்களும், சமஸ்தானங்களும் இரண்டாவது (B) பாக ராஜ்யங்களும் ஒரே விதமாக நடத்தப்படும்.

சமஸ்தான ராணுவப்படைகளைத் தொடர்ந்து வைத்துக் கொள்ள வசதி இருக்கிறது. ஆனால் மத்திய சர்க்காரின் நிர்வாகத்துக்கு உள்பட்டுத்தான் அவை இனி இருக்கவேண்டும்.

பல சமஸ்தானங்களில் சரியானபடி அமைக்கப்பட்ட சட்ட சபைஇல்லை, நிர்வாகத் தரமும் கேவலமான நிலையில் உள்ளது. இது காரணமாக பத்து வருஷங்கள் அல்லது மேற்பட்ட காலத்திற்கு சமஸ்தானங்களை மேன்பார்வை செய்யவும் அவைகளுக்கு கட்டளைகளைப் பிறப்பிக்கவும் மத்திய சர்க்காருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. குறைகளைத் துரிதமாகத் தீர்ப்பதற்கு வசதி இந்த ஷரத்து மூலம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

" இந்த ராஜ்யங்களைப் பொறுத்த அரசியல் ஷரத்துக்களை, சட்ட சபைகள் உள்ள, மைசூர், திருவாங்கூர்—கொச்சி, சௌராஷ்டிர யூனியன் ஒப்புக்கொண்டு விட்டன. மற்ற சமஸ்தானங்களில் சரியானபடி அமைக்கப்பட்ட சட்ட சபைகள் இல்லை. ஆகவே, அந்த இடங்களில் இந்த அரசியல் அமைப்பை அமுலுக்குக்கொண்டு வருவதைத் தவிர வேறு வழி இல்லை. அதிபதி அல்லது ராஜப்பிரமுகர் சம்மதத்தைப் பெற்று அமுலுக்குக் கொண்டுவர வேண்டியதுதான் " என்று சர்தார் பட்டேல் அரசியல் நிர்ணய சபையில் செய்தப் பிரசங்கத்தில் குறிப்பிட்டார். இரண்டாவது (B) பாக ராஜ்யங்களின் அரசியல் அமைப்பும் இந்திய அரசியலின் ஒரு பகுதியாகவே விளங்கும். மாகாணங்கள் என்ற முதல் (A) பாக ராஜ்யங்களுக்குப் பொருந்தும் ஷரத்துக்களே குறிப்பிட்ட சில மாறுதல்களுடன் இரண்டாவது (B) பாக ராஜ்யங்களுக்கும் பொருந்தும். சர்தார் பட்டேல் செய்த பிரசங்கத்திலிருந்து இதன் சம்பந்தமான மேலும் சில பகுதிகளை இங்கு கவனிப்போம்.

" ஐநூற்றுச் சொச்ச சமஸ்தானங்களை இணைத்ததின் மூலமும், யதேச்சாதிகாரத்தை ஒழித்ததின் மூலமும், இந்திய ஜனநாயகம் மாபெரும் வெற்றியைக் கண்டுவிட்டது. இதுபற்றி

மக்கள், மன்னர்கள் எல்லோருமே பெருமைப் படவேண்டும். இது சரித்திரத்தில் பெருமைப்படத் தக்க சாதனை. மன்னர்களின் யதேச்சாதிகாரம் ஒழிந்தது; இனி புது அமைப்பில் பலன் காண்பது மக்கள் வேலை.''

1935-ம் வருஷத்து இந்தியா கவர்ன்மெண்டு ஆக்டில் சிருஷ்டிக்கப்பட்ட சமஷ்டியை, சம அந்தஸ்து இல்லாத உறுப்புக்களைக் கொண்ட விசித்திர ஏற்பாடு என்றும், சமஸ்தானங்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளும் பிரதிநிதித்வமும் பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள ராஜீய முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் செய்த சூழ்ச்சி என்றும், சுதந்திரப் போராட்ட வரலாறு பற்றிய முன்னுரையில் குறிப்பிட்டிருக்கிறோம். ஆனால் அந்த சமஷ்டி அமுலுக்கு வரவில்லை. அதிலிருந்த பெருங் குறைபாடு இப்பொழுது நீக்கப்பட்டுவிட்டது. சர்தார் பட்டேலின் தலைமையிலுள்ள இந்திய சர்க்கார் ராஜீய இலாக்காவின் திறமையால் இப்பெரும் காரியம் சாதிக்கப்பட்டிருக்கிறது. பல நூற்றாண்டுகளாக தனிமையில் விளங்கிய சமஸ்தானாதிபதிகள், இந்தியா சுதந்திர மடைந்ததும் தனிக்காட்டு ராஜாக்களாக இருந்துவிட எண்ணியவர்கள், தங்கள் அதிகாரங்களை விட்டுக் கொடுத்தது, இந்திய சர்க்காரின் செல்வாக்கை அதிகரித்து இருக்கிறது. மேலாதிபத்தியம் வழுவி விட்டது என்ற வரட்டு தத்வத்தை சொல்லிவிட்டு பிரிட்டிஷார் வெளியேறினர். ஆனால் அந்த மேலாதிபத்ய வழுவலால், நாட்டின் ஐக்கியத்திற்கு ஏற்படவிருந்த அபாயம் இப்பொழுது நீங்கிவிட்டது. இது, சர்தார் பட்டேல் நம் நாட்டிற்கு செய்த மகத்தான சேவையாகும்.

சுதந்திர தினமான 15-8-47க்குள் இந்தியாவுடன் சேராத சமஸ்தானங்கள் மூன்று—ஜுனகாத், ஹைதராபாத், ஜம்மு—காஷ்மீர் ஆகியவை. ஜுனகாத் என்பது குஜராத்தில் சிறிய சமஸ்தானம்; அதன் மக்கள் பெரும்பாலும் இந்துக்கள். ஆனால், சமஸ்தானாதிபதி ஒரு முஸ்லிம் நவாப். அந்த சமஸ்தானத்தைச் சுற்றியுள்ள செளராஷ்டிர சமஸ்தானங்கள் எல்லாம் இந்தியாவுடன் சேர்ந்தன. பூகோள அமைப்பில் ஜுனகாத்தும் இந்தியாவுடன் சேரவேண்டும்; ஆனால் நவாப் குறும்புத்தனமாக பாகிஸ்தானுடன் சேருவதாக சாஸனத்தில் கையெழுத்திட்டார். இதைக்கண்டு மக்கள் ஆத்திரங்கொண்டு எழுந்தனர்; நவாப் பாகிஸ்தானுக்கு ஓடி விட்டார். பிந்தி பொதுஜன வோட்டு

எடுத்ததில் 98 சத விகிதம் பேர் இந்தியாவுடன் சேரவேண்டும் என்று வாக்கு அளித்தார்கள். பிந்தி ஏற்பட்ட சமஸ்தானங்கள் இணைப்பில் ஜுனகாத் சௌராஷ்டிராவில் அடங்கி விட்டது.

ஹைதராபாத்

ஹைதராபாத் இந்தியாவின் நடுமையத்தில் உள்ள பெரிய சமஸ்தானம். விஸ்தீர்ணத்திலும் ஜனத்தொகையிலும் வருமானத்திலும் இந்தியாவில் முதன்மையிலுள்ள சமஸ்தானம் இது. ஜனங்களில் 85 சத விகிதம் இந்துக்கள்; இதர மதத்தினர்கள் 15 சத விகிதந்தான். மன்னர் நிஜாம் என்ற பட்டத்தைக் கொண்ட முஸ்லிம். அவருக்கு இந்தியாவுடன் சேர மனமில்லை. ஆனால் பாகிஸ்தானுடன் சேர்ந்து ஜனங்களின் விரோதத்தையும் சம்பாதித்துக் கொள்ளவும் இஷ்டமில்லை. எனவே சுயேச்சையை நாடினார். மிகவும் தந்திரசாலி யானதால் இந்தியாவுடன் சேருவதாக சுமார் ஒரு வருஷகாலம் பேரம் பண்ணிக்கொண்டு காலதாமதம் செய்து வந்தார். இதன் மத்தியில் சமஸ்தானத்தில் இதிஹாதுல் முஸ்லிமீன் என்ற முஸ்லிம் வெறியர்களுக்கு மான்யங்களை அளித்து, ஹைதராபாத் சுயேச்சையாக இருக்க வேண்டும் என்று கிளர்ச்சி செய்யவும் பிரசாரம் செய்யவும் தூண்டினர். இந்த வெறியர்கள் ரஜாகர்கள் என்ற முஸ்லிம் படையைத் திரட்டி நாட்டுப்புறங்களில் இந்துக்களைத் தாக்கி வீடுவாசல்களைக் கொள்ளையடித்து பலவிதமாக அட்டூழியங்களைச் செய்து வந்தனர். இக் கொடுமையைத் தாங்க முடியாமல் பல இந்துக்கள் சமஸ்தானத்திலிருந்து வெளியேறினர். இந்தியாவின் எல்லைப்புறங்களிலும் ரஜாக்கர்கள் கொள்ளையை நடத்த ஆரம்பித்தார்கள். இந்திய சர்க்காரின் எச்சரிக்கைகளை கவனிக்கவில்லை. இந்திய சர்க்காருடன் ஒப்பந்த விஷயமாகப் பேச்சு வார்த்தைகளை நீடித்துக்கொண்டு நிஜாம் காலகரணம் செய்து வந்தார். சமஸ்தானத்தில் குழப்பங்கள் அதிகரித்ததால் இந்திய சர்க்கார் 1948-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் போலீஸ் நடவடிக்கைகளை ஆரம்பித்தார்கள். நான்கு நாட்களில் நிஜாம் சரணாகதி அடைந்தார். அதுமுதல் ஹைதராபாத் இந்திய சர்க்காரின் மேன் பார்வையில் ராணுவ கவர்னரின் ஆட்சியில் இருந்து வந்தது. 1949 டிசம்பர் முதல் ராணுவ ஆட்சி நீங்கி சிவில் நிர்வாகம் நடந்து வருகிறது. அதன் அரசியல் சமஸ்தான மக்கள் விருப்பப்படி நிர்ணயிக்கப்படும் என்று இந்திய சர்க்கார்

வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். ஆகவே இந்திய அரசியல் சட்டத்தில் சமஸ்தானங்கள் என்ற இரண்டாவது (B) பாக ராஜ்யங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் அரசியலே ஊர்ஜிதம் செய்வது, ஹைதராபாத்தில் எடுக்கப்போகும் பொதுஜன வாக்கைப் பொறுத்து இருக்கிறது.

ஹைதராபாத்தில் பாஷாவாரியாக மூன்றுப் பிரதேசங்கள் இருக்கின்றன—தெலுங்கு, மகாராஷ்டிரம், கன்னடம். அந்தந்த மொழிப் பிரதேசங்கள் அண்டையிலுள்ள அதே மொழியைக் கொண்ட மாகாணங்கள் அல்லது ராஜ்யங்களைச் சேருவதை சமஸ்தானத்திலுள்ள ராஜீயவாதிகள் ஆதரிப்பதாகத் தெரிகிறது. அதாவது தெலுங்கு ஜில்லாக்கள், புதிதாக அமைக்கப்படும் ஆந்திர மாகாணத்துடனும், மகாராஷ்டிரப் பிரதேசங்கள் மகாராஷ்டிரம் அல்லது பம்பாயுடனும், கன்னடப் பிரதேசங்கள் கன்னடப் பகுதியுடனும் சேரவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் பாஷாவாரி மாகாணப் பிரச்னை ஒத்திப்போடப்பட்டதால், ஹைதராபாத் மைசூர் போன்ற சமஸ்தானத்துக்குள்ள அரசியலே ஏற்றுக்கொண்டு தனி உறுப்பாகவே விளங்கும். அரசியல் சட்டத்தில் கண்ட (B) பாக ராஜ்யத்துக்குள்ள அமைப்பை ஏற்றுக்கொண்டு நிஜாம் பர்மான் விடுத்திருக்கிறார்.

காஷ்மீர்

ஜம்மு—காஷ்மீர் சமஸ்தானம் இந்தியாவின் வடமேற்குக் கோடியில் உள்ளது. அதன் எல்லைகள் இந்தியா, பாகிஸ்தான், ரஷ்யா, சீனா எல்லைகள் ஒட்டி இருக்கின்றன. பிரிட்டிஷ் சர்க்கார் வெளியிட்ட யோசனைப்படி காஷ்மீர் இந்தியாவுடனோ, பாகிஸ்தானுடனோ சேரலாம். காஷ்மீர் மக்களில் பெரும்பான்மையோர் முஸ்லிம்கள்; ஆனால் அதிபதி ஹிந்து மகாராஜா. ஒரு டொமினியனுடனும் சேராமல் மகாராஜா குழம்பிக்கொண்டு இருந்தார். பாகிஸ்தானுடன் சேரவேண்டும் என்று பாகிஸ்தான் சர்க்கார் நிர்ப்பந்தம் செய்ய ஆரம்பித்தார்கள். மகாராஜா அதற்கு இணங்கவில்லை. சமஸ்தானத்தின்பேரில் படையெடுக்கும் படியாய் மலைஜாதியினரை பாகிஸ்தான் சர்க்கார் ஏவி விட்டார்கள். ஆயுதங்களையும் தளவாடங்களையும், சேனைக்குத் தலைவர்களையும் கொடுத்து உதவி செய்தார்கள். காஷ்மீரின் தலைநகரான ஸ்ரீநகருக்கு அருகாமையில் படையெடுக்கும் கொள்ளைக் கூட்டம் 1947-ம் வருஷம் அக்டோபரில் வந்து விட்டது. அந்த

நெருக்கடியில், மகாராஜா இந்தியாவுடன் சேருவதாக சாஸனத்தில் கையெழுத்திட்டு, இந்திய சர்க்காரின் ராணுவ உதவியை நாடினார். இந்திய சேனை விமான மார்க்கமாக ஸ்ரீநகருக்கு விரைந்து, பாகிஸ்தான் சேனாதிபதிகளின் தலைமையில் வந்த கொள்ளைக் கூட்டத்தை விரட்டி, ஆறு மாத காலத்தில் சமஸ்தர்னத்திலுள்ள முக்கியமான பகுதிகளை மீட்டது. ஆனால், அச்சமஸ்தானத்தின் இயற்கை அமைப்புக் காரணத்தால் மலைகளும், காடுகளும், பனிக்கட்டிகளும் நிறைந்த பாகங்களைக் கைப்பற்றுவதில் துரிதமாக முன்னேற முடியவில்லை. அவ்விடங்கள் ‘ஆஜாத் காஷ்மீர்’ என்று சொல்லும் போட்டி சர்க்காரின் ஆதிக்கத்தில் இருக்கின்றன. காஷ்மீர் விஷயத்தில் பாகிஸ்தான் சர்க்கார் கையாண்ட முறை ஐக்கியநாடு சாஸனத்துக்கு முரணானது என்று இந்திய சர்க்கார் ஐக்கியநாடுகள் சபையில் புகார் செய்தார்கள். சபை, தகராறுகளை சமரஸமாகத் தீர்க்க ஒரு கமிஷனை நியமித்தது. மத்தியில் சண்டை நிறுத்தப்பட்டு இருக்கிறது. காஷ்மீர் இந்தியாவைச் சேருவதா பாகிஸ்தானைச் சேருவதா என்ற பிரச்னை காஷ்மீர் மக்களின் வாக்குப்படி முடிவு கட்டப்பட வேண்டும் என்று இரு தரப்பாரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால் பொதுமக்களிடையே வோட்டு எடுக்க அமைதியான நிலைமை வேண்டும், சட்டத்துக்குப் புறம்பான ஆஜாத் காஷ்மீர் சர்க்காரின் துருப்புக்கள் கலைக்கப்பட வேண்டும் என்று இந்திய சர்க்கார் வற்புறுத்துகிறார்கள். இதைப் பற்றி சமரஸ முடிவு ஏற்படவில்லை. இந்தியாவுக்கு வந்த ஐக்கியநாடு கமிஷன் பிரச்னையைத் திரும்ப ஐக்கியநாடு பாதுகாப்புக் கவுன்ஸிலுக்கு சமர்ப்பித்து விட்டார்கள். மத்தியில், காஷ்மீரின் முக்கிய பகுதிகளில் நிர்வாகத்தை நடத்தும் ஷேக் அப்துல்லாவைப் பிரதம மந்திரியாகக் கொண்ட மந்திரி சபை, இந்தியாவுடன் சேருவது என்று தீர்மானித்து அரசியல் நிர்ணய சபையிலும் காஷ்மீர் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். இப்பொழுது ஊர்ஜிதத்திலுள்ள சாஸனப்படி காஷ்மீர்மூன்று விஷயங்களில், அதாவது அயல் நாட்டு உறவுகள், பாதுகாப்பு, போக்குவரத்து இவைகளில் மட்டிலும் இந்திய சர்க்காருக்கு அதிகாரங்களை ஒப்படைத்திருக்கிறார்கள். மேற்கொண்டு சமயோசிதம்போல் அதிகாரங்களை இந்திய சர்க்காருக்கு காஷ்மீர் சமஸ்தான சர்க்கார் ஒப்படைக்க வசதி செய்யப்பட்டு இருக்கிறது. இவை, பொதுஜன வோட்டின் முடிவு தெரியுமுன் இடைக்கால ஏற்பாடுகளே ஆகும்.

சில ப்ரதேசங்கள் விதிவிலக்குகள்—பூர்வீகக் குடிகள்

ஆனால், மேற்கண்ட 1, 2 (A, B) ஜாப்தா ராஜ்யங்களில் பூர்வீகக் குடிகள் வசிக்கும் பிரதேசங்கள் சம்பந்தமாக சில விதிவிலக்குகள் இருக்கின்றன. அப்பிரதேசங்களுக்கு மேற்படி ராஜ்யங்களுக்குப் பொருந்தும் அரசியல் ஷரத்துக்களைப் பூராவும் பொருத்துவதில் கஷ்டங்கள் இருந்தன. இந்த ஜனங்கள் பலதரப்பட்ட பூர்வீக ஜாதிகளிலிருந்து வந்தவர்கள். செல்வ நிலையிலும் கல்வி விஷயத்திலும் பின்னணியில் உள்ளவர்கள். அவர்கள் வசிக்கும் பிரதேசங்கள், 1935-ம் வருஷத்து கவர்ன்மெண்டு ஆக்டுப்படி கவர்னரின் சுயேச்சாதிகார நிர்வாகத்தில் இருந்தன. அஸ்ஸாம் ராஜ்யம் (மாகாணம்) நீங்கலாக, நாட்டின் இதர பாகங்களில், பூர்வீகக் குடிகள் சுற்றியுள்ள இந்துக்களுடைய பழக்க வழக்கங்களை அனுசரித்துக்கொண்டு இந்துக்களுடன் ஒருமைப்பட்டு வருகிறார்கள். ஆனால் அவர்கள் கலாசாரமும் பொருளாதார நிலையும் முன்னேற்றமில்லாமல் பூர்வீக நிலையில் இருக்கிறது. அவர்களை முன்னேற்றுவது தேசத்தின் கடமை, அதற்காக மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்கார்களுக்கு மான்யங்களை அளிக்க வேண்டும் என்று அரசியல் சட்டத்தில் காணப்பட்டு இருக்கிறது. உடனடியாக இவர்கள் விஷயத்திலும் ஒரே முறையை அனுஷ்டித்தால் தீங்கு ஏற்படக் கூடியது. முன்னேற்றம் அடைந்த இதரார் இவர்களைச் சுரண்டாமல் பாதுகாப்பது அவசியம். ஆகவே இந்தப் பிரதேசங்களுக்கு சட்டங்களைப் பொருத்துவதில் பூர்வீகக் குடிகளின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு சபையை அமைத்து, அதன் யோசனைகளைக் கேட்க வசதி ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. முக்கியமாக அப்பிரதேசங்களிலுள்ள நிலங்களைப் பராதீனம் செய்யும் விஷயமாய் அவர்களின் யோசனைக்கு கௌரவம் அளிக்கப்படும்; விவாகம், சொத்துக்களுக்கு வாரிஸ் உரிமை, சமூக பழக்க வழக்கங்கள், பூர்வீகக் குடிகளுக்கு கடன் கொடுப்பது, இவை விஷயமாயும் பூர்வீகக் குடிகளின் ஆலோசனை சபையைக் கலந்து கொள்ளவேண்டும். பார்லிமெண்டு அல்லது ராஜ்யச் சட்டசபைகளால் இயற்றப்படும் சட்டங்களை அப்பிரதேசங்களுக்குப் பொருத்தாமல், அமைதி, ஒழுங்கு சம்பந்தமாக விதிகளை கவர்னர் செய்வதாக இருந்தால், அவைகளைப் பற்றியும் கலந்துகொள்ளவேண்டும். ஆனால் மேற்படி ஆலோசனை சபையில் நான்கில் மூன்று பங்குப் பிரதிநிதிகள் அந்தந்த ராஜ்யத்

தின் சட்டசபைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் பூர்வீகக் குடிகளின் பிரதிநிதிகள் இருப்பார்கள். ஆகையால் சட்டங்கள் சட்டசபைகளில் ஆலோசனையில் இருக்கும் பொழுதே பூர்வீகக் குடிகளின் தேவைகள் தெரிவிக்கப்படும். அஸ்ஸாம் ராஜ்யத்திலுள்ள மலைஜாதிகள் (ஆதிவாசிகள்) விஷயத்தில் இன்னும் தாராள வகையில் குடிகளுக்கு சுய ஆட்சி அளிக்கப்பட்டு இருக்கின்றது. பல தலைமுறைகளாக தங்கள் பஞ்சாயத்துக்களின் தீர்மானப்படி நடக்கிறார்கள். இந்தப் பிரதேசங்களின் நிர்வாகம், அந்தந்தப் பிரதேசத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் பூர்வீகக் குடிகள் அடங்கிய சபையால் நடத்தப்படும். ஆனால் கவர்னரின் அல்லது அதிபதி மேல் அதிகாரத்துக்கு உள்பட்டது. ஸிவில், கிரிமினல் வழக்குகளும் ஜாதிப் பஞ்சாயத்துக்களால் விசாரிக்கப்படும்.

இப்பிரதேசங்களை நாட்டின் இதர பாகங்களுடனும் அண்டையிலுள்ள ஜனங்களுடனும் இணைக்க வசதிகளும் உள்ளன. ராஜ்யத்தின் நிர்வாக அதிகாரம் அந்த ராஜ்யத்திலுள்ள பூர்வீகக் குடிகள் வசிக்கும் பிரதேசங்களுக்கும் வியாபிக்கும். கடன் கொடுப்பது, நிலபராதீனம், விவாகம், வாரீஸ் உரிமை, சமூகப் பழக்கங்கள் நீங்கலான விஷயங்களில், பார்லிமெண்டாலும் ராஜ்யச் சட்டசபை யல்லது சபைகளாலும் நிறைவேற்றப்படும் சட்டங்கள் மற்றவர்களைப்போல் பூர்வீகக் குடிகளையும் கட்டுப் படுத்தும். சுப்ரீம் கோர்ட்டு, ஹைகோர்ட்டு இவைகளின் மேலதிகாரம் உண்டு. பார்லிமெண்டிலும் அந்தந்த ராஜ்யச் சட்டசபைகளிலும் ஜனத்தொகைக்குத் தக்கபடி பூர்வீகக் குடிகளின் பிரதிநிதிகள் இருப்பார்கள். அவர்களுக்கு ஸ்தானங்கள் புது அரசியல் அமுலுக்கு வரும் தேதியிலிருந்து பத்து வருஷ காலத்திற்கு ஒதுக்கப்பட்டு இருக்கின்றன.

ராஜ்யங்களைப் பொறுத்த அரசியல் ஷரத்துக்களுக்கு விலக்காக உள்ளவை, மேலே கண்டபடி, முதல் ஷெட்யூலின் மூன்றாவது நான்காவது பாகங்களில் (C, D) குறிப்பிடப்பட்டப் பிரதேசங்கள். பூர்வீகக் குடிகள் வசிக்கும் பிரதேசங்கள் சம்பந்தமாக சில விதிவிலக்குகள்தான் உள்ளன. இப்பிரதேசங்கள் ஏற்கனவே சொன்னபடி முன்னேற்றம் அடையாதவை; விஸ்தீர்ணத்திலோ ஜனத்தொகையிலோ, கணிசமானவை அல்ல; தேசத்து அரசியல் பொதுவாகப் பொருந்துவதையும், அரசியலின் தன்மையையும் பாதிக்கக்கூடிய வகையில் இல்லை.

*சமஷ்டி அரசியல் அமைப்பின் முக்கியமான விஷயம் என்னவென்றால், தேசத்தின் ராஜீய ஐக்யத்தைப் பாதுகாக்க வேண்டிய அதிகாரங்களை மத்திய சர்க்காருக்கும், பிரதேச சுயாட்சிக்கு வேண்டிய அதிகாரங்களை உறுப்புக்களுக்கும் விநியோகிப்பது. எல்லா அதிகாரங்களும் அரசியல் சட்டத்தின் 7-வது ஷெட்யூலில் மூன்று ஜாப்தாக்களில் விவரிக்கப்பட்டு இருக்கின்றன. முதல் ஜாப்தாவில் கண்ட விஷயங்களைப் பொறுத்து யூனியனுக்கு (மத்திய சர்க்காருக்கு) ஏகதேச அதிகாரம், இரண்டாவது ஜாப்தாவில் கண்ட விஷயங்களைப் பொறுத்து ராஜ்யங்களுக்கு (ஸ்தல சர்க்கார்களுக்கு) ஏகதேச அதிகாரம். மூன்றாவது ஜாப்தா, யூனியனும் ராஜ்யங்களும் பொதுவாக அதிகாரம் செலுத்தக்கூடிய விஷயங்களைக் கொண்டது.

அதிகார விபாகம்

யூனியன் ஜாப்தாவில், 97 இனங்கள் காணப்பட்டு இருக்கின்றன. அவைகளில் முக்கியமானவை வருமாறு—இந்தியாவின் பாதுகாப்பு, படைகளைத் திரட்டுவது, அவைகளின்பேரில் ஆதிக்கம், பாதுகாப்பு, யுத்த சம்பந்தமான தொழில்கள், ஆயுதங்கள், அணுசக்தி, அயல்நாட்டு விவகாரங்கள், அயல்நாட்டு வியாபாரம், வெளிநாடுகளுக்குக் குடியேறுவது, வெளிநாடுகளிலிருந்து குடிவருவது, தபால்-தந்தி, ரேடியோ, போக்குவரத்து சாதனங்கள், கப்பல், விமானப் போக்குவரத்து, ரயில்வேக்கள், தேசிய முக்கியத்துவமுள்ள ரஸ்தாக்கள், நீர்மார்க்கங்கள், பாங்கிங், இன்ஷியூரென்ஸ், நாணயம், அயல்நாட்டு நாணயமாற்று, கார்பொரேஷன்கள், பேடண்டுகள், நகல் உரிமைகள், வியாபார சின்னங்கள், அளவுகளும் நிறைகளும், பெட்ரோலியமும் அதைப் போன்ற திராவகங்களும், தொழில் வளர்ச்சி, சுரங்கங்களிலும் எண்ணெய் வயல்களிலும் வேலை செய்யும் தொழிலாளர்களின் நலனும் பாதுகாப்பும், ராஜ்யங்களிடையே குடியேற்றமும் வியாபாரமும், ரிஸர்வ் பாங்க், சுப்ரீம் கோர்ட்டு, எஸ்டேட் வரி, வருமானவரி, சுங்கம், எக்ஸைஸ் (உற்பத்தி வரி), செய்திப் பத்திரிகைகளின் விற்பனை வரியும் விளம்பர வரியும்.

யூனியன் ஜாப்தா

II ஜாப்தாவில் கண்ட விஷயங்கள் அந்தந்த ராஜ்யத்தின் ஸ்தல நிர்வாகங்களைப் பொறுத்தவை. அவற்றில் முக்கியமானவை

ராஜ்ய ஜாப்தா

வருமாறு: பொது ஒழுங்கு, போலீஸ், சுப்ரீம் கோர்ட்டு நீங்கலாக கோர்ட்டுகள் மூலம் நீதி செலுத்துவது, பொது சுகாதாரம், கல்வி, ராஜ்யத்திற்குள் போக்கு வரத்து (ரஸ்தாக்கள், பாலங்கள், கால்வாய்கள் உள்பட), விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடைகள், காடுகள், நில பாத்யதைகள், நிலவரி, பகுதி வகைரா; மீன் வளர்ச்சி, உள் ராஜ்ய வியாபாரம், முதல் ஜாப்தாவில் சம்பந்தப்படாத தொழில்களின் வளர்ச்சி, லேவாதேவி, மதுபானங்கள், தர்மங்கள், தமாஷாக்கள், ஸ்டாம்பு வரிகள், விவசாய நிலத்தையும் வருமானத்தையும் பொறுத்த வரிகள், தொழில் வரிகள், கட்டிடங்கள், மிருகங்கள், நபர்கள், இவர்களைப் பொறுத்த வரிகள், செய்திப் பத்திரிகைகள் நீங்கலான சரக்குகளின்பேரில் விற்பனை வரி, மின்சார வரி, டோல்கள் (உள்நாட்டு சுங்கம்); செய்திப் பத்திரிகைகளிலுள்ள விளம்பரங்கள் நீங்கலாக விளம்பரங்களின் பேரில் வரி.

பொது ஜாப்தா

மூன்றாவதான பொது ஜாப்தாவில் முக்கியமானவை வருமாறு: குற்றச் சட்டம் (பீனல் கோடு), குற்ற நடவடிக்கைகள் முறைச் சட்டம் (கிரிமினல் ப்ரொஸீஜர் கோடு), ஸிவில் நடவடிக்கைகள் முறைச் சட்டம் (ஸிவில் ப்ரொஸீஜர் கோடு), சாக்ஷியச் சட்டம் (Evidence Act) குடும்பச் சட்டம், உயில்கள், உயில் எழுதாமல் இறப்பவர்களுக்கு வாரீஸ் சட்டம், டிரஸ்டுகள், ஒப்பந்தங்கள், நஷ்ட ஈடு சம்பந்தமான சட்டங்கள், தொழிற் சங்கங்களும் சமூக இன்ஷியூரென்ஸ் உள்பட தொழிற் சட்டங்கள், பொருளாதார சமூகத் துறைகளில் திட்டங்களைத் தயாரிப்பது, விலைவாசிக் கட்டுப்பாடு.

அதிகார விபாக விஷயமாக ஐந்து வருஷங்களுக்கு விதி விலக்கு

மக்களுக்கு அவசியமான பொருள்களின் உற்பத்திக் குறைவால் ஏற்பட்டிருக்கும் பஞ்ச நிலைமையை சமாளிக்க, 7-வது ஷெட்யூலில் கண்ட அதிகார விபாக விஷயமாய், ஐந்து வருஷ காலத்திற்கு விதி விலக்கு செய்யப்பட்டு, இவ்வைந்து வருஷகாலத்தில் அடியிற்கண்ட விஷயங்களைப் பொறுத்து சட்டமியற்ற பார்லிமெண்டுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டு இருக்கிறது:—(a) பருத்தி, கம்பள ஜவுளிகள், கச்சாபருத்தி, பருத்தி

விதை, காகிதம் (நியூஸ்பிரிண்ட் உள்பட), உணவுப் பொருள்கள் (உணவுக்குத் தகுதியான எண்ணெய் வித்துக்களும், எண்ணெய்களும் உள்பட) கால் நடைத் தீவனம், நிலக்கரி, இரும்பு, எஃகு, மைகா—இவைகளில் ராஜ்யத்திற்குள் வியாபாரமும் போக்குவரத்தும், மேற்படி பொருள்களின் உற்பத்தி, சப்ளை, விநியோகம்;

(b) இடப் பெயர்ச்சி ஏற்பட்ட அகதிகளுக்கு உதவியும் அவர்களின் புனருத்தாரணமும்;

(c) மேற்படி விஷயங்களைப் பொறுத்த குற்றங்கள், விசாரணைகள், புள்ளி விவரங்கள், சுப்ரீம் கோர்ட்டு நீங்கலாக இதர கோர்ட்டுகளின் ஜூரிஸ்டிக்ஷன்.

மேலே இரண்டாவது ஜாப்தாவான ராஜ்ய ஜாப்தாவில் செய்திப் பத்திரிகைகள் நீங்கலான சரக்குகளின் விற்பனை வரி ஒரு இனமாக இருக்கிறது. ஆனால் ராஜ்யத்துக்கு வெளியே நடக்கும் வியாபாரம், ராஜ்யங்களிடையே நடக்கும் வியாபாரம், இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களும் இந்தியாவிற்குள் இறக்குமதியாகும் பொருள்களும், பார்லிமெண்டால் மக்களுக்கு அத்தியாவசியமானவை என்று கூறப்படும் பொருள்களும் விற்பனை வரிக்கு விலக்குகள். இதற்கு மாறாக விற்பனை வரி விதிக்கும் மாகாணங்களுக்கு (A பகுதி ராஜ்யங்கள்), வரித் திட்டத்தைத் திருத்தி அமைக்க இரண்டு வருஷ அவகாசம் அளிக்கப்பட்டு இருக்கிறது.

ராஜ்யங்களின் விற்பனை வரிக்கு விலக்குகள்

யூனியன் சட்டத்திற்கும் ராஜ்யச் சட்டத்திற்கும் முரண்பாடு இருந்தால் யூனியன் சட்டம் மேலானது. பொது ஜாப்தாவில் கண்ட விஷயம் எதைப் பொறுத்தாவது யூனியன் சட்டத்திற்கும் ராஜ்யச் சட்டத்திற்கும் முரண்பாடு இருந்தால் யூனியன் சட்டம் மேலானது; ஆனால் எந்த ராஜ்யச் சட்டமாவது ஜனாதிபதியின் ஆலோசனைக்கு நிறுத்தப்பட்டு அவர் அங்கீகாரத்தைப் பெற்றிருந்தால் அச்சட்டம் அந்த ராஜ்யத்தில் மேலானது. 1935–ம் வருஷத்து ஆக்டை அனுசரித்து இந்த ஷரத்துக்கள் இருக்கின்றன.

யூனியன் சட்டத்திற்கும் ராஜ்யச் சட்டத்திற்கும் முரண்பாடு

இதர நாடுகளின் படிப்பினை

அமெரிக்கா (U. S. A.) விலும் ஆஸ்டிரேலியாவிலும் யூனியன் சட்டங்கள் உறுப்புக்களின் (ஸ்டேட்டுகளின்) அதிகாரங்களில் குறுக்கிடுகின்றன என்று அடிக்கடி சர்ச்சை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட விவகாரங்கள் அதிகப்படியாக அமெரிக்காவில் வருகின்றன. அந்நிலைமைகளில் யூனியனுக்கு அரசியல்படி அளிக்கப்பட்ட போலீஸ் அதிகாரம் அல்லது ஸ்டேட்டுகளிடையே வியாபாரம் போக்குவரத்து சம்பந்தமான அதிகாரங்களை ஆதாரமாகக் கொண்டு, யூனியன் சட்டங்களை செல்லும்படியாகக் கருத வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுகிறது. சில வேளைகளில் சுப்ரீம் கோர்ட்டு மத்திய அரசாங்கத்துக்கு விரோதமாக முக்கியமாக காலஞ் சென்ற ஜனாதிபதி ரூஸ்வெல்டின் புதுத்திட்ட சட்டங்களை (New Deal Legislation) செல்லுபடியல்லவென்று தீர்ப்புக் கூறினார்கள். பிந்தி அதே கோர்ட்டில் முன் தீர்ப்புக்கள் நிராகரிக்கப்பட்டு அச் சட்டங்கள் சரியானவை என்று தீர்ப்பு செய்யப்பட்டது. இம்மாதிரியான சங்கடங்களால் நிலைமைக்குத் தகுந்தபடி சட்டங்களையோ திட்டங்களையோ உடனடியாக அமுல் செய்வது தடைப்படுகிறது. இதைச் சமாளிக்க இந்திய அரசியலில் விரிவான முறையில் யூனியன் ஜாப்தாவைத் தயார் செய்து இருக்கிறார்கள். ஆனால் உபாயம் பயன்படுமா விதண்டாவாதங்கள் தவிர்க்கப்படுமா என்பது காலக்கிரமத்தில் தான் தெரியும்.

சில சந்தர்ப்பங்களில் யூனியனுக்கு விசேஷ அதிகாரம்

அரசியல்கள் இருவகையாகப் பிரிக்கப்பட்டாலும், அநேக தேசங்களின் அரசியல்களில், ஏகபாவ அரசியலின் குணங்களும் சமஷ்டியின் குணங்களும் கலந்து காணப்படுகின்றன. நமது அரசியல் சாதாரண காலத்தில் சமஷ்டி முறையில் வேலை செய்யும்; ஆனால் யுத்தத்தாலோ உள்நாட்டு கலவரத்தாலோ நெருக்கடி ஏற்பட்டால் உறுப்புக்களான ராஜ்யங்களுக்கு விதிக்கப்பட்ட விஷயங்களில் (இரண்டாவது ஜாப்தாவில் கண்டவை) யூனியன் பார்லிமெண்டுக்கும் மத்திய நிர்வாகத்திற்கும் அதிகாரம் உண்டு. அரசியல் சட்டத்தின் 352—வது பிரிவுப்படி ஜனாதிபதியால் நெருக்கடிப் பிரகடனம் செய்யப்பட்டவுடன் இந்தியா யூனிடரி (ஏகபாவ) அரசாங்கமாக மாறிவிடுகிறது. இதைப் போன்ற ஷரத்து

வேறெந்த சமஷ்டி அரசியலிலும் இல்லை. முந்திய 1935-ம் வருஷத்து ஆக்டில் 102-வது பிரிவை அனுசரித்து இருக்கிறது.

நிதி விஷயங்களில் நெருக்கடி ஏற்படும் பொழுது மத்திய சர்க்காருக்கு விசேஷ அதிகாரங்கள் அளிக்கப்பட்டு இருக்கின்றன. 306-வது பிரிவுப்படி நிதி விஷயத்தில் தேசத்தின் அல்லது ஒரு பாகத்தின் மதிப்புக்கு அபாயம் ஏற்பட்டாலோ அல்லது ஏற்படக்கூடியதாக இருந்தாலோ, நிதி நெருக்கடிப் பிரகடனம் பிறப்பிக்கப்படலாம். அப்பொழுது நிதி சம்பந்தமாக அனுஷ்டிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள், கொள்கைகள், சர்க்கார் ஊழியர்களின் சம்பளங்களையும் படிகளையும் குறைப்பது, நிதி மசோதாக்கள் உள்பட ராஜ்ய லெஜிஸ் லேச்சரில் நிறைவேறிய மசோதாக்களை ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அனுப்புவது, இவைபோன்ற விஷயங்களைப் பொறுத்து, மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்கார்களுக்குத் தாக்கீதுகளைப் பிறப்பிவிக்கலாம்.

தவிர, சட்டமியற்றும் துறையில், 249-வது பிரிவுப்படி, ராஜ்ய ஜாப்தாவில் கண்ட விஷயமாக இருந்தபோதிலும் தேசீய அக்கறையை முன்னிட்டு பார்லிமெண்டு சட்டம் இயற்றுவது யுக்தம் என்று, பார்லிமெண்டு மேல்சபையில் மூன்றில் இரண்டு பங்கு பெருவாரி வோட்டுக்களால் தீர்மானிக்கப்பட்டால், அவ்விஷயத்தைப் பொறுத்து நாடு முழுவதிற்கும் அல்லது எந்த பாகத்திற்கும் சட்டம் இயற்ற பார்லிமெண்டுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டு இருக்கிறது. இவ்விதத் தீர்மானம் ஒரு வருஷத்திற்கு அமுல் உள்ளது. 250-வது பிரிவுப்படி, நெருக்கடிப் பிரகடனம் அமுலிலுள்ள காலத்தில் ராஜ்ய ஜாப்தாவில் கண்ட எந்த விஷயத்தைப் பொறுத்தும் பார்லிமெண்டு சட்டம் இயற்றலாம். 252-வது பிரிவுப்படி, இரண்டு அல்லது மேற்கொண்ட ராஜ்யங்களின் வேண்டுகோளின்பேரில் அந்த ராஜ்யங்களுக்குப் பொதுவான விஷயங்களில் பார்லிமெண்டு சட்டம் இயற்றலாம். இதைப்போன்ற ஷரத்து ஆஸ்டிரேலிய அரசியலிலும் இருக்கிறது.

அமெரிக்க (U. S. A) அரசியலில் சமஷ்டிக்குள்ள அதிகாரங்கள் மட்டில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன, பாக்கி அதிகாரங்கள் எல்லாம் ராஜ்யங்களுக்கே. கனடாவின் அரசியலில் மாகாணங்களுக்குள்ள (உறுப்புக்கள்) அதிகாரங்கள் மட்டில் விவரிக்கப்

பட்டு இருக்கின்றன, மிஞ்சிய எல்லா அதிகாரங்களும் மத்திய சர்க்காருக்குத்தான். மாகாணச் சட்டங்களை ரத்து செய்யவும் மத்திய பார்லிமெண்டுக்கு அதிகாரம் உண்டு.

இதர அரசியல்களில் அதிகார விபாகம்

ஆஸ்டிரேலிய அரசியலில் மூன்று விஷயங்கள் மட்டில் மத்திய சர்க்காருக்கு அளிக்கப் பட்டு இருக்கின்றன, பாக்கி அதிகாரங்கள் ராஜ்யங்களுக்கு (ஸ்டேட்டுகளுக்கு)த் தான். ஆனால் மத்திய சமஷ்டிக்கும் ராஜ்யங்களுக்கும் பொதுவான ஜாப்தா இருக்கிறது. அதை அனுசரித்து நமது அரசியலிலும் சம அதிகார ஜாப்தா இருக்கிறது. ஆனால் மத்திய யூனியன் சர்க்காருக்கு 97 இனங்களில் அதிகாரம், மூன்று ஜாப்தாக்களில் வியக்தமாகக் கூறப்படாத எவ்விஷயம் இருந்தாலும் அதைப் பொறுத்து யூனியன் சர்க்காருக்குத்தான் அதிகாரம், அதாவது கனடா அரசியலைப்போல் மிச்ச அதிகாரங்கள் எல்லாம் யூனியன் சர்க்காரின் ஆதிக்கத்திற்கு உள்பட்டவை. நமது அரசியலும் கனடாவைப் போல் சக்தி வாய்ந்த மத்திய சர்க்காரைக் கொண்டது.

II. அரசியல் லகுவானதா, பிகுவானதா

அரசியலின் குணம் திருத்தக்கூடிய வகையில் லகுவானதா அல்லது திருத்தமே செய்ய முடியாதபடி பிகுவானதா? அரசியல் அமைப்பில் திருத்தத்தையோ மாறுதலையோ சாதாரணச் சட்டம் போல சுலபமான முறையில் செய்யக்கூடிய அரசியலை "லகுவான அரசியல்" (Flexible Constitution) என்று சொல்லுகிறார்கள். அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பொறுத்தமட்டில் சாதாரணச் சட்டமியற்றுதல் முறையை அனுஷ்டிக்காமல் விசேஷ நடைமுறையை விதித்து, அரசியல் திருத்தம் கடினமாகச் செய்யப்பட்டிருக்கும் அரசியலை, "பிகுவான அரசியல்" (Rigid Constitution) என்று சொல்லுகிறார்கள். பிகுவான அரசியல்களில் விதிக்கப்படும் முறைகள் நான்கு வகைகளாக இருக்கின்றன—(1) விசேஷ நிபந்தனைகளின்பேரில் சட்டமியற்றும் ஸ்தாபனங்களாலேயே (பார்லிமெண்டால்) செய்யப்படுவது; (2) பொதுஜன வோட்டு மூலம் தீர்மானிக்கப்படுவது, (3) சமஷ்டியில் சேர்ந்திருக்கும் உறுப்புக்களில் (ராஜ்யங்கள் அல்லது ஸ்டேட்டுகள்) குறிப்பிட்ட விகிதமுள்ள உறுப்புக்களின் சம்மதம் பெற்றுச் செய்வது, (4) அரசியல் திருத்தங்களை கவனிக்க பிரதிநிதிகள் அடங்கிய விசேஷ மகாநாட்டைக் கூட்டி அதன்மூலம் தீர்மானிப்பது.

பிரிட்டிஷ் அரசியல்

பிரிட்டிஷ் அரசியல் லகுவான அரசியலுக்கு முக்கியமான உதாரணம். அவ்வப்போது ஏற்படும் நிலைமைக்கும் தேவைகளுக்கும் தக்கப்படி, தொடர்ந்து மாறுதல்கள் செய்யப்படுகின்றன. அப்படிச் செய்ய இரண்டு ஆதாரங்கள் தான் உள்ளன. அவை வழமை, சட்டம். பிரிட்டனில் பார்லிமெண்டரி ஆட்சி முறை ஏற்பட்டு பல நூற்றாண்டுகள் கடந்து விட்டன. அப்படி யிருந்தும் அங்கு ஏற்பட்ட அடிப்படையான அரசியல் மாறுதல்கள் ஒன்பதுதான். அவை:

(1) உரிமைகள் ஜாப்தா. (ஜீவாதார உரிமைகள்—Bill of Rights). (2) ஸெடில்மெண்டு ஆக்டு (3) காபினெட் ஏற்பாடு—மந்திரிகளின் கூட்டு நிர்வாகம் (4) ஏழு வருஷங்களுக்கு ஒரு தேர்தல், இப்பொழுது காலவரையறை ஐந்து வருஷங்களாகக் குறைக்கப்பட்டு உள்ளது. (5) 1832-ம் வருஷத்து Reform Act படி விரிவான முறையில் வோட்டுரிமை அளிக்கப்பட்டது. (6) ஸ்காட்லாந்து, அயர்லாந்து, காலனிகளுடன் ஒப்பந்தங்கள் (7) 1911-ம் வருஷத்து, பார்லிமெண்டு ஆக்ட், மேல் சபை (House of Lords)யின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. மக்கள் சபையின் (House of Commons) முடிவை மேல்சபை தடைசெய்யக்கூடிய கால அளவு ஒரு வருஷமாக சமீபத்தில் குறைக்கப்பட்டு உள்ளது. (8 & 9) 1918, 1928-ம் வருஷங்களில் பெண்களுக்கு வோட்டுரிமை அளிக்கப்பட்டது. சுலபமான முறையை விதித்தாலும், அதை துஷ்பிரயோகம் செய்து அடிக்கடி மாறுதல்களை பிரிட்டிஷார் தங்கள் அரசியலில் செய்யவில்லை, ஏனென்றால், அரசியல் ஒரு ஸ்திரமான ரூபத்தில் இருப்பது அவசியம். வரட்டுத் தத்வங்களைக் கொண்டு பிரிட்டிஷார் மாறுதல்களைச் செய்வது இல்லை. அனுபவத்தில் அவசியம் என்று ஏற்படும் மாறுதல்களைத்தான் ஏற்கிறார்கள்.

நியூஸீலந்து அரசியல்

நியூஸீலந்து அரசியலும் சாதாரணச் சட்டமூலம் திருத்தப்படக்கூடிய லகுவான அரசியல். ஆனால் அந்நாட்டின் குறுகிய கால சரித்திரத்தில் அதிகப்படியான மாறுதல்கள் செய்யப்பட்டு இருக்கின்றன. பல விஷயங்களில் நியூஸீலந்து நிலைமை உலகத்திலேயே தனித்ததாக இருக்கிறது. பொதுஜன வாழ்க்கைத் தரம் அங்கே நன்றாக உயர்ந்த நிலையில் இருக்கிறது. செல்வத்தில் அருவருக்கக்கூடிய மேடு பள்ளங்கள் அங்கு கிடையா. அநேகமாக ஒரே செல்வ நிலை, குறைந்த ஜனத்தொகை, நாடு பூராவும் அநேகமாக கால்நடைகளிலிருந்து கிடைக்கும் பால், வெண்ணெய் முதலிய பொருள்களிலிருந்து ஜீவனம், உலகத்திலேயே அதிக சராசரி ஆயுட்காலம் பெற்றுள்ளவர்கள் நியூஸீலந்து மக்கள்தான். இதாலியிலும் பின்லாந்திலும் அரசியல் திருத்தங்கள் எளிதில் சாதாரணச் சட்ட முறைப்படி ஏற்படலாம். பிரான்விலும் தென்னாப்பிரிக்காவிலும் பார்லிமெண்டு இருசபைகளும் கூடி பெருவாரி வோட்டு மூலம் அரசியல் திருத்தங்களைச் செய்ய வசதியுள்ளது.

பிருவான அரசியலுக்கு முக்கிய உதாரணங்கள், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலும், ஐரிஷ்சுதந்திர அரசியலும்தான். ஜெர்மனி அரசியல் (1919-ம் வருஷத்து வெய்மார் அரசியல்படி) அப்படித்தானிருந்தது. ஆனால் ஜெர்மனியில் ஏற்பட்ட அந்த அரசியல் இப்பொழுது அமுலில் இல்லை. அமெரிக்க (U. S. A.) அரசியல்படி ஒவ்வொரு ஸ்டேட்டுக்கும் சமஷ்டி மேல் சபையில் (ஸெனெட்) சமமானப் பிரதிநிதித்வம் இருக்கவேண்டும் என்று ஒரு ஷரத்து இருக்கிறது. பெரிய ஸ்டேட்டாக இருந்தாலும் சிறிய ஸ்டேட்டாக இருந்தாலும் மேல் சபைக்குத் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள் ஒரே எண்ணிக்கையாளர்தான். இப்பொழுது ஒவ்வொரு ஸ்டேட்டும் மேல் சபைக்கு இரண்டு பிரதிநிதிகளை அனுப்புகிறார்கள். இந்த ஷரத்தை எக்காலத்திலும் மாற்ற முடியாது. அரசியல் சட்டத்திலுள்ள இதர ஷரத்துக்களைத் திருத்த பிரேரணை வந்தால்—முதலில் பிரேரணைகளாக எடுபட விசேஷ நடைமுறை. காங்கிரஸ் சபைகள் (யூனியன் சட்ட சபைகள்) ஒவ்வொன்றிலும் மூன்றில் இரண்டு பங்கு நபர்கள் சம்மதிக்கவேண்டும்; அல்லது ஸ்டேட்டு லெஜிஸ்லேச்சர்களில் மூன்றில் இரண்டு பங்கு லெஜிஸ்லேச்சர்கள் திருத்தங்களைப் பற்றி மனு சமர்ப்பிப்பதின் பேரில், யூனியன் சட்ட சபைகள் (காங்கிரஸ் சபைகள்) விசேஷ மகாநாட்டைக் கூட்டலாம். அம்மகாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டால், பிரேரணைகளில் கண்ட திருத்தங்கள் ஸ்டேட் லெஜிஸ்லேச்சர்களுக்கு அனுப்பப்படும். அந்தந்த லெஜிஸ்லேச்சர் தங்களது நடைமுறை விதிகள்படி திருத்தத்தைக் கவனித்து, மொத்த ஸ்டேட்டுகளில் முக்கால் பங்கு ஸ்டேட்டுகள் திருத்தம் அல்லது திருத்தங்களை அங்கீகரித்தால், அதற்கேற்ப அரசியல் திருத்தப்படும்.

பிரு அரசியல்— அமேரிக்கா, (U. S. A.) அயர்லாந்து

அரசியலின் 50-வது பிரிவுப்படி திருத்தம் முதலில் இரு பார்லிமெண்டு சபைகளிலும் (டெயில்) நிறைவேற வேண்டும். அப்படி நிறைவேறிய பிறகு பொதுஜன வோட்டர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, பதிவில் உள்ள வோட்டர்களின் மொத்த எண்ணிக்கையில் பெருவாரியால் அங்கீகரிக்கப்படவேண்டும், அல்லது பதிவான வோட்டுக்களில் மூன்றில் இரண்டு பங்கு பெருவாரி இருக்கவேண்டும்.

அயர்லாந்து அரசியல்

மேலே குறிப்பிட்ட இருமுறைகளும் மிகவும் சிக்கலானவை. ஸ்விட்ஸர்லாந்திலும் ஆஸ்டிரேலியாவிலும் பொதுஜன வோட்டு மூலம் திருத்தம் செய்யப்படலாம். ஸ்விட்ஸர்லாந்தில் பொது ஜன வோட்டு எடுப்பது, அரசியல் சட்ட விஷயத்தில் மாத்திரம் அல்ல; இதர சட்டங்களைப் பொறுத்தும் பொதுஜன வோட்டு எடுக்கும்படியாகக் கோர வசதி ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. அது மட்டும் அல்ல, பொதுஜனங்களே மகஜர் மூலம் அரசியல் திருத்தத்தையோ சட்டத்தையோ இயற்றக் கேட்டுக்கொள்ள லாம்; தேர்ந்தெடுக்கப்பட்டப் பிரதிநிதி எவராவது சரியான முறை யில் நடந்துகொள்ளவில்லை, பார்லிமெண்டில் அவர் கூறின அபிப்பிராயம் தங்கள் அபிப்பிராயங்களை பிரதிபலிக்கவில்லை, என்ற காரணத்தால் அவரை விலக்குவதற்காக மறு தேர்தலை நடத்தக் கோரலாம். இம்முறைகள் பூர்ண ஜனநாயகத்துக்கு உகந்தவை. ஆனல், விஸ்தீர்ணத்திலும் ஜனத்தொகையிலும் சிறிய ஸ்விட்ஸர்லாந்து தேசத்தில் இதெல்லாம் சாத்தியமே ஒழிய மற்ற இடங்களில் அனுஷ்டிக்கக் கூடியவை அல்ல.

இந்திய அரசியல் திருத்த முறைகள்—சமரஸ ஏற்பாடுகள்

அரசியலின் அடிப்படையான ஷரத்துக்களும் ரூபமும் அடிக்கடி மாருமல் ஒருவிதமான ஸ்திரத் தன்மையைப் பெறுவது அவசியம்; அதோடுகூட மாறும் சந்தர்ப்பங்களுக்குத் தகுந்தபடி சில அம்சங்களைத் திருத்த வசதி வேண்டும். இவ்விரு கோட்பாடுகளுக்கும் அனுசரணையாக, இந்திய அரசியல் ஷரத்துக்களை திருத்துவதற்காக விதிக்கப் பட்டிருக்கும் முறைகள் ஏற்பட்டு இருக்கின்றன. அப்படி விதிக்கப்பட்டிருக்கும் முறைகள்படி அரசியல் ஷரத்துக்களை மூன்று ரகங்களாகப் பிரிக்கலாம்:

(1) லகுவான முறை

சாதாரணமாக மசோதா நிறைவேறுவதற்கு விதிக்கப்பட்டிருக்கும் முறைப்படி பார்லிமெண்டு சபைகளில் ஆஜராகி வோட்டு செய்யும் அங்கத்தினர்களின் பெருவாரி வோட்டுப்படி திருத்தப் படக்கூடிய ஷரத்துக்கள் அரசியலில் பல பிரிவுகளில் ஆங்காங்கு காணப்படுகின்றன. "பார்லிமெண்டு சட்டமூலம் விதிக்கும்" அல்லது "பிந்தி பார்லிமெண்டு சட்டமூலம் மாறுதல் செய்யும்வரை" என்ற வாசகத்தை இந்தியக் குடியரசு

அரசியலின் பல பிரிவுகளில் காணலாம். அவைகளில் முக்கியமான சில ஷரத்துக்கள் அடியிற்கண்ட விஷயங்களைப் பொறுத்தவை :—புது ராஜ்யங்களை (ஸ்டேட்டுகளை) அமைப்பது, அல்லது அரசியல் துவக்கத்தில் உள்ள ராஜ்யங்களை திருத்தி யமைப்பது, 169-வது பிரிவில் கண்டபடி ராஜ்யங்களில் மேல்சபையை ஏற்படுத்துவது அல்லது எடுப்பது ; முதல் ஷெட்யூலின் மூன்றுவது (c) பாகத்தில் கண்ட மத்திய யூனியன் சர்க்காரால் நிர்வகிக்கப்படும் ராஜ்யங்களில் சட்ட சபைகள், ஆட்சி நிர்வாகம் ; ஐந்தாவது, ஆறுவது ஷெட்யூல்களில் கண்ட பூர்வீகக் குடிகள் வசிக்கும் பிரதேசங்களின் ஆட்சி நிர்வாகம் ; 275-வது பிரிவில் ராஜ்யங்களுக்கு மான்யங்கள் விஷயமாகவும் பூர்வீகக் குடிகளின் முன்னேற்றத்திற்காக யூனியன் சர்க்கார் ராஜ்ய சர்க்கார்களுக்கு அளிக்கவேண்டிய மான்யங்கள் விஷயமாகவும் கண்ட ஷரத்துக்கள்.

(2) மத்திய முறை

பார்லிமெண்டு சபைகளின் மொத்த அங்கத்தினர்களில் பாதிக்கு மேல்பட்டும் ஆஜரிலிருந்து வோட்டுப்போடும் அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்களின் ஆதரவுடன் நிறைவேறும் திருத்தங்கள். இந்த முறை, மேலே முதல் ரகத்தில் கண்டவையும் கீழே மூன்றுவது ரகத்தில் கண்டவையும் நீங்கலான ஷரத்துக்களுக்குப் பொருந்தும்.

(3) கடினமான விசேஷ நடைமுறை

மேலே இரண்டாவது ரகத்தில் கண்டபடி பார்லிமெண்டு மொத்த அங்கத்தினர்களில் பெருவாரியும் ஆஜராகி வோட்டு செய்பவர்களில் 2/3 பங்கு பெருவாரியுமான ஆதரவு மட்டும் அல்லாமல், முதல் ஷெட்யூலின் A, B பாகங்களில் விவரிக்கப்பட்டு இருக்கும் ராஜ்யங்களில் பாதிக்குக் குறையாத ராஜ்யங்களின் சட்ட சபைகளால் அங்கீகரிக்கப்பட வேண்டிய திருத்தங்கள். இந்த விசேஷ நடைமுறை—இரட்டிப்பு அங்கீகாரம்—அடியிற்கண்ட விஷயங்களுக்கு விதிக்கப்பட்டு இருக்கிறது : 54, 55 பிரிவுகளில் ஜனாதிபதியின் தேர்தலைப்பற்றியும் தேர்தல் முறையைப் பற்றியுமான ஷரத்துக்கள், யூனியன் மத்திய சர்க்காரின் நிர்வாக அதிகாரத்தின் பரப்பு (73-வது பிரிவு), ராஜ்ய சர்க்கார்களின் நிர்வாக அதிகாரத்தின் பரப்பு (162-வது பிரிவு) முதல் ஷெட்யூலின் C பகுதி ராஜ்யங்

களில் ஹைகோர்ட்டுகளை ஏற்படுத்துவதும் அப்படிப்பட்ட ஹைகோர்ட்டுகளைப் பொறுத்த இதர ஷரத்துக்களும் (241 பிரிவு), சுப்ரீம் கோர்ட்டு, ஹைகோர்ட்டுகளைப் பற்றிய ஜாடா ஷரத்துக்களும், (V-வது பாகத்தின் IV-வது அத்தியாயமும், VI-வது பாகத்தின் V-வது அத்தியாயமும்), சட்டமியற்றுவது சம்பந்தமாக யூனியனுக்கும் ராஜ்யங்களுக்கும் இடையே உறவுகளை வரையறுக்கும் ஷரத்துக்கள் (XI-வது பாகத்தில் முதல் அத்தியாயம்), சட்டமியற்றுதல் விஷயங்களில் அதிகார விபாகம் செய்யும் 7-வது ஷெட்யூலில் மூன்று ஜாப்தாக்கள், பார்லிமெண்டு சபைகளில் ராஜ்யங்களுக்குள்ள பிரதிநிதித்வம், அரசியல் திருத்த முறையை விதிக்கும் 368-வது பிரிவு.

சமஷ்டி அரசியல் ராஜ்யங்களின் ஒப்பந்தத்தின்பேரில் ஏற்படுவதால், அரசியலின் அடிப்படையான ஷரத்துக்களைத் திருத்த ராஜ்யங்களின் லெஜிஸ்லேச்சர்களின் (சட்டமியற்றும் ஸ்தாபனங்களின்) சம்மதம் பெறுவது அவசியம். அரசாங்கத்தின் முக்கிய உறுப்புக்களான நிர்வாகம், சட்டமியற்றும் ஸ்தாபனம், நீதிமன்றங்கள் இவைகளின் அதிகாரங்களை வரையறுப்பது அரசியல் சட்டம். பிரஜா உரிமைகளை ஆக்கிரமிக்கும் விஷயத்திலும் நிர்வாகத்தினருடையவும் சட்டசபைகளுடையவும் அதிகாரங்களை அரசியல் சட்டம் வரையறுக்கிறது. அரசாங்கத்தின் உறுப்புக்களின் அதிகாரங்களை வரையறுப்பதும் அவசியமான காரியம். அப்படிச் செய்யாவிடில் சட்டசபைகள் கட்சி வெறியால் எச்சட்டத்தையும் இயற்றலாம், நிர்வாகத்தார் எந்த முடிவுக்கும் வரலாம். அதனால் பெருங் குழப்பம் உண்டாகும். இத்தகைய விபரீத விளைவுகளைத் தடுக்கும் நோக்கத்துடன் அடிப்படையான ஷரத்துக்களைத் திருத்த கடினமான முறை விதிக்கப்படுவதில் தவறு இல்லை, என்று டாக்டர் அம்பேத்கார் அரசியல்நிர்ணய சபை விவாதத்தில் பதில் அளித்தார்.

மேலும், அரசியல் திருத்தங்களுக்கு இருவகைப் பெருவாரி, அதாவது (1) பார்லிமெண்டு சபைகளில் மொத்த அங்கத்தினர்களில் பெருவாரி (2) ஆஜரிலிருந்து வோட்டுப் போடுகிறவர்களில் மூன்றிலிரண்டுபங்கு பெருவாரி, விதித்திருப்பது சரியல்ல வென்று சிலர் கண்டித்தார்கள். அரசியல் நிர்மாணசபை மாகாணச் சட்ட(கீழ்)சபைகளின் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களையும், பிந்தி சமஸ்தானங்களிருந்து தேர்தல் மூலமா

கவோ நியமன மூலமாகவோ வந்த அங்கத்தினர்களையும் கொண்டது என்று கண்டிருக்கிறோம். எனவே, வோட்டர்களால் நேரில் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களைக் கொண்ட சபையல்ல அது. புது அரசியல்படி வயது வந்தவர்கள் எல்லோருக்கும் வோட்டு உண்டு. மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் நிர்ணயசபை வெறும் பெருவாரிவோட்டு தீர்மானப்படி அரசியலை உருவாக்குகிறது. ஆனால், நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படப்போகும் பார்லிமெண்டு சபைகளுக்கு சாதாரண பெருவாரி வோட்டுப்படி திருத்த அதிகாரத்தை யளிக்காமல் இருவகைப் பெருவாரி விதி ஏற்படுத்தி இருப்பது நியாயமல்லவென்று சொல்லப்பட்டது. இந்த வாதத்தின் சாரத்தை ஒருவாறு ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். இதற்கு டாக்டர் அம்பேத்கார் சொன்ன சமாதானம் குறிப்பிடத் தக்கது. அவர் வருமாறு கூறினார்: "பிந்தி வரப்போகும் பார்லிமெண்டு சபைகள் கட்சி முறையில் சர்க்காரைக் கைப்பற்றும் நோக்கத்துடன் போட்டியிட்டு தேர்தலில் வெற்றிபெறும் அங்கத்தினர்களைக் கொண்டவை; ஆனால், அரசியல் நிர்ணயசபையோ ஒருவித கட்சிப்பற்றும் இல்லாதசபை, சிறந்த காரிய சாத்தியமான அரசியலை உருவாக்குவதே அதன் வேலை. கட்சிப்பற்றற்ற நிபுணர்கள் அடங்கிய கமிட்டியின் யோசனைகளைப் பெற்றது இச்சபை. ஆகவே, அரசியல் சட்ட விஷயத்தில் அரசியல் நிர்ணய சபையை மேலாகக் கருதுவதில் தவறு இல்லை. தவிர, வயது வந்தவர்களின் வோட்டுப்படி தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் அறிவில் சிறந்தவர்களாய் இருப்பார்கள் என்று சொல்வதற்கும் ஆதாரம் கிடையாது."

சட்டம் இயற்றும் ஸ்தாபனங்கள்

இந்திய யூனியனுக்கு ஜனாதிபதியும் இரு சபைகளும் அடங்கிய பார்லிமெண்டு இருக்க வேண்டும் என்று அரசியல் சட்டம் கூறுகிறது. ஒரு சபை "ராஜ்ய சபை" (Council of States) என்று அழைக்கப்படும்; சாதாரண பரிபாஷையில்இதை மேல் சபை என்று சொல்லுவார்கள். மற்றொரு சபை "ஜனப்பிரதிநிதி சபை" (House of the People) என்று அழைக்கப்படும்; சாதாரணமாக கீழ் சபை என்று குறிப்பிடப்படும்.

யூனியன் (மத்திய) சட்ட சபைகள்- பார்லிமெண்டு

ராஜ்ய சபை அல்லது மேல்சபை 250-க்கு மேல்படாத அங்கத்தினர்களைக் கொண்டதாக இருக்கும். அவர்களில் 12 பேர்களை இலக்கியம், விஞ்ஞானம், கலை, சமூக சேவை போன்ற துறைகளில் விசேஷ அறிவு அல்லது அனுபவம் பெற்றவர்களிலிருந்து ஜனாதிபதி நியமிக்க வேண்டும். பாக்கி அங்கத்தினர்கள் பல ராஜ்யங்களிலுள்ள (மாகாணம், சமஸ்தானம்) சட்ட சபைகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள். இரு சபைகளுள்ள ராஜ்யத்தில் அசெம்பிளி என்ற கீழ் சபையால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்; ஒரே சபையுள்ள ராஜ்யத்தில் அச் சபையால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். முதல் ஷெட்யூலின் C பகுதியில் கண்டிருக்கும் ராஜ்யங்களில் பார்லிமெண்டு சட்ட மூலம் விதிக்கும் முறைப்படி தெரிந்தெடுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் அதன் ஜனத்தொகைக்குத் தக்கபடி பிரதிநிதிகளின் எண்ணிக்கை 4-வது ஷெட்யூலில் காணப்பட்டிருக்கிறது. யூனியன், ராஜ்யங்கள் என்ற உறுப்புக்களைக் கொண்டது, என்று முதலில் கண்டிருக்கிறோம். அந்தந்த ராஜ்யங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபைப் பிரதிநிதிகளால் தேர்தல் மூலம் அந்தந்த உறுப்புக்களுக்குப் பிரதிநிதித்வம் அளித்திருப்பதால் ராஜ்யங்களின் கவுன்஁ஸில் (Council of States) அல்லது ராஜ்ய சபை என்று அழைக்கப்படுகிறது.

ஜனப்பிரதிநிதி (கீழ்) சபையில் 500 அங்கத்தினர்களுக்கு மேல் இருக்கலாகாது. பிரதிநிதிகள் ராஜ்யங்களிலுள்ள வோட்டர்களால் நேராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். 5 லக்ஷம் ஜனங்களுக்கு ஒரு பிரதிநிதிக்கு மேல்படாமலும் $7\frac{1}{2}$ லக்ஷம்ஜனங்களுக்கு ஒரு பிரதிநிதிக்குக் குறையாமலும் ஸ்தலத் தொகுதிகள் நிர்ணயிக்கப்பட வேண்டும். 21 வயது பூர்த்தியான ஒவ்வொரு நபருக்கும், ஆணாயிருந்தாலும் சரி, பெண்ணாயிருந்தாலும் சரி, வோட்டுரிமை உண்டு, ஆனால் குடியிருப்பு இல்லாமை, சித்தஸ்வாதீன மின்மை, குற்ற தண்டனை, அல்லது லஞ்ச நடத்தை என்ற காரணத்தால் வோட்டளிக்கத் தகுதியல்ல வென்று பார்லிமெண்டு சட்ட மூலம் கூறலாம். முதலில் நகல் அரசியல் திட்டத்தில் முஸ்லிம்கள், ஷெட்யூல்ட் ஜாதிகள் (ஹரிஜனங்கள்) ஷெட்யூல்ட் பூர்வீகக்குடிகள், மதராஸ் ராஜ்யத்திலும் பம்பாய் ராஜ்யத்திலும் இந்திய கிறிஸ்தவர்கள்—இவர்களுக்கு அந்தந்த சமூக ஜனத்தொகைக்கு ஏற்றபடி ஜனப்பிரதிநிதி சபையில் ஸ்தானங்கள் ஒதுக்கப்பட வேண்டும், என்று 292-வது பிரிவில் கண்டிருந்தது. நகல் திட்டம் ஆலோசனையில் இருந்த ஒரு வருஷ காலத்தில், சர்க்காரின் பாரபட்சமற்ற நடவடிக்கைகளைக் கண்டும் பெருவாரியான ஹிந்துக்களுடன் இருந்த உறவுகளாலும், சிறுபான்மை சமூகத்தினர்களே, தங்களுக்கு ஸ்தானங்களை ஒதுக்குவதால் பயனில்லை, என்று உணர்ந்து, சலுகைகளை நிராகரித்தார்கள். ஆனால், ஹரிஜனங்களின் பிரதிநிதிகள் மட்டில், தங்கள் சமூகம் கல்வி, பொருளாதாரத் துறைகளில் பின்னணியில் இருப்பதால், பத்து வருஷ காலத்திற்கு சலுகை வேண்டும் என்று தெரிவித்துக் கொண்டதின் பேரில், ஷெட்யூல்ட் ஜாதிகள் என்ற ஹரிஜனங்களுக்கும் பூர்வீகக் குடிகளுக்கும் பார்லிமெண்டு கீழ் சபையில் ஜனத்தொகைக்கு உரிய ஸ்தானங்கள், புது அரசியல் அமுலுக்கு வருவதி லிருந்து பத்து வருஷ காலத்திற்கு ஒதுக்கப்படவேண்டும் என்று கண்டிருக்கிறது. ஏற்கனவேயுள்ள மத, ஜாதி பாகுபாடுகள் உள்ள தொகுதிகள் ரத்து செய்யப்பட்டன. மத, ஜாதி வேற்றுமைகளை வளர்த்துவந்த தனித்தொகுதிகளும் தனிப் பிரதிநிதித்துவமும் ஒழிக்கப்பட்டன ; ஹரிஜனங்களுக்கும் பூர்வீகக் குடிகளுக்கும் தனிஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் கூட்டுத் தொகுதிகளிலிருந்துதான் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஆகவே ஸ்தலத் தொகுதிகளில் சிலவற்றில் பொதுப் பிரதிநிதி, ஹரிஜனப் பிரதிநிதி, ஆகிய இரண்டு பிரதிநிதிகள்

தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மேலும் ஆங்கிலோ—இந்தியர்களுக்கு கீழ்சபையில் போதிய பிரதிநிதித்வம் இல்லையென்று ஜனாதிபதி அபிப்பிராயப்பட்டால் அச்சமூகத்தவர்களில் இரண்டு பேர்களுக்கு மேல்படாமல் கீழ் சபைக்கு ஜனாதிபதி நியமனம் செய்யலாம். C பகுதியில் கண்ட எந்த ராஜ்யத்துக்கும் ராஜ்யங்கள் என்று அழைக்கப்படாத பிரதேசங்களுக்கும், ஜனப்பிரதிநிதி சபையில் பிரதிநிதித்வம், பார்லிமெண்டால் சட்ட மூலம் அளிக்கப்படலாம்.

சபைகளின் ஆயுட் காலம்

மேல் சபை கலைக்கப்படாத நிரந்தர சபை. ஆனால் இது விஷயமாக பார்லிமெண்டு இயற்றும் சட்டப்படி பிரதி இரண்டு வருஷ முடிவில் மூன்றில் ஒரு பங்கு அங்கத்தினர்கள் விலகி, அவர்களின் ஸ்தானங்களுக்குத் தேர்தல் நடத்தப்படும் அல்லது நியமனம் செய்யப்படும். ஜனப் பிரதிநிதிசபை (கீழ் சபை) சாதாரணமாக ஐந்து வருஷங்களுக்கு ஒருதரம் கலைக்கப்படும். ஆனால், அக்கெடுவுக்கு முந்தியே கலைக்கப்படலாம். நெருக்கடிப் பிரகடனம் அமுலில் உள்ள காலத்தில் ஜனாதிபதியால் ஒரு தடவைக்கு ஒரு வருஷத்திற்கு மேற்படாமல் சபையின் ஆயுள் நீடிக்கப்படலாம்.

அங்கத்தினர் யோக்யதாம்சங்கள்

பார்லிமெண்டு சபைகளில் ஒருவர் அங்கத்தினராக வர வேண்டுமானால், அவர் இந்தியப் பிரஜையாக இருக்கவேண்டும். தவிரவும் மேல் சபை விஷயத்தில் 30 வயதுக்குக் குறையாதவராகவும், கீழ் சபை விஷயத்தில் 25 வயதுக்குக் குறையாதவராகவும் இருக்கவேண்டும். பார்லிமெண்டு, சட்ட மூலம், இதர யோக்யதாம்சங்களையும் விதிக்கலாம்.

பார்லிமேண்டு கூட்டங்கள் ஒத்திவைப்பு, கலைத்தல்

வருஷத்திற்கு இரண்டு தடவைகளாவது பார்லிமெண்டு சபைகளைக் கூட்டவேண்டும். சபைகளைக்கூட அழைப்பதும், ஒத்திவைப்பதும் ஜனாதிபதியின் கடமைகள். கீழ் சபையை எக்காலத்திலும் ஜனாதிபதி கலைத்துவிடலாம். சபைகளுக்கு செய்தி அனுப்பவும், இரு சபைகளையும் சேர்த்துக் கூட்டவும், இரு சபைகளும் சேர்ந்த கூட்டத்தில் பிரசங்கம் செய்யவும் ஜனாதிபதிக்கு உரிமை யுண்டு. ஒவ்வொரு செஷனின் ஆரம்பத்தில், இரு சபை

களும் சேர்ந்த கூட்டத்தில் அழைப்பின் காரணங்களைத் தெரிவித்து ஜனாதிபதி விசேஷப் பிரசங்கம் செய்யவேண்டும். அப்படிப்பட்ட பிரசங்கத்தில் கண்ட விஷயங்களை சர்ச்சை செய்ய இதர அலுவல்களுக்கு முன் அவகாசம் அளிப்பதைப்பற்றி ஒவ்வொரு சபையின் நடைமுறை விதிகளில் ஷரத்து வேண்டும்.

மந்திரிகள், அட்டார்னி ஜெனரல் இவர்களின் உரிமை

ஒவ்வொரு மந்திரியும், அட்டார்னி ஜெனராலும் எச்சபையின் கூட்டத்திலும் சபைகளின் சேர்ந்த கூட்டத்திலும், கமிட்டியிலும் பேசவும் பங்கு எடுத்துக் கொள்ளவும் உரிமை யுண்டு. ஆனால் வோட்டுப் போட உரிமை இந்த ஷரத்தின் பயனாகமட்டில் ஏற்படாது.

நடை முறை

சபைகளில் எழும் பிரச்னைகள் பெருவாரியான வோட்டு மூலம் தீர்மானம் செய்யப்படும். நிதி (பண வரவு செலவு) மசோதாக்களில் ஜனப்பிரதிநிதி சபைக்கே மேலான அதிகாரம். நிதி மசோதா கீழ் சபையில் நிறைவேறிய பிறகு மேல் சபைக்கு அனுப்பப்படும். மேல் சபை சிபார்சு செய்யும் திருத்தம் அல்லது திருத்தங்களை கீழ் சபை ஒப்புக்கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம்.

ஜனாதிபதியின் சட்டமியற்றும் அதிகாரங்கள்

இரு சபைகளும் கூடி இராத காலத்தில் உடனடியாக நடிவடிக்கைகளை எடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டால், சந்தர்ப்பங்களுக்குத் தக்க ஆர்டினன்ஸுகளை (அவசரச் சட்டங்களை) பிறப்பிவிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஜனாதிபதியால் பிறப்பிவிக்கப்படும் ஆர்டினன்ஸுக்கு பார்லிமெண்டால் இயற்றப்பட்டு ஜனாதிபதியின் அங்கீகாரம் பெற்ற சட்டத்திற்குள்ள அதிகார அமுலுண்டு. பார்லிமெண்டுக்கு அதிகாரம் இல்லாத விஷயங்களில் அவசரச் சட்டங்களை பிறப்பிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை. பார்லிமெண்டு சபைகள் அடுத்தபடியாகக் கூடின தேதியிலிருந்து ஆறுவார காலாவதியில், அல்லது மேற்படி கால வரையறைக்கு முன் அவசரச் சட்டத்திற்கு அங்கீகாரம் இல்லை என்ற தீர்மானங்கள் பார்லிமெண்டு சபைகளில் நிறைவேறியிருந்தால், அப்படிப்பட்ட இரண்டாவது தீர்மானம் செய்யப்பட்ட தேதியில், அவசரச்சட்டம் செலாவணியற்றுப் போகும்.

ராஜ்ய (ஸ்டேட்) லெஜிஸ்லேச்சர்—

ராஜ்யங்களில் சட்டம் இயற்றும்ஸ்தாபனங்கள்

அரசியல் சட்டத்தின் முதல் ஷெட்யூலின் A. பகுதியில் கண்ட ராஜ்யம் (இதுவரை மாகாணம் என்று அழைக்கப்பட்டது) ஒவ்வொன்றிற்கும் கவர்னரும், சில ராஜ்யங்களில் இரு சபைகளும், இதர ராஜ்யங்களில் ஒரு சபையும் அடங்கிய லெஜிஸ்லேச்சர் (சட்ட மண்டலம்) இருக்கவேண்டும். இரு சபைகள் உள்ள ராஜ்யங்களில் மேல்சபை லெஜிஸ்லேடிவ் கவுன்ஸில் என்று அழைக்கப்படும். கீழ்சபை லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி என்று அழைக்கப்படும். ஒரே சபையுள்ள ராஜ்யங்களில் லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி என்று அழைக்கப்படும். மேல்சபை யிருக்கக்கூடிய ராஜ்யங்கள்—(1) சென்னை (2) பம்பாய் (3) வங்காளம் (4) ஐக்கிய மாகாணம் (5) பீஹார் (6) பஞ்சாப் (7) மைசூர்.

கீழ் சபை அமைப்பு

பார்லிமெண்டு கீழ் சபைக்குப் போலவே ராஜ்யங்களின் கீழ் சபைகள், அதாவது லெஜிஸ்லேடிவ் அசெம்பிளிகளுக்குப் பிரதிநிதிகள், வயது வந்தவர்கள் (21 வயது பூர்த்தியானவர்கள்) வோட்டுக்கள்படி நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். ஒவ்வொரு ஸ்தலத் தொகுதிக்கும் ஜனத்தொகைக்குத் தக்கபடி, 75,000 ஜனங்களுக்கு ஒரு பிரதிநிதிக்கு மேல்படாமல், பிரதிநிதிகளின் எண்ணிக்கை இருக்கும். பார்லிமெண்டு கீழ் சபை விஷயத்தில் கண்டபடியே, ஹரிஜனங்களுக்கும் பூர்வீகக் குடிகளுக்கும் கீழ் சபையில் ஜனத்தொகை விகிதப்படி, ஸ்தானங்கள், புது அரசியல் அமுலுக்கு வருந்தேதியிலிருந்து பத்து வருஷ காலத்திற்கு ஒதுக்கப்பட வேண்டும். ஹரிஜனப் பிரதிநிதிகளும் பொதுத் தொகுதிகள் மூலம்தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ராஜ்ய அசெம்பிளி அல்லது கீழ் சபையில் 60-க்குக் குறையாமலும் 500-க்கு மேல்படாமலும் மொத்த அங்கத்தினர்கள் இருப்பார்கள். ஆங்கிலோ-இந்தியர்களுக்குப் போதிய பிரதிநிதித்வம் இல்லை என்று கவர்னர் அபிப்பிராயப்பட்டால், அச்சமூகத்திலிருந்து இரண்டு பேர்களை அங்கத்தினர்களாக நியமிக்கலாம்.

சில ராஜ்யங்களில்தான் லெஜிஸ்லேடிவ் கவுன்ஸில் என்ற மேல்சபை இருக்கும் என்று கண்டிருக்கிறோம். மேல் சபையின்

அங்கத்தினர்களின் மொத்த பலம், அந்த ராஜ்யத்திலுள்ள கீழ் சபையின் மொத்த அங்கத்தினர்களில் நான்கில் ஒரு பங்குக்கு மேல் படாது. ஆனால் குறைந்த பட்சம் 40 அங்கத்தினர்களைக் கொண்டதாக அச்சபை இருக்கவேண்டும். சபையின் அமைப்பைப் பற்றி பார்லிமெண்டு சட்டம் இயற்றும்வரை, அடியிற்கண்ட விபரப்படி அங்கத்தினர்கள் தேர்தல் மூலமும் நியமன மூலமும் வருவார்கள்: (1) சுமார் மூன்றில் ஒரு பங்கு அங்கத்தினர்கள், முனிசிபாலிடிகள், ஜில்லா போர்டுகள், பார்லிமெண்டால் குறிப்பிடப்படும் இதர ஸ்தல அதிகாரிகள் இவைகளால் தேர்ந்தெடுக்கப் படுவார்கள்.

லெஜிஸ்லேடிவ் கவுன்லில் அல்லது மேல் சபையின் அமைப்பு

(2) சுமார் பன்னிரண்டில் ஒரு பங்கு அங்கத்தினர்கள் ராஜ்யத்தில் வசிப்பவர்களும் ஸர்வகலாசாலைகளில் குறைந்தபட்சம் மூன்று வருஷ முன் பட்டம் பெற்றவர்களும், அப்படிப்பட்ட பட்டத்துக்கு சமன் என்று பார்லிமெண்டால் சட்டமூலம் கூறப்பட்டுள்ள யோக்யதை பெற்றவர்களும் அடங்கிய வோட்டர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

(3) சுமார் பன்னிரண்டில் ஒரு பங்கு அங்கத்தினர்கள் நடுநிலைப் பள்ளி ஆசிரியருக்குக் கீழ்படாத பார்லிமெண்டால் விதிக்கப்படும் யோக்யதாம்சங்களைப் பெற்றவர்களும் குறைந்தபட்சம் மூன்று வருஷ அனுபவமுள்ள கல்வி போதனாசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

மேலே கண்டபடி தேர்ந்தெடுக்கப் படுபவர்கள் பார்லிமெண்டால் சட்டமூலம் நிர்ணயிக்கப்படும் ஸ்தலத் தொகுதிகளிலிருந்து ஒற்றை மாத்து வோட்டு மூலமான வீதாசாரப் பிரதிநிதித்வ முறைப்படி தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

(4) சுமார் மூன்றில் ஒரு பங்கு அங்கத்தினர்கள் சட்டசபை, கீழ்சபை அங்கத்தினர்களால் ஒற்றை மாத்து வோட்டு மூலமான வீதாசாரப் பிரதிநிதித்வ முறைப்படி தேர்ந்தெடுக்கப் படுவார்கள். இப்படி தேர்ந்தெடுக்கப் படுபவர் எவரும் கீழ்சபை அங்கத்தினராக இருக்கலாகாது.

(5) எஞ்சியுள்ளவர்கள் இலக்கியம், விஞ்ஞானம், கலை, கூட்டுறவு, சமூக சேவை போன்ற துறைகளில் விசேஷ அறிவு

அல்லது அனுபவம் பெற்றவர்களிலிருந்து கவர்னரால் நியமிக்கப் படவேண்டும்.

மேல் சபையின் அவசியத்தைப் பற்றியும் அமைப்பைப் பற்றியும் விரிவான அபிப்பிராய பேதங்கள் இருந்தன. ஆகவே, மேல் சபையை எடுக்கவோ புதிதாக ஏற்படுத்தவோ 169-வது ஷரத்துப் படி வசதி செய்யப்பட்டு இருக்கிறது.

மேல்சபையை எடுக்க அல்லது ஏற்படுத்த வசதி

மேல் சபையுள்ள எந்த ராஜ்யத்திலாவது மேல் சபையை எடுத்துவிடவேண்டும் என்று கீழ் சபையில் ஆஜரிலுள்ள அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெருவாரியாலும் மொத்த அங்கத்தினர்களில் பெருவாரியாலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அதை யனுசரித்து பார்லிமெண்டு சட்டமூலம் அந்த ராஜ்யத்தில் மேல் சபையை எடுத்து விடலாம். அவ்விதமாக, மேல்சபை யில்லாத ராஜ்யத்தில், மேல் சபை இருக்கவேண்டும் என்று மேற்கண்ட இரு பெருவாரி நிபந்தனைப்படி கீழ் சபையால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அதை யனுசரித்து அந்த ராஜ்யத்தில் மேல் சபையை ஏற்படுத்த பார்லிமெண்டு சட்டம் செய்யலாம்.

ராஜ்ய அசெம்பிளி அல்லது கீழ்சபையின் ஆயுட்காலம் அதன் முதல் கூட்டத்திலிருந்து ஐந்து வருஷங்கள்; ஆனால் முந்தியேகலைக் கப்படலாம்.

சட்டசபை ஆயுட்காலம்

நெருக்கடிப் பிரகடனம் அமுலிலுள்ள காலத்தில் ஒரு தடவைக்கு ஒரு வருஷத்திற்கு மேல்படாமல், பார்லிமெண்டால் இச்சபையின் ஆயுள் நீடிக்கப்படலாம்.

மேல் சபை கலேக்கப்படாத நிரந்தரசபை. ஆனால் பிரதி இரண்டு வருஷ முடிவில் மூன்றில் ஒரு பங்கு அங்கத்தினர்களின் ஸ்தானங்கள் காலியாகி, அவை மறு தேர்தல் அல்லது நியமன மூலம் பூர்த்தி செய்யப்படும். இப்படி அங்கத்தினர்கள் விலகும் விஷயமாய் சட்டசபைகள் சட்டம் இயற்ற வேண்டும்.

அரசியல் முறிவுப் பிரகடனம்

அரசியல் சட்டத்தில் விதிக்கப்பட்டிருக்கும் முறையில் எந்த ராஜ்யத்திலாவது சர்க்காரை நடத்த இயலாது என்று ஜனாதிபதிக்கு திருப்திகரமாகத் தோன்றினால், அரசியல் முறிவால் நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்று பிரகடனம் செய்து, சட்டசபைகளைத் தற்காலிகமாக மூடிவிட

லாம். பிரகடனம் அமுலிலுள்ள காலத்தில் பார்லிமெண்டு சபைகள் ராஜ்யத்திற்கு-சட்டமியற்றும் அலுவல்களை கவனிக்க வேண்டும். அப்படி பார்லிமெண்டுக்கு ஏற்படும் அதிகாரங்களை பார்லிமெண்டு ஜனாதிபதிக்கோ இதர அதிகாரிக்கோ அளிக்கலாம்.

தேச பாதுகாப்புக்கு அபாயம் வரும்சமயத்தில்

யுத்தம், உள்நாட்டுக் குழப்பம், வெளி ஆக்ரமிப்பு, இவ்வித அபாயங்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களிலும் நெருக்கடிப் பிரகடனம் செய்யப்படலாம். அத்தகைய நெருக்கடிப் பிரகடனம் அமுலிலுள்ள காலத்தில் ராஜ்ய ஜாப்தாவில் கண்ட விஷயங்களைப் பற்றியும் பார்லிமெண்டு சட்டங்களை இயற்றலாம். ஆனால், ராஜ்ய சட்ட சபைகளும் கூடலாம்; அவை மூடப்பட மாட்டா.

அங்கத்தினர் யோக்ய தாம்சங்கள்.

பார்லிமெண்டு சபைகளின் அங்கத்தினர்களின் யோக்ய தாம்சங்கள் போலவே, ராஜ்யச் சட்டசபைகளுக்கும் ஒருவர் அங்கத்தினராக வர இந்தியப் பிரஜையாகவும் கீழ் சபை விஷயத்தில் 25 வயதுக்குக் குறையாதவராகவும் மேல் சபை விஷயத்தில் 30 வயதுக்குக் குறையாத வராகவும் இருக்க வேண்டும். தவிரவும் ராஜ்ய லெஜிஸ்லேச்சர் இதர யோக்யதாம்சங்களையும் சட்ட மூலம் விதிக்கலாம்.

கவர்னரின் உரிமைகள் கடமைகள்

வருஷத்திற்கு இரு முறையாவது கூட சட்ட சபைகளை கவர்னர் அழைக்கவேண்டும். சட்ட சபைகளைக் கூட்டுவது, ஒத்திவைப்பது, கலைப்பது கவர்னரின் கடமைகள். சட்ட சபையில் பிரசங்கம் செய்யவும், இரு சபைகள் உள்ள ராஜ்யங்களில் சபைகளைச் சேர்த்துக் கூட்டி பிரசங்கம் செய்யவும், சபைகளுக்கு செய்தி யனுப்பவும், செய்தியில் கண்ட விஷயங்களை ஆலோசிக்கச் சொல்லவும் கவர்னருக்கு உரிமைகள் உண்டு. ஒவ்வொரு செஷன் ஆரம்பத்தில் சட்டசபை யல்லது இரு சபைகளின் சேர்ந்த கூட்டத்தில் செஷனில் ஆலோசிக்க வேண்டிய விஷயங்களைப் பற்றி கவர்னர் பிரசங்கம் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட பிரசங்கத்தில் கண்ட விஷயங்களை சபைகள் முன்னதாக கவனிக்க வேண்டும்.

அட்வொகேட் ஜெனரல் மந்திரி உரிமைகள்

சட்ட சபையல்லது சபைகளின் கூட்டங்களிலோ, கமிட்டியிலோ பேசவும் பங்கெடுத்துக் கொள்ளவும் ராஜ்ய அட்வொகேட் ஜெனரலுக்கும் ஒவ்வொரு மந்திரிக்கும் உரிமையுண்டு. ஆனால், வோட்டுப் போட உரிமை இந்த ஷரத்தால் மட்டும் கிடையாது. அச்சபை அங்கத்தினராக இருந்தால் வோட்டு செய்யலாம்.

அவசரச் சட்டங்களைப் பிறப்பிக்க கவர்னரின் அதிகாரம்

சட்டசபை யல்லது சபைகள் கூடியிராத காலத்தில் அவசரம் ஏற்பட்டால் ஜனாதிபதியைப் போலவே கவர்னரும் அவசரச் சட்டங்களைப் பிறப்பிக்கலாம். ராஜ்ய லெஜிஸ்லேச்சருக்கு சட்டமியற்ற உள்ள வரையறைகளும் கட்டுப்பாடுகளும் கவர்னர் ஆர்டினான்ஸுக்கும்பொருந்தும். சாதாரணச் சட்டத்திற்கு ஜனாதிபதியின் முன் அனுமதி அல்லது ஜனாதிபதியின் ஆலோசனைக்கு நிறுத்தி வைக்க வேண்டிய விஷயங்களில், அவசரச் சட்டத்திற்கும் ஜனாதிபதியின் முன் அனுமதி பெறவேண்டும். கவர்னர் ஆர்டினான்ஸுக்கும், சட்டசபைகள் கூடின தேதியிலிருந்து ஆறு வாரகாலம், அல்லது சட்டசபை அல்லது சபைகள் மேற்படி ஆறு வாரத்துக்கு முன் நிராகரிப்புத் தீர்மானங்களை நிறைவேற்றினால் அப்படிப்பட்ட இரண்டாவது தீர்மானம் நிறைவேறின தேதி வரைதான், செலாவணி. கவர்னரின் அவசரச் சட்டம் அவராளுகைக்கு உட்பட்ட ராஜ்யத்தில்தான் செல்லுபடியுள்ளது.

B பாக ராஜ்யங்களின் லெஜி லேச்சர் சட்ட ஸ்தாபனங்கள்

இந்திய சமஸ்தானங்கள் என்று அழைக்கப்பட்ட, முதல் ஷெட்யூலின் B. பகுதியில் விவரிக்கப்பட்டு இருக்கும் ராஜ்யங்களுக்கு, சட்டமியற்றும் ஸ்தாபனங்கள் (லெஜிஸ்லேச்சர்) A. பகுதி ராஜ்யங்களுக்கு அமைக்கப்பட்டவை போலதான். அதே ஷரத்துக்கள் பொருந்தும். ஆனால் நிர்வாகத்தின் தலைமை அதிகாரி கவர்னர் என்று அழைக்கப்படாமல் "ராஜப்பிரமுகர்" என்று அழைக்கப்படுவார். மைசூர் ராஜ்யத்துக்கு (சமஸ்தானம்) இரு சட்டசபைகள் உண்டு; பாக்கி ராஜ்யங்களுக்கு ஒரு சபைதான். கவர்னருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் எல்லாம் ராஜப் பிரமுகருக்கும் உண்டு.

சட்டசபைகளில் கீழ் சபைகளுக்குப் பிரதிநிதிகளை, வயது வந்தோர் எல்லோருக்கும் வோட்டுரிமை என்ற அடிப்படையில் நேரடியாகத் தேர்ந்தெடுப்பது உசிதமான முறை அல்ல என்று சொல்லப்படுகிறது. வெகு சிலர் நீங்கலாக வயதுவந்தவர்கள் எல்லோருக்கும் வோட்டுரிமை அளிக்கப்படுவதால் ஒவ்வொரு தொகுதியிலும் வோட்டர்களின் எண்ணிக்கை லக்ஷக் கணக்கில் இருக்கும். இவர்களில் பெரும்பாலோர் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். அபேட்சகர்களின் யோக்ய தாம்சங்களை அறிந்து வோட்டுரிமையை உபயோகப்படுத்தக்கூடிய நிலையில் இல்லாதவர்கள், ஆதலால் சரியான பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவது துர்லபம்; ஆள்மாறாட்டத்திற்கு இடம் இருக்கும் என்று சொல்லப்படும் ஆட்சேபணைகளை ஒருவாறு ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். ஆனால் இதற்கு பதிலாகக் கூறப்படும் மறைமுகத்தேர்தலுக்கு பலத்த ஆட்சேபணைகளும் உண்டு.

தேர்தல் முறை சரியா?

ஒவ்வொரு கிராமத்திலும் வயது வந்தோர்களின் வோட்டுக்களின் பேரில் கிராமப் பஞ்சாயத்துக்களை நிறுவி, அப்படிப்பட்ட பஞ்சாயத்துக்களால் ஜில்லாபோர்டு, ராஜ்ய சட்ட(கீழ்)சபை, பார்லிமெண்ட் ஜனப்பிரதிநிதி சபை இவைகளுக்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவது நல்லது, அதிகப்படியான தேர்தல் செலவுகளையும் குழப்பங்களையும் தவிர்க்கக் கூடியது என்று ஒரு சாரார் கூறுகிறார்கள். மகாத்மா காந்தியும் இந்த அபிப்பிராயத்தை ஆதரித்தார். தர்க்க ரீதியில் காரணங்கள் சரிதான். ஆனால், நடைமுறையில் சென்ற 25, 30 வருஷங்களாக, கிராமங்களில் நடந்த தேர்தல்களையும் கிராமப் பஞ்சாயத்துக்கள் வேலை செய்வதையும் கவனித்தால் நம்பிக்கை அளிக்கக்கூடிய வகையில் இல்லை. கிராமப் பஞ்சாயத்துக்களில் ஒத்துழைப்பே கிடையாது. பொதுக் காரியங்கள் கவனிக்கப்படுவதில்லை. பஞ்சாயத்தார்கள் கோர்ட் விவகாரங்களில் கக்ஷிக்காரர்களின் ஏஜெண்டுகளாகவும், ஜில்லா போர்டு தேர்தல் ஏஜெண்டுகளாகவும் காலத்தைக் கழிக்கிறார்கள்.

கிராமப் பஞ்சாயத்துக்கள் மூலம் மறைமுகமான தேர்தல் முறையை அனுஷ்டித்தால் பொதுஜன சேவையில் ஈடுபட்டவர்களும் அறிவாளிகளும் அனுபவசாலிகளும் சட்டசபைகளில் அங்கத்தினர்களாக கொஞ்சமாவது வருவதுகூட முடியாமல், ஜில்லா போர்டுத் தேர்தல்களில் வெற்றிபெறும் எலக்ஷன்-வாலாக்கள் (தேர்தலைத் தொழிலாக உள்ளவர்கள்)தான் வந்து

சேருவார்கள். ஜில்லா போர்டுகளில் பொறுப்பின்மையும் லஞ்ச நடவடிக்கைகளும் மலிந்து கிடக்கின்றன வென்பது பட்டவர்த்தமான உண்மை. ஆகையால் கிராமப் பஞ்சாயத்துக்கள் மூலம் மறைமுகத் தேர்தல் முறையை அனுஷ்டிக்கு முன் கிராமவாசிகளுக்குப் பொறுப்பு ஏற்பட்டு பஞ்சாயத்துக்களுக்கு நேர்மையான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கிராமங்களில் ஒத்துழைப்பும் பஞ்சாயத்துக்களில் நேர்மையும் அபிவிருத்தி அடைவதன் பேரில் மறைமுகத் தேர்தலை அனுஷ்டிப்பது பலன் அளிக்கக் கூடியது. கிராமப் பஞ்சாயத்துக்களுக்குப் பொறுப்பு ஏற்படுத்தும் பொருட்டு அரசியல் சட்டத்தின் நான்காவது பாகத்தில் ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது, "கிராமப் பஞ்சாயத்துக்களை நிறுவ அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். அப் பஞ்சாயத்துக்களுக்கு, சுய ஆட்சியின் உறுப்புக்களாக வேலை செய்வதற்கு வேண்டிய அதிகாரங்களை அளிக்க வேண்டும்" என்று இந்த ஷரத்து கூறுகிறது. ஷரத்தை யனுசரித்து கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு விரிவான அதிகாரங்களை அளிக்கவும் பொறுப்புக்களை ஏற்படுத்தவும் மசோதா ஒன்று சென்னைச் சட்டசபைகளில் சர்க்காரால் கொண்டுவரப்பட்டு நிறைவேறி யிருக்கிறது. ஐக்கிய மாகாணத்தில் அவ்விதச் சட்டம் நிறைவேற்றப்பட்டு சுமார் 35,000 பஞ்சாயத்துக்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. நிர்வாகத்தில் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறதா வென்பது காலக் கிரமத்தில்தான் தெரியவரும்.

வோட்டுரிமை

பிரிட்டன், அமெரிக்கா உள்பட மேற்கு நாடுகளில்கூட பெண்களுக்கும் புருஷர்களைப்போல சம வாக்குரிமை சமீபத்தில்தான் அளிக்கப்பட்டது. நமது அரசியலில் ஆரம்பத்திலேயே சம உரிமையை ஏற்படுத்தி யிருப்பது வரவேற்கத்தக்கது. சில ஐரோப்பிய நாடுகளில் இப்பொழுதும் பெண்களுக்கு வோட்டுரிமை இல்லை.

தொகுதி நிர்ணயம்

புது அரசியல்படி தொகுதிகள் நிர்ணயமாகவில்லை. அநேகமாக ஏற்கனவே இருப்பதுபோல் ஒவ்வொரு தொகுதியும் ஒரு அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்கும் முறையில் இருக்கும். ஹரிஜனங்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கி வைத்திருப்பதாலும், அப்படிப்பட்ட ஸ்தானங்கள் பொதுத் தொகுதிகளிலிருந்தே பூர்த்தி செய்யப்படவேண்டும் என்று கண்டிருப்பதாலும், சில தொகுதிகளில் பொதுப் பிரதிநிதியும் ஹரிஜனப்

பிரதிநிதியும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஹரிஜனங்கள் கணிசமாக இருக்கும் தொகுதிகளில் ஒரு பிரதிநிதிக்கு மேல்பட்ட பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட ஏற்பாடு செய்யப்படும். விரிவான வோட்டுரிமை ஏற்படுத்தி, லக்ஷக்கணக்கான வோட்டர்களைக் கொண்ட தொகுதிகளை உண்டாக்குவதில் குறைபாடுகளும் இருக்கின்றன. ஏற்கனவே சொன்னபடி வோட்டர்கள் தங்கள் பகுத்தறிவை உபயோகித்து அபேட்சகர்களில் தகுந்தவரைப் பொறுக்குவது கஷ்டமாகிறது. அபேட்சகர்கள் வோட்டர்கள் எல்லோரையும் நேரில் பார்க்க இயலாது. தேர்தல் செலவுகள் பெருகிவிடுவதால் சாதாரண மனிதர்கள் தங்கள் யோக்யதைகளை மட்டும் நம்பி அபேட்சகர்களாக நிற்க முடிவது இல்லை. ஆகவே, சாமர்த்தியத்துடனும் கட்டுப்பாடுடனும் அமைக்கப்பட்ட ராஜீயக் கட்சிகளால் ஏற்கப்படும் அபேட்சகர்களுக்குத்தான் வசதி உள்ளது. கட்சிப்பற்று இல்லாதவர்களுக்கு அநேகமாக இடமில்லை என்றே சொல்லாம்.

பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் நடந்த தேர்தல்களின் புள்ளி விவரங்களைப் பார்த்தால், சில தேர்தல்களில் மொத்த வோட்டுக்களில் குறைந்தபட்ச எண்ணிக்கை பெற்ற கட்சி ஜயித்திருக்கிறது. அந்தந்தத் தொகுதிகளில் பெருவாரி வோட்டுகள் கிடைத்து அதிகப்படியான ஸ்தானங்களைக் கைப்பற்றிவிடுகிறார்கள். தொகுதிக்குத் தொகுதி மொத்த வோட்டர்களின் எண்ணிக்கையில் வித்தியாசம் இருப்பதால், கடைசியில் தேச முழுதும் கணக்கு எடுத்துப் பார்த்ததில் பல தேர்தல்களில் குறைந்த வோட்டுகள் கிடைத்த கட்சி ஜயித்திருக்கிறது என்று தெரியவருகிறது.

இதற்குப் பரிகாரம் ஒற்றை மாற்று வோட்டு மூலம் வீதாசாரப் பிரதிநிதித்வம் என்று அரசியல் நிபுணர்கள் சொல்லுகிறார்கள். இந்த முறைக்கு பல அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் கூட்டுத் தொகுதிகள் வேண்டும். வோட்

வீதாசாரப் பிரதிநிதித்வம்

போடும் சீட்டில் அபேட்சகர்களின் பெயர்களுக்கு எதிராக வோட்டர் அபிப்பிராயப்படும் வரிசைக் கிரமத்தை 1, 2, 3 என்று அடையாளமிட்டுத் தெரிவிக்க வேண்டும். ஆகவே, வோட்டருக்கு படிக்கவும் எழுதவும் தெரிந்திருக்க வேண்டும். வயதுவந்து வோட்டுரிமை பெற்றிருப்பவர்களில் 10 சதவிகிதத்தினர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் என்று கல்வி மந்திரி மௌலானா ஆஜாத் கூறுகிறார். நம் நாட்டில் ஆரம்பக் கல்வி எல்லோருக்கும் பரவ

வதற்கு குறைந்தபட்சம் இருபது வருஷங்களாகும். ஆகவே, இந்த முறையை பொதுஜன வாக்காளர்கள் சம்பந்தப்பட்டவரை அனுஷ்டிப்பது சாத்யமல்ல. ஆனால் ராஜ்யங்களின் மேல் சபைகளுக்கு பிரதிநிதிகளைப் பொறுக்குவதில் நியமன ஸ்தானங்கள் நீங்கலான ஸ்தானங்களுக்கு இந்த முறையை விதித்திருக்கிறார்கள். இந்த முறையின் நன்மைகளையும் குறைகளையும் சற்றுக் கவனிப்போம்.

பெரிய கட்சிகளைச் சாராத சிறுபான்மையோர்களுக்கு இந்த முறையில் அனுகூலம் உண்டு. ஆனால், சிறுபான்மையோர்களுக்காக நியாயமற்ற அதிகப்படியான கோரிக்கைகளை ஆதரிக்கும் சமூக விரோதிகள், அரசாங்க விரோதிகள் சட்டசபைகளில் புகுந்துவிட இடம் அளிக்கிறது. பல அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கும் தொகுதிகள் வேண்டியதால் தொகுதிகளை இன்னும் விரிவாக நிர்ணயம் செய்யவேண்டும். அதனால் வோட்டர்களுக்கும் அபேட்சகர்களுக்கும் தொடர்பு மேலும் குறைந்து விடுகிறது. இம் முறையால் ராஜீயக் கட்சிகளின் ஆதிக்கத்தை ஒழிக்கலாம் என்று சொல்லப்பட்ட பலன் ஏற்படவில்லை. வீதாசாரப் பிரதிநிதித்வமுறை பல நாடுகளில் மேல்சபைத் தேர்தலுக்கு அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அப்படியும் வெற்றிபெறும் அபேட்சகர்கள் பெரும்பாலும் பெரிய ராஜீயக் கட்சிகளின் ஆதரவு பெற்றவர்களாகவே இருக்கிறார்கள். ராஜீய ஜனநாயகத்தில் கட்சிகளின் ஆதிக்கம் தவிர்க்க முடியாதது என்றே தோன்றுகிறது.

விதாசார முறைப்படி இரண்டு பெரிய கட்சிகளைத் தவிர இதர கட்சிகளும் பலவித அபிப்பிராயங்கள் உள்ளவர்களும் தேர்ந்தெடுக்கப்படக்கூடியதால், ஸ்திரமான மந்திரி சபைகள் அமைப்பதில் சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஒரு கட்சிக்காவது ஸ்திரமான பெருவாரி ஆதரவு இல்லாமல், கூட்டு சர்க்காரை அமைக்க வேண்டி இருக்கிறது. சொற்ப அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு கோஷ்டியின் ஆதரவு அவர்களுக்கு அளிக்கப்படும் பதவிகளைப் பொறுத்து இருக்கிறது. அதிகப்படியான உத்தியோகங்களைக் கொடுப்பதாகச் சொல்லி அதன் ஆதரவை எதிர்க்கட்சி அடைந்து மந்திரி சபை மாறுதல்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. ஆகவே ஸ்திரமான மந்திரி சபை தேர்தல் கால அளவுக்கு இருப்பதில்லை. ஆனால் இந்த நிலை—ஸ்திரமற்ற மந்திரி சபை, ஒரு தொகுதி ஒரு அங்கத்தினர் முறையில் தேர்தல் நடக்கும் தேசங்களிலும் இருந்து வருகிறது. ஐரோப்பாவிலும் தென் அமெரிக்

காவிலுமுள்ள ராஜ்யங்களில் அடிக்கடி மந்திரி சபைகள் மாறிக் கொண்டே இருக்கின்றன. பிரான்ஸில் ஒரு வருஷ ஆயுள் பெற்ற மந்திரி சபை இருப்பது துர்லபம். ஒரே கட்சி சட்டசபைகளில் பெருவாரியாக உள்ள நாடுகளிலும் பதவி மோகத்தால் மந்திரி சபை மாறுதல்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. நம் தேசத்தில் சென்ற மூன்று வருஷங்களுக்குள், சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் கட்சி ஆதிக்கத்திலிருந்தும் மூன்று பிரதம மந்திரிகள் மாறிமாறி பதவிக்கு வந்துவிட்டார்கள். கிழக்குப் பஞ்சாப், மேற்கு வங்க மாகாணங்களிலும் அதே கதைதான். பிரிட்டனிலும், இந்தியா, பாகிஸ்தான் நீங்கலான பிரிட்டிஷ் டொமினியன்களிலும், அமெரிக்க ஐக்ய நாடுகளிலும்தான் பெருவாரியான இரண்டு கட்சிகளிலிருந்து, மாறிமாறி, ஸ்திரமான சர்க்கார் அமைக்கப் பட்டு வருகிறது.

மேல் சபைகளுக்கு சிலாக்கியம்

தர்க்க ரீதியில் பார்த்தால் அரசியல் கொள்கைகள் அடிக்கடி புரட்சிகரமான வகையில் மாறாமல் இருப்பதற்கு வீதாசாரப் பிரதிநிதித்வம் அனுகூலமாக இருக்கும். ஆகவே பொதுமக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் சபையின் தீர்மானங்களை புனராலோசனை செய்யவும் திருத்தங்கள் கூறவும் உள்ள மேல்சபையை அமைப்பதில் வீதாசாரப் பிரதிநிதித்வ முறை அனுஷ்டிப்பது சிலாக்கியம். பல நாடுகளில் அம்முறைப்படி மேல்சபைத் தேர்தல் நடந்து வருகிறது.

இதர நாடுகளில் மேல் சபைகளின் அமைப்பு

உலகில் இருசபைகள் கொண்ட அரசியல்கள் பெருவாரியாக இருக்கின்றன. ஒரே சபையுள்ள அரசியல் விதிவிலக்கு. மேல்சபை அல்லது இரண்டாவது சபை இருப்பதில் சில நன்மைகள் இருக்கின்றன. அவசரப்பட்டு சரியான முறையில் ஆலோசிக்கப்படாத சட்டங்கள் நிறைவேறுவதை இம்முறை தடை செய்கிறது; புனராலோசனைக்கும் திருத்தங்களுக்கும் வசதி அளிக்கிறது. சமஷ்டி அரசியலில் இரண்டாவது சபை அவசியம். ஏனென்றால் பொதுமக்கள் அன்னியில் அந்தந்த உறுப்பு அல்லது ஸ்டேட்டுக்குப் பிரதிநிதித்வம் அவசியம். ஆகவே ராஜ்யத்திலுள்ள கீழ்சபை அங்கத்தினர்களால் சமஷ்டி (யூனியன்) மேல்சபைக்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படும்படியாக விதிக்கப்பட் டிருக்கிறது. சில தேசங்களில் இரண்டாவது சபை பூராவும் நியமன அங்கத்தினர்

களைக் கொண்டவை. கனடா, இதாலி இதற்கு உதாரணம். மெம்பர்களை நியமிப்பதை அதிகாரத்தில் உள்ள சர்க்காரே செய்வதால் மேல்சபையிலும் சர்க்கார் கட்சியைச் சேர்ந்தவர்களே பெரும்பாலாக இருக்கிறார்கள். வேறு சில தேசங்களில் நியமன அங்கத்தினர்களும் தேர்தல் அங்கத்தினர்களும் கலந்த சபையாக அமைக்கப்பட்டிருக்கிறது. ஜப்பான் தேசத்தில் யுத்தத்துக்கு முன்னிருந்த அரசியல்படி அப்படிப்பட்ட கலப்பு மேல்சபைக்கு (ஸெனேட்) கீழ்சபை நிறைவேற்றின சட்டங்களைத் திருத்த உண்மையான அதிகாரங்கள் அளிக்கப்பட்டு இருந்தன. அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், ஆஸ்டிரேலியாவிலும், ஸெனேட் என்று அழைக்கப்படும் மேல்சபையில் ஸ்டேட்டுகள் அல்லது உறுப்புகளுக்கு சமப் பிரதிநிதித்வம் — ஸ்டேட்டு பெரிதாயிருந்தாலும் சிறிதாயிருந்தாலும் ஸெனேட்டுக்கு அனுப்பும் பிரதிநிதிகளின் எண்ணிக்கை ஒன்றுதான். அங்கத்தினர்கள் அந்தந்த உறுப்புகளால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மொத்த அங்கத்தினர்களில் மூன்றில் ஒரு பகுதிக்கு பிரதி இரண்டு அல்லது மூன்று வருஷங்களில் மறு தேர்தல்: ஆனால் சபை கலைக்கப்படாத நிரந்தர சபை. நமது அரசியலிலும் மேல்சபை அமைப்பு மேற்கண்ட ஷரத்துகளை அனுசரித்து இருக்கிறது; ஆனால் உறுப்புக்களுக்கு சமப் பிரதிநிதித்வம் இல்லை.

அமெரிக்கா U. S. A. மேல் சபைக்கு மேலான அதிகாரம்

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஸெனேட் சபைக்கு மேலான அதிகாரங்கள் இருக்கின்றன; உலகத்தில் வேறெந்த நாட்டிலும் மேல்சபைக்கு அவ்வளவு அதிகாரம் கிடையாது. யுத்தப் பிரகடனம், சமாதானம் செய்வது, அயல்நாடுகளுடன் உடன்படிக்கைகள், அயல்நாடுகளில் ஸ்தானீகர்கள் நியமனம்—இவ் விஷயங்களில் எல்லாம் ஜனாதிபதியின் நடவடிக்கைகள் ஸெனேட் சபையின் அங்கீகாரத்துக்கு உட்பட்டவை. அச்சபையின் அயல்நாட்டு விவகார கமிட்டி, அதிகாரமும் செல்வாக்கும் உள்ள ஸ்தாபனம். முதல் உலக யுத்தத்துக்குப் பின் ஜனாதிபதி வில்ஸன் கையெழுத்திட்ட சமாதான உடன்படிக்கைகளையும் சர்வதேச லீக் ஒப்பந்தத்தையும் ஸெனேட் நிராகரித்து விட்டது.

ஐரிஷ் குடியரசு ஸெனேட் சபையின் அமைப்பு விசேஷ முறையில் இருக்கிறது. சபை அங்கத்தினர்களுக்கு விசேஷ

யோக்கிய தாம்சங்கள் விதிக்கப்பட்டு இருக்கின்றன. 35 வயது பூர்த்தியாகி, தேச சேவையில், யோக்யதைகளில் அல்லது படிப்புகளில், முன்னணியில் உள்ளவர்களாக அவர்கள் இருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்களின் ஜாப்தா முன்னதாகத் தயார் செய்யப்பட்டு, அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். மொத்த அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பங்கு டெயில் (கீழ்) சபையாலும், பாக்கி கலைக்கப்படப்போகும் ஸெனேட் சபையாலும் வீதாசாரப் பிரதிநிதித்வ முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனால் சபைக்கு சரியான அதிகாரம் கிடையாது. இந்திய அரசியலில், நிதி மசோதாக்களைத் தவிர இதர விஷயங்களில், இரு பார்லிமெண்டு சபைகளும் சேர்ந்து பெருவாரி வோட்டுப்படி முடிவு கட்டவேண்டியது. நிதி மசோதாவில் கீழ் சபையின் தீர்ப்பு முடிவானது. மேல்சபையின் சிபார்சுகளை ஏற்றுக்கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம். ராஜ்ய சட்ட சபைகள் விஷயத்தில் மசோதா எந்த விஷயத்தைப் பொறுத்து இருந்தாலும் கீழ்சபையின் முடிவு மேலானது.

ஐரிஷ் ஸெனேட்

சட்ட சபை உத்தியோகஸ்தர்கள்—பார்லிமெண்டு

தேர்தல் முடிந்து பார்லிமெண்டு சபைகள் கூடினதும், இருசபைகளும் சேர்ந்த கூட்டத்தில், இருசபை அங்கத்தினர்களாலும், ஒற்றை மாத்து வோட்டு மூலமான வீதாசாரப் பிரதிநிதித்வ முறைப்படி, இந்தியாவின் உப ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஜனாதிபதி ஸ்தானம் காலியாக இருந்தால், அல்லது ஜனாதிபதியால் அலுவல்களை கவனிக்க முடியாத காலத்தில், உபஜனாதிபதி, ஜனாதிபதிக்குப் பதிலாக வேலை பார்ப்பார். உபஜனாதிபதியைப் பற்றி "நிர்வாகம்" என்ற அடுத்த அத்தியாயத்தில் விரிவாகக் கண்டு இருக்கிறது. ஜனாதிபதியின் அலுவல்களை கவனிக்காத காலங்களில், உபஜனாதிபதி ராஜ்யசபை அதாவது பார்லிமெண்டு மேல்சபையின் "சபாநாயகர்" (Chairman) ஆவார். தவிர, இச்சபை அங்கத்தினரில் ஒருவரை உப சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கவேண்டும். சபை அங்கத்தினர் பதவியை இழந்தால் உப சபாநாயகர் பதவியையும் இழப்பார். வேண்டும்போது தம் பதவியை ராஜினாமா செய்யலாம். திறமை அல்லது நம்பிக்கை இல்லை என்ற காரணத்துக்

ராஜ்ய சபை

காக சபையிலுள்ள அங்கத்தினர்களின் பெருவாரி வோட்டால் விலக்கப்படலாம்.

சபாநாயகர் அல்லது உப சபாநாயகரைப் பதவியிலிருந்து நீக்குவது சம்பந்தமான தீர்மானம் சர்ச்சையில் இருக்கும்பொழுது, சம்பந்தப்பட்டவர் சபையின் தலைமையில் இருக்கலாகாது.

சபாநாயகர் (உப ஜனாதிபதி) ஜனாதிபதியின் ஸ்தானத்தில் அலுவல்களை கவனிக்கும்பொழுது அல்லது சபைக்கூட்டத்திற்கு வர இயலாத காலங்களில், உப சபாநாயகர் தலைமை வகிக்க வேண்டும். உப சபாநாயகரும் வராத காலத்தில் சபையின் நடைமுறை விதிகள்படி நிர்ணயிக்கப்படும் அங்கத்தினர் தலைமை வகிப்பார்.

ஜனப் பிரதிநிதி சபை

பொதுத் தேர்தல் முடிந்து ஜனப்பிரதிநிதி சபை கூடினதும் சபைக்குத் தலைவரையும் (Speaker) உப தலைவரையும் (Deputy Speaker) சபை அங்கத்தினர்களிலிருந்து தேர்ந்தெடுக்க வேண்டும். தலைவர் இல்லாத காலங்களில் உப தலைவர் சபையில் தலைமை வகிப்பார். அவரும் இல்லாவிட்டால் சபையின் நடைமுறை விதிகள்படி நிர்ணயிக்கப்படும் அங்கத்தினர் தலைமையில் இருப்பார். தலைவரோ, உப தலைவரோ தம் பதவியை ராஜிநாமா செய்யலாம். திறமை அல்லது நம்பிக்கை இல்லை என்ற காரணத்தால் பதவியிலிருந்து சபையால் பெருவாரி வோட்டு மூலம் விலக்கப்படலாம். இந்த உத்தியோகஸ்தர்களில் எவரைப் பொறுத்தும் விலக்கும் தீர்மானம் ஆலோசனையில் இருக்கும் பொழுது, சம்பந்தப்பட்டவர் சபையின் தலைமையில் உட்காரலாகாது. மேற்கண்ட உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளங்களும் படிகளும், பார்லிமெண்டால், சட்ட மூலம் நிர்ணயிக்கப்படுகிறபடி கொடுபடவேண்டும்.

ராஜ்யங்களிலுள்ள சட்ட சபைகள்

ராஜ்யச் சட்ட சபைகளில் மேல்சபைக்கு "சபாநாயகர்" என்றும் "உப சபாநாயகர்" என்றும், கீழ்சபைக்கு "தலைவர்" என்றும் 'உப தலைவர்" என்றும் அழைக்கப்படும் உத்தியோகஸ்தர்கள், சபைகள் தேர்தலுக்குப் பிறகு கூடினதும், அந்தந்த சபை அங்கத்தினரிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட வேண்டும். அவர்களுடைய பதவிகாலம், விலக்கல், சம்பளங்கள் எல்லாம்

பார்லிமெண்டு சபைகள் விஷயத்தில் கண்ட ஷரத்துக்களையே அனுசரித்தவை.

சட்ட சபைகளில் நடைமுறை

அரசியல் சட்டத்தைத் திருத்துவது சம்பந்தமான விஷயங்களைத் தவிர சபைகளில் எழும் பிரச்னைகள் பெருவாரி வோட்டு மூலம் முடிவு கட்டப்பட வேண்டியவை. சபை அல்லது கூட்டு சபையின் தலைமையில் இருப்பவர், முதல் எடுப்பில் வோட்டு செய்யவாகாது. ஆனால் வோட்டுகள் சமமாக இருந்தால் முடிவான வோட்டுப் போட உரிமை யுண்டு.

கோரம் (குறைந்த பட்ச எண்ணிக்கை)

சபை வேலை நடப்பதற்கு மொத்த அங்கத்தினர்களில் பத்தில் ஒரு பங்கு நபர்களாவது ஆஜரில் இருக்கவேண்டும். அதற்குக் குறைந்தால் தலைவர் அல்லது சபாநாயகர் கூட்டத்தை ஒத்திப் போடவேண்டும், அல்லது பத்தில் ஒரு பங்கு அங்கத்தினர்கள் சேரும் வரை வேலையை நிறுத்தி வைக்க வேண்டும். ராஜ்யச் சட்டசபைகள் விஷயத்தில் குறைந்தபட்ச எண்ணிக்கை, பத்து அல்லது மொத்தத்தில் புத்தில் ஒரு பங்கு, எது அதிகப்படியாக உள்ளதோ அத்தொகை என்று கண்டு இருக்கிறது.

அங்கத்தினர்களின் தகுதியின்மைகள்

அங்கத்தினர் ஒவ்வொருவரும் சபையில் முதலில் அமருமுன் "இந்திய அரசியலுக்கு விச்வாஸமாயிருப்பேன் என்றும், என் கடமைகளை உண்மையாகச் செலுத்துவேன்" என்றும் பிரமாணம் செய்யவேண்டும்.

ஒருவர் ஒரு சபையில் மட்டும்தான் அங்கத்தினராக இருக்க முடியும். இரண்டு மூன்று சபைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால், ஏதாவது ஒரு சபையிலுள்ள ஸ்தானத்தை வைத்துக்கொண்டு மற்றவைகளை ராஜிநாமா செய்யவேண்டும். அவராக ராஜிநாமா செய்யாவிட்டால் எந்த சபையில் ஸ்தானத்தை இழப்பார் என்று அந்தந்த சபை விதிகள் கூறும்; பார்லிமெண்டிலும் ராஜ்யச் சட்டசபையிலும் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், பார்லிமெண்டு அங்கத்தினர் பதவி காலியாகும்.

இந்திய சர்க்கார் அல்லது ராஜ்ய சர்க்காரின் கீழ் ஏதாவது ஊதியமான உத்தியோகத்தை வகிப்பவர் சட்டசபை அங்கத்தினராக வரத் தகுதியில்லை. ஆனால் ஜவாப்தாரியான மந்திரி பதவி இவ்விதிக்கு விலக்காகும். புத்தி ஸ்வாதீனம் இல்லை என்று தகுந்த கோர்ட்டால் கூறப்பட்டவர், விடுதலையடையாத இன்ஸால்வெண்டு, இந்தியப் பிரஜையாக இல்லாதவர், அயல்நாட்டுக்கு விச்வாஸமுள்ளவர் அல்லது அயல்நாட்டு பிரஜாஉரிமையுள்ளவர், பார்லிமெண்டு சட்டத்தால் தகுதியல்ல வென்று கூறப்பட்டவர், அங்கத்தினர் பதவிக்குத் தகுதியில்லை.

தகுதியின்மை

மேற்கண்டபடி பிரமாணம் செய்யாமலோ, மேலே கூறப்பட்ட எந்த காரணத்தாலாவது தகுதியல்லவென்று தெரிந்து சபைக்கூட்டங்களில் எவரும் உட்கார்ந்தாலோ கலந்து கொண்டாலோ, அப்படிப் பங்கு எடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு நாளுக்கும் ரூ 500 அபராதம் செலுத்தக் கடமைப் பட்டவராவார்.

அபராதம்

அரசியல் அமைப்புச் சட்டத்துக்கும், அந்தந்த சபைகளின் விதிகளுக்கும் நிரந்தர உத்தரவுகளுக்கும் உள்பட்டு, சபைகளில் பேச்சு சுதந்திரம் உண்டு. சபையில் பேசியதைப் பொறுத்தோ, வோட்டு போட்டதைப் பொறுத்தோ, சபையின் அதிகாரத்தின் பேரில் நடவடிக்கை பிரசுரம் செய்யப்படுவதற்கோ, எந்தக் கோர்ட்டிலும், அங்கத்தினர்கள் ஜவாப்தாரி அல்ல. இதர விஷயங்களில் பார்லிமெண்டோ, அந்தந்த ராஜ்ய சட்டஸ்தாபனங்களோ சட்டம் அல்லது விதிகள் ஏற்படுத்தும் வரை, பிரிட்டனில் மக்கள் சபை (கீழ்சபை) அங்கத்தினர்களுக்கு உள்ள சலுகைகள் உண்டு.

அங்கத்தினர் சலுகைகள்

அங்கத்தினர்கள், சட்டப்படி நிர்ணயிக்கப்படும் சம்பளங்களுக்கும் படிகளுக்கும் உரித்தானவர்கள்.

நிதி மசோதாக்கள் நீங்கலாக, எந்த மசோதாவும் பார்லிமெண்டு சபைகளில் எந்த சபையிலிருந்தும் உற்பத்தியாகலாம். இரு சபைகளாலும் திருத்தங்களுடனோ, திருத்தமில்லாமலோ, அங்கீகரிக்கப்பட வேண்டும். ஒரு சபையில் நிறைவேறி மற்றொரு சபையால் நிராகரிக்கப்பட்டாலும் திருத்

மசோதாக்கள் நடைமுறை (பார்லிமெண்டு)

தங்களைப்பற்றி இரு சபைகளும் ஒவ்வாமல் போனாலும், ஒரு சபை நிறைவேற்றி மற்றொரு சபையில் வரவான தேதியிலிருந்து ஆறுமாத காலத்தில் அச்சபை நிறைவேற்றாவிட்டாலும், ஜனாதிபதி இருசபைகளையும் சேர்த்துக்கூட்டி மசோதாவின் பேரில் ஆலோசனை செய்து முடிவுகட்ட ஏற்பாடு செய்ய வேண்டும்.

ராஜ்யங்களிலுள்ள சட்டசபைகள் விஷயத்தில் நிதி மசோதா அல்லாத மசோதாவிற்கு விதிக்கப்பட்டிருக்கும் நடைமுறை பார்லிமெண்டு சபைகளின் நடைமுறைக்கு மாறாக இருக்கிறது.

ராஜ்யங்களில் சட்டசபைகளில் மசோதா நடைமுறை

ராஜ்யங்களில் கீழ்சபையில் நிறைவேறின மசோதா, மேல் சபையால் நிராகரிக்கப்பட்டாலோ, மேல் சபையில் ஆஜர் செய்யபட்ட மூன்று மாதங்களுக்குள் நிறைவேற்றப்படா விட்டாலோ, கீழ்சபை ஒவ்வாத திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டாலோ, கீழ் சபை அம்மசோதாவை அதே செஷனில் அல்லது பிந்திய செஷனில், முன் ரூபத்திலேயே நிறைவேற்றலாம் அல்லது மேல்சபை கூறும் திருத்தம் அல்லது திருத்தங்களுடன் நிறைவேற்றலாம். அப்படி புனராலோசனைக்குப் பிறகு நிறைவேறின மசோதா மறுபடியும் மேல்சபைக்கு அனுப்பப்படும். திரும்பி வந்த மசோதாவை மேல்சபை நிராகரித்தாலும் அல்லது ஆஜர் செய்யப்பட்ட ஒரு மாதத்திற்குள் நிறைவேற்றாமல் இருந்தாலும் அல்லது திருத்தம் அல்லது திருத்தங்களுடன் நிறைவேற்றினாலும், கீழ் சபை நிறைவேற்றிய ரூபத்தில், இருசபைகளாலும் நிறைவேற்றப் பட்டதாகக் கருதப்படும். நகல் கமிட்டி தயாரித்த முதல் நகலில் பார்லிமெண்டு சபைகளுக்குக் கண்ட நடைமுறையே ராஜ்யச்சட்ட சபைகளுக்கும் பொருத்தப்பட்டு இருந்தது. அதாவது இருசபைகளும் சேர்ந்து பெருவாரி வோட்டுப்படி முடிவு கட்டவேண்டியது. ஆனால் கடைசியாக நிறைவேறிய ஷரத்துப்படி மேல்சபையின் அதிகாரம் குறைக்கப்பட்டிருக்கிறது. அவசரத்தில் சரியானபடி ஆலோசனை செய்யாமல் கீழ்சபையில் நிறைவேறும் மசோதாக்களை புனராலோசனை செய்யவும் திருத்தவும் மேல்சபை வசதி அளிக்கிறது என்று கண்டிருக்கிறோம். தவிர, மேல்சபையில் ராஜீயக் கட்சிகளைச் சேராத நிபுணர்கள் இருக்கக்கூடும். அதன் அதிகாரத்தைக் குறைத்திருப்பது சிலாக்கியமான மாறுதலாகக் கருத இடம் இல்லை. பிரிட்டிஷ் பார்லிமெண்டு மேல்சபையின்

ரத்து அதிகாரத்தைக் குறைந்து வருவதால், அதை உதாரண மாகக் கொண்டு நம்நாட்டிலும் மேல்சபையின் அதிகாரத்தைக் குறைத்திருப்பது புத்திசாலித்தனமாகத்தான் தவில்லை. ஏனென் றால் பிரிட்டனிலுள்ள லார்டுகள் சபைபோல் நமது மேல்சபை பட்டத்தையும் பிறப்பையும் பொறுத்த அங்கத்தினர்களைக் கொண்டதல்ல. பெரும்பான்மையோர் தேர்ந்தெடுக்கப்படுகிறார் கள். கல்வி, தொழில், சர்க்கார் நிர்வாகம் போன்ற துறைகளில் நிபுணர்களானவர்கள் சிலர் நியமிக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்ட சபைக்குக் கீழ்சபையிலிருந்து நிறைவேறி வந்த மசோதாவை ஆலோசிக்க விதிக்கப்பட்டிருக்கும் மூன்று மாத காலமும் சிக்க லான விஷயங்களில் போதுமானது அல்ல.

ஜனாதிபதியின் அங்கீகாரம்

பார்லிமெண்டு சபைகளில் நிறைவேறிய மசோதா ஜனாதி பதியின் அங்கீகாரத்துக்கு ஆஜர் செய்யப்படவேண்டும், அதன் பேரில் மசோதாவிற்கு அங்கீகாரம் அளிப்பதாக அல்லது மறுப் பதாக ஜனாதிபதி கூறலாம். ஆனால் நிதி மசோதா அல்லாத இதர மசோதாவை புனரா லோசனை செய்ய அல்லது குறிப்பிட்ட ஷரத் துக்களைப் புனராலோசனை செய்ய தன் செய்தியுடன் சபைகளுக்கு ஜனாதிபதி திருப்பி அனுப்பலாம். அப்படி திருப்பி யனுப்பும்பொழுது திருத்தங்களை சிபார்சு செய்ய லாம். ஜனாதிபதியின் சம்மதம் இல்லாமல், சட்டசபையில் நிறை வேறும் மசோதாவுக்கு சட்ட அமுல் வராது. ஜனாதிபதியின் அங்கீகாரம் மசோதாவிற்கு சட்ட முத்திரை கொடுக்கிறது. ஆகை யால்தான் ஜனாதிபதியும் "பார்லிமெண்டு" என்ற பதத்தில் அடங்கியவர் என்று முதலில் கண்டு இருக்கிறது. ஆனால் ஜனாதி பதி செய்தியுடன் திருப்பி யனுப்பிய மசோதாவை, ஜனாதிபதியால் சிபார்சு செய்யப்பட்ட திருத்தம் அல்லது திருத்தங்களுடனோ அல்லாமலோ, இரு சபைகளாலும் நிறைவேற்றப்பட்டு வரும் மசோதாவுக்கு, ஜனாதிபதி அங்கீகாரத்தை மறுக்கலாகாது.

பார்லிமெண்டு சபைகளில் நிறைவேறிய மசோதாவிற்கு ஜனாதிபதியின் அங்கீகாரம் வேண்டியது போல, ராஜ்யத்திலுள்ள சட்டசபைகளில் நிறைவேறிய மசோதாவிற்கு கவர்னரின் அங்கீ காரம் அவசியம். கவர்னருக்கும் அங்கீகாரம் அளிக்கவோ, மறுக் கவோ அதிகாரம் உண்டு. தவிரவும் மசோதாவை ஜனாதிபதி யின் ஆலோசனைக்கு நிறுத்திவைக்கலாம்; ஹைகோர்ட்டின்

அதிகாரங்களைக் குறைக்கும் விளைவுள்ளதாக இருந்தால், அதைச் சட்டாயம் ஜனாதிபதியின் ஆலோசனைக்கு நிறுத்திவைக்க வேண்டும். தனது செய்தியுடன் மசோதாவை சட்டசபைகளுக்கு திருப்பியனுப்ப கவர்னருக்கு அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜனாதிபதியின் ஆலோசனைக்கு நிறுத்தி வைக்கப்பட்ட மசோதாவை, ஜனாதிபதி அங்கீகரிக்கலாம் அல்லது மறுக்கலாம், அல்லது யுக்தமான திருத்தங்களை கவனிக்கவும், அல்லது மசோதாவை முழுதிலுமோ அல்லது குறிப்பிட்ட ஷரத்துக்களையோ சபைகள் புனராலோசனை செய்ய செய்தியுடன் கவர்னருக்குத் திரும்ப அனுப்பிவைக்கலாம். அதன் பேரில் சபைகள் புனராலோசனை செய்து, ஜனாதிபதியின் ஆலோசனைக்கு சமர்ப்பிக்கவேண்டும். ராஜ்யச்சட்டம் ஏற்பட கவர்னர் சம்மதமுத்திரை அவசியமானதால் கவர்னரும், ராஜ்ய "லெஜிஸ்லேச்சர்" என்கிற சட்ட மண்டலத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கிறார். கவர்னர் செய்தியில் சிபார்சு செய்யப்பட்ட திருத்தம் அல்லது திருத்தங்களுடனோ, அல்லாமலோ, சட்டசபைகளில் மறுபடி நிறைவேற்றி வரும் மசோதாவுக்கு, கவர்னர் அங்கீகாரத்தை மறுக்கலாகாது.

கவர்னரின் அங்கீகாரம்

நிதி மசோதாக்களைப் பற்றிய விசேஷ நடைமுறை

இதுவரை சட்டத்தில் நிதியைப் பொறுத்த ஷரத்துக்களில் வருமானங்கள் (Revenues) என்று வரவு இனங்கள் கூறப்பட்டன. அப்பதத்திற்கு பதிலாக (Consolidated Fund) ஐக்கிய நிதி என்கிற பதம் உபயோகப்பட்டு இருக்கிறது. "வருமானங்கள்" என்பதைவிட "ஒருமிக்கப்பட்ட அல்லது ஐக்ய நிதி" தெளிவாக இருப்பதாகக் கூறுகிறார்கள். அடியிற்கண்ட விஷயங்களைப் பொறுத்த மசோதா நிதிமசோதாவாகக் கருதப்படும்: வரி சம்பந்தமானது; கடன் வாங்குவதை ஒழுங்குபடுத்தல், சர்க்கார் உத்தரவாதம் அளிப்பது: சர்க்கார் ஏற்றுக்கொண்ட நிதிச் சுவர்தைகள் சம்பந்தமான சட்டத்தைத் திருத்துவது; சர்க்கார் நிதி, அல்லது ஏற்படக்கூடிய தேவைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் இருப்பு, அப்படிப்பட்ட நிதியில் பணம் போடுவது, எடுப்பது; ஐக்ய நிதியிலுள்ள பணத்தை இனவாரி பாகுபாடு செய்வது; நிதியின்பேரில் ஜவாப்தாரியான செலவுகள், அப்படிப்பட்ட செலவை அதிகரிப்பது; நிதிக்காக பண வரவு, இருப்பு, செலா

வணி, சர்க்கார் கணக்குகளின் பரிசோதனை (audit) ஷை இனங்களை ஒட்டிய விஷயங்கள். ஏதாவது நிதி மசோதாவா அல்லவா என்ற பிரச்னை எழுந்தால் கீழ் சபைத்தலைவரின் தீர்ப்பு முடிவானது.

வருஷாந்தர நிதி உரை

ஒவ்வொரு வரவு செலவு வருஷத்தைப் பொறுத்தும் இந்திய சர்க்காரின் வரவு செலவு திட்டங்களைக் காண்பிக்கும் நிதி உரையை பார்லிமெண்டு சபைகள் முன், ஜனாதிபதி ஆஜர் செய்விக்கவேண்டும். அவ்வுரையில் இந்தியாவின் "ஐக்யநிதியின்" பேரில் ஜவாப்தாரியான செலவுகளுக்கு வேண்டிய தொகைகளையும், இதர செலவு இனங்களையும் தனித்துக் காட்ட வேண்டும், தவிரவும் வருமானக் கணக்கைப் பொறுத்த செலவுக்கும் இதர செலவுக்கும் வித்தியாசத்தையும் காட்டவேண்டும். இந்தியாவின் ஐக்யநிதியின்பேரில் ஜவாப்தாரியான செலவுகளாவன—ஜனாதிபதியின் சம்பளங்கள், படிகள், அவர் பதவி சம்பந்தமான இதர செலவுகள்; ராஜ்யசபையின் சபாநாயகர், உபசபாநாயகர், ஜனப்பிரதிநிதி சபையின் தலைவர், உபதலைவர் இவர்களின் சம்பளங்களும் படிகளும்; இந்திய சர்க்காருக்குப் பொறுப்புள்ள கடன் சுவந்தைகள், கடன் எழுப்புவது, பட்வாடா செய்வது, தீர்ப்பது சம்பந்தமான செலவுகள்; சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகளின் சம்பளங்கள், படிகள், பென்ஷன்கள்; சமஷ்டி கோர்ட்டு நீதிபதிகளின் பென்ஷன்கள்; இவ்வரசியல் ஆரம்ப முன் முதல் ஷெட்யூலின் A. பகுதியில் கண்ட ராஜ்யங்களில் இருந்த ஹைகோர்ட்டு நீதிபதிகளுக்குக் கொடுக்கவேண்டிய பென்ஷன்கள்; இந்தியாவின் கம்ப்ட்ரோலரும் ஆடிடர்-ஜெனரலுமானவரின் சம்பளங்கள், படிகள், பென்ஷன்கள்; கோர்ட்டு அல்லது மத்தியஸ்த நீதிமன்றத்தின் டிக்ரி அல்லது தீர்ப்புப்படிக் கொடுக்க வேண்டிய தொகைகள். சமஸ்தானாதிபதிகளுக்கு சொந்தச் செலவுகளுக்காக இந்திய சர்க்கார் ஒப்பந்தங்கள்படி கொடுபடவேண்டிய தொகைகள் (இவைகள் அந்தந்த சமஸ்தான வருமானங்களிலிருந்து ஈடு செய்யப்படும்) மேற்கண்ட இனங்களைப் பொறுத்து சபையில் விவாதம் செய்ய வசதி உண்டு; ஆனால் வோட்டு எடுக்கப்படமாட்டாது.

இதர செலவுத் திட்டங்கள் மான்யக் கோரிக்கைகள் மூலம் ஜனப்பிரதிநிதி சபைமுன் சமர்ப்பிக்கப்படும். அவைகளை சபை

அனுமதிக்கலாம், அல்லது நிராகரிக்கலாம், அல்லது எந்த இனத்திலும் தொகையைக் குறைக்கலாம். ஜனாதிபதியின் சிபார்சின் பேரில் அல்லாது யாதொரு மான்யக் கோரிக்கையும் செய்யப்படல் ஆகாது. ஜனப்பிரதிநிதி சபையால் மான்யங்கள் அளிக்கப்பட்ட உடன், நிதி உரையில் கண்டபடி நிதியின்பேரில் ஜவாப்தாரியான செலவுகளுக்கும், ஜனப் பிரதிநிதி சபையில் நிறைவேறின மான்யங்கள்படி இதரச் செலவுகளுக்கும், இந்திய ஐக்ய நிதியிலிருந்து எடுத்துக்கொள்ள ஒரு மசோதா அச்சபையில் ஆஜர் செய்யப்படவேண்டும். ஏற்கனவே நிறைவேறிய மான்யங்களுக்கு மாறாக யாதொரு திருத்தமும் செய்யாமல் சபையால் நிறைவேற்றப்படும். இந்த ஷரத்துக்கள்படி அனுமதிக்கப் படாமல் ஐக்ய நிதியிலிருந்து எச்செலவும் செய்யல் ஆகாது. வருஷாந்தர நிதி உரையிலும் அதை யடுத்த மசோதாவிலும் காணப்பட்ட தொகை போதாது போனாலும், அத்தொகைக்குக் கூடுதலாக செலவு செய்யப்பட்டாலும் அவைகளைப் பொறுத்து அனுபந்த நிதி உரை சமர்ப்பிக்கப்பட்டு மேற்கண்ட முறைப்படியே அனுமதிக்கப்பட வேண்டும்: எதிர்பாராத செலவுகளுக்கும், திட்டங்கள், சபையில் நிறைவேறும் முன்பு ஏற்படக்கூடிய செலவுகளுக்கும், தனிப்பட்ட கோரிக்கைகளுக்கும் முன்கூட்டி மான்யங்களை அளிக்க சபைக்கு அதிகாரம் உண்டு. அவைகளைப் பொறுத்து பிந்தி கணக்கு சமர்ப்பித்து சட்டத்தில் விதிக்கப்பட்ட முறைகள் படி அனுமதி பெறவேண்டும்.

நிதி மசோதா யாதொன்றும் ஜனாதிபதியின் சிபார்சு அன்னியில் கொண்டுவரப்படல் ஆகாது, முதலெடுப்பில் மேல்சபையில் கொண்டு வருவதும் ஆகாது.

ராஜ்யங்களின் நிதி விஷயங்கள் சம்பந்தமாக நடைமுறை

ராஜ்யங்களின் சட்டசபைகளில் நிதி விஷயங்கள் சம்பந்தமான நடைமுறை பார்லிமெண்டு சபைகளுக்கு ஏற்படுத்தப்பட்ட ஷரத்துக்களையே அனுசரித்து இருக்கின்றன. ஜனாதிபதிக்கு பதிலாக அந்தந்த ராஜ்ய கவர்னர் அல்லது ராஜப்பிரமுகர் நிதி உரைகளை ஆஜர் செய்விக்க வேண்டும். மான்யக் கோரிக்கைகளும் நிதி மசோதாக்களும் கவர்னர் அல்லது ராஜப் பிரமுகரின் சிபார்சின்பேரில் கொண்டு வரப்படவேண்டும். நிதி மசோதாவை முதலெடுப்பில் மேல்சபையில் கொண்டுவரக்கூடாது. ராஜ்யத்

தின் ஐக்ய நிதியின்பேரில் ஜவாப்தாரியானவையும் சட்டசபை வோட்டுக்கு விடக்கூடாததுமான செலவுகள்: கவர்னரின் அல்லது ராஜப் பிரமுகரின் சம்பளங்கள், படிகள், அவர் பதவி சம்பந்தமான இதர செலவுகள்; மேல்சபை சபாநாயகர், உப சபாநாயகர், கீழ்சபையின் தலைவர், உபதலைவர், இவர்களின் சம்பளங்களும் படிகளும்; ராஜ்யத்துக்குப் பொறுப்பு உள்ள கடன் சுவந்தைகள்; கடன் எழுப்புவது, பட்டுவாடா செய்வது, தீர்ப்பது சம்பந்தமான செலவுகள்; ஹைகோர்ட்டு நீதிபதிகளின் சம்பளங்கள், படிகள், பென்ஷன்கள்; கோர்ட்டு அல்லது மத்தியஸ்த மன்றத்தின் தீர்ப்புப்படிக் கொடுபட வேண்டிய தொகைகள்; அரசியல் சட்டம் அல்லது ராஜ்யச் சட்டப்படி ஐக்ய நிதியின்பேரில் ஜவாப்தாரியானவை என்று கூறப்படும் இதர செலவு; B பகுதி ராஜ்யத்தில் சமஸ்தானாதிபதிகளின் சொந்த செலவுக்காக மத்திய சர்க்காருக்கு ஈடு செய்யவேண்டிய தொகைகள்.

பொதுவான நடைமுறை விதிகள்

அரசியல் அமைப்புச் சட்டத்தில் கண்ட ஷரத்துக்களுக்கு உள்பட்டு ஒவ்வொரு சட்டசபையும் தங்கள் சபையில் நடவடிக்கைகளின் முறையை ஒழுங்குபடுத்த விதிகளைச் செய்யலாம். இரு சபைகள் சேர்ந்து கூடும் விஷயத்தில், பார்லிமெண்டு சபைகளைப் பொறுத்து ஜனாதிபதியும், ராஜ்ய சட்டசபைகளைப் பொறுத்து கவர்னரும் அல்லது ராஜப் பிரமுகரும், இருசபைகளின் தலைவர்களைக் கலந்துகொண்டு விதிகளை ஏற்படுத்தலாம். இருசபைகள் சேர்ந்த கூட்டத்தில் கீழ்சபைத் தலைவர் அக்ராசனம் வகிக்கவேண்டும்: அவர் ஆஜர் இல்லாது போனால் நடைமுறை விதிகள்படி நிர்ணயிக்கப்படும் அங்கத்தினர் தலைமையில் அமருவார்.

சுப்ரீம் கோர்ட்டு, ஹைகோர்ட்டு நீதிபதிகளைப் பற்றி சர்ச்சைக்கு தடை

ராஜ்யத்திலுள்ள சட்டசபைகளில் எதிலும் சுப்ரீம் கோர்ட்டு அல்லது ஹைகோர்ட்டு நீதிபதிகளின் உத்தியோக சம்பந்தமான நடத்தையைப்பற்றி சர்ச்சை யல்லது விவாதம் கூடாது. பார்லிமெண்டு சபைகளில், அரசியல் அமைப்புச்சட்டத்தில் கண்டபடி, நீதிபதி எவரையாவது பதவியிலிருந்து விலக்கவேண்டி ஜனாதிபதிக்கு விண்ணப்பம் செய்யவேண்டும் என்ற தீர்மானத்தின்

பேரில் அல்லாது சுப்ரீம் கோர்ட்டு அல்லது ஹைகோர்ட்டு நீதிபதிகளின் உத்தியோக சம்பந்தமான நடத்தையைப்பற்றி விவாதம் அனுமதிக்கப்படாது.

பாஷை

பார்லிமெண்டு சபைகளில் ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் பேசவேண்டும்; ஆனால் சபாநாயகர் அல்லது தலைவரின் அனுமதியின் பேரில் அப்பாஷைகளில் பேச போதிய பழக்கம் இல்லாத அங்கத்தினர், தமது தாய் பாஷையில் பேசலாம். ராஜ்யங்களிலுள்ள சட்டசபைகளில் உபயோகப்படுத்த வேண்டிய பாஷைகள்—அந்தந்த ராஜ்யங்களில் வழங்கும் பாஷைகள், ஹிந்தி, அல்லது ஆங்கிலம்.

நிர்வாகம்

யூனியன் நிர்வாகம்

யூனியன் சர்க்கார் தலைமையில் இருப்பவர் ஜனாதிபதி என்று அழைக்கப்படுவார். அவரிடம் யூனியன் நிர்வாக அதிகாரம் ஆதீனப்பட்டது. சட்டத்துக்கும் அரசியலுக்கும் ஒத்த வகையில் அவரால் செலுத்தப்படவேண்டும். இந்திய தற்காப்புப் படைகளின் உன்னத தலைவரும் அவரே ஆவார்.

ஜனாதிபதி

பார்லிமெண்டு இரு சபைகளின் அங்கத்தினர்களும் ராஜ்யங்களிலுள்ள சட்ட (கீழ்) சபைகளின் அங்கத்தினர்களும் அடங்கிய தேர்தல் சஞ்சயத்தால், ஐந்து வருஷங்களுக்கு ஒரு தடவை ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படுவார். ஜனாதிபதியின் தேர்தலில் ராஜ்யங்களுக்கு ஒரேவிதப் பிரதிநிதித்வத்தை ஏற்படுத்த ஒவ்வொரு அங்கத்தினரும் போடக்கூடிய வோட்டுக்களின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்யவேண்டிய முறை சட்டத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. ராஜ்யத்தின் ஜனத்தொகையை சட்டசபை (கீழ்சபை) யில் உள்ள அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கையால் வகுப்பதில் கிடைக்கும் விழுது தொகையில் எத்தனை ஆயிரம் இருக்கின்றனவோ, அத்தனை வோட்டுக்கள் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் உண்டு. அதாவது,

$$\text{ராஜ்ய சட்டசபை அங்கத்தினருக்குள்ள வோட்டுக்கள்} = \frac{\text{ராஜ்ய ஜனத்தொகை}}{\text{கீழ் சபையினர்களின் மொத்தம்} \times 1000}$$

மிச்சம் 500-க்குக் குறையாமல் இருந்தால் ஒவ்வொருவருக்கும் மேல்கொண்டு ஒருவோட்டு உண்டு. பார்லிமெண்டு சபைகளின் அங்கத்தினர் போடக்கூடிய வோட்டு அடியிற்கண்டபடி நிர்ணயிக்கப்படும். மேற்கண்டபடி எல்லா ராஜ்யச் சட்டசபை அங்கத்தினர்களுக்கும் உள்ள மொத்தவோட்டுக்களை பார்லிமெண்டுசபை அங்கத்தினர்களின் மொத்தத்தால் வகுப்பதில் கிடைக்கும் எண்,

மிச்சம் பாதிக்குமேல்பட்டு இருந்தால் ஒரு வோட்டுகூட சேர்க்கப்படும், குறைந்திருந்தால் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாது. ஒற்றைமாத்து வோட்டு மூலமான வீதாசாரப் பிரதிநிதித்வ முறைப்படி தேர்தல் நடத்தப்படவேண்டும். வோட்டுப் போடுவது ரகசியமாக பெட்டியில் போடும் முறை. ஒவ்வொரு அங்கத்தினருக்கும் பல வோட்டுக்கள் இருப்பதால், ஒவ்வொரு வோட்டுக்கு ஒரு சீட்டு கொடுக்கப்படும் என்று அனுமானிக்கலாம். அப்படிப் போடப்பட்ட வோட்டுக்களை எண்ணும்போது, மிகவும் குறைவான வோட்டுக்களைப் பெற்ற அபேட்சகர், விலக்கப்பட்டு, அவருடைய வோட்டுக்கள் அவருக்கு அடுத்தபடியாகக் கண்ட அபேட்சகருக்கு மாற்றப்படும். இப்படி எண்ணிக்கொண்டு போவதில் யாருக்கு அதிகப்படியான வோட்டுக்கள் கிடைக்கின்றனவோ, அவர் தேர்தலில் வெற்றி அடைந்ததாகக் கருதப்படுவார்.

பதவி காலம் 5 வருஷங்கள்

அப்படித் தேர்ந்தெடுக்கப்படும் ஜனாதிபதி ஐந்து வருஷகாலத்திற்கு பதவி வகிப்பார், மத்தியில் அவர் ராஜினாமா செய்யலாம், அரசியலை மீறியதாகக் குற்றச் சாட்டு ஏற்பட்டு அரசியல் சட்ட ஷரத்துக்கள்படி ருஜுவானதாக பார்லிமெண்டு சபைகளால் தீர்மானம் நிறை வேற்றப்பட்டால் பதவியிலிருந்து விலக்கப்படுவார். ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் மறுபடியும் தேர்ந்தெடுக்கப்படத் தகுதியுள்ளவர்.

ஜனாதிபதி தேர்தலுக்கு நிற்பவர், 35 வயது பூர்த்தியான இந்தியப் பிரஜையாக இருக்கவேண்டும். ஜனப் பிரதிநிதி சபை அங்கத்தினராக வருவதற்கு வேண்டிய தகுதியும் வேண்டும்.

யோக்யதாம்சங்கள்

ஜனாதிபதி, உப ஜனாதிபதி, கவர்னர், ராஜப் பிரமுகர், அல்லது மந்திரி பதவி நீங்கலாக சர்க்காரின் கீழ் ஊதியம்பெறும் பதவியை வகிப்பவராக இருக்கலாகாது. பார்லிமெண்டு சபைகள் அல்லது ராஜ்யச் சட்டசபைகளின் அங்கத்தினர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், சபை அங்கத்தினர் பதவி காலியாகும். பதவியை ஏற்குமுன் அரசியலையும் சட்டத்தையும் கூடியவரை பாதுகாக்கவும் மக்கள் சேவைக்கு அர்ப்பணம் செய்து கொள்வதாகவும், இந்தியப் பிரதம நீதிபதிமுன் பிரமாணம் செய்யவேண்டும்.

அரசியல் மீறுதல் குற்றச்சாட்டு

பார்லிமெண்டு சபைகளில் எதாகிலும் ஜனாதிபதி பேரில் அரசியலை மீறியதாகக் குற்றச்சாட்டு செய்யப்படலாம். சபை அங்கத்தினர்களில் கால்வாசிப் பேருக்குக் குறையாமல் கையொப்ப மிட்ட அறிக்கைக்குப் பதிநான்கு நாட்களுக்குப் பிறகு, தீர்மானம் பிரேரிக்கப் பட்டு, சபையின் மொத்த அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பங்கு நபர்களால் ஆதரிக்கப்பட வேண்டும். தீர்மானம் நிறைவேறிய பிறகு விசாரணை மற்றொரு சபையால் அல்லது வேறுவிதமாக நடைபெறவேண்டும். விசாரணையில் ஜனாதிபதி நேரிலோ பிரதிநிதி மூலமோ ஆஜராக உரிமை யுண்டு. விசாரணையின் முடிவாக மொத்த அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பங்கு நபர்களால், குற்றச்சாட்டு ருஜுப்படுத்தப்பட்டது என்று தீர்மானிக்கப்பட்டால், தீர்மானம் நிறைவேறிய தேதியிலிருந்து ஜனாதிபதி பதவியிலிருந்து விலக வேண்டும்.

உபஜனாதிபதி

எந்தக் காரணத்தாலாவது ஜனாதிபதி பதவியில் காலி ஏற்படும் பொழுது, அல்லது தேக அசௌக்கியம் அல்லது வேறு காரணத்தால் அலுவல்களை ஜனாதிபதி கவனிக்க முடியாத காலங்களில், ஜனாதிபதியின் அலுவல்களை கவனிக்க உப ஜனாதிபதி ஒருவர் இருக்க வேண்டும். பார்லிமெண்டு இரு சபைகளும் சேர்ந்த கூட்டத்தில் வீதாசாரப் பிரதிநிதித்வ முறைப்படி அங்கத்தினர்களால் அவர் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். ஜனாதிபதியின் அலுவல்களை தாற்காலிகமாக கவனிக்காத காலங்களில் பார்லிமெண்டு மேல் சபைத் தலைவர் பதவியில் இருப்பார். ஜனாதிபதி ஸ்தானத்துக்குபோல் 35 வயது பூர்த்தியான இந்தியப் பிரஜைதான் உபஜனாதிபதி தேர்தலுக்கு நிற்க முடியும், தவிர பார்லிமெண்டு மேல்சபை அங்கத்தினராக வர லாயக்கும் உள்ளவராக இருக்கவேண்டும். எந்த சர்க்கார் பதவியிலும் இருப்பவர் தகுதியற்றவர், இதற்கு மந்திரி பதவி விலக்கு.

பதவிகாலம்

பதவி காலம் ஐந்து வருஷங்கள், மத்தியில் தானாக ராஜீனாமா செய்யலாம், பார்லிமெண்டு மேல் சபையில் மொத்த அங்கத்தினர்களில் பெருவாரியின் தீர்மானப்படி, கீழ் சபையும் அத் தீர்மானத்தை ஆதரித்தால், நீக்கப்படலாம்.

ஜனாதிபதி உபஜனாதிபதி தேர்தல் விவகாரங்கள்

ஜனாதிபதி உப ஜனாதிபதி தேர்தல் சம்பந்தமான விவகாரங்கள் சுப்ரீம் கோர்ட்டால் விசாரிக்கப்படவேண்டும்; சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு முடிவானது.

யூனியன் சர்க்காரின் அதிகாரப் பரப்பு

பார்லிமெண்டு சட்டங்கள் இயற்ற அதிகாரமுள்ள விஷயங்களுக்கும், உடன்படிக்கை அல்லது ஒப்பந்தப்படி இந்திய சர்க்காரால் அதிகாரங்கள் செலுத்தக்கூடிய விஷயங்களுக்கும், யூனியன் சர்க்காரின் நிர்வாக அதிகாரம் பரவும். பத்து வருஷ காலத்திற்கோ மேல் பட்டோ சமஸ்தானங்கள் என்ற B பகுதியில் கண்ட ராஜ்யங்களின் மேன் பார்வை யூனியன் சர்க்காருக்குள்ள பொறுப்பு. நெருக்கடிப் பிரகடனம் அமுலிலுள்ள காலங்களில், நாடு பூராவும் யூனியன் அதிகாரம் வியாபிக்கும். ராஜ்யங்களுக்கு அதிகாரமுள்ள விஷயங்களிலும் ராஜ்ய சர்க்காருக்குத் தாக்கீதுகளைப் பிறப்பிவிக்கலாம்; நிதி நெருக்கடியில் நிதி சம்பந்தமாகவும் தாக்கீதுகள் அனுப்பலாம்.

மந்திரி சபை

ஜனாதிபதிக்கு உதவியாக மந்திரி சபை இருக்கவேண்டும், பிரதம மந்திரி ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார், இதர மந்திரிகள் பிரதம மந்திரியின் யோசனைப்படி ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார்கள். ஜனாதிபதியின் யுக்தானுசாரப்படி மந்திரிகள் பதவியில் இருப்பார்கள். மந்திரி சபை கூட்டாக ஜனப் பிரதிநிதி சபைக்கு ஜவாப்தாரியானது. பதவி ஏற்குமுன் பதவி சம்பந்தமான ரகசியப் பிரமாணங்களை ஜனாதிபதி முன் மந்திரி எடுத்துக் கொள்ளவேண்டும். மந்திரி பார்லிமெண்டு சபையில் ஏதிலாவது அங்கத்தினராக இருக்கவேண்டும்; சபை அங்கத்தினராக இல்லாத நபர் நியமிக்கப்பட்டால் ஆறுமாத காலத்திற்குள் எந்த சபைக்காவது தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் அல்லது நியமிக்கப்படவேண்டும். பார்லிமெண்டால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் மந்திரிகளுக்குக் கொடுபடவேண்டும்

ஜனநாயக அரசியல்களில் நிலவும் நிர்வாகம் இரு விதமாக இருக்கிறது, (1) பார்லிமெண்டு சபைகளுக்கு ஜவாப்தாரியான நிர்வாகம் (மந்திரி சபை). (2) பார்லிமெண்டுக்கு ஜவாப்தாரியாக

நிர்வாக அதிகாரிகளின் தன்மை

இல்லாத, குறிப்பிட்ட காலத்திற்கு நீக்க முடியாத நிர்வாகம் முதல் வகை நிர்வாகத்தில், அதாவது ஜவாப்தாரி நிர்வாகத்தில் பார்லிமெண்டு கீழ்சபையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறினால் மந்திரி சபை ராஜிநாமா செய்யவேண்டும். பிரிட்டன், பிரிட்டிஷ் டொமினியன்கள், இந்தியா, பிரான்ஸ், இன்னும் பல நாடுகளில் பார்லிமெண்டுக்கு ஜவாப்தாரியான நிர்வாகம் சட்டப்படி உள்ளது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் (U. S. A.) மந்திரிகள் சர்க்கார் காரியதரிசிகள் என்று அழைக்கப்படுகிறார்கள், ஜனாதிபதியால் நியமிக்கப்படுகிறார்கள். காங்கிரஸுக்கு அதாவது பார்லிமெண்டு கீழ் சபைக்கு ஜவாப்தாரியல்ல, சபையில் பங்கு எடுத்துக் கொள்வது இல்லை. அவர்களுடைய அபிப்பிராயங்கள் காங்கிரஸ், ஸெனேட் சபைகளுக்கு ஜனாதிபதி அனுப்பும் செய்திகள் மூலம் தெரிவிக்கப்படுகின்றன. இவ்விதம் குறிப்பிட்ட கால அளவுக்கு ஸ்திரமான நிர்வாகத்தினர்களின் திறமையோ நடத்தையோ, ஜனாதிபதி பதவிக்கு தேர்தல் நடக்கும்போது நான்கு வருஷங்களுக்கு ஒருதடவை பரிசீலனைக்கு வருகிறது. ஜனாதிபதியை நீக்க முடியாது. அரசியலை மீறியதாக குற்றச் சாட்டு அங்கீகரிக்கப் பட்டால்தான் நீக்க முடியும். பார்லிமெண்டுக்கு ஜவாப்தாரியான நிர்வாகம் தினசரி பரிசோதனைக்கு உள்பட்டது. ஆகவே பார்லிமெண்டுக்கு ஜவாப்தாரியான நிர்வாகம் ஜனாதிபதி நிர்வாகத்தைவிட மேலானது என்று சொல்லப்படுகிறது.

ஸ்விட்ஸர் லாந்தில் வழங்கும் ஸ்திர மந்திரி சபை

இவ்விரண்டு முறைகளும் கலந்தது, ஸ்விட்ஸர்லாந்து தேசத்தில் வழங்கும் நிர்வாகம். தேர்தல் முடிந்ததும் சமஷ்டி சபைகளின் அங்கத்தினர்களால் மந்திரிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அப்படித் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் ராஜீயக் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை; சமஷ்டி சபை அங்கத்தினர்களாகவும் இருக்க வேண்டியது இல்லை. சர்க்கார் ஊழியங்களில் (ஸர்விஸ்களில்) இருந்தவர்கள் கூட தேர்ந்தெடுக்கப்படலாம். அவர்களின் பதவிக் காலம் மூன்று வருஷங்கள். ஆனால் அதே மந்திரிகள் திரும்பவும் தேர்ந்தெடுக்கப்படலாம், தேர்ந்தெடுக்கவும் படுகிறார்கள். சபைகளில் கட்சி பலம் எப்படி இருந்தாலும் மந்திரிகளை லஞ்ச நடத்தை காரணமாக

அல்லாது நீக்க முடியாது. அவ்விதமே சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகளும் ஆறு வருஷங்களுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்த முறைப்படி ஆட்சி நிர்வாகத்தில் அனுபவம் வாய்ந்த ஸ்திரமான மந்திரி சபை ஏற்படுகிறது. மந்திரிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும், கட்சிப் பற்று விலகி, சமஷ்டி சபைகளின் முடிவுகளை நிறைவேற்றி வைக்கக் கடமைப்பட்டவர்களாகி விடுகிறார்கள். சபை அங்கத்தினர் மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் உடனே அங்கத்தினர் பதவியை ராஜிநாமா செய்யவேண்டும். சபை நடவடிக்கைகளில் மந்திரிகள் கலந்துகொள்ளலாம், ஆனால் வோட்டுப் போட உரிமை இல்லை.

ஜனநாயகத்தின் விந்தை - நிர்வாக அதிகாரம் ஓங்குகிறது

ஜனநாயக வளர்ச்சியின் விந்தை, சட்டங்கள் அதிகமாக அதிகமாக நிர்வாக உத்தியோகஸ்தர்களின் அதிகாரமும் விரிவு அடைகிறது. சட்டசபைகளில் நிறைவேறும் சட்டங்களில் முக்கியமான ஷரத்துக்கள் மட்டில் காணப்படுகின்றன. நிர்வாக இலாக்காக்களுக்கு விதிகளைச் செய்யும் அதிகாரம் அளிக்கப்படுகிறது. ஆனால் சபைகளின் நிரந்தர விதிப்படி நிர்வாகத்தாரால் தயாரிக்கப்படும் விதிகள் சபைகள் முன் சமர்ப்பிக்கப்படவேண்டும். நிர்வாகத்தாரால் தயாரிக்கப்பட்ட விதிகளை பரிசீலனை செய்ய போதிய நுணுக்க அறிவு, சபை அங்கத்தினர்களுக்கு இராது. சர்க்கார் இலாக்காக்களின் அதிகாரங்களில் முக்கியமானவை : அயல்நாட்டு விவகாரங்கள் சம்பந்தமான பேச்சுவார்த்தைகள், ஆட்சி நிர்வாகம், சட்டங்களை அமுல் செய்வது, ராணுவ அதிகாரம், நீதி விஷயங்களில் தண்டனை, மன்னிப்பு, நிறுத்தி வைப்பது முதலிய அதிகாரங்கள், சட்டம் இயற்றுதலில் மசோதாக்களைத் தயாரிப்பது, சட்டம் இயற்ற பிரேரணைகள் சமூக, ராஜீய, பொருளாதாரத் துறைகளில் நீதி நிலவ வேண்டுமானால் சர்க்கார் மேலும் மேலும் மனித வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் தலையிட வேண்டி வருகிறது. அதற்குத் திறமையும் கண்யமும் வாய்ந்த நிர்வாகம் அவசியம். பார்லிமெண்டரி முறைப்படி கட்சிகளின் பலத்தைக் கொண்டு ஏற்படும் மந்திரி சபை அடிக்கடி மாறக்கூடியது, ராஜீய வாதிகளைக் கொண்டது, நிர்வாகத்தில் அனுபவம் இல்லாதவர்களைக் கொண்டதால், சர்க்கார் சேவைகளில் உள்ள உத்தியோகஸ்தர்களின் குறிப்புக்கள்படியே நடக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. சர்க்கார் வேலைகள் நாளுக்கு நாள் விரிவடைந்து

கொண்டு இருக்கின்றன, சிக்கலாகவும் இருக்கின்றன. அவைகளை சமாளிக்க ஸ்விட்ஸர்லாந்து தேசத்தில் வழங்குவதுபோல் உள்ள நிர்வாக அனுபவமுள்ள ஸ்திரமான மந்திரி சபையை அமைப்பது சிலாக்கியம் என்று தோன்றுகிறது. தேர்தல் மூலம் பதவிக்கு எடுக்கப்படுவதால் ஜவாப்தாரித்துவமும் கலந்ததாக உள்ளது. பிரிட்டிஷ் அரசியலில் வழங்கும் மந்திரி சபை அமைப்பு நமது அரசியலிலும் ஏற்கப்பட்டு இருக்கிறது. இது பலன் அளிக்கக் கூடியதா என்பது அனுபவத்தில்தான் தெரியவரும். பலன் அளிக்காவிடில் ஸ்விஸ் முறையை அனுஷ்டிப்பதைப் பற்றி கவனிப்பது அவசியமாகும்.

தண்டனைகள் விஷயத்தில் ஜனாதிபதிக்கு அதிகாரங்கள்

தண்டனைகளை மன்னிக்கவும், தூக்கு தண்டனை அல்லது இதர தண்டனைகளை நிறுத்தி வைக்கவும், குறைக்கவும், மாற்றவும் ஜனாதிபதிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

மசோதாவுக்கு அங்கீகாரம்

சட்டசபைகளில் நிறைவேறிய, நிதி விஷயம் நீங்கலான எந்த மசோதாவும், சட்டமாகுமுன் ஜனாதிபதியின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும். ஆகவே ஜனாதிபதியும் யூனியன் லெஜிஸ்லேச்சரின் ஒரு பாகமாக "பார்லிமெண்டு" என்ற பதத்திற்கு அர்த்தம் கொடுக்கும் பிரிவில் காணப்பட்டிருக்கிறது. ஜனாதிபதியின் அங்கீகாரத்துக்கு ஆஜர் செய்யப்படும்பொழுது, மசோதாவை முழுவதிலுமோ குறிப்பிட்ட ஷரத்துக்களையோ புனராலோசனை செய்ய சபைகளுக்குத் திருப்பி அனுப்பலாம், அப்படித் திருப்பி அனுப்புகையில் யுக்தமான திருத்தங்களை சிபார்சு செய்து செய்தி அனுப்பவும் ஜனாதிபதிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. பார்லிமெண்டு சபைகளால் அப்படி புனராலோசனை செய்யப்பட்டு, திரும்பி வரும் மசோதாவுக்கு ஜனாதிபதி சம்மதம் மறுக்கலாகாது.

இதர விஷேச அதிகாரங்கள்

சாதாரணமாக ஜனாதிபதி தன் மந்திரிகளின் யோசனைப்படி நடக்கவேண்டும். பார்லிமெண்டு சபைகள் கூடி இராத காலத்தில், ஜனாதிபதி அவசரச் சட்டங்களை (ஆர்டினன்ஸுகளை) பிறப்பிக்கலாம் என்று முன் அத்தியாயத்தில் கண்டு இருக்கிறோம். அப்படி பிறப்பிப்பது மந்திரி சபையின் யோசனையின் பேரில்தான் நடைபெறும். பார்லிமெண்டு சபை

கள் ஒவ்வொரு செஷனின் ஆரம்பத்தில் சபைகளை அழைத்ததின் காரணங்களையும் கவனிக்கவேண்டிய காரியங்களையும் விளக்கி ஜனாதிபதி செய்யவேண்டிய பிரசங்கத்தில், குறிப்பிட்ட விஷயங்களைப் பற்றிக் கவனிக்கும்படியாய்க் கேட்டுக் கொள்ளலாம்.

இதர நாடுகளில் ஜனாதிபதியின் அதிகாரம்

அமெரிக்கா (U. S. A.) ஜனாதிபதிக்கு வேறெந்தக் குடியரசிலும் இல்லாத விரிவான அதிகாரங்கள் உண்டு. சர்க்கார் இலாக்கா காரியதரிசிகள் என்று அழைக்கப்படும் மந்திரிகளை நியமிக்கவும், நீக்கவும் அவருக்கு அதிகாரம் உண்டு. காங்கிரஸ் சபைகளின் (சட்ட சபைகள்) முடிவுகளை ஏற்கவேண்டிய கட்டாயம் இல்லை. சில விஷயங்களில் தான், முக்கியமாக—அயல் நாட்டு விவகாரங்கள், சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகளின் நியமனம், ஜனாதிபதியின் முடிவை செனேட் என்கிற மேல் சபை ரத்து செய்யலாம். அமெரிக்காவில் ஜனாதிபதியே நிர்வாகத்தின் உண்மையான தலைவர். நமது ஜனாதிபதியோ பிரிட்டிஷ் மன்னர் நடக்கும் சம்பிரதாய முறையில் நடந்து கொள்ளவேண்டும். பிரெஞ்சு ஜனாதிபதியைப்போல் வெறும் தலையாட்டித் தம்பிரான் அல்ல நம் ஜனாதிபதி. தனது அபிப்பிராயங்களைத் தெரிவித்து பார்லிமெண்டு சபைகளை புனராலோசனை செய்யச் சொல்ல வசதிகள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. மந்திரி சபையின் முடிவுகள் பிரதம மந்திரியால் ஜனாதிபதிக்குத் தெரிவிக்கப்படவேண்டும்; ஆட்சி வேலைகளைப் பற்றியும் சட்ட மியற்ற பிரஸ்தாபத்தில் உள்ள பிரேரணைகளைப் பற்றியும் ஜனாதிபதி கேட்கலாம். மந்திரி ஒருவரால் மட்டும் முடிவு செய்யப்பட்ட விஷயத்தை முழு மந்திரி சபையும் ஆலோசிக்கும்படியாகக் கோரலாம்.

கவர்னர்

‘ராஜ்ய நிர்வாகம் (மாகாணங்கள்)—A பகுதியில் கண்ட ராஜ்யங்கள்’ ராஜ்ய சர்க்காரின் தலைவர் முன்போலவே கவர்னர் என்று அழைக்கப்படுவார். அவரிடம் ராஜ்ய நிர்வாகம் ஆதீனப்பட்டது, சட்டத்துக்கும் அரசியலுக்கும் ஒத்த வகையில் அவரால் அதிகாரம் செலுத்தப்படவேண்டும்.

ஜனாதிபதியின் கையொப்பமும் சின்னமும் உடைய கட்டளை மூலம், ஜனாதிபதியால் கவர்னர் நியமிக்கப்படுவார். முதலில் வெளியான நகல் அரசியலில், ராஜ்யச் சட்ட சபைகளில் கீழ்

சபைக்கு வோட்டுரிமையுள்ள எல்லா வாக்காளர்களாலும், பொதுத் தேர்தலில் நேரடியாக கவர்னர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், அல்லது ராஜ்யத்தின் சட்டசபை அங்கத்தினர்களால் வீதாசாரப் பிரதிநிதித்வ முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நான்குநபர்களின்பெயர்கள் அடங்கிய ஜாப்தாவிலிருந்து, ஜனாதிபதி நியமிக்க, வேண்டும் என்று மாற்று யோசனைகள் கூறப்பட்டன. தேர்தல் முறைக்கு பலத்த ஆக்ஷேபம் இருந்தது. பொதுத் தேர்தலில் ராஜீயக் கட்சிகள் போட்டி போடுகின்றன. வெற்றியடையும் கட்சியிலிருந்து மந்திரிகள் பொறுக்கப்படுகிறார்கள். கவர்னரும் அப்படிப்பட்ட கட்சியின் ஆதரவைக் கொண்டு தான் தேர்தலில் ஜெயிக்க முடியும். ஆகவே சட்டசபைகளில் பெருவாரியாக உள்ள ராஜீயக் கட்சியைச் சேர்ந்தவராகவே அவர் இருப்பார். ஒரே கட்சியிலிருந்து இரு தலைவர்கள்—கவர்னர், பிரதம மந்திரி, அதிகார ஸ்தானங்களில் இருப்பது உசிதம் அல்ல. இருவரும் செல்வாக்குள்ளவர்களாக இருந்தால் ஒருவருக்கு ஒருவர் போட்டி ஏற்பட்டு கட்சிக்குள் கோஷ்டிகள் கிளம்பி, நிர்வாகத்தில் தொல்லைகள் ஏற்பட்டு, நிர்வாகம் கேவல நிலைமைக்கு வந்துவிடக்கூடும். கவர்னர் செல்வாக்கு இல்லாதவராக இருந்து பிரதமரின் கைப்பாவையாக இருந்தாலும் பிரதிகூலங்கள் உள்ளன. சாதாரணமாக, கவர்னர் சம்பிரதாய முறையில் தலைவரானாலும், அவசர காலத்தில் தலையிடவும் நெருக்கடிகளில் அரசியல் முறைப்படி ஆட்சி நடத்த முடியாத நிலைமை வந்துவிட்டதா என்று தீர்மானிப்பதும் ஜனாதிபதிக்கு அறிவிப்பதும், அவரது சுயேச்சையில் செய்யவேண்டிய காரியங்கள். நெருக்கடி காலங்களில் ஜனாதிபதிக்குத் தெரிவித்து மத்திய சர்க்காரின் கட்டளைகளை நிறைவேற்ற வேண்டியவர். மெஜாரிடி கட்சியின் கைப்பாவையாக இருந்தால் மேற்கண்ட அலுவல்களைத் திறமையாக நடத்த சக்தியற்றவராகி விடுவார். கட்சிகளுக்குள் நடுநிலைமை வகிக்கக் கூடியவராகவும் இருக்கமாட்டார்.

நேரடியான தேர்தலிலோ, சட்டசபை அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஜாப்தாத் தேர்தலிலோ, ராஜீய வாதிகள் அல்லாதவர்கள்—பம்பாய் கவர்னர் ஸர். மஹாராஜ் சிங்கைப் போல் ஆட்சி நிர்வாகத்தில் அனுபவமும் திறமையுமுள்ள சர்க்கார் ஊழியத்திலிருந்து வயதுக் கிரமத்தில் விலகினவர்கள், ஐ. மா. கவர்னர், ஸர் ஹோமி மோடியைப் போன்ற தொழில்

நிபுணர்கள், கல்வி முதலிய துறைகளில் பிரபலஸ்தர்கள், தேர்தலில் ஈடுபடமாட்டார்கள். அவர்களைப் போன்ற அனுபவம் பெற்ற திறமைசாலிகள் கவர்னர்களாக வர முடியாது. மேலும் தேர்தலில் அந்தந்த ராஜ்ய வாசிகளே தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அந்தந்த ராஜ்யங்களின் அக்கறைகளை மட்டும் குறுகிய மனோபாவத்துடன் பார்க்கக் கூடியவர்களாக இருக்கலாம். ஐக்கிய இந்தியா என்ற அடிப்படையில் வகுக்கப்பட்டிருக்கும் அரசியலுக்கு ஹானி ஏற்படக்கூடியது. நெருக்கடி காலங்களில் ஜனாதிபதி மூலம் அனுப்பப்படும் மத்திய சர்க்காரின் கட்டளைகளை நிறைவேற்ற வேண்டியவர். ஆகையால் ஜனாதிபதியால் நியமிக்கப் படுவதே சரியான முறை. அநேகமாக இதர ராஜ்ய வாசியை நியமிப்பது யுக்தமானது.

பதவி காலம்

பதவி காலம் ஜனாதிபதி விஷயத்தில் போல் ஐந்து வருஷங்கள், மத்தியில் ராஜிநாமா செய்யலாம். ஜனாதிபதியின் யுக்தானுசாரப்படி பதவியில் இருப்பார். எந்தக் காரணத்தைக் கொண்டாவது காலி ஏற்பட்டால் கவர்னரின் அலுவல்களைக் கவனிக்க ஜனாதிபதி தகுந்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

யோக்ய-தாம்சங்கள்

35-வயது பூர்த்தியான இந்தியப் பிரஜைதான் கவர்னராக நியமிக்கப்படலாம். பார்லிமெண்ட் சபைகள், அல்லது ராஜ்யங்களிலுள்ள சட்ட சபைகள் எதிலும் அங்கத்தினராக இருப்பவர் கவர்னராக நியமிக்கப்பட்டால், கவர்னர் பதவியை ஏற்றதும், சபை அங்கத்தினர் பதவி காலியாகிவிடும்.

மன்னிப்பு தண்டனைகள் விஷயமாய் கவர்னர் அதிகாரம்

ராஜ்ய சட்ட ஜாப்தாவில் கண்ட விஷய சம்பந்தமான குற்றத்திற்கு தண்டனை செய்யப் பட்டவரை மன்னிப்பது, தண்டனையை நிறுத்திவைப்பது, குறைப்பது, மாற்றுவது இவைகளைச் செய்ய கவர்னருக்கு அதிகாரம் உண்டு.

நெருக்கடிப் பிரகடன காலத்தில் நிர்வாக அதிகாரம்

அரசியல் சட்டப்படி சர்க்காரை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டு நெருக்கடிப் பிரகடனம் செய்யப்படும்பொழுது, கவர்னரின் அதிகாரம் உள்பட ராஜ்ய சர்க்காரை நிறுத்திவைக்க, ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு. அக்காலத்தில் கவர்னர் மத்திய சர்க்காரின் உத்தரவுகளை நிறைவேற்றி வைக்கவேண்டும்.

யுத்தம், ஆக்ரமிப்பு, உள்நாட்டுக் குழப்பம் முதலிய காரணத்தால் நாட்டின் பந்தோபஸ்துக்கு அபாயம் ஏற்பட்டால், அத்தகைய நெருக்கடிகளில் ராஜ்யங்களின் நிர்வாகம் மத்திய சர்க்காரின் கட்டளைகள்படி நடத்தப்படவேண்டும்.

கவர்னர் தனது சுயேச்சையில் செய்யவேண்டிய அலுவல்கள் நீங்கலாக தனக்குள்ள அலுவல்களைச் செய்வதில் உதவி செய்யவும் யோசனை கூறவும், முதன் மந்திரி தலைமையிலுள்ள மந்திரி சபை இருக்கவேண்டும். முதன் மந்திரி கவர்னரால் நியமிக்கப்படுவார், இதர மந்திரிகள் முதன் மந்திரி யோசனையின் பேரில் நியமிக்கப்படுவார்கள். மந்திரி சபை ராஜ்யச் சட்டசபை கீழ்சபைக்குக் கூட்டாக ஜவாப்தாரியானது. பீஹார், மத்தியப் பிரதேச, ஒரிஸ்ஸா இந்த ராஜ்யங்களில் பூர்வீகக் குடிகளின் க்ஷேமத்தைக் கவனிக்க ஒரு மந்திரி இருப்பது அவசியம். மந்திரிகள் பதவி ஏற்குமுன் ரகசிய சம்பந்தமான பிரமாணங்களைச் செய்யவேண்டும். சட்ட சபை யங்கத்தினராக இராதவர் மந்திரியாக நியமிக்கப்பட்டால், ஆறு மாத காலத்திற்குள் எந்த சபையிலாவது அங்கத்தினராக வேண்டும். மந்திரிகளின் சம்பளங்களும் படிகளும் சட்டமூலம் நிர்ணயிக்கப்படும்.

மந்திரி சபை

அரசியல்படி சுயேச்சையில் செலுத்தவேண்டிய அலுவல்கள் நீங்கலாக, இதர விஷயங்களில் கவர்னர் மந்திரிகளின் யோசனைப்படி நடக்கவேண்டும். ஜனாதிபதியைப்போல் அவசரச் சட்டங்களை பிறப்பிவிக்க அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. மசோதா ஒவ்வொன்றும் கவர்னரின் சம்மத மூலம் சட்ட முத்திரை பெறுகிறது. நிதிமசோதா நீங்கலாக இதர மசோதாக்களை புனராலோசனை செய்ய சட்ட சபைகளுக்கு அனுப்பலாம். அப்படித் திருப்பி அனுப்பும் பொழுது யுக்தமான திருத்தங்களை கவனிக்கும்படியாய் செய்தி அனுப்பலாம். சட்டசபைகளின் செஷன் ஆரம்பத்தில் பிரசங்கம் செய்வதும் அதில் கண்ட விஷயங்களை கவனிக்கக் கோருவதும் கவர்னரின் கடமைகள்.

கவர்னரின் விசேஷ அதிகாரங்கள்

இந்திய சமஸ்தானங்கள் என்ற முதல் ஷெடியூலின் B. பகுதியில் கண்ட ராஜ்யங்களின் நிர்வாகமும் A. பகுதி ராஜ்யங்களுக்குப் பொருந்தும் ஷரத்துக்களை அனுசரித்து இருக்கவேண்டும். நிர்வாகத் தலைவர் கவர்னர் என்பதற்கு பதிலாக "ராஜப் பிரமுகர்" என்று அழைக்கப்படுவார்.

சமஸ்தானங்கள் B பகுதியில் கண்ட ராஜ்யங்களின் நிர்வாகம்

நீதி மன்றங்கள்

ஏகபாவ அரசாங்கத்தில் சட்டமியற்றும் ஸ்தாபனங்கள் (லெஜிஸ்லேச்சர்) பூர்ண ஆதிபத்யமுள்ளவை. லெஜிஸ்லேச்சரால் இயற்றப்படும் சட்டங்களின்படி கோர்ட்டுகள் நீதி செலுத்தவேண்டும். தீர்ப்புக்கு வரும் பிரச்னைக்கு சட்டத்தைப் பொருத்துவதில் சட்டத்திற்கு அர்த்தம் செய்யவேண்டியது. ஆனல் சமஷ்டி அரசாங்கத்தில் அரசியல் அமைப்புச் சட்டம் மேலானது. அச்சட்டத்தின் ஷரத்துக்களுக்குப் புறம்பாக சட்டம் இயற்றலாகாது. சமஷ்டி மத்திய லெஜிஸ்லேச்சரால் அல்லது ஸ்டேட் (ராஜ்ய) லெஜிஸ்லேச்சரால் இயற்றப்பட்ட சட்டம், அரசியல் சட்டப்படி செல்லுபடியானதா அல்லவா என்பது சுப்ரீம் கோர்ட்டின் முடிவான தீர்ப்புக்கு உள்பட்டது. சமஷ்டிக்கும் உறுப்புக்களுக்கும் அதிகார விபாகத்தை கவனிக்கும்பொழுது, குறிப்பிட்ட விஷயத்தில் சமஷ்டி யூனியனுக்கு அதிகாரமா, அல்லது உறுப்புக்கு அதிகாரமா, என்பதைப் பொறுத்து விவகாரம் வந்தால் அதைத் தீர்க்க சுப்ரீம் கோர்ட்டு அவசியம் என்று முன்னல் சொல்லியிருக்கிறோம். சமஷ்டி அரசாங்கங்களிலெல்லாம் சுப்ரீம் கோர்ட்டுகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஆனல் அந்தந்த அரசியல் சட்டத்திற்கு ஏற்ப, சில வித்தியாசங்களும் இதில் காணப்படுகின்றன.

சமஷ்டியில் சுப்ரீம் கோர்ட்டு அவசியம்

இந்தியாவின் பிரதம நீதிபதியும், ஏழு பேர்களுக்கு மேல் படாத இதர நீதிபதிகளும் அடங்கிய சுப்ரீம் கோர்ட்டு இருக்க வேண்டும், என்று நமது அரசியலில் கூறப்பட்டு இருக்கிறது. ஏழுக்கு மேல்பட்ட நீதிபதிகளை நியமிக்க பார்லிமெண்டு சட்டம் செய்யலாம். சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகளையும் ராஜ்யங்களிலுள்ள ஹைகோர்ட்டுகளின் நீதிபதிகளையும் கலந்துகொண்டு, ஜனதிபதி நீதிபதிகளை நியமிப்பார். பிரதம நீதிபதி அல்லாத நீதிபதிகளை நியமிப்பதில் பிரதம நீதிபதியைக் கலந்துகொள்ளவேண்டும்.

சுப்ரீம் கோர்ட்டு அமைப்பு

நீதிபதியாக நியமனமாக ஒருவர் இந்தியப் பிரஜையாக இருக்கவேண்டும்; ஐந்து வருஷ காலமாவது ராஜ்ய ஹைகோர்ட்டு அல்லது ஹைகோர்ட்டுகளில் நீதிபதியாக இருந்திருக்கவேண்டும்; அல்லது பத்து வருஷ காலமாவது ஹைகோர்ட்டு அட்வொகேட்டாக தொழில் நடத்தியிருக்க வேண்டும்; அல்லது சட்ட நாலாசிரியராக கியாதி பெற்றவராக இருக்கவேண்டும். நீதிபதியாக நியமிக்கப்பட்டவர் 65 வயது பூர்த்தியாகும்வரை பதவியில் இருக்கலாம்.

நீதிபதியின் யோக்யதாம்சங்கள்

மத்தியில் அவராக ராஜினாமா செய்யலாம். ஒழுங்கீனமான நடத்தை அல்லது திறமையின்மை ருஜுவாகிவிட்டது என்ற காரணத்தால், நீதிபதிஒருவரை விலக்க பார்லிமெண்ட் சபைகள் ஜனாதிபதிக்கு விண்ணப்பம் சமர்ப்பித்தால், அவரை ஜனாதிபதி விலக்கவேண்டும். அப்படிப்பட்ட முடிவு செய்ய ஒவ்வொரு சபையின் மொத்த அங்கத்தினர்களில் பெருவாரியானவும் ஆஜரிலிருந்து வோட்டுப் போடுகிறவர்களிலும் மூன்றில் இரண்டு பங்குள்ள நபர்களின் ஆதரவு வேண்டும். நீதிபதியின் நடத்தையை அல்லது திறமையின்மையைப் பொறுத்து விசாரணை செய்ய சட்ட மூலம் ஏற்பாடு செய்யப்படும். நிர்வாகத்தினரால் நீதிபதிகள் நியமிக்கப்பட்டாலும் அவர்களால் விலக்கமுடியாது. விலக்குவது பார்லிமெண்டு சபைகளின் மூன்றில் இரண்டு பங்கான பெருவாரி அங்கத்தினர்களால்தான் முடியும். நீதிபதி பதவியை வகித்தவர் வக்கீல் தொழிலில் ஈடுபடலாகாது. ஹைகோர்ட்டு நீதிபதிகளுக்கும் யோக்யதாம்சங்கள், ராஜினாமா, விலக்குவது ஷரத்துக்கள் இவ்விதமே.

நீதி விஷயத்தில் முக்கியமான விஷயம், நீதிபதிகளின் பதவி நிர்வாக அதிகாரிகளின் தயவில் இருக்கலாகாது என்பது.

நீதிபதிகள் நிர்வாக அதிகாரிகளின் தயவை எதிர்பார்க்கலாகாது

பிறரை நம்பி இல்லாமல் நீதிபதிகள் சுயேச்சையாக இருக்கவேண்டும். மனச்சாட்சிப்படி நடக்க எளிதில் பதவியிலிருந்து விலக்கப்படலாகாது. இந்த சித்தாந்தங்களை அனுசரித்தே நீதிபதிகளை விலக்குவதற்குக் கடினமான முறை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மனித இயல்பில் சாபல்யமும் இருப்பதால் ஒழுங்கீன நடத்தை அல்லது திறமையின்மை சரியாக ருஜுவானால், நீதிபதியை விலக்கவும் ஷரத்து அவசியம். அநேக விஷயங்

களில் நிர்வாக அதிகாரிகளின் செய்கைகளைக் கண்டித்து பிரஜைகளுக்கு ஜீவாதார உரிமைகளைக் காப்பாற்றுவது நீதிபதிகளின் கடமை. ஆகவே, அவர்களை நியமிப்பது நிர்வாகத்தினர்களாக இருந்தாலும் விலக்கும் அதிகாரம் நிர்வாகத்தினர்களிடம் வைக்கப் படவில்லை.

இதர நாடுகளில் வழங்கும் முறைகள்

அநேகமாக எல்லா நாடுகளிலும் நீதிபதிகள் நிர்வாக அதிகாரிகளால் நியமிக்கப்படுகிறார்கள். அமெரிக்காவில் செனேட் (மேல்) சபையின் அங்கீகாரத்துடன் ஜனாதிபதியால் சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் நியமிக்கப்படுகிறார்கள். ஸ்டேட்டுகளில் இரண்டு வருஷங்களுக்கு ஒரு தடவை நீதிபதிகள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். தேர்தலில் வெற்றிபெற ராஜீயக் கட்சிகளின் ஆதரவைத் தேடவேண்டி வருகிறது. இம்முறையால் அமெரிக்க ஸ்டேட்டுகளில் நீதி செலுத்தல் பாதிக்கப் பட்டு ஊழல்கள் நிறைந்துள்ளன. ஆனால், சுப்ரீம் கோர்ட்டு இந்தக் குற்றச்சாட்டுக்கு உள்படாமல் மேலான வகையில் நீதி செலுத்தி வருவதாகவே கருதப்படுகிறது. ஸ்விட்ஸர்லாந்து தேசத்தில் சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் ஆறு வருஷங்களுக்கு ஒரு தரம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனால், அமெரிக்காவின் ஸ்டேட்டுகளில் உள்ளவை போன்ற ஊழல்கள் இல்லாமல் புகழுக்குரிய வகையில் அங்கு நீதி செலுத்தப்படுகிறது. அந்த தேசத்தில் மந்திரிகள் விஷயத்தில் போல் திறமை, கண்யம், அனுபவம் நிறைந்தவர்கள் திரும்பத் திரும்ப நீதிபதிகளாகத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.

விலகின நீதிபதிகள் விசேஷ நீதிபதிகள்

அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் உள்ள வழமையை அனுசரித்து, வயதுக்கிரமத்தில் விலகின நீதிபதிகளையும் சில சந்தர்ப்பங்களில் வேலை பார்க்கும்படி, பிரதம நீதிபதி ஜனாதிபதியின் முன்னனுமதியுடன் கேட்டுக் கொள்ளலாம். அதிகாரம் செலுத்துவதற்கு வேண்டிய கோரம் (குறைந்தபட்ச எண்ணிக்கை) இல்லாமல் சுப்ரீம் கோர்ட்டின் வேலை தொடர்ந்து தவக்கப்பட்டால், ஹைகோர்ட்டு பிரதம நீதிபதியைக் கலந்துகொண்டு அந்தக் கோர்ட்டு நீதிபதிகளை, சுப்ரீம் கோர்ட்டில் விசேஷ நீதிபதிகளாக வேலை பார்க்கக் கோரலாம். இவ்விஷயத்திலும் ஜனாதிபதியின் முன்னனுமதி பெறவேண்டும்.

நீதிபதிகளுக்குக் கொடுபடவேண்டிய சம்பளங்களும், படிகளும், ரஜா, பென்ஷன் சம்பந்தமான உரிமைகளும், பார்லிமெண்டால் சட்டமூலம் நிர்ணயிக்கப்படும்.

அதிகார வரம்பு (ஜூரிஸ்டிக்ஷன்)

சுப்ரீம் கோர்ட்டு ரிகார்டு கோர்ட்டாக விளங்கும். அதாவது தீர்ப்புக்களின் பதிவுகள் (ரிகார்டுகள்) சாசுவதமாக வைக்கப்படும். தவிரவும் கோர்ட்டை அவமதிப்பதற்காக தண்டனை அளிக்கும் அதிகாரம் உள்பட இதர அதிகாரங்களும் உண்டு.

கோர்ட்டின் அசல் அப்பீல் ஜூரிஸ்டிக்ஷன் விஷயங்களில் சமஸ்தானங்களாக இருந்த முதல் ஷெட்யூலின் B- பாகத்தில் விவரிக்கப் பட்டிருக்கும் ராஜ்யங்களுக்கும், மாகாணங்களாக இருந்த A-பாக ராஜ்யங்களுக்கும் வித்தியாசம், அரசியல் நகல்திட்டத்தில் இருந்தது. யூனியனில் அடங்கியிருக்கும் உறுப்புக்களில் சம அந்தஸ்து இல்லாமல், ஏற்கனவே சமஸ்தானங்களாக உள்ள உறுப்புக்கள் மூன்று விஷயங்களில் தான் யூனியனுக்கு அதிகாரம் அளித்தன என்று கண்டிருந்தோம். நகல் திட்டம் அரசியல் நிர்ணய சபையில் சர்ச்சைக்கு வருமுன், இத்துறையில் முன்னேற்றம் ஏற்பட்டு, வரி விஷயங்கள் நீங்கலாக 7-வது ஷெட்யூலின் முதல் ஜாப்தாவில் கண்ட விஷயங்கள் யூனியன் அதிகாரத்துக்கு விடப்பட்டன. அதை அனுசரித்து சுப்ரீம் கோர்ட்டு செலுத்தும் ஜூரிஸ்டிக்ஷனும் ஒரே விதமாகிவிட்டது.

அசல் ஜூரிஸ்டிக்ஷன்

(1) இந்தியசர்க்காருக்கும் ராஜ்யம் அல்லது ராஜ்யங்களுக்கும் இடையே உள்ள விவகாரங்கள். (2) இந்திய சர்க்காரும் ஒன்றல்லது மேற்பட்ட ராஜ்யம் அல்லது ராஜ்யங்கள் ஒரு கட்சி, ஒன்றல்லது மேற்பட்ட ராஜ்யங்கள் எதிர்க்கட்சியாக உள்ள விவகாரங்கள். B-பகுதி ராஜ்யம் (சமஸ்தானம்) சம்பந்தப்பட்ட உடன்படிக்கை சம்பந்தமாகவும், எந்த ராஜ்ய விஷயத்திலும், உடன்படிக்கை அல்லது ஷரத்தில் கோர்ட்டுக்குஜூரிஸ்டிக்ஷன் கிடையாது என்று கண்டிருந்தால், அது விஷயமாகவும், விதிவிலக்குகள் உண்டு.

தாவாவில் அரசியல் சட்ட வியாக்கியான சம்பந்தமான சட்டப் பிரச்னை உள்ளது என்று ஹைகோர்ட்டு அத்தாட்சி

அளித்தால், ராஜ்ய ஹைகோர்ட்டின் முடிவான தீர்ப்பு அல்லது உத்தரவு பேரில் சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யலாம். அப்படிப்பட்ட அத்தாட்சி ஹைகோர்ட்டால் அளிக்கப்படாவிட்டாலும், சுப்ரீம் கோர்ட்டு அப்பீல் செய்ய விசேஷ அனுமதியை அளிக்கலாம். அப்படி அப்பீல் செய்ய அனுமதிக்கப்படும் தாவாவில் மேற்கண்ட சட்டப் பிரச்னையைத் தவிர இதர முகாந்திரங்களையும் சுப்ரீம் கோர்ட்டின் அனுமதியுடன் காண்பிக்கலாம்.

அப்பீல் ஜுரிஸ்டிக்ஷன்

ராஜ்யங்களின் ஹைகோர்ட்டுகளிலிருந்து, ரூ. 20,000க்குக் குறையாத மதிப்புக் கொண்ட சொத்து அல்லது உரிமை, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தாவாவில் சம்பந்தப்பட்டு இருக்கிறது என்று, ஹைகோர்ட்டு அத்தாட்சி செய்வதின் பேரில் அப்படிப்பட்ட ஹைகோர்ட்டு டிக்ரி அல்லது முடிவான உத்தரவுபேரிலும், சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்ய தகுதியென்று ஹைகோர்ட்டு கூறும்இதரவழக்குகளிலும்,அப்பீல் உண்டு. மதிப்பு வரம்பு பார்லிமெண்டால் சட்டமூலம் மாற்றப்படலாம்.

குற்ற வழக்குகளில் ராஜ்யங்களின் ஹைகோர்ட்டுகளின் தீர்ப்புகளிலிருந்து அப்பீல் :—

குற்ற வழக்குகள் தண்டனைகள்பேரில் அப்பீல்

1. கீழ்க் கோர்ட்டில் விடுதலை செய்யப்பட்ட எதிரிக்கு அப்பீலில் ஹைகோர்ட்டு மரண தண்டனை விதிக்கும் தீர்ப்புகள்.

2. கீழ் கோர்ட்டிலிருந்து வழக்கை ஹைகோர்ட்டு தன்னிடம் விசாரணைக்கு வருத்தி, எதிரிக்கு மரண தண்டனை விதிக்கும் தீர்ப்புகள்.

3. அப்பீலுக்கு லாயக்கு என்று ஹைகோர்ட்டு அத்தாட்சி செய்யும் வழக்குகள்; ஆனால், இவ்விஷயத்தில் சுப்ரீம் கோர்ட்டு செய்யும் விதிகளுக்கும் ஹைகோர்ட்டு ஏற்படுத்தும் நிபந்தனைகளுக்கும் உள்பட்டு அப்பீல் செய்யவேண்டும்.

இதர சந்தர்ப்பங்களில் அப்பீலுக்கு அனுமதி

மேலே கண்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத வழக்குகளிலும், இந்தியாவிலுள்ள கோர்ட்டு அல்லது மன்றம் எது இருந்தாலும், அதன் தீர்ப்பு அல்லது தண்டனை, அல்லது உத்தரவிலிருந்து அப்பீல் செய்ய, சுப்ரீம் கோர்ட்டு விசேஷ அனுமதியை அளிக்கலாம்.

ஆனால், ஆயுதப்படைகள் சம்பந்தமான சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கோர்ட்டு அல்லது மன்றத்தின் தீர்ப்பு அல்லது உத்தரவுக்கு இந்த ஷரத்து பொருந்தாது.

அரசியல் சட்டம் மூன்றுவது பாகத்தில் விவரிக்கப்பட்டு இருக்கிறதும், இங்கு 11-வது அத்தியாயத்தில் கண்டதுமான

ஜீவாதார உரிமைகளை ஸ்தாபிக்க விசேஷ கட்டளைகள்

ஜீவாதார உரிமைகளை அமுல் செய்ய, சுப்ரீம் கோர்ட்டில் மனு செய்து கொள்ளலாம். வழக்குக்குத் தகுந்தபடி, காவலில் வைக்கப்பட்டிருக்கும் நபரை கோர்ட்டு முன் ஆஜர்படுத்துவது, பொது அதிகாரியை முறைப்படி நடவடிக்கை யெடுக்கக் கட்டளை, அதிகாரிகள் முன் நடவடிக்கைகளைப் பற்றிய ரிகார்டுகளைத் தருவித்துப் பார்ப்பது, இவை போன்ற பரிகாரங்களுக்கு வேண்டிய கட்டளைகளை சுப்ரீம் கோர்ட்டு பிறப்பிக்கலாம். ஹைகோர்ட்டுகளுக்கும் இவ்வித ஜூரிஸ்டிக்ஷன் உண்டு.

ஜனாதிபதி உப ஜனாதிபதி தேர்தல் விவகாரங்கள்

“நிர்வாகம்” என்ற தலைப்புள்ள நான்காவது அத்தியாயத்தில் கண்டபடி ஜனாதிபதி, உப ஜனாதிபதி, இவர்களின் தேர்தல் சம்பந்தமான விவகாரங்களையும் விசாரிக்க வேண்டியது சுப்ரீம் கோர்ட்டுதான், அதன் தீர்ப்பு முடிவானது.

முக்கியமான பிரச்னை எதைப் பொறுத்தும் சுப்ரீம் கோர்ட்டின் அபிப்பிராயத்தை ஜனாதிபதி கோரலாம். அசல் ஜூரிஸ்டிக்ஷனிலிருந்து

ஜனாதிபதியின் குறிப்பு

விலக்கப்பட்ட ராஜ்ய உடன்படிக்கைகள், இந்திய சர்க்காருக்கும் சமஸ்தானாதிபதிக்கும் இடையே ஏற்பட்டவையும் தொடர்ந்து அமுல் செய்யப்படுபவையுமான உடன்படிக்கைகள், இவை சம்பந்தமான தகராறுகள் கோர்ட்டு ஜூரிஸ்டிக்ஷனிலிருந்து விலக்கப்பட்ட போதிலும், அவைகளைப் பொறுத்து ஜனாதிபதி சுப்ரீம் கோர்ட்டுக்குக் குறிப்பு அனுப்பி அபிப்பிராயத்தைக் கோரலாம். ஜனாதிபதியின் குறிப்பின் பேரில் சுப்ரீம் கோர்ட்டு தங்கள் அபிப்பிராயத்தை ஜனாதிபதிக்கு யாதாஸ்து மூலம் அனுப்பவேண்டும்.

புனராலோசனை அதிகாரம்

சுப்ரீம் கோர்ட்டு, தங்கள் தீர்ப்பு அல்லது உத்தரவு எதையும், பார்லிமெண்டு சட்டத்துக்கு உள்பட்டு, புனராலோசனை செய்யலாம்.

ஜூரிஸ் டிக்ஷன் விஸ்தரிப்பு

யூனியன் அதிகாரங்கள் அடங்கிய ஜாப்தாவில் கண்ட விஷயங்களைப் பற்றியும், ராஜ்யமும் இந்திய யூனியன் சர்க்காரும் உடன்பாடுள்ள எந்த விஷயத்தைப் பற்றியும், குற்ற வழக்குகளில் அப்பீல் உரிமை விஷயமாகவும், சுப்ரீம் கோர்ட்டின் ஜூரிஸ்டிக்ஷனை பார்லிமெண்டுசட்டமூலம் விஸ்தரிக்கலாம்.

பிரிவிகவுன்ஸில் அதிகாரம் ரத்து

அரசியல் சட்டம் அமுலுக்கு வரு முன்னரே, இந்திய வழக்குகளைப் பொறுத்து பிரிட்டனிலுள்ள பிரிவிகவுன்ஸிலின் அதிகாரம் ரத்து செய்யப்பட்டது. பைசலாகாமல் தங்கியிருந்த நடவடிக்கைகள், சமஷ்டி கோர்ட்டில் தங்கி யிருந்த நடவடிக்கைகள், சுப்ரீம் கோர்ட்டுக்கு மாற்றப்பட்டவையாகக் கருதப்படவேண்டும். இனி சமஷ்டி கோர்ட்டு கிடையாது. பிரிட்டிஷ் பிரிவிகவுன்ஸிலுக்கு இருந்த அதிகாரம் ஜாடாவும், இந்தியாவைப் பொறுத்து, நமது சுப்ரீம் கோர்ட்டுக்கு உண்டு. B பாக ராஜ்யங்களில் சிலவற்றில் இருந்த பிரிவிகவுன்ஸில்களின் அதிகாரங்களும் ரத்தாகிவிட்டன.

சுப்ரீம் கோர்ட்டு கூறும் சட்டமும் தீர்ப்பும் நாடுபூரா விலும் அமுல்

சமஷ்டி கோர்ட்டு நீதிபதிகள், அவர்கள் வேறுவிதமாகத் தீர்மானித்தால் அல்லாது, சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகளாகக் கருதப்படுவார்கள். சுப்ரீம் கோர்ட்டால் கூறப்படும் சட்டம், இந்திய நாடு பூராவும், எல்லாக் கோர்ட்டுகளையும் நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும். அதன் டிக்ரிகளும் உத்தரவுகளும் நாடு முழுவதிலும் நிறைவேற்றக் கூடியவை. ஸிவில், நீதி இலாக்காக்களின் அதிகாரிகள் சுப்ரீம் கோர்ட்டுக்கு உதவியாக வேலை செய்யவேண்டும்.

ஹைகோர்ட்டுகள்

ஒவ்வொரு ராஜ்யத்திலும் ஒரு ஹைகோர்ட்டு இருக்க வேண்டும். இப்பொழுது இருக்கும் ஹைகோர்ட்டுகள் அந்தந்த ராஜ்யங்களின் ஹைகோர்ட்டுகளாகக் கருதப்படும். அந்தந்த ராஜ்யத்தில் உன்னத கோர்ட்டாக இருந்துவரும். ஒவ்வொரு ஹைகோர்ட்டும் சுப்ரீம் கோர்ட்டு போல் ரிகார்டு கோர்டு அந்தஸ்தைக் கொண்டதும், ஜீவாதார உரிமைகளைப் பாதுகாக்க ஹேபியஸ் கார்பஸ், மான்டேமஸ் போன்ற கட்டளைகளைப் பிறப்பிக்க அதிகாரமும் உள்ள கோர்ட்டாக இருக்கும்.

பிரதம நீதிபதியும், ஜனாதிபதி அவசியம் என்று நியமிக்கும் இதர நீதிபதிகளும் இருப்பார்கள். சம்பந்தப்பட்ட ராஜ்யத்தின் கவர்னர், சுப்ரீம் கோர்ட்டு பிரதம நீதிபதி, பிரதம நீதிபதியல்லாத இதர நீதிபதிகளின் நியமன விஷயத்தில் அந்த ஹைகோர்ட்டின் பிரதம நீதிபதி, இவர்களைக் கலந்துகொண்டு, ஜனாதிபதியால் நீதிபதிகள் நியமிக்கப்படுவார்கள். 60 வயது பூர்த்தியாகும் வரையில் பதவியில் இருக்கலாம். மத்தியில் தானாக ராஜிநாமா செய்யலாம். சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகளைப் போலவே நிர்வாக அதிகாரிகளால் விலக்க முடியாது. ஒழுங்கீன நடத்தை அல்லது திறமையின்மை காரணமாக பார்லிமெண்டு சபைகளின் மூன்றில் இரண்டு பங்கு பெருவாரி தீர்மானத்தின்பேரில்விலக்கப்படலாம்.சுப்ரீம்கோர்ட்டு நீதிபதிகள் விஷயத்தில் கண்ட ஷரத்துக்கள் ஹைகோர்ட்டு நீதிபதிகளுக்கும் பொருந்தும். நியமனத்துக்கு யோக்யதை—பத்து வருஷ காலமாவது நீதி செலுத்தும் உத்தியோகத்தை வகித்து இருக்கவேண்டும், அல்லது அட்வொகேட்டாக ஹைகோர்ட்டில் தொழில் புரிந்து இருக்கவேண்டும். வயதுகிரமத்தில் விலகின நீதிபதிகளையும் வேலை பார்க்க பிரதம நீதிபதி கேட்டுக்கொள்ளலாம்.

நீதிபதிகள்

ஹைகோர்ட்டு நீதிபதி பதவியை வகித்தவர் நாட்டில் எந்த கோர்ட்டிலோ எந்த அதிகாரி முன்போ வக்காலத்து வாங்கிக் கொண்டு ஆஜராகலாகாது. சம்பளங்கள், படிகள், ரஜா, பென்ஷன், ராஜ்ய சட்டஸ்தாபனங்களால் நிர்ணயிக்கப்படும்.

இப்பொழுது அமுலில் உள்ள சட்டங்கள்படி, ஹைகோர்ட்டுகள், அசல், அப்பீல், ரிவிஷன் அதிகாரங்களைச் செலுத்தும். ராஜ்யத்திலுள்ள இதர கோர்ட்டுகளும் மன்றங்களும் ஹைகோர்ட்டின் மேன் பார்வைக்கு உள்பட்டவை. ஜூரிஸ்டிக்ஷனை (அதிகார எல்லையை) விஸ்தரிக்கவும் நீக்கவும் பார்லிமெண்டு சட்டமியற்றலாம்.

ஜூரிஸ்டிக்ஷன்

ஒவ்வொரு ராஜ்யத்திலும் அமுலிலுள்ள சட்டங்கள்படி பல ரகமான விவில் கோர்ட்டுகள் இருக்கின்றன. நாடு பூராவும் வழங்கும் கிரிமனல் புரோஸீசர் கோடு (குற்ற நடவடிக்கைகளின் நடைமுறைச் சட்டம்) ப்படி குற்ற சம்பந்தமான வழக்குகளை விசாரிக்க கோர்ட்டுகள் இருந்து வருகின்றன. ரெவினியூ கோர்ட்டுகளும் இருக்கின்றன.

இதர கோர்ட்டுகள்

சமஷ்டி அரசியலை எற்றுக்கொண்டாலும் நம் நாட்டில் ஒரே நீதி செலுத்தும் ஸ்தாபனம் எற்கப்பட்டிருக்கிறது. ஸிவில் (சொத்து, உரிமை, சம்பந்தமானவை) கிரிமினல் (குற்றங்களைப் பொறுத்தவை) முக்கியமான சட்டங்களில் ஒரே விதம், இவை மூலம் ஓர்மை எற்படுத்தப் பட்டு இருக்கிறது. சமஷ்டிக்குப் பிறப்பிடமான அமெரிக்கா (U. S. A.) வில் சமஷ்டி கோர்ட்டுகளுக்கும் ராஜ்ய ஸ்டேட் கோர்ட்டுகளுக்கும் சம்பந்தம் இல்லை. இந்தியவிலோ சுப்ரீம் கோர்ட்டும் ஹைகோர்ட்டுகளும் இணைக்கப்பட்ட ஒரே நீதி ஸ்தாபனம்; அரசியல், ஸிவில், கிரிமினல், எவ்வகையான விவகாரத்திலும் அதிகாரம் உள்ளவை. ஸ்விட்ஸர்லாந்து தேசத்தில் சுப்ரீம் கோர்ட்டுக்கு அரசியலை வியாக்கியானம் செய்யும் வேலை கிடையாது. ஏனென்றால் பொதுஜன வோட்டு மூலம் சட்டங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. உறுப்புக்களுக்கு இடையே எற்படும் விவகாரங்களைத் தீர்ப்பதில் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு முடிவானது. ஆஸ்டிரேலியாவில் சுப்ரீம் கோர்ட்டின் ஜுரிஸ்டிக்ஷன் அரசியல் சட்டத்தை வியாக்கியானம் செய்வது, ஸ்டேட்டுகளிடையே (ராஜ்யங்கள்) எற்படும் விவகாரங்களைத் தீர்ப்பது, ராஜ்யங்களின் உன்னத கோர்ட்டுகளிலிருந்து அப்பீல்களை முடிவுசெய்வது முதலியன. கனடாவில் அரசியல் சட்டத்தை வியாக்கியானம் செய்ய சுப்ரீம் கோர்ட்டுக்கு அதிகாரம் இருந்தாலும், அதை உபயோகிக்க அவசியம் அநேகமாக எற்படுவது இல்லை ஏனென்றால் ராஜ்ய (மாகாண) சட்டத்தை ரத்து செய்ய மத்திய பார்லிமெண்டுக்கு அதிகாரம் அரசியல் சட்டத்தில் அளிக்கப்பட்டிருக்கிறது.

இதர நாடுகளில் நீதி ஸ்தாபனங்கள்

நாளுக்கு நாள் மனித வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் சர்க்கார் தலையிட்டுக் கட்டுப்பாடுகளை எற்படுத்த வேண்டிய அவசியம் நேருகிறது. இப்படி எற்படும் விசேஷ அலுவல்கள் நிர்வாக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுகின்றன. அவ்வதிகாரிகளின் உத்தரவுகள் நபரின் தனிப்பட்ட உரிமைகளை விரிவாக பாதிக்கக்கூடிய வகையில் இருக்கின்றன. இவ்விஷயங்களில் நிர்வாக அதிகாரிகளுக்கும் பிரஜைகளுக்கும் எற்படக்கூடிய தகராறுகளைத் தீர்க்க "அட்மினிஸ்டிரேடிவ் கோர்ட்டுகளை" ஸ்தாபிப்

அட்மினிஸ்டிரேடிவ் கோர்ட்டுகள்

பது யுக்தம் என்று தோன்றுகிறது. அதிகார பீடத்திலுள்ள தலைவர்களில் சிலர் ராஜீயகட்சியும் அரசாங்கமும் ஒன்று என்ற முறையில் பேசுகிறார்கள். ஏதாவது ஒரு ராஜீய கட்சி ஜயித்து சர்க்காரை குறிப்பிட்ட காலத்துக்கு நடத்தலாம். ஆனால் அந்த கட்சியே அரசாங்கம் என்று கருதுவது ஜனநாயகத்துக்கு முரணானது. இக்காலத்தில் கட்சியையும் அரசாங்கத்தையும் ஒன்றாகக் கருதும் மனோபாவம் எளிதில் வேரூன்றி விடுகிறது. அத்தகைய யதேச்சாதிகாரப் போக்கைத் தடுப்பது அவசியம்.

பிரான்ஸில் அட்மினிஸ்டிரேடிவ் கோர்ட்டுகள்

இந்த சந்தர்ப்பத்தில் ஐரோப்பாக் கண்டத்தில், முக்யமாக பிரான்ஸ் தேசத்தில் வழங்கும் அட்மினிஸ்டிரேடிவ் கோர்ட்டுகள் (Administrative Courts) என்ற நீதி ஸ்தாபனங்களை கவனிக்கலாம். பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளில் சர்க்கார் அதிகாரிகளுக்கு விசேஷ பாதுகாப்பு ஒன்றும் இல்லை. அவர்களும் இதர பிரஜைகளைப்போல் கோர்ட்டுகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்கள். உத்தியோக சம்பந்தமான காரியங்களால் ஏற்பட்ட நஷ்டங்களுக்கு நடவடிக்கைகளைத் தொடருமுன் வியாஜ்ஜிய மூலத்தை வியக்தமாகத் தெரிவித்து முன்னறிவிப்பு நோட்டீஸ் கொடுக்கவேண்டும், என்று மட்டில் விதிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் நிர்வாகக் கோர்ட்டுகள் (அட்மினிஸ்டிரேடிவ் கோர்டுகள்) உள்ள நாடுகளில் சர்க்கார் நிர்வாகிகளைப் பொருத்த சட்டம் என்ற விசேஷச் சட்டத்தில் காணப்படும் முறைப்படி பாதுகாப்பு இருக்கிறது. சாதாரணப் பிரஜைகளுக்கும் நிர்வாக அதிகாரிகளுக்கும் இடையில் உள்ள உறவுகள், அந்த அந்த அதிகாரிகளைப் பொறுத்து பிரஜைகளுக்குள்ள பாத்தியங்கள், கடமைகள், இவைகளை ஸ்தாபிக்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகள்—இவ்விஷயங்களை ஒழுங்குபடுத்தும் விதிகள் நிர்வாகச் சட்டம் என்று சொல்லப்படுகிறது. இச்சட்டம் அமுலிலுள்ள நாடுகளில் சாதாரண நீதி ஸ்தாபனங்களில் குற்ற வழக்குகளும் பிரஜைகளுக்கிடையே ஏற்படும் வழக்குகளும் விசாரிக்கப்படுகின்றன. அட்மினிஸ்ட்ரேடிவ் கோர்ட்டுகளில், (1) சர்க்காருக்கும் அதன் ஊழியர்களுக்கும் இடையே உள்ள விவகாரங்களும் (2) சாதாரண பிரஜைகளுக்கும் சர்க்கார் நிர்வாக உத்தியோகஸ்தர்களுக்கு மிடையே ஏற்படும் விவகாரங்களும் விசாரிக்கப்படுகின்றன. இப்படி இரண்டு ரக கோர்ட்டுகளில் குறிப்பிட்ட

வழக்கில் அல்லது பிரச்னையில் எந்த ரக கோர்ட்டுக்கு அதிகாரம் என்பதை முடிவு செய்ய 'இன்டிபென்டென்டு கான்பிலிக்ட் கோர்ட்டு" (Independent Coflict Court) என்ற ஸ்தாபனம் இருக்கிறது.

இதர மன்றங்கள்

சமூக நீதியை லட்சியமாகக்கொண்ட பல புதுச் சட்டங்கள் பல விஷயங்களில் தகராறுகளைத் தீர்க்க சாதாரண கோர்ட்டுகள் அல்லாத விசேஷ மன்றங்களை சிருஷ்டிக்கின்றன. முன்போல் அவரவர் இஷடப்படி ஒப்பந்தங்கள் செய்துகொள்ளலாம். அவைகளில் சர்க்கார் தலையிடலாகாது என்ற கொள்கை மறைந்துவிட்டது. முக்கியமாக தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் இடையில் ஏற்படும் தகராறுகளைத் தீர்க்க தொழில் கோர்ட்டுகள் (மன்றங்கள்) ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. வரிகளை நிர்ணயம் செய்வதில் வரி வசூல் இலாகாவைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கே அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. சர்க்கார், பிரஜைகளின் சொத்துக்களை பொதுக்காரியங்களுக்காக ஆர்ஜிதம் செய்வதில் நஷ்ட ஈட்டை நிர்ணயம் செய்ய விசேஷ கோர்ட்டுகளை ஸ்தாபிப்பது உத்தேசத்தில் இருந்து வருகிறது. இம்மாதிரியாக ஏற்படும் விசேஷக் கோர்ட்டுகளில் நீதி செலுத்தும் அதிகாரிக்கு சட்டத்தில் அனுபவம் இருந்தால் மட்டும் போதாது. அந்தந்த விஷயத்திலோ தொழிலிலோ தேர்ச்சி பெற்றவரையும் தொழில் நுணுக்க விஷயங்களில் அபிப்பிராயம் கூற நீதிபதிக்கு உதவியாக நியமிக்கவேண்டும்.

ஹைகோர்ட்டின் மேன்பார்வை

கோர்ட்டுகள் எல்லாம், சாதாரண கோர்ட்டுகள் ஆனாலும் சரி, விசேஷ மன்றங்கள் ஆனாலும் சரி, அந்தந்த ராஜ்யத்திலுள்ள ஹைகோர்ட்டின் மேன்பார்வைக்கு உள்பட்டவை. அதாவது கோர்ட்டுகளிலும் மன்றங்களிலும் நியாயமான முறையில் நடவடிக்கைகள் நடக்கின்றனவா என்று அறிய, ரிகார்டுகளைத் தருவித்துப் பார்க்க ஹைகோர்ட்டு அதிகாரம் கொண்டது. நீதி செலுத்தும் உத்தியோகஸ்தர்களுக்கு (Judicial service) வேலை பார்க்கும் இடங்களைக் குறிப்பிடுவது, வரிசைக் கிரமத்தில் உயர்த்துவது, ரஜா அளிப்பது இவையெல்லாம் ஹைகோர்ட்டின் ஆதிக்கத்துக்கு உள்பட்டவை. ஜில்லா நீதிபதி ஸ்தானத்துக்கு

நியமனம் ஹைகோர்ட்டின் சிபார்சுப்படி செய்யப்படவேண்டியது. கீழ் வரிசை உத்தியோகங்கள் பப்ளிக் ஸர்விஸ் கமிஷனைக் கலந்துகொண்டு கவர்னரால் பூர்த்தி செய்யப்படும்.

கோர்ட்டு ஜுரிஸ்டிக்ஷனுக்கு உள்படாத விஷயங்கள்

(1) இந்திய சர்க்காருக்கும் இந்திய சமஸ்தானாதிபதி எவருக்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தங்கள் சம்பந்தமாக, சுப்ரீம் கோர்ட்டு உள்பட, எந்தக் கோர்ட்டுக்கும் ஜுரிஸ்டிக்ஷன் இல்லை. அவ்வித ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கையை வியாஜ்ஜிய மூலமாகக் கொண்டு, ஒப்பந்தம் செய்துகொண்ட எந்த நபரும் எந்தக் கோர்ட்டிலும் தாவா செய்ய முடியாது. ஆனால் அவைகளில் இருந்து எழும் பிரச்னைகளைப் பொறுத்து, சுப்ரீம் கோர்ட்டின் அபிப்பிராயத்தை, ஜனாதிபதி குறிப்பு மூலம் கோரலாம் என்று கண்டிருக்கிறோம்.

(2) ஜல வசதிகள் சம்பந்தமாக ராஜ்ய சர்க்கார் அல்லது சர்க்கார்களின் புகாரின்பேரில் ஏற்படும் தகராறுகளில், சுப்ரீம் கோர்ட்டு உள்பட, எந்தக் கோர்ட்டுக்கும் ஜுரிஸ்டிக்ஷன் இல்லை என்று, பார்லிமெண்டு சட்டம் இயற்றலாம். அவைகளை விசாரிக்க வேறு ஏற்பாடு செய்யலாம்.

(3) தேர்தலுக்காக தொகுதிகள் நிர்ணய விஷயமாகவும் எந்தக் கோர்ட்டுக்கும் அதிகாரம் இல்லை. தேர்தல் சம்பந்தமான விவகாரங்களை விசாரிக்க, பார்லிமெண்டு தகுந்த ஏற்பாடு செய்யலாம். சாதாரணக் கோர்ட்டுகளுக்கு ஜுரிஸ்டிக்ஷன் இல்லை. அவைகளை விசாரிக்க விசேஷ மன்றங்களை பார்லிமெண்டு சட்ட மூலம் ஏற்படுத்தலாம்.

நிதி உறவுகள்

இந்தியாவின் ஆளுகையை பிரிட்டிஷ் மன்னர் ஏற்றுக்கொண்டது முதல் (1858ஆ), இந்தியாவின் வரவு செலவு பூராவும் ஒரே கணக்கில் கொண்டுவரப்பட்டது. மாகாணங்களில் வசூல் செய்யப்பட்ட வருமானங்கள் செலவுகள் உள்பட, இந்திய சாம்ராஜ்ய வரவு செலவுக் கணக்கு என்றஒரே கணக்கில் கொண்டுவரப்பட்டன. ஆனல் இந்தப் பெரிய தேசத்தின் எல்லா பாகங்களிலும் ஏற்படும் செலவு, வசூல் செய்யும் முறைகளை ஓரிடத்திலிருந்து நடத்துவது என்பது சாத்தியமில்லாத காரியம். சில வரிகளை வசூல் செய்வதும் செலவுகளைச் செய்வதும் நடைமுறையில் மாகாணங்களுக்கே விடப்பட்டன. 1871-ம்ஆ முதல் மத்திய சர்க்காரின் வரவு செலவுக்கும் மாகாண சர்க்கார்களின் வரவுசெலவுக்கும் இடையே உறவுகள் ஐந்து வருஷங்களுக்கு ஒரு தடவை ஏற்படும் ஒப்பந்தங்கள் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்டன. இவ்வொப்பந்தங்களின்படி சில வரிகள் பூராவும் அல்லது ஒரு பகுதியும் இதர வருமானங்களில் சிலதும் மாகாணங்களுக்குக் கொடுக்கப்பட்டன. அந்தந்த மாகாணத்தில் வசூலாகும் வருமானங்கள் மாகாண நிர்வாகச் செலவின் ஒரு பகுதிக்கு உபயோகப் படுத்த அதிகாரம் அளிக்கப்பட்டது. இத்தகைய இனங்களைத் தவிர, ஒவ்வொரு மாகாணத்திற்கும் மத்திய சர்க்காரால் செலவுக்காக மான்யம் கொடுக்கப்பட்டு வந்தது. மாகாணங்களுக்காக ஒதுக்கப்பட்ட வரி இனங்களை சரியான முறையில் வசூல் செய்து சிக்கனமாகச் செலவுசெய்து நிர்வகிப்பதில் மாகாணங்களுக்கு அக்கறை ஏற்பட்டது. ஏனென்றல் அம்முறைப்படி சரியான நிர்வாகத்தால் மிகுதியான தொகைகள் அந்தந்த மாகாணத்திற்கு வரவு வைக்கப்பட்டது. நாளாவட்டத்தில் மாகாணங்களின் ஆதிக்கத்தில் விடப்பட்ட வருமான இனங்கள் அதிகரிக்கப் பட்டன. மாகாணங்களுக்கு பொறுப்பு ஏற்பட்ட இனங்களில்

நிதியின் சரித்திரம்

விருத்தி செய்வதற்கு வசதிகள் ஏற்பட்டன. இந்த ஏற்பாடுகளின்படி மாகாண நிதி ஸ்திரமாயிற்று. சில வரிகளிலிருந்து கிடைத்த வருமானங்கள் மத்திய சர்க்காராலும் மாகாண சர்க்காராலும் பாகம் செய்துகொள்ளப்பட்டன. குறிப்பிட்ட செலவுகளுக்கு மத்திய சர்க்கார் மான்யங்களை அளிக்கலாம். ஆனால் அவைகளைப் பொறுத்து மத்திய சர்க்கார் விதிக்கும் நிபந்தனைகளுக்கு உள்பட்டு மாகாண சர்க்கார்கள் நடக்கவேண்டும். மாகாண சர்க்கார்களுக்கு கடன் வாங்க அதிகாரம் கிடையாது. மத்திய சர்க்கார் கடன்களை வாங்கி குறிப்பிட்ட நிபந்தனைகளின்பேரில் மாகாணங்களுக்குக் கொடுத்து வந்தார்கள்.

இந்த முறையில், 1919-௵த்தில் மான்டேகுசெம்ப்ஸ்போர்டு திருத்தங்களின்படி சட்டமாக்கப்பட்ட இந்தியா கவர்ன்மெண்டு ஆக்டால், அடிப்படையான மாறுதல்கள் செய்யப்பட்டன. மத்திய சர்க்காருக்கும் மாகாண சர்க்கார்களுக்கும் தனித்தனியாக வருமானங்களும் செலவுகளும் வகுக்கப்பட்டன. சில வரி வருமானங்களை பாகிப்பது நிறுத்தப்பட்டது. வருமானங்களில் சில இனங்கள் மாகாணங்களே ஏகதேசமாக வசூலித்து அடையும்படியாய் ஒதுக்கப்பட்டன. அவைகளை விதிப்பதும், விருத்தி செய்வதும் மாகாணங்களின் பொறுப்பு

1919 ௵த்தில் மாறுதல்கள்

இதர இனங்கள் மத்திய சர்க்காரைச் சார்ந்தன. செலவு விஷயங்களிலும் அதே முறை அனுஷ்டிக்கக்பட்டது. சில இலாக்காக்கள் மாகாணங்களின் ஏகதேச‘ஆதிக்கத்தில் விடப்பட்டன. அவைகளில் சில, மந்திரிகளின் கீழ் வைக்கப்பட்ட மாற்றப்பட்ட இலாக்காக்கள், இதர இலாக்காக்கள் நிர்வாக கவுன்ஸிலர்களின் கீழுள்ளவை. இந்த இரட்டையாட்சி இலாக்கா செலவுகள் இருவிதமாகப் பிரிக்கப்பட்டன. சட்டசபை வோட்டு செய்யக்கூடியவை, சட்டசபை வோட்டுக்கு வரக்கூடாதவை, என்பன இப்பாகுபாடு. அப்படி சட்டசபை வோட்டு செய்யக்கூடிய இனங்களிலும், அவற்றில் சிலவற்றை சட்டசபை நிராகரித்தால், கவர்னர் அத்தாட்சி செய்து செலவு திட்டத்தில் சேர்த்துவிடலாம். மாகாணங்களுக்குக் கடன் வாங்கும் உரிமையும் சில நிபந்தனைகளின் பேரில் அளிக்கப்பட்டது. இந்த ஏற்மாடுகளின் விளைவாக மத்திய சர்க்காருக்குப் போதுமான வருமானம் இல்லாமல் போய்விட்டது. மத்திய சர்க்காரின் செலவைச் சரிக்கட்ட மெஸ்டன் கமிட்டி தீர்ப்புப்படி, மாகாணங்கள் மத்திய

சர்க்காருக்குக் காணிக்கைகளைச் செலுத்தவேண்டியிருந்தது. அப்படிப்பட்ட காணிக்கைகள் 1926-7ல் ரத்து செய்யப்பட்டன. குறிப்பிட்ட காரியங்களுக்காக மாகாணங்களுக்கு மத்திய சர்க்கார் மான்யம் அளிப்பது ரத்து செய்யப்படவில்லை.

1919-ம் ஆண்டு முதல் 1935-ம் ஆண்டு வரை வரி வருமானங்களின் நிலைமையை கவனிப்போம். 1919-ம் வருஷத்து மாறுதல் படி வருமான வரி நீங்கலாக நேர்முகமான வரிகள் மாகாணங்களுக்கு அளிக்கப்பட்டன. சுங்கம் போன்ற மறைமுக வரிகளை மத்திய சர்க்கார் வைத்துக்கொண்டனர்.

1919-35 நிதி நிலைமை

1923-ம் ஆண்டு முன் நில வரிதான் உயர்ந்த வருமான இனமாக யிருந்தது. அதன் மொத்தத் தொகை 35 கோடி ரூபாய்கள். அவ்வருஷம் முதல் சுங்கத்தீர்வை அதிகரிக்கப்பட்டு சுங்க வருமானம் எல்லா வரிகளிலும் முதல் ஸ்தானத்தைப் பெற்றது, மாகாணங்களுக்குக் கிடைத்த மறைமுகமான வரிகள், கலால், விற்பனை வரிகள். காங்கிரஸின் லக்ஷியம் பூர்ண மது விலக்கு, ஆகவே நாளடைவில் கலால்வரி வருமானம் குறைந்துவிடும். அதை சரிக்கட்ட முதன் முதலில் சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் சர்க்காரால் விற்பனை வரி போடப்பட்டது. நிலவரி வருமானம் அபிவிருத்திக்கு இடம் கொடுக்காதது. பிரஸ்தாப காலத்தில் மாகாண வரி வருமானங்கள் குறைந்தன, ஆனால் மத்திய சர்க்காருக்குக் கொடுக்கப்பட்ட வரிகள் விருத்தியடைந்தன.

மாகாண வரி வருமானங்கள் அபிவிருத்திக்கு இடம் அளிக்காத நிலைமையில், செலவு இலாக்காக்கள் நாளுக்கு நாள் அதிகப் பணத்தைக் கோருபவைகளாக இருந்தன. மந்திரிகளிடம் மாற்றப்பட்ட இலாக்காக்கள்—கல்வி, சுகாதாரம், ஸ்தல ஸ்தாபனம், தொழில் முதலியவைகளில் மேன்மேலும் அதிகச் செலவு செய்ய வேண்டிய அவசியம் இருந்தது. கடன் வாங்க மாகாணங்களுக்கு வசதிகள் குறைவு. இந்நிலைமையின் விளைவாக அபிவிருத்தித் திட்டங்கள் பணமில்லாமல் நிறுத்திவைக்கப்பட்டன. 1935ம் ஆண்டு இந்தியா கவர்ன்மெண்டு ஆக்டு நிறைவேறிய காலத்தில் நீண்ட கால வியாபார மந்தத்தால், மத்திய ச்ர்க்கார் வருமானங்களும் குன்றிவிட்டன.

அந்த ஆக்டுப்படி மத்திய சர்க்காருக்கும் மாகாணங்களுக்கும் இடையே வரவு செலவு இனங்கள் கச்சிதமாகப் பிரிக்கப்பட்டன.

மத்திய சர்க்காருக்கு ஒதுக்கப்பட்ட வரிகளில் முக்கியமானவை வருமாறு: சுங்க வரி, ஏற்றுமதி வரிகள், மதுபானங்கள் நீங்கலான இதர பொருள்களின் பேரில் உற்பத்தி (எக்ஸைஸ்) வரி, கம்பெனி வரி, விவசாய வருமானம் நீங்கலான வருமான வரி, முதலீட்டின்பேரில் வரி, விவசாய நிலம் நீங்கலாக சொத்துக்களுக்கு வாரீஸ் வரிகள், வியாபார தஸ்தாவேஜிகளின் பேரில் (பில்கள், செக்குகள், புரோ நோட்டுகள்) ஸ்டாம்பு வரிகள், ரயில்வே கட்டணங்களின்பேரில் வரிகள்.

1935-ஆம் இந்தியா கவர்ன்மெண்டு ஆக்டு

மாகாண வரி வருமானங்களில் முக்கியமானவை வருமாறு: நில வரி, கலால் வரிகள், விவசாய வருமானங்களின் பேரில் வரிகள், விவசாய நில வாரீஸ்வரிகள், தொழில் வரிகள், வாகன வரிகள், விற்பனை வரி, விளம்பர வரி, தமாஷாக்கள் பேரில் வரி, வியாபார தஸ்தாவேஜிகள் நீங்கலான தஸ்தாவேஜிகளுக்கு ஸ்டாம்பு வரிகள், டோல்கள் (உள்நாட்டுச் சுங்கங்கள்).

இவைகளில் சில இனங்களை முனிஸிபாலிடிகள், ஜில்லா போர்டுகள் போன்ற ஸ்தல ஸ்தாபனங்களுக்கு மாகாண சர்க்கார்களால் அளிக்கப்பட்டிருந்தன. பாக்கி இனங்களின் புள்ளி விவரங்களைப் பார்த்ததில் பல மாகாணங்கள் தங்கள் சொந்த ஆதாயங்களைக் கொண்டு வரவு செலவைச் சரிக்கட்ட முடியாது என்று தெரிந்தது. இதர மாகாணங்களில் வரவு செலவைச் சரிகட்ட முடிந்தாலும், அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவது சாத்தியமில்லை என்றும் புலனாயிற்று. இந்தச் சிக்கலுக்குப் பரிகாரம் தேட நிதி விஷயங்களில் நிபுணரான ஸர் ஆட்டோ நிமேயர் என்பவர் அழைக்கப்பட்டார்.

மாகாண வரவு செலவில் துண்டு

1935-ம் ஆண்டு இந்தியா கவர்ன்மெண்டு ஆக்டுப்படி அமுலுக்கு வந்த மாகாண சுய ஆட்சியை ஆரம்பம் செய்யும் பொழுது ஒவ்வொரு மாகாணமும் வரவையும் செலவையும் சரிக்கட்டும்படியான நிலைமையில் வைக்கப்படவேண்டும் என்ற நோக்கத்துடன், மாகாணங்களின் நிதிகளை ஆராய்ச்சிசெய்து, நிமேயர்தீர்ப்பு அளித்தார். எட்டு மாகாணங்களுக்கு உதவி அளிக்க வேண்டும் என்றும், அந்தந்த மாகாணத்துக்குக் கொடுபட வேண்

நிமேயர்தீர்ப்பு

டிய தொகையையும் நிர்ணயித்தார். உதவியளிப்பது இருவகை யாகவும் சிபார்சு செய்தார். மத்திய சர்க்காரால் மாகா ணங்களுக்குக் கொடுபட்ட கடன்களின் வட்டியைத் தள்ளிக் கொடுப்பது அல்லது வரவு செலவில் ஏற்படும் துண்டை சரிக் கட்ட மத்திய சர்க்கார் ரொக்க மான்யம் அளிப்பது, என்ப வையே அந்த இரு வகைகள். இதைத் தவிர மாகாணங்களின் அபிவிருத்தி இனங்களுக்காக வருமான வரியிலிருந்து கிடைக்கும் தொகையின் சரிபாதியை, மாகாணங்களுக்குள் ஜனத்தொகை யையும் வருமான வரி செலுத்துபவர்களின் தொகையையும் பொறுத்து பாகம் செய்தார். இந்தத் தீர்ப்புப்படி வருமான வரி பாகம் செய்யப்பட்டுவருகிறது:

வங்காளம், பீஹார், அஸ்ஸாம், வடமேற்கெல்லை மாகாணம் ஒரிஸ்ஸா, இவ்வைந்து மாகாணங்களைப் பொறுத்தமட்டில் மத்திய சர்க்காருக்குக் கொடுபடவேண்டிய கடன்களை ரத்து செய்ய சிபார்சு செய்யப்பட்டது. சணல் ஏற்றுமதி வரியில் $62\frac{1}{2}$ சத விகிதம் வங்காளம், பீஹார், அஸ்ஸாம், ஒரிஸ்ஸா மாகாணங் களுக்கு அளிக்கப்பட்டது.

புது அரசியல்படி, வரி விதிப்பு செலவு விஷயங்களில், நாடு விடுதலை அடைந்ததற்கு அறிகுறியாக, அடிப்படையான மாறுதல் கள் பல செய்யப்பட்டிருக்கின்றன. 1935-ம் ஆக்டுப்படி அரசாங்க நிதியின் பெரும்பாகத்தைப் பொறுத்து சட்டசபைக்கு முடிவான அதிகாரம் இல்லை. பாதுகாப்பு, ராஜீய இலாகா, உயர்தர விவில் ஸர்விஸ்களின் சம்பளங்களும் பென்ஷன்களும், அயல் நாட்டு விவகாரங்கள், இந்திய சமஸ்தானங்களுடன் உறவுகள், கிறிஸ்தவ மதப் பாதிரிகள் இலாகா-இந்த இனச் செலவுகள் சட்டசபை வோட்டுக்கு விடப்படக்கூடியவை அல்ல. பொது மக்க ளின் பிரதிநிதிகள் இச்செலவுகளை நிராகரித் தாலும் அவைகளுக்கு வேண்டிய வரிகளை மறுத்தாலும், கவர்னர்-ஜெனரல் அத்தாட்சி செய்து வரிகளை விதிக்கலாம், செலவுகளை அனுமதிக்கலாம். கவர்னர்-ஜெனரலின் சுயேச்சையிலும் சொந் தத் தீர்மானத்திலும் செய்யவேண்டிய அலுவல்களுக்கு யுக்தமான பணங்களை கவர்னர்-ஜெனரலின் அத்தாட்சியின்பேரில், நிர்வா கத்தார் எடுத்துக்கொள்ளலாம். மாகாணங்களிலும் அவ்வித

வரி விதிப்பு செலவில் முக்கிய மாறுதல்கள்

மாகவே கவர்னரின் சுயேச்சையிலும் சொந்தத் தீர்மானத்திலும் வைக்கப்பட்ட அலுவல்களுக்கு, மான்யங்களை சட்டசபைகள் நிராகரித்தாலும், பணம் எடுத்துக்கொள்ள கவர்னர்களுக்கு அதிகாம் இருந்தது. நிதி விஷயங்களில் நிர்வாகத் தலைவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த அத்தாட்சி அதிகாரங்கள் மறைந்துவிட்டன. மக்கள் பிரதிநிதி சபைகளுக்குத் தான் முடிவான அதிகாரம். வரி விதிப்பதோ செலவு செய்வதோ சட்டப்படியல்லாது ஆகாது. சட்டம் விதிக்கும் முறை என்னவென்றால், மத்திய சர்க்கார் விஷயத்தில் பார்லிமெண்டின் கீழ்சபையின் முடிவுப்படியும், ராஜ்யங்கள் விஷயத்தில் அந்தந்த ராஜ்யத்தின் கீழ்சபையின் முடிவுப்படியும், வரவு செலவு செய்யப்படவேண்டும்.

பார்லிமெண்டு அல்லது ராஜ்ய சட்டசபைகளின் வோட்டுக்கு விடப்படாத இனங்கள் மிகக் குறைவு. இதர சுதந்திர நாடுகளைப் போலவே இங்கும் உள்ளன. சர்க்கார் தலைவரின் சம்பளங்களும், படிகளும், சுப்ரீம் கோர்ட்டு, ஹைகோர்ட்டுகளின் நீதிபதிகளின் சம்பளங்களும், பென்ஷன்களும், ஆடிடர்-ஜெனரல் சம்பளங்கள், படிகள், இதர செலவுகள், கடன் சுவந்தைகள், சட்டச்சபைகளின் தலைவர்களின் சம்பளங்களும் படிகளும், கோர்ட்டுகளின் டிக்கிரி அல்லது தீர்ப்புகள் படி கொடுபடவேண்டிய தொகைகள், சமஸ்தானாதிபதிகளுக்கு சொந்த செலவுக்காக உறுதியளிக்கப்பட்ட தொகைகள், ஆகியவை மாத்திரம் சட்டசபையின் வோட்டுக்கு விடப்படாத இனங்கள்.

ஜவாப்தாரியான செலவுகள்

யூனியனுக்கும் உறுப்புக்களான ராஜ்யங்களுக்கும் இடையே உள்ள நிதி உறவுகள் சம்பந்தமான ஷரத்துக்கள், ஏற்கனவே 1935-ம் வருஷத்து ஆக்டுப்படியுள்ள ஷரத்துக்களை அனுசரித்தே இருக்கின்றன.

யூனியன் சர்க்காருக்கும் உறுப்புக்களுக்கும் இடையே நிதி உறவுகள்

(1) மத்திய சர்க்காரால் விதிக்கப்பட்டு, ஆனால் ராஜ்ய சர்க்கார்களால் வசூலித்து எடுத்துக் கொள்ளப்படும் வரிகள்-யூனியன் ஜாப்தாவில் கண்ட ஸ்டாம்பு வரிகளும், ஆடம்பரப் பொருள்கள், மருந்துப் பொருள்கள் இவைகளின்பேரில் உற்பத்தி வரிகளும்.

(2) மத்திய சர்க்காரால் விதிக்கப்பட்டு, ஆனால் ராஜ்யங்களுக்கு ஒதுக்கப்பட்ட வரிகள்: விவசாய நிலம் நீங்கலான சொத்துக்கு வாரீஸ் வரிகளும் (மரண

வரி); ரயில், கப்பல், விமான மார்க்கங்களாக பிரயாணம் செய்யும் பிரயாணிகள், சரக்குகள் பேரில் பிரவேச வரிகள்; ரயில்வே கட்டணங்களின் பேரில் வரிகள், செய்திப் பத்திரிகைகள் விற்பனை வரி, அப்பத்திரிகைகளிலுள்ள விளம்பரங்களின் பேரில் வரிகள்.

(3) விவசாய வருமானம் நீங்கலான இதர வருமானங்களின் பேரில் வசூலிக்கப்படும் வரிகளிலிருந்து கிடைக்கும் தொகையை மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்கார்களும் பிரிவினை செய்துகொள்ள வேண்டியது. பிரிக்கவேண்டிய முறை, சதவிகிதம், இவைகள் ஜனாதிபதி உத்தரவுப்படி நிர்ணயிக்கப்படும்.

(4) சணல் ஏற்றுமதி வரிகளில் ஒரு பாகம் சணல் உற்பத்தியாகும் ராஜ்யங்களுக்கு மான்யமாக கொடுக்கப்படவேண்டும்.

(5) முதல் பாராவில் கண்ட கலால் வரிகள் நீங்கலாக கலால் வரிகளை மத்திய சர்க்கார் விதித்து வசூலும் செய்ய வேண்டியது; ஆனால் அவைகளின் நிகர வருவாய்களை முழுதிலுமோ, குறிப்பிட்ட பாகத்தையோ, மான்யமாக ராஜ்யங்களுக்கு அளிக்கவேண்டும் என்று, பார்லிமெண்டு சட்டம் செய்யலாம்.

(6) மேற்கண்ட வரி விபாகங்களைத் தவிர, ராஜ்யங்களுக்கு மத்திய சர்க்கார் நிதியிலிருந்து உதவி மான்யங்கள், பார்லிமெண்டு சட்டமூலம் அளிக்கப்படலாம். பலான ராஜ்யங்களிலுள்ள பூர்வீகக் குடிகளின் க்ஷேமாபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய அசல் தொகைகளும், நிரந்தர செலவுக்கு வேண்டிய தொகைகளும், ராஜ்யங்களிலுள்ள ஷெடியூல்ட் பிரதேசங்களின் நிர்வாகத் தரத்தை இதரப் பிரதேசங்களிலுள்ள நிர்வாகத் தரத்துக்குக் கொண்டு வருவதற்கு வேண்டிய செலவிற்கும், மான்யங்கள், ராஜ்யங்களுக்கு அளிக்கப்படவேண்டும்.

(7) செய்திப் பத்திரிகைகள் அல்லாத சரக்குகளின் விற்பனையின் பேரில் வரி விதிப்பு ராஜ்ய ஜாப்தாவில் கண்டிருந்த போதிலும், ராஜ்யங்கள் அவ்வதிகாரத்தைச் செலுத்துவதற்கு சில தடைகள் விதிக்கப்பட்டு இருக்கின்றன. ராஜ்யத்துக்கு வெளியே நடக்கும் விற்பனைக்கோ வாங்குதலுக்கோ வரி விதிக்க ராஜ்யத்திற்கு அதிகாரம் கிடையாது. இந்தியாவில் இருந்து ஏற்றுமதியாகும் பொருள்களுக்கும், இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கும், ராஜ்யம் வரி விதிக்கலாகாது. ராஜ்

யங்களுக்கிடையே நடக்கும் வியாபாரம் அல்லது போக்குவரத்தில் சம்பந்தப்பட்ட சரக்குகளின் பேரிலும் வரி விதிக்க ராஜ்யத்துக்கு அதிகாரம் இல்லை; ஆனால் பார்லிமெண்டு சட்ட மூலம் அனுமதிக்கலாம். பொது மக்களுக்கு அத்தியாவசியமானவை என்று பார்லிமெண்டால் கூறப்பட்டுள்ள சரக்குகளின்பேரிலும், ராஜ்யங்கள், ஜனாதிபதியின் அனுமதியன்னியில் வரி விதிக்க முடியாது. சில மாகாணங்களில் அமுலிலுள்ள விற்பனை வரித் திட்டம் இந்த ஷரத்துக்கு முரணாக இருப்பதால், ஷரத்துக்கு அனுசரணையாக வரி விதிப்பதைத் திருத்திக்கொள்ள அம் மாகாணங்களுக்கு இரண்டு வருஷகாலம் அவகாசம் அளிக்கப் பட்டிருக்கிறது.

பொதுவாக, மத்திய சர்க்காரின் சொத்துக்கு ராஜ்ய வரி கிடையாது, அதே போல, ராஜ்ய சர்க்காரின் சொத்துக்கு மத்திய சர்க்கார் வரி கிடையாது; ஆனால் ராஜ்ய சர்க்கார் நடத்தும் வியாபார வருமானங்களுக்கும் சொத்துக்களுக்கும் வரி விதிவிலக்கு இல்லை.

மத்திய சர்க்கார் உபயோகப் படுத்தும் மின்சாரம், ரயில்வேக் களுக்கு வேண்டிய மின்சாரம், இவை பேரில், பார்லிமெண்டு சட்டமூலம் அல்லாது, ராஜ்யம் வரி விதிக்கலாகாது.

பல ராஜ்யங்கள் வழியாக ஓடும் நதி அபிவிருத்தித் திட்டத்தில் உபயோகப்படும் ஜலத்துக்கும் மின்சாரத்திற்கும் ராஜ்யங்கள் வரி விதிக்கலாகாது; ஆனால் இவ் விஷய சம்பந்தமாய் ஜனாதிபதி உத்தரவின் பேரில் வரி விதிக்கப்படலாம்.

நிதிக் கமிஷன்

யூனியனுக்கும் ராஜ்யங்களுக்கும் இடையே நிதி உறவுகளை அவ்வப்போது பரிசீலனை செய்ய நிதிக் கமிஷனை நியமிக்க வசதி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. புது அரசியல் ஆரம்பத்திலிருந்து இரண்டு வருஷ காலாவதியிலும், அப்பால் பிரதி ஐந்து வருஷ காலாவதியிலோ, முந்தியோ, தலைவரும் நான்கு இதர அங்கத்தினர்களையும் கொண்ட நிதிக் கமிஷனை ஜனாதிபதி நியமிக்கவேண்டும். அங்கத்தினரின் யோக்யதாம்சங்களையும் நியமன முறையையும் பார்லிமெண்டு சட்டமூலம் நிர்ணயிக்கலாம். நிதிக்கமிஷன் அடியிற் கண்ட விஷயங்களைப் பொறுத்து ஜனாதிபதிக்கு சிபார்சுகளை அல்லது யோசனைகளைக் கூறவேண்டும்.

(1) இந்த அத்தியாயத்தில் கண்டபடி யூனியனுக்கும் ராஜ்யங்களுக்கும் இடையே வரிகளின் நிகர வருவாயைப் பகிர்வது, அப்படி ராஜ்யங்களுக்கு ஒதுக்கப்படும் தொகைகளை ராஜ்யங்களிடையே விநியோகம் செய்வது ;

(2) இந்தியாவின் ஐக்கிய நிதியிலிருந்து ராஜ்யங்களுக்கு மான்யங்கள் அளிக்கும் விஷயமாக அனுஷ்டிக்க வேண்டிய தத்வங்கள் ;

(3) இந்திய சர்க்காருக்கும் ஏற்கனவே சமஸ்தானம் என்று அழைக்கப்பட்ட முதல் ஷெடியூலின் B பாகத்தில் கண்ட ராஜ்யத்துக்கும் நிதி விஷயமாக ஏற்பட்ட ஒப்பந்தத்தை நீடித்தல் அல்லது மாற்றியமைத்தல் ;

(4) நல்ல நிதி நிலைமையை உத்தேசித்து ஜனதிபதியால் குறிப்பிடப்படும் இதர விஷயம்.

நிதிக் கமிஷன் செய்யும் சிபார்சு ஒவ்வொன்றும், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விளக்கும் குறிப்புடன், பார்லிமெண்டு சபைகள் முன் ஜனதிபதி ஆஜர் செய்விக்க வேண்டும்.

சமஸ்தானங்களின் நிதி இணைப்பு

நிதி விஷயங்களில் சமஸ்தானங்கள் என்று அழைக்கப்பட்ட முதல் ஷெடியூலின் B பாக ராஜ்யங்களையும் இந்தியாவுடன் 1950 ஹு ஏப்ரல் மீ முதல் இணைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் முடிவு அடைந்து விட்டன. இந்த விஷயத்தில் சமஸ்தானங்களையும் மாகாணங்களுக்கு நிகராகக்கொண்டு எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை முதல் அத்தியாயத்தில் விஸ்தாரமாக கவனித்திருக்கிறோம்.

நிதி நெருக்கடி வந்தால்

நிதி விஷயங்களில், நெருக்கடியான நிலைமை ஏற்பட்டால், ராஜ்ய சர்க்கார்களின் பேரில் பயன் அளிக்கும் முறையில் மத்திய சர்க்கார் ஆதிக்கம் செலுத்த, 360 வது பிரிவில் வசதி செய்யப்பட்டிருக்கிறது. நிதி விஷயத்தில், இந்தியாவின் அல்லது இந்தியாவின் எந்த பாகத்தினுடையவும் மதிப்புக்கு அபாயம் ஏற்பட்டாலோ அல்லது ஏற்படக்கூடியதாக இருந்தாலோ, ஜனதிபதி அந்நிலைமையை விளக்கி, நெருக்கடிப் பிரகட

னத்தைப் பிறப்பிக்கலாம். நாட்டின் பந்தோபஸ்த்துக்காக பிறப்பிக்கப்படும் நெருக்கடிப் பிரகடனம்போல, நிதி நெருக்கடிப் பிரகடனத்துக்கும் இரண்டு மாத அமுலுண்டு; பார்லிமெண்டு சபைகளில் சமர்ப்பிக்கப்பட்டு கெடுவுக்கு முன் சபைகளால் அங்கீகரிக்கப்பட்டால் மேற்கொண்டு நீடிக்கப்படலாம். அப்படிப்பட்டப் பிரகடனம் அமுலிலுள்ள காலத்தில் அடியிற்கண்ட உத்தரவுகளை மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்காருக்குப் பிறப்பிக்கலாம்.

(i) மத்திய சர்க்கார் உத்தரவில் கண்டபடி நிதி சம்பந்தமாக ஒழுங்கான முறைகளையும் கொள்கைகளையும் அனுஷ்டிப்பது;

(ii) எந்த ரகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், ஊழியர்களின் சம்பளங்கள், படிகளைக் குறைப்பது; (iii) நிதி மசோதாக்களை ஜனாதிபதியின் ஆலோசனைக்கு நிறுத்தி வைப்பது. மேலும், சுப்ரீம் கோர்ட் ஹைகோர்ட்டுகளின் நீதிபதிகளின் சம்பளங்களையும் படிகளையும் ஜனாதிபதி குறைக்கலாம்.

கடன் வாங்குதல்

பார்லிமெண்டு சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட வரம்புக்குள், இந்தியாவின் ஐக்கிய நிதியின் ஜவாப்தாரியின் பேரில், யூனியன் (மத்திய) சர்க்கார் கடன் வாங்கலாம், உத்திரவாதமும் அளிக்கலாம்.

ராஜ்யச் சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட வரம்புக்குள், ராஜ்யத்தின் ஐக்கிய நிதியின் ஈட்டின் பேரில், ராஜ்ய சர்க்கார் இந்தியாவிற்குள் கடன் வாங்கலாம், உத்தரவாதமும் அளிக்கலாம்.

மேற்கண்ட பார்லிமெண்டு சட்ட வரம்புக்குள்பட்டு, மத்திய சர்கார் ராஜ்ய சர்க்காருக்குக் கடன் கொடுக்கலாம். அல்லது ராஜ்ய சர்க்காரின் கடனுக்கு உத்தரவாதம் அளிக்கலாம்.

மத்திய சர்க்காருக்குக் கொடுபட வேண்டிய கடனோ, மத்திய சர்க்கார் உத்தரவாதம் அளித்த கடனோ பாக்கி இருந்தால், மத்திய சர்க்கார் சம்மதம் அன்னியில், ராஜ்ய சர்க்கார் வேறு கடன் வாங்கலாகாது.

ராஜ்யங்களிடையே வியாபாரம், போக்குவரத்து

இந்திய நாடு பூராவிலும் வியாபாரமும் போக்குவரத்தும் எவ்வித தங்குதடை யன்னியில் இருக்கவேண்டும், என்று பொதுப் படையாக அரசியல் சட்டம் கூறுகிறது. இந்தப் பொதுப் படையான கொள்கைக்கு சில விலக்குகள் உண்டு. பொது மக்களின் அக்கறையை முன்னிட்டு பார்லிமெண்டு சட்ட மூலம் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தலாம்.

வியாபாரம், போக்குவரத்து சம்பந்தமாக எந்த ராஜ்யத்திற்கும் சலுகையளிக்கவோ, ராஜ்யங்களுக் கிடையே வேற்றுமையை ஏற்படுத்தவோ, பார்லிமெண்டுக்கோ, ராஜ்யச் சட்ட சபைகளுக்கோ அதிகாரம் கிடையாது. ஆனால் இந்தியாவின் எந்த பாகத்திலாவது சரக்குகளுக்குப் பஞ்சம் ஏற்பட்டால், அந்நிலைமையை சமாளிக்க சலுகை அளிக்கப்படலாம், வேற்றுமை செய்யப்படலாம்

மேலே கூறப்பட்ட ஷரத்துக்கள் இதர ராஜ்யங்களிலிருந்து ஒரு ராஜ்யத்தில் இறக்குமதியாகும் சரக்குகளுக்கு, அந்த ராஜ்யத்தில் தயாரிக்கப்படும் அதே சரக்குகளுக்கு விதிக்கப்படும் வரியைப் போல வரி விதிப்பதையும், அந்த ராஜ்யத்திற்குள்ளோ, ராஜ்யத்துடனே வியாபாரத்திற்கும் போக்குவரத்துக்கும் நியாயமான தடைகளை விதிப்பதையும் பாதிக்கமாட்டா; ஆனால், வியாபாரத்துக்கும் போக்குவரத்துக்கும் தடைகள் ஏற்படுத்தும் விஷயமாக, மசோதா அல்லது திருத்தம் ஜனாதிபதியின் முன் அனுமதியன்னியில் கொண்டுவரலாகாது, ஆர்டினான்ஸு அல்லது அவசரச் சட்டமும் ஜனாதிபதியின் முன்னனுமதியன்னியில் பிறப்பிக்கப்படலாகாது.

இந்திய சமஸ்தானங்கள் என்ற முதல் ஷெடியூலின் B-பாக ராஜ்யங்கள் சம்பந்தமாக மேற்கண்ட தங்குதடை யில்லாத வியா

பாரம் போக்குவரத்து ஷரத்துக்களுக்கு விலக்கு செய்யப்பட்டிருக்கிறது-அதாவது, சமஸ்தானம் எதிலாவது இதர ராஜ்யங்களிலிருந்து இறக்குமதியாகும் சரக்குகளுக்கும் அல்லது சமஸ்தானத்திலிருந்து இதர ராஜ்யங்களுக்கு ஏற்றுமதியாகும் சரக்குகளுக்கும் வரி விதிப்பது சம்பந்தமாக, அச் சமஸ்தானத்துடன் இந்திய சர்க்கார் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். அப்படிப் பட்ட ஒப்பந்தம் பத்து வருஷங்களுக்கு மேல்படாத காலத்திற்கு அமுலில் இருக்கலாம்; ஆனால், ஒப்பந்தம் ஏற்பட்ட ஐந்து வருஷங்களுக்குப் பிறகு, நிதி கமிஷன் செய்யும் சிபார்சின் பேரில், ஜனாதிபதி ஒப்பந்தத்தை ரத்து செய்யலாம் அல்லது மாற்றியமைக்கலாம்.

இந்த அத்தியாயத்தில் கண்ட ஷரத்துக்களின் லட்சியங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய அதிகாரியை நியமிக்க, பார்லிமெண்டு சட்டஞ் செய்யலாம்.

ஜல வசதிகள் சம்பந்தமான தகராறுகள்

கங்கை, யமுனை, கோதாவரி, கிருஷ்ணா, காவேரி போன்ற பெரும் நதிகள் மலைப் பிரதேசங்களில் உற்பத்தியாகி பல ராஜ்யங்களை (மாகாணங்கள், சமஸ்தானங்கள்) வளப்படுத்திக் கொண்டு, கடலில் சங்கமம் ஆகின்றன. நதியோடும் எல்லாப் பிரதேசங்களுக்கும் நதியின் ஜலங்கள் உபயோகமுள்ளவை. நதியின் மேல் பிரதேசத்தில் உள்ள சர்க்காரோ ஜனங்களோ, பெரிய அணை போட்டு ஜலங்களைத் தேக்கி விட்டால், கீழுள்ள பிரதேசங்களையும் ஜனங்களையும் பாதிக்கும். ஆகவே நதியின் கீழ் பாகத்தில் உள்ளவர்களுக்குத் தேவையான ஜலம் கிடைப்பதற்கு ஹானி யன்னியில் மேல் பாகங்களில் அணைக் கட்டு திட்டங்கள் போடப்படவேண்டும். அணை கட்டுவது மட்டும் அல்லாமல் மேல் பாகத்தில் உள்ளவர்கள் இதர வகைகளிலும் கீழ் பாகத்தின் ஜல வசதிக்குத் தீங்கு செய்யலாம். ஏற்கனவே காவேரி நதியில் அணையைக் கட்டும் விஷயமாக மைசூருக்கும் சென்னை மாகாணத்திற்கும் தகராறு ஏற்பட்டது. துங்கபத்ரா நதியில் அணைக்கட்டு சம்பந்தமாக, சென்னை மாகாணம், ஹைதராபாத், மைசூர் சமஸ்தானங்களுக்குள் உடன்பாடு இல்லாமல் வேலை நின்றுவிட்டது. சமீபத்தில் உடன்பாடு ஏற்பட்டு, வேலை நடந்து வருகிறது. இம்மாதிரியாக நதிகள் போன்ற நீருற்பத்திகள் சம்பந்தமாக தகராறுகள் ஏற்பட்டால், பாதிக்கப் பட்ட ராஜ்ய சர்க்கார் ஜனாதிபதிக்கு புகார் செய்யலாம்.

பல ராஜ்யங்கள் வழியாக ஓடும் நதியிலோ, நதிப் பள்ளத் தாக்கிலோ உள்ள ஜலங்களின் உபயோகம், விநியோகம், அல்லது கட்டுப்பாடு சம்பந்தமாக செய்யப்படும் புகாரை அல்லது விவகாரத்தை விசாரணை செய்து தீர்ப்புக் கூற கமிஷன் மன்றங்களை ஏற்படுத்துவது சம்பந்தமாக பார்லிமெண்டு சட்டம் இயற்றலாம். மேலும், அப்படிப் பட்ட புகார் அல்லது விவகாரத்தைப் பொறுத்து சுப்ரீம் கோர்ட்டுக்கோ வேறெந்த கோர்ட்டுக்கோ ஜூரிஸ்டிக்ஷன் (விசாரித்துத் தீர்ப்புக் கூறும் அதிகாரம்) இல்லையென்றும் பார்லிமெண்டு சட்டம் இயற்றலாம்.

நெருக்கடி காலங்களில் விசேஷ அதிகாரங்கள்

யுத்தம், வெளிநாட்டு ஆக்கிரமிப்பு, உள்நாட்டுக் கலகம், முதலிய காரணங்களால் நாட்டின் பந்தோபஸ்துக்கு அபாயம் ஏற்படக் கூடும். அப்படி அபாயம் ஏற்படும்பொழுது சாதாரணமாக அமைதி நிலவும் காலத்தில் அனுஷ்டிக்கும் முறைப்படி சர்க்காரை நடத்த இயலாது. சமஷ்டி அரசியலில் ஒரு மத்திய சர்க்காரும் பல உபசர்க்கார்களும் இருப்பதால், நெருக்கடியை சமாளிக்க அவரவர் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளில் வித்தியாசம் ஏற்பட்டு ஒன்றுக்கு ஒன்று முரணான உத்தரவுகளாக ஆகிவிடவும் கூடும். அதனால் குழப்பமும் அபாயமும் அதிகரிக்கும். அப்படிப்பட்ட நெருக்கடிகளை சமாளிக்க மத்திய சர்க்காரின் அதிரிகாரம் நாடு பூராவும் பயன் அளிக்கும் முறையில் செலுத்தப்படவேண்டும். இதற்காக அரசியல் சட்டத்தின், 18-வது பாகத்தில் விசேஷ ஷரத்துக்கள் காணப்பட்டு இருக்கின்றன.

நெருக்கடிப் ப்ரகடனம்

இந்தியாவின் அல்லது நாட்டின் எந்தப் பகுதியினாவது பந்தோபஸ்துக்கு அபாயம் ஏற்படக்கூடியது, அல்லது ஏற்பட்டு இருக்கிறது என்று ஜனாதிபதிக்குத் திருப்திகரமாகத் தோன்றினால், அவ்விதமாக பகிரங்க அறிக்கை மூலம் ஜனாதிபதி தெரிவிக்கலாம். அப்படிப்பட்ட அறிக்கை "நெருக்கடிப் பிரகடனம்" என்று அழைக்கப்படும். பார்லிமெண்டு சபைகளுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். இந்த பிரகடனங்கள் இரண்டுமாத கெடுவில் செலாவணியற்றுப் போகும். ஆனால் அக்கெடுவிற்குள் பார்லிமெண்டு சபைகள் அங்கீகரித்தால் பிரகடனம் நீடித்து அமுலில் இருக்கும்.

ராஜ்யங்களுக்குக் கட்டளைகள்

அரசியல் சட்டத்தில் அதிகார விபாகம் எப்படி இருந்தபோதிலும், நெருக்கடிப் பிரகடனம் அமுலிலுள்ள வரையில் மத்திய யூனியன் சர்க்கார் ராஜ்யங்களின் நிர்வாக விஷயமாய் ராஜ்ய சர்க்கார்களுக்குக் கட்டளைகளைப் பிறப்பிவிக்க உரிமையுண்டு. மத்திய சர்க்காரின் உத்தரவுகளை ராஜ்ய சர்க்கார்கள் நிறைவேற்றிவைக்கக் கடமைப்பட்டவர்கள்.

பார்லிமெண்டுக்கு விசேஷ அதிகாரம்

பார்லிமெண்டுக்கு சட்டமியற்ற அதிகாரங்கள் உள்ள விஷயங்களில், இந்திய சர்க்கார் அல்லது இதர அதிகாரிக்கு அவ்விஷயங்களைப் பொறுத்து அதிகாரங்களை அளிக்கவும் கடமைகளைச் சுமத்தவும் பார்லிமெண்டுக்கு அதிகாரம் ஏற்படுகிறது.

சட்டம் இயற்ற அதிகாரம்

தவிரவும், 7-வது ஷெடியூலில் ராஜ்யச் சட்டசபைகள் சட்டமியற்றக்கூடிய ஜாபிதாவில் கண்ட விஷயங்களைப் பொறுத்தும், பார்லிமெண்டு, நாடு பூராவுக்குமோ எந்த பகுதிக்கோ சட்டமியற்ற அதிகாரம் பெறுகிறது. அப்படி பார்லிமெண்டு இயற்றும் சட்டத்துக்கும் ராஜ்யச் சட்டத்துக்கும் முரண்பாடு இருந்தால், பார்லிமெண்டு சட்டம் மேலானது என்று ஏற்கனவே கண்டிருக்கிறோம்.

நிதி ஷரத்துக்களை நிறுத்தி வைக்கலாம்

வரிகள் விதிப்பது, வருமானங்களைப் பகிர்ந்து கொள்வது, மான்ய விநியோகம் இவை சம்பந்தமாக, அரசியலின் 269—279 பிரிவுகளில் கண்ட ஷரத்துக்களை எல்லாவற்றையும் அல்லது எதையேனும், அமுலில்லாதபடி நிறுத்திவைக்க, ஜனாதிபதி உத்தரவு பிறப்பிவிக்கலாம்.

நெருக்கடிப் பிரகடனம் அமுலிலுள்ள காலத்தில் அரசியல் 19-வது பிரிவில் கண்டபடி சங்கங்கள் அமைப்பது, நாடு பூராவும் தடையன்னியில் நடமாடுவது, சொத்து வாங்குவது விற்பது சம்பந்தமான பொது சுதந்திரங்களை உரியதாக்கும் ஷரத்துக்கள், அரசாங்கம் இயற்றும் சட்டங்களை பாதிக்காது: தவிரவும்,

ஜீவாதார உரிமைகளை நிறுத்தி வைக்கலாம்

பிரஜைகளுக்கு உரியதாக்கப்பட்டிருக்கும் ஜீவாதார உரிமைகளைக் கோர்ட்டு மூலம் அமுல் செய்யும் உரிமையையும், கோர்ட்டுகளில் விசாரணையில் உள்ள அவ்வித நடவடிக்கைகளையும் நிறுத்திவைக்க, ஜனதிபதி உத்தரவு பிறப்பிக்கலாம். அப்படிப்பட்ட உத்தரவில் குறிப்பிட்ட ஜீவாதார உரிமைகள் மட்டில் பாதிக்கப்படும், உத்தரவு, நாடு பூராவிலும் அல்லது ஒரு பகுதியில், உத்தரவில் குறிப்பிட்டபடி வியாபிக்கும். அவ்வித உத்தரவு பார்லிமெண்டு சபை ஒவ்வொன்றிலும் ஆஜர் செய்யப்பட வேண்டும், அதன்பேரில் பார்லிமெண்டு தகுந்த நடவடிக்கையை எடுத்துக் கொள்ளலாம்.

அரசியல் முறிவுப் பிரகடனம்

ராஜ்யம் எதிலாவது அரசியல் ஷரத்துக்கள்படி சர்க்காரை நடத்த முடியாத சந்தர்ப்பங்கள் ஏற்படலாம்; தேர்தலில், ஸ்திரமான மந்திரி சபையை அமைக்கக்கூடிய ஆதரவு பெற்ற கட்சி இல்லாமல் இருக்கலாம். அல்லது மெஜாரிடி ஆதரவு கிடைத்த கட்சி மந்திரி சபையை அமைக்க மறுக்கலாம்; வேறு மந்திரி சபை அமையாதபடி நம்பிக்கையில்லாத் தீர்மானங்களை நிறைவேற்றலாம்; அல்லது மெஜாரிடி கட்சியிலேயே கோஷ்டிகள் ஏற்பட்டு நிலையான மந்திரிசபை இல்லாமல் இருக்கலாம். இவ்வித நிலைமை ஏற்பட்டு இருப்பதாக கவர்னர் ஜனதிபதிக்கு யாதாஸ்து மூலம் தெரிவிக்கலாம், அல்லது வேறுவிதமாகவும் ஜனதிபதி தெரிந்துகொள்ளலாம். அப்பொழுது பகிரங்கப் பிரகடன மூலம், ராஜ்யத்திலுள்ள சர்க்காரின் (கவர்னர், இதர அதிகாரிகள்) அதிகாரங்களை தற்காலிகமாக ரத்து செய்து, ஜனதிபதி தானே எல்லா அதிகாரங்களையும் ஏற்றுக்கொள்ளலாம். ராஜ்யச் சட்டசபைகளின் அதிகாரம் பார்லிமெண்டுக்கு உட்பட்டு செலுத்தப்பட உத்தரவு பிறப்பிக்கலாம். ஆனால் ஹைகோர்ட்டுக்குள்ள அதிகாரங்களை ஏற்கவோ நிறுத்திவைக்கவோ கூடாது. இப்படி செய்யப்படும் அரசியல் முறிவுப் பிரகடனமும் பார்லிமெண்டு சபைகள் முன் ஆஜர் செய்யப்பட வேண்டும். இரண்டு மாத காலத்திற்குத்தான் இப் பிரகடனம் செல்லுபடியுள்ளது. ஆனால், இந்த கெடு முடியுமுன் பார்லிமெண்டு சபைகள் பிரகடனத்தை நீடிக்கத் தீர்மானத்தை நிறைவேற்றினால், கெடுவி

விருந்து மேற்கொண்டு ஆறு மாதங்கள் அமுலில் இருக்கும். எப்படியும் முதலில் அமுலான தேதியிலிருந்து மூன்று வருஷங்களுக்குமேல் நீடிக்கப்படல் ஆகாது. அரசியல் ஷரத்துக்கள்படி மத்திய சர்க்கார் அனுப்பிய தாகீதுகளை ராஜ்ய சர்க்கார் நிறைவேற்றி வைக்காவிட்டாலும், மேலே கண்டபடி அரசியல் முறிவுப் பிரகடனம் செய்யப்படலாம்.

பார்லிமேண்டு சட்டமியற்றும் அதிகாரங்களை ஜனாதிபதிக்கு அளிக்கலாம

ராஜ்யச் சட்டசபைகளின் அதிகாரங்களை பார்லிமெண்டு எற்கவேண்டும் என்று பிரகடனத்தில் கண்டிருந்தால், அவ்வதிகாரங்களை ஜனாதிபதிக்கோ இதர அதிகாரிக்கோ பார்லிமெண்டு அளிக்கலாம். பார்லிமெண்டு கீழ் சபை கூடி இராத காலத்தில், ராஜ்யத்தின் ஐக்கிய நிதியிலிருந்து செலவு செய்ய ஜனாதிபதி அனுமதிக்கலாம். அதற்கு சபையின் அங்கீகாரத்தை பிந்திப் பெறலாம். இரு சபைகளும் கூடி இராத காலத்தில் ஆர்டினென்ஸுகளை (அவசரச் சட்டங்களை) ஜனாதிபதி பிறப்பிக்கலாம்.

அரசியல் நகலில், இவ்விதப் பிரகடனத்தைச் செய்ய கவர்னருக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் கவர்னர் செய்யும் பிரகடனத்திற்கு ஆயுள் இரண்டு வார காலம்தான் குறிக்கப்பட்டிருந்தது. உடனடியாக ஜனாதிபதிக்கு கவர்னர் தெரிவிக்க வேண்டும். அதன்பேரில் ஜனாதிபதி மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இரண்டுவார காலத்துக்கு மட்டில் கவர்னருக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தை எடுத்துவிட்டு, உடனே ஜனாதிபதிக்குத் தெரிவித்து, ஜனாதிபதியே பிரகடனம் செய்வது உசிதம் என்று இறுதியாகத் தீர்மானிக்கப் பட்டது.

நிதி சம்பந்தமான நெருக்கடி

நிதி விஷயங்களில், இந்தியாவின் மதிப்புக்கோ இந்தியாவின் எந்த பகுதியின் மதிப்புக்கோ அபாயம் எற்பட்டாலும், எற்படக் கூடியதாக இருந்தாலும், 360-வது பிரிவுப்படி ஜனாதிபதியால் நிதி நெருக்கடிப் பிரகடனம் செய்யப்படலாம். பந்தோபஸ்துக்காக செய்யப்படும் பிரகடனம் போல, இது இரண்டு மாத அமுலுள்ளது. கெடுவிற்கு முன் பார்லிமெண்டு சபைகளின் அங்கீகாரத்தைப் பெற்று நீடிக்கப் படலாம். பிரகடனத்தின் விளைவாக மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்கார்

களுக்கு நிதி சம்பந்தமாகத் தாக்கீதுகளைப் பிறப்பிக்கலாம்—(i) இன்னவிதமாக ஒழுங்கு முறைகளையும் கொள்கைகளையும் அனுஷ்டிப்பது, (ii) சர்க்கார் ஊழியர்களின் சம்பளங்கள், படிகளைக் குறைப்பது (iii) நிதி மசோதாக்களை ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அனுப்புவது. இத் தாகீதுகளை ராஜ்ய சர்க்கார் நிறைவேற்ருவிட்டால், அரசியல் சட்டப்படி சர்க்காரை நடத்தத் தவறிவிட்டதாகக் கருதப்படும். அதன்பேரில் மத்ய சர்க்காரே அந்த ராஜ்யத்தின் முழு நிர்வாகத்தையும் எடுத்துக்கொள்ளலாம்.

இத்தகையப் பிரகடனம் அமுலிலுள்ள காலத்தில் சுப்ரீம் கோர்ட்டு, ஹைகோர்ட்டு நீதிபதிகளின் சம்பளங்களையும் படிகளையும் குறைக்கவும் ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு.

சிறுபான்மையோர்களின் அக்கறைகள்

சட்ட சபைகளில் பிரதிநிதித்வம்

ஏற்கனவே அமுலிலிருந்த அரசியல் சட்டப்படி, மத, சமூக வாரியாகத் தொகுதிகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தன. சிறுபான்மை சமூகத்தாரின் பாதுகாப்புக்காக தனித் தொகுதிகள் அவசியம் என்று கருதப்பட்டது. அந்தந்த சமூகத்தினரைக் கொண்ட தொகுதி மூலம் தேர்ந்தெடுக்கப்படுபவர் தான் அந்தந்த சமூகத்தின் அக்கறைகளை சரியாக கவனிப்பார் என்று சொல்லப்பட்டது. முதன் முதலில் மிண்டோ மார்லி சீர்திருத்தங்களில் (1908) முகம்மதியார்களுக்குத் தனித் தொகுதிகள் ஏற்படுத்தப்பட்டன. பிந்தி கிறிஸ்தவர்கள், ஆங்கிலோ-இந்தியர்கள், ஐரோப்பியர், ஹரிஜனங்கள் இவர்களுக்கும் தனித் தொகுதிகள் நிர்ணயிக்கப்பட்டன. 1935-ம் ௵த்து சட்டப்படி ஹரிஜனப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க இரு கட்டங்கள் விதிக்கப்பட்டன. முதலெடுப்பில் ஹரிஜன வோட்டர்களால் ஒவ்வொரு பிரதிநிதி ஸ்தானத்துக்கும் நான்கு அபேட்சகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஜாதி ஹிந்துக்களும் ஹரிஜனங்களும் அடங்கிய பொதுத் தொகுதியில் நான்கு அபேட்சகர்களில் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படவேண்டியது.

மதம், ஜாதி முதலிய பாகுபாடுகளின் பேரில் பிளவுகளைப் பிரிட்டிஷார் வளர்த்துக்கொண்டு போனார்கள், என்று, சரித்திர முகவுரையில் கண்டிருக்கிறோம். அதன் விளைவாக முஸ்லிம் லீகானது முஸ்லிம்கள் தனி இனம் என்று சொல்லிக்கொண்டு, தனி தாயகம் வேண்டும் என்று கிளர்ச்சி செய்து, நமது தேசம் துண்டாடப்பட்டு பாகிஸ்தான் ஏற்பட்டது. பிரிவினை ஏற்பட்ட உடனடியாக, சமூகக் கலகங்கள் ஏற்பட்டு ஹிந்துக்களும் சீக்கியர்களும் பாகிஸ்தான் பிரதேசங்களில் சொத்துக்களையும் வீடு வாசல்களையும் விட்டு விட்டு உயிர் தப்பினால் போதும் என்று ஓடி வரும்

படி நேரிட்டது. இந்தியாவில் கிழக்குப் பஞ்சாப் மாகாணத்திலிருந்து மட்டும் முஸ்லிம்கள் பாகிஸ்தானுக்கு ஓடும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இருதரப்பிலும் ஏராளமான உயிர்ச் சேதமும் பொருள் சேதமும் ஏற்பட்டன. ஆனால் பாகிஸ்தானிலிருந்து வெளியேறின ஹிந்து சீக்கிய அகதிகளின் சொத்துக்களின் மதிப்பு, இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்குப் போன முஸ்லிம் அகதிகளின் சொத்துக்களின் மதிப்பைவிட பல மடங்கு அதிகம் என்று சொல்லலாம். கிழக்குப் பஞ்சாப் மாகாணம் நீங்கலாக, இந்தியாவில் முஸ்லிம்களுக்கு எவ்வித கஷ்டமும் ஏற்படவில்லை. கோடிக்கணக்கான முஸ்லிம்கள் இந்தியப் பிரஜைகளுக்கு உள்ள சகல உரிமைகளையும் அனுபவித்துக்கொண்டு அச்சமின்றி வாழ்ந்து வருகின்றனர். ஆனால் பாகிஸ்தானிலோ, இப்பொழுதுகூட ஹிந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும் பாதுகாப்பு இல்லை. மதம், ஜாதி அடிப்படையில் வகுக்கப்பட்ட தனித் தொகுதிகளின் விளைவாக அந்தந்த மதம் ஜாதி வெறிபிடித்தவர்கள், தேசீய உணர்ச்சி இல்லாதவர்கள், பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அப்படிப்பட்ட பிரதிநிதிகள் தங்கள் சமூகங்களுக்கு சலுகைகளை பெருக்கிக்கொண்டு போனார்கள். தாங்கள் மந்திரி பதவிகளிலும், உறவினர்கள் உத்தியோகங்களிலும், அதிகப்படியாக வர, இவர்கள் சூழ்ச்சி செய்து வந்தார்களேயன்றி பாமர மக்களின் நலன்களை கவனிக்கவில்லை.

சிறுபான்மையோர்களைப் பொறுத்து யோசனை கூற அரசியல் நிர்ணய சபையால் நியமிக்கப்பட்ட கமிட்டி, தனித் தொகுதிகளால் ஏற்பட்ட தீவினையை உணர்ந்து, முதலிலேயே தனித் தொகுதிகளை ரத்து செய்தார்கள். ஆனால் பிரிவினையின் விளைவாக ஏற்பட்ட குழப்பங்களால் உண்டான பயத்தினாலும், ஏற்கனவே அனுபவித்த சலுகைகள் போய்விடுமே என்பதாலும் சுதந்திர இந்தியாவில் தங்கள் நிலை எப்படியிருக்குமோ வென்று சிறுபான்மை சமூகத்தினர் அஞ்சினார்கள். ஆகவே, சட்டசபைகளில் அந்தந்த சமூகத்தினரின் ஜனத் தொகைக்கு ஏற்ப, ஸ்தானங்கள் ஒதுக்கப்படவேண்டும் என்று சிபார்சு செய்தார்கள். ஆனால், பிரதிநிதிகள், எல்லா சமூகத்தினரும் கலந்த பொதுத் தொகுதிகள் மூலம் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். அச்சிபார்சுகளை ஏற்றுக்கொண்டு, அரசியல் திட்டத்தின் பதினைன்காவது பாகத்தில், யூனியன் ஜனப் பிரதிநிதி சபையிலும், ராஜ்யங்களில் கீழ்சபைகளிலும், முஸ்லிம்கள், ஷெடியூல்ட் ஜாதிகள், பூர்வீகக் குடிகள்,

சென்னை, பம்பாய் ராஜ்யங்களில் கிறிஸ்தவர்கள், இவர்களுக்கு மட்டும் ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டன. நகல் அரசியல் திட்டம் சர்ச்சைக்கு வருவதற்குள் 18 மாதங்கள் கழிந்தன. மத்தியில் இந்திய சர்க்கார் நிர்வாகத்தையும், சமூகப் பிணக்குகளைக் களைந்து எறிவதில் எடுத்த முயற்சிகளையும், பெருவாரியான சமூகத்தினரின் சகிப்புத் தன்மையையும் கண்டு, ஆலோசனைக் கமிட்டியில் உள்ள சிறுபான்மை சமூகத்தினரே ஸ்தானங்கள் ஒதுக்குவது என்ற சலுகையை நிராகரித்தார்கள். எந்த காரணத்தைக் கொண்டும் ஸ்தானங்கள் ஒதுக்குவது ஜனநாயக தத்வத்திற்கு முரணானது. தவிர, ராஜீய, பொருளாதாரக் கொள்கைகளின் பேரில் அல்லாது தனி சமூகச் சலுகையின் பேரில் வரும் பிரதிநிதிகள், எப்பொழுதும் தனித்து சிறுபான்மையிலே இருக்க வேண்டி ஏற்படும், சர்க்கார் கட்சிகளில் அவர்களுக்கு இடம் இல்லாமலே போகக்கூடும். இப்படியான விபரீத விளைவுகள் ஏற்படக்கூடியவை, என்று உணர்ந்து, முஸ்லிம், கிறிஸ்தவ சமூகப் பிரதிநிதிகள் தங்கள் சமூகங்களுக்காக ஸ்தானங்கள் ஒதுக்குவதை அரசியல் சட்டத்திலிருந்து எடுத்துவிடச் சொன்னார்கள். ஆனால் ஷெடியூல்ட் வகுப்பினர்கள் மட்டும், தங்களுடைய சமூகம், கல்வியிலும் செல்வத்திலும் முன்னேற்றமே இல்லாத நிலையில் இருப்பதால், தங்களுக்கு அளிக்கப்பட்ட சலுகையை தொடர்ந்து பத்து வருஷங்களுக்கு வைத்துக்கொள்ள விரும்பினார்கள். அதை ஏற்றுக்கொண்டு ஷெடியூல்ட் ஜாதியினர்களுக்கும் ஹரிஜனங்கள் ஷெடியூல்ட் பூர்வீகக் குடிகளுக்கும் சட்ட சபைகளில் ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

இவ்விதமாக, சிறுபான்மை சமூகத்தினரே தங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சலுகைகளை நிராகரித்தது, சரித்திர முக்யத்வம் வாய்ந்த சம்பவம் என்று பண்டித நேரு கூறினார். ஷெடியூல்ட் வகுப்பினருக்கும், ஷெடியூல்ட் பூர்வீகக் குடிகளுக்கும் சட்ட (கீழ்) சபைகளில் ஸ்தானங்கள் ஒதுக்குவதும் ஆங்கிலோ இந்தியப் பிரதிநிதிகளின் நியமனமும், அரசியல் ஆரம்பத்திலிருந்து பத்து வருஷங்களுக்குத்தான், ஆனால் அக்காலாவதியில் இருக்கும் சட்டசபைகளின் ஆயுட்காலம் முடியும்வரை, அமைப்பு மாறாது.

பார்லிமெண்டு கீழ் சபையில் ஆங்கிலோ இந்தியர்களுக்குப் போதிய பிரதிநிதித்வம் இல்லை என்று ஜனாதிபதி அபிப்பிராயப்

பட்டால், இரண்டு பேருக்கு மேல்படாமல் ஆங்கிலோ இந்தியர்களை கீழ் சபை அங்கத்தினர்களாக ஜனாதிபதி நியமிக்கலாம். ராஜ்யங்களிலுள்ள கீழ் சபைகளில், அந்தந்த ராஜ்ய கவர்னர் அல்லது ராஜப் பிரமுகர், ஆங்கிலோ - இந்தியர்களுக்குப் போதிய பிரதிநிதிகள் இல்லை என்று அபிப்பிராயப்பட்டால், போதுமான ஆங்கிலோ இந்தியர்களை கீழ் சபை அங்கத்தினர்களாக நியமிக்கலாம்.

ஆங்கிலோ இந்தியர்கள்

பிரிட்டிஷ் சர்க்காரின் ஆதிக்கத்தில், ரயில்வே, சுங்கம் தபால் - தந்தி இலாகாக்களின் வேலைகளில் ஆங்கிலோ - இந்தியர்களுக்கு விசேஷ சலுகைகள் காண்பிக்கப்பட்டன. சலுகை, வேற்றுமை இவைகளை நீக்கி சமத்துவத்தை லட்சியமாகக் கொண்ட சர்க்காரில் அச்சலுகைகளுக்கு இடமிருக்க முடியாது. ஆனால் இதுவரை அனுபவித்து வந்த சலுகைகளை உடனே எடுத்து விட்டால், தங்கள் சமூகத்தின் செல்வ நிலை சீர் குலைந்துவிடும் என்று ஆங்கிலோ இந்தியர்கள் சொன்னதின் பேரில், புது அரசியல் அமுலுக்கு வருந்தேதியிலிருந்து இரண்டு வருஷங்களுக்கு மட்டில் முன்னிருந்தபடியே சலுகைகள் நீடிக்கப்பட்டிருக்கின்றன. பிறகு, பிரதி இரண்டு வருஷங்களுக்கு பத்து சதவிகிதம் ஆங்கிலோ இந்தியர்களுக்கு ஒதுக்கப்படும் ஸ்தானங்களைக் குறைத்து பத்து வருஷ முடிவில் சலுகை ரத்து செய்யப்படும். திறமைப்படி இதர சமூகத்தினரைப்போல் எந்த ஊழியங்களிலும் வேலை பெற ஆங்கிலோ - இந்தியருக்கு உரிமை யுண்டு.

ஆங்கிலோ இந்தியருக்கு சலுகைகள்

மேற்கண்டபடி ஆங்கிலோ இந்தியர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் சலுகைக்கு உள்பட்டு, சர்க்கார் உத்தியோகங்களுக்கு நியமனங்களைச் செய்வதில் நிர்வாகத் திறமைக்கு ஹானி யன்னியில் சிறுபான்மையோர்களின் பாத்தியங்கள் கவனிக்கப்பட வேண்டும்.

ஆங்கிலோ இந்தியருக்கு கல்வி மான்யங்கள்

ஆங்கிலோ இந்திய சமூகத்தினரின் கல்விக்காக அளிக்கப்பட்ட மான்யங்கள் தொடர்ந்து மூன்று வருஷங்களுக்கு முன் போலவே கொடுக்கப்படும், பிந்தி மூன்று வருஷத்தில் பத்து சத விகிதம் குறைக்கப்பட்டு பத்து வருஷங்களில் நின்றுவிடும். ஆனால் மற்ற பிரஜைகளைப்போல் மான்யம் பெறுவார்கள். இவ்விதச் சலுகை

நீடிக்கப்பட ஒரு நிபந்தனை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எந்த கல்வி ஸ்தாபனமும் மான்யம் பெற வேண்டுமானால் மொத்த மாணவர்களில் நாற்பது சத விகிதத்துக் குறையாமல், இதர சமூக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

கவனிக்க விசேஷ அதிகாரி

ஷெடியூல்ட் ஜாதிகள், ஷெடியூல்ட் பூர்வீகக் குடிகள், ஆங்கிலோ இந்தியர், பிற்போக்கான வகுப்புக்கள், இவர்களின் அக்கறைகளை கவனிக்க விசேஷ உத்தியோகஸ்தர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார். ஜனாதிபதி குறிப்பிடும் தவணைகளில், மேற்கண்ட சமூகத்தினர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் பாதுகாப்புகளைப் பொறுத்து, யாதாஸ்துகள் அவ்வதிகாரியால் சமர்ப்பிக்கப்படவேண்டும். அந்த யாதாஸ்துகள் பார்லிமெண்டு சபைகளில் ஆஜர் செய்யப்படும்.

ஷெடியூல்ட் பூர்வீகக் குடிகள் பின்னணி வகுப்புக்கள் பற்றி விசாரிக்க கமிஷன்கள்

ஷெடியூல்ட் பிரதேசங்களில் ஆட்சிமுறை, ஷெடியூல்ட் பூர்வீகக் குடிகளின் நலன், முன்னேற்றம், இவைகளை விசாரிக்க கமிஷனையும், கல்வியிலும் செல்வத்திலும் பின்னணியில் இருக்கும் வகுப்புக்களின் நிலைமை நலன்கள், முன்னேற்றத்துக்கு வேண்டிய வசதிகள் இவைகளை விசாரிக்கக் கமிஷனையும் ஜனாதிபதி எப்பொழுதும் நியமிக்கலாம்; பூர்வீகக் குடிகள் விஷயத்தில் அரசியல் ஆரம்பத்திலிருந்து பத்து வருஷ முடிவில், ஒரு கமிஷனை கட்டாயம் நியமிக்க வேண்டும். கமிஷன்கள் செய்யும் சிபார்சுகளைப் பற்றியும் அவைகளின் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றியும் பார்லிமெண்டுக்குத் தெரிவிக்கவேண்டும்.

பிரஜா உரிமை

பிரஜா உரிமை அல்லது அந்தஸ்து விஷயமாக அரசியல் நிர்ண சபையில் பலத்த அபிப்பிராய பேதம் இருந்தது. ஆகையால் பிரஜா உரிமையைப் பற்றிய ஸ்திரமான சட்டம், இனி தேர்தல் நடந்து வரப்போகும் பார்லிமெண்டால் இயற்றப் படவேண்டியது என்று தீர்மானிக்கப்பட்டது. அரசியல் சட்டத்தின் ஐந்தாவது பிரிவில் கூறியிருப்பது, புது அரசியல் ஆரம்பத்தில் எவர் எவர் இந்தியப் பிரஜையாகக் கருதப்படுவார் என்பதுதான். இந்த ஷரத்தை, பார்லிமெண்டு, சட்ட மூலம் ரத்து செய்யலாம் அல்லது மாற்றலாம்.

I. அயல் நாட்டுப் பிரஜா உரிமையை தாமாகத் தேடியடைந்தவர் நீங்கலாக, இந்தியாவில் குடியிருப்பு உள்ளவர் ஒவ்வொருவரும், அடியிற்கண்ட மூன்று நிபந்தனைகளில் எதையாவது பூர்த்தி செய்தால் இந்தியப் பிரஜை யாவார்:—

(1) இந்திய நாட்டில் பிறந்தவராக இருக்கவேண்டும்; அல்லது

(2) இந்திய நாட்டில் தகப்பனார் அல்லது தாயார் பிறந்திருக்கவேண்டும்; அல்லது

(3) இவ்வரசியல் துவக்கமாவதற்கு முன் ஐந்து வருஷ காலமாவது இந்திய நாட்டில் ஸ்திர வாசம் செய்திருக்க வேண்டும்.

II. பிரிவினையின் விளைவாக பாகிஸ்தான் பிரதேசங்களிலிருந்து இந்தியாவுக்குக் குடியேறியவர்கள் அநேகமாக ஹிந்துக்களும் சீக்கியர்களும்தான். 1935–ம் வருஷத்து சட்டப்படி பிரிவினையாகாத இந்தியாவில் பிறந்தவர், அல்லது ஒருவரின் தகப்பனார் அல்லது தாயார், பாட்டனார் அல்லது பாட்டியார், யாராவது பிரிவினையாகாத இந்தியாவில் பிறந்து, பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு குடியேறி வந்தவர், அடியிற் கண்ட இரண்டு

நிபந்தனைகளில் எதையாவது பூர்த்தி செய்து இருந்தால் இந்தியப் பிரஜை யாவார் :—

(1) 1948-ம் ஞு ஜூலைமீ 19உக்கு முன் குடியேறி இருந்தால், வந்தது முதல் இந்திய நாட்டிலேயே ஸ்திர வாசம் செய்திருக்கவேண்டும்.

(2) ஷை தேதிக்குப் பிறகு பாகிஸ்தானிலிருந்து வந்தவர் இவ்வரசியல் துவக்க முன் தகுந்த உத்தியோகஸ்தரால் இந்தியப் பிரஜையாக பதிவு செய்யப்பட்டு இருக்கவேண்டும்; ஆனால் பதிவு செய்ய மனு செய்யப்படும் தேதிக்கு முன் ஆறுமாத கால மாவது இந்நாட்டில் வாசம் செய்திருக்கவேண்டும்.

III. 1947ஞு மார்ச்சுமீ 1உக்கு பிறகு இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்குக் குடியேறியவர்களுக்கு மேற்கண்ட II வது ஷரத்துக்கள் பொருந்தா. இவர்கள் அநேகமாக முஸ்லிம்கள். பாகிஸ்தான் இஸ்லாமிய சுவர்க்க பூமி என்று நினைத்து முஸ்லிம்கள் சிலர் இந்தியாவை விட்டு பாகிஸ்தானுக்குக் குடியேறினார்கள். கொஞ்ச நாள் அங்கே வசித்ததின் பயனாக அந்த சுவர்க்கத்தை விட்டு வெளியேறுவது உசிதம் என்று தோன்றிற்று. திரும்பி இந்தியாவிலேயே ஸ்திரமாகக் குடியிருப்பது என்ற எண்ணத்துடன் திரும்பிவர, சிலர் இந்திய சர்க்காரிடம் அனுமதி கேட்டு, அதைப் பெற்றார்கள். அப்படி அனுமதி பேரில் திரும்பிவந்தவர், 1948ஞு ஜூலைமீ 19உக்கு பிறகு வந்தவர்களைப்போல் தகுந்த அதிகாரியிடம் இந்தியப் பிரஜையாக பதிவு செய்துகொண்டிருந்தால், இந்தியப் பிரஜையாகக் கருதப்படுவார்.

IV. 1947ஞுத்துக்கு முன் இருந்த பிரிவினையாகாத இந்தியாவில் பிறந்தவர்கள் அல்லது இந்தியாவில் பிறந்த தகப்பன் அல்லது தாயார் அல்லது பாட்டன்மார் அல்லது பாட்டியார் எவரையாவது கொண்டவர்கள், மலேயா, இலங்கை முதலிய பல வெளிநாடுகளில் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர் அவர் குடியிருக்கும் நாட்டிலுள்ள இந்திய ஸ்தானிகரிடம் விதிக்கப்பட்ட நமூனாவில் கையொப்பம் செய்து இந்தியப் பிரஜையாகப் பதிவு செய்யப்பட்டால், அவரும் இந்தியப் பிரஜா அந்தஸ்தை அடைகிறார். [குறிப்பு – 1950 ஞுத்தில் கிழக்குப் பாகிஸ்தானான கிழக்கு வங்காளத்தில் ஏற்பட்ட பெருங் கலகங்களின் விளைவாக, அங்கிருந்த ஹிந்துக்கள் ஏராளமாக இந்தியாவிற்கு அகதிகளாக

வந்து இருக்கிறார்கள். 1949 ஹூ ஜூலைக்குப் பிறகு குடியேறி இருப்பவர்களையும் அரசியல் அமுலுக்கு வந்த பிறகு இந்தியாவில் பிறந்து 21 வயது பூர்த்தியானவர்களையும் இந்தியப் பிரஜைகளாகப் பதிவுசெய்ய மசோதா கொண்டுவரப்படும் என்று பத்திரிகை செய்தி வெளியாகி இருக்கிறது.]

ஜீவாதார உரிமைகள்

(Fundamental Rights)

முகவுரை ஜீவாதார உரிமைகளின் அவசியம்

ஜனநாயகம் ஏற்படு முன் உலகத்தில் எல்லா தேசங்களிலும் அரசர்கள் என்போர் யதேச்சாதிகாரிகளாக ஆண்டு வந்தார்கள் அவர்களில் அசோகர், அக்பரைப்போல் நல்ல அரசர்களும் உண்டு, ஔரங்கசீப், ஸ்டுவேர்ட் வம்ச அரசர்கள், பிரான்ஸில் பூர்பன் வம்சதியவர்களைப் போன்ற கொடுங்கோல் ஆட்சி புரிந்தவர்களும் பலர். அரசாங்க நிர்வாகத்தின் தலைமையில் உள்ளவர் ஜனங்களின் சுதந்திரங்களையும் உரிமைகளையும் பறிக்கும் பொழுது, அதை எதிர்த்துப் போராடிய வீரர்களும் பழைய நாட்கள் முதல் இருந்து வந்திருக்கிறார்கள். பிரஜைகளின் அடிப்படையான சுதந்திரங்களைப் பறிப்பவர்கள் யதேச்சாதிகாரிகள் மட்டும்தான் என்பதல்ல; ஜனநாயக சர்க்காரில் அப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்கள். மனிதனுக்கு சில சுதந்திரங்கள் அத்தியாவசியம்; பேச்சு, அபிப்பிராயம், கூடுவது, மத வழிபாடு, தொழில் புரிவது முதலிய உரிமைகள் முக்கியம். அதே சமயத்தில் ஒவ்வொருவரும் பிறருக்குத் தீங்கு செய்யாமலும், பொது ஒழுங்குக்கும் சமூக ஒழுக்கத்துக்கும் பங்கம் விளைவிக்காமலும், தனது சுதந்திரத்தை உபயோகிக்க வேண்டும். யதேச்சாதிகாரிகளும் நிர்வாகத்தாரும் தங்கள் காரியங்களைக் கண்டிக்கும் பிரஜைகளை விசாரணை யில்லாமல் காவலில் வைப்பது வெகு நாட்களாக உள்ள ஒரு பழக்கம். ஆகவே விசாரணை யில்லாமல் காவலில் வைப்பது அக்கிரமம் என்றே கருதப்படுகிறது. பிரிட்டனில் ஸ்டுவேர்ட் வம்ச அரசர்கள் ஆண்ட காலத்தில் (17ம் நூற்றாண்டில்), பிரஜைகளின் சுதந்திரங்கள் அடிக்கடி பறிமுதல் செய்யப்பட்டு வந்தன. அப்படிப்பட்ட செய்கைகளை பிரிட்டிஷார் எதிர்த்துப் போராடி, உரிமை

கள் சாசனம் (Bill of Rights) என்ற சட்டத்தை இயற்றினார்கள். 18வது நூற்றாண்டில் பிரான்ஸ் தேசத்தில் பூர்பன் வம்சத்து அரசர்களின் கொடுங்கோலை எதிர்த்து ஏற்பட்ட மக்கள் எழுச்சியால் உலகப் பிரசித்தி பெற்ற பிரெஞ்சு புரட்சி ஏற்பட்டது. பிரெஞ்சு புரட்சி ஏற்பட்டது 18வது நூற்றாண்டு முடிவில். அதற்கு சுமார் 20 வருஷங்கள் முன் அமெரிக்காவில், இப்பொழுது ஐக்கிய நாடுகள் என்று கூறப்படும் ராஜ்யங்கள், பிரிட்டனுக்கு உள்பட்ட காலனிகளாக இருந்தன. பிரிட்டிஷார் தங்களை ஆள உரிமை யில்லையென்றும், அவர்களின் சுரண்டல் கொள்கைகளை எதிர்த்தும், அமெரிக்காவில் உள்ளவர்கள் போர் தொடுத்து சுதந்திரத்தை அடைந்தார்கள். இவ்விதமாக மக்களுக்கும் சர்க்கார் நிர்வாகத்தினருக்கும் ஏற்பட்ட போராட்டங்களில் மக்களை ஒடுக்க அடக்குமுறைச் சட்டங்கள் கையாளப் பட்டன. இந்த அனுபவங்களிலிருந்து சுதந்திர வீரர்கள் கற்றுக்கொண்ட பாடம், தனி நபரின் அடிப்படை சுதந்திரங்கள் நிர்வாகத்தினரின் தயா தாக்ஷிண்யத்துக்கு விடப்படல் ஆகாது என்பதுதான். பிரான்விலும் அமெரிக்காவிலும் பிரஜையின் ஜீவாதார உரிமைகளை அரசியல் சாஸன மூலம் கூறி யிருக்கிறார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தோடு போராடி, அடக்குமுறைச் சட்டங்களின் தீவினையை அறிந்த சுதந்திர வீரர்கள் அடங்கிய இந்திய அரசியல் நிர்மாண சபை, இதர தேசங்களின் அரசியல் சட்டங்களில் இருப்பவையைக் காட்டிலும் விரிவான ஷரத்துக்களைக் கண்டு, ஜீவாதார உரிமைகளை அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூன்றாவது பாகத்தில் கூறி இருக்கிறார்கள். பொதுவான சுதந்திரங்கள் மட்டும் அல்லாமல், நமது நாட்டிற்குள்ள ஜாதி, மத பாகுபாடுகளால் வேற்றுமை நடத்தை ஆகாது என்றும், பொது வசதிகள் எல்லோருக்கும் சமம் என்றும், வியக்தமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

ஜீவாதார உரிமைகளுக்கு முரணாக சட்டம் கூடாது

இந்த பாகத்தில் "அரசாங்கம்" (The State) என்ற பதத்தில் இந்திய சர்க்கார், பார்லிமெண்டு, ஒவ்வொரு ராஜ்யத்தின் சர்க்காரும் சட்ட மண்டலமும் (லெஜிஸ்லேச்சர்), நாட்டிலுள்ள ஸ்தல அதிகாரிகள், இதர அதிகாரிகள் எல்லாம் அடங்கியவை. இந்த பாகத்தில் அளிக்கப்பட்டிருக்கும் உரிமைகளுக்கு முரணாக, வழங்கும் சட்டங்களில் ஷரத்துக்கள் இருந்தால், முரணாக இருக்கும் அளவு, அச்சட்டங்கள் செல்லத்தக்கவை அல்ல. ஜீவாதார உரிமைகள் ஷரத்துக்களுக்கு முரணாக அரசாங்கம் எவ்வித சட்

டத்தையும் செய்யக் கூடாது. ஆனால் அமுலில் உள்ள சட்டத்தால் ஏற்படும் சமத்துவமின்மை, வேற்றுமை, வசதிக் குறைவு இவைகளை அகற்ற சட்டம் இயற்றலாம். "சட்டம்" என்கிற பதத்தில் — ஆர்டினன்ஸ், உத்தரவு, பைலா, விதி, ஒழுங்கு விதி, அறிக்கை, சட்ட அமுலுள்ள வழமை-எல்லாம் அடங்கியவை. ராணுவச் சட்டம் அமுலிலுள்ள காலத்தில் நடந்த கார்யங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் சட்டம், இவ்வத்தியாயத்தில் கண்ட ஷரத்துக்களால் பாதிக்கப்பட மாட்டாது.

அமுல் செய்வது

ஜீவாதார உரிமைகளை அமுல் செய்ய, சுப்ரீம் கோர்ட்டிலும், அந்தந்த ஹைகோர்ட்டு ஜூரிஸ்டிக்ஷனுக்கு உள்பட்ட பிரதேசத்தில் ஹைகோர்ட்டிலும், எந்தப் பிரஜையும் நடவடிக்கைகளை எடுக்கலாம். அரசாங்க நிர்வாகத்தினர் எந்தப் பிரஜையின் பேரிலாவது, இந்த பாகத்தில் உரியதாக்கப்பட்ட சுதந்திரத்தைப் பறிக்கும் வகையில் நடவடிக்கை எடுத்துக்கொண்டால், அப்படிப் பட்ட நடவடிக்கையை ரத்து செய்ய, பாதிக்கப்பட்ட பிரஜை ஷை கோர்ட்டுகளில் மனு செய்து கொள்ளலாம். இவை சம்பந்தமாக ஹேபியஸ் கார்பஸ், மான்டேமஸ், தடை, கோவாரண்டோ, ஸர்டியோரேரை முதலிய கட்டளைகளைப் பிறப்பிக்க ஹைகோர்ட்டுகளுக்கு அதிகாரம் உண்டு. இதர கோர்ட்டுகளுக்கும் இந்த அதிகாரத்தை அளிக்க பார்லிமெண்டு சட்டம் இயற்றலாம்.

விலக்குகள்

நாட்டின் பந்தோபஸ்துக்கு அபாயம் ஏற்பட்டு நெருக்கப்படிப் பிரகடனம் அமுலிலுள்ள காலத்தில், 19வது பிரிவில் கூறப்பட்டிருக்கும் பேச்சு, கூட்டம் கூடுவது, சங்கங்கள் அமைப்பது, நாடு பூராவிலும் தடையில்லாமல் நடமாடுவது, தொழில் நடத்துவது, உடைமை, இவை பொறுத்த பொது உரிமைகளைக் கட்டுப்படுத்த சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. மேலும் அக்காலத்தில் ஜீவாதார உரிமைகளைக் கோர்ட்டுகள் மூலம், அமுல் செய்ய அளிக்கப்பட்டிருக்கும் உரிமையை நிறுத்தி வைக்க, ஜனாதிபதி உத்தரவு பிறப்பிக்கலாம்.

சேனை போலீஸ் படைகள் விஷயத்தில் விலக்கு

சாதாரண காலங்களிலும், சேனை, போலீஸ் படைகளில் உள்ளவர்களைப் பொறுத்து ஜீவாதார உரிமைகளை ரத்து செய்யவோ கட்டுப்படுத்தவோ, சட்டமியற்ற பார்லிமெண்டுக்கு அதிகாரம் உண்டு. இல்லாதவரை படைகளில் ஒழுங்கும் கட்டுப்பாடும் ஏற்படுவது கடினம்.

பொது இடங்களில் எல்லோருக்கும் சம வசதி

மதம், இனம், ஜாதி, பால், பிறப்பிடம் என்ற காரணத்தால் மட்டும் எந்தப்பிரஜையைப் பொறுத்தும் அரசாங்கம் வேற்றுமை செய்யல் ஆகாது, முக்கியமாக கடைகள், பொது போஜன சாலைகள், தமாஷ் நிலையங்கள் இவைகளுக்குப் போகவர வசதி, பொதுமக்களுக்காக ஏற்பட்ட கிணறுகள், குளங்கள், ஸ்நான கட்டங்கள், ரஸ்தாக்கள், இவைகளை உபயோகிப்பது சம்பந்தமாக எவ்வித வித்தியாசமான தடை, கட்டுப்பாடு கூடாது. ஆனால் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் விசேஷ ஏற்பாடு செய்வது இந்த ஷரத்துக்கு விரோதமாகாது.

தீண்டாமை ஒழிப்பு

தீண்டாமை சட்ட பூர்வமாக ஒழிக்கப்பட்டிருக்கிறது. எந்த ரூபத்திலும் தீண்டாமையை அனுஷ்டிப்பது தடை செய்யப்பட்டிருக்கிறது. தீண்டாமை காரணமாக ஏதாவது தகுதியின்மையை அமுல் செய்தால், அப்படிச் செய்வது குற்றமாகும். உதாரணமாக, ஹரிஜன் எவரையாவது நாடகசாலை, போஜனசாலை எதிலிருந்தாவது வெளியே போகச் சொன்னாலும், பொதுக் குளம் அல்லது கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொள்வதைத் தடை செய்தாலும், அச் செய்கை தண்டனைக்குரிய குற்றமாகும்.

சர்க்கார் வேலைகளுக்கு சம சந்தர்ப்பம்

அரசாங்க வேலைகளிலும் உத்தியோகங்களிலும் எல்லாப் பிரஜைகளுக்கும் சம வசதி இருக்கவேண்டும். மதம், ஜாதி முதலிய காரணத்தால் சர்க்கார் வேலைக்குத் தகுதியின்மை கிடையாது. நகல் ஷரத்தில் ராஜ்யத்துக்கு ராஜ்யம் அல்லது மாகாணம் வித்தியாசமும் செய்யப்படாத முறையில் இருந்தது. ஆனால் பிந்திய திருத்தப்படி எந்த வித உத்தியோகம் அல்லது உத்தியோகங்களுக்கும் அந்தந்த ராஜ்யத்தில் குடியிருப்பு அவசியம் என்று சட்டம் இயற்றுவது பாதிக்கப்படாது. தவிர அந்தந்த ராஜ்யத்தில் பதவிகளை வகிக்க அந்தந்த ராஜ்ய பாஷையில் போதிய ஞானம் வேண்டும் என்று விதிக்கக் கூடியதால், பெரும்பாலும் அந்தந்த ராஜ்யத்தில் உள்ளவர்களுக்குத்தான் வசதி இருக்கும். இந்த உரிமையை அமுல் செய்வது சுலபம் அல்ல;

குறிப்பிட்ட உத்தியோகங்களைப் பூர்த்தி செய்வதில் இந்த ஷரத்து மீறப்பட்டது என்று ருஜூப்படுத்துவது கடினம்.

இந்த ஷரத்தில் கண்ட பொதுக் கொள்கைக்கு மாறுதலாக முன்னேற்றமில்லாத சமூகத்தினர்களுக்கு சர்க்கார் உத்தியோகங்களில் ஸ்தானங்களை ஒதுக்குவது பாதிக்கப்படாது என்று காணப்பட்டிருக்கிறது. மேலும் சிறுபான்மையோர்களைப் பற்றிய பாகத்தில் நிர்வாகத் திறமைக்குக் குந்தகம் அன்னியில் பின்னணியில் உள்ள சமூகத்தினர்களின் பாத்தியங்கள் கவனிக்கப்படவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. ரயில்வே, சுங்கம், தபால்-தந்தி இலாகாக்களில் ஆங்கிலோ-இந்தியர்களுக்கு பத்து வருஷ காலத்திற்கு ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டு இருக்கின்றன.

அவரவர் மனச்சாட்சிப்படி நம்பவும் மதத்தைக் கொள்ளவும், அப்பியசிக்கவும், பிரபலப் படுத்தவும் சுதந்திரம் உண்டு. ஆனால் இந்த சுதந்திரம் பொது ஒழுங்குக்கும், ஒழுக்கத்திற்கும், சுகாதாரத்திற்கும் இதர ஜீவாதார உரிமைகளுக்கும் கட்டுப்பட்டவை.

மத சம்பந்தமான உரிமைகள்

சமூக நன்மைக்காகவும் சீர்திருத்தத்திற்காகவும், பொது ஹிந்துமத ஸ்தாபனங்களை எல்லா வகுப்பினருக்குத் திறந்து விடவும் சட்டம் செய்யலாம். இந்த ஷரத்தும் அபிப்பிராய பேதங்களுக்கு இடம் அளிக்கக் கூடியதாய் இருக்கிறது. மதத்துக்கும் ஒழுக்கத்துக்கும் வித்தியாசம் இருப்பதால், மத சம்பந்தமான கொள்கை ஒழுக்கத்துக்கு முரண் என்று கவனிக்கவேண்டிய பிரச்னைகள் கிளம்பலாம்.

ஒவ்வொரு மதத்தினருக்கும், மதப் பிரிவினருக்கும், மதம், பொது தர்ம காரியங்களுக்காக ஸ்தாபனங்களை நிறுவவும், நடத்தவும், சொத்துக்களை வாங்கவும் பரிபாலிக்கவும் உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஷரத்தும் விவகாரத்துக்கு இடம் உள்ளது, இப்பொழுது சென்னைச் சட்டசபைகளில் பிரஸ்தாபத்தில் உள்ள ஹிந்து மத தர்ம பரிபாலன மசோதா இந்த ஷரத்துக்கு முரணானது என்று சொல்லப்படுகிறது.

எந்த மத ஸ்தாபன அபிவிருத்திக்காகவும் ஒதுக்கப்படும் வரிகளைச் செலுத்த எவரும் கட்டாயப் படுத்தப்படல் ஆகாது. ஏற்கனவே பிரிட்டிஷார் இந்திய வருமானங்களிலிருந்து கிறிஸ்

தவ மதத்தில் ஆங்கில வழிபாட்டைச் சேர்ந்த மாதாகோயில்களுக்கு மான்யங்கள் அளித்து வந்தனர். அம்மாதிரியாகப் பொது வருமானங்களிலிருந்து எந்த மதம் அல்லது பிரிவினருக்கும் மான்யம் அளிப்பது தடை செய்யப் படவில்லை. அச் செலவுக்கு என்று விசேஷ வரிவிதிப்பு தான் தடைபடுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் மதச் சார்பற்ற சர்க்கார் அம்மாதிரி செலவுகளைச் செய்ய மாட்டார்கள் என்று நம்பலாம்.

மத போதனை

முழுமையும் அரசாங்க வருமானங்களிலிருந்து நடத்தப்படும் கல்விக் கழகங்களில் மத போதனை செய்யலாகாது. ஆனால் குறிப்பிட்ட கழகம் ஏற்படுத்தப் பட்ட தர்ம சாஸனப்படி மத போதனை வேண்டும் என்று கண்டு இருந்தால் அது பாதிக்கப் படாது. அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப் பட்ட அல்லது உதவி அளிக்கப்பட்ட கல்வி ஸ்தாபனங்களில் வயது வராத மாணவர்களை, அவர்களின் கார்டியன்களின் சம்பந்தம் அன்னியில் மத போதனையிலாவது பூஜையிலாவது ஆஜராகக் கட்டாயப் படுத்தக் கூடாது; ஆனால் கல்விக்குக் குறிப்பிட்ட நேரங்களுக்கப்பால் தானாக வரும் மாணவர்களுக்கு மத போதனை செய்வதற்கு தடை கிடையாது.

கலாசாரம் கல்வி சம்பந்தமான உரிமைகள்

தனி மொழி, எழுத்து, கலாச்சாரமுள்ள எப் பிரிவாரும் அவைகளை பரிபாலித்து வைத்துக்கொள்ள உரிமை யுடையவர்கள்.

அரசாங்கத்தாரால் நடத்தப்படும் அல்லது சர்க்கார் நிதியிலிருந்து உதவி பெறும் கல்லூரிகளில், மதம், இனம், ஜாதி அல்லது மொழி காரணத்தால் மட்டும், எந்தப் பிரஜையையும் சேர்த்துக்கொள்ள மறுக்கக்கூடாது. இந்த ஷரத்தைக் கொண்டு தமிழ் பிரதேசத்தில் ஹிந்துஸ்தானியில் கற்பிக்கும் பள்ளிகளை ஸ்தாபிக்க வேண்டும் என்று கேட்க முடியாது, அல்லது ஹிந்துஸ்தானி அல்லது கன்னடத்தில் கற்பிக்க வேண்டும் என்று வற்புறுத்தவும் முடியாது: ஹிந்துஸ்தானி அல்லது கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவரைச் சேர்த்துக்கொள்ள மறுக்க முடியாது, ஆனால் கல்வியின் பிரயோஜனத்தை அடைய அம்மாணவருக்கு தமிழில் பரிசயம் வேண்டும். மொழி காரணத்தால் சிறுபான்மையோர்களாக உள்ளவர்கள் தங்கள் இஷ்டப்படி

கல்லூரிகளை ஸ்தாபிக்கவும் நடத்தவும் உரிமையுள்ளவர்கள். சர்க்கார் நிதியிலிருந்து உதவி அளிப்பதில் மேற்கண்ட கல்வி ஸ்தாபனங்கள் விஷயத்தில் வேற்றுமை செய்யலாகாது.

சொத்து உரிமை

சட்டத்தின் அதிகாரம் இல்லாமல் எவரிடமிருந்தும் சொத்து பறிமுதல் செய்யப்படாது. பொதுக் காரியங்களுக்காக சொத்தை ஆர்ஜிதம் செய்வது, ஸ்வாதீனப் படுத்துவது விஷயமாய் நஷ்ட ஈடு கொடுக்கப்பட வேண்டும், அப்படிக் கொடுக்கப்பட வேண்டிய நஷ்ட ஈட்டை நிர்ணயம் செய்யும் முறையையும் சட்டத்தில் காணவேண்டும். ஆனால், சமீபத்தில் ஜமீந்தாரி ஒழிப்பு விஷயமாக நிறைவேற்றப்பட்ட சட்டங்களும் அவைகளை அனுசரித்து நஷ்டஈடு சம்பந்தமாக செய்யப்படும் விதிகளும், அரசியல் அமுலுக்கு வந்ததிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ஜனாதிபதியின் அங்கீகாரத்தைப் பெற்று இருந்தால், மேற்கண்ட ஜீவாதார உரிமை ஷரத்துக்கு முரணானவை என்று கோர்ட்டுகளால் கூற முடியாது.

விலக்குகள்

பேச்சுசுதந்திரம் முதலிய பொது சுதந்திரங்கள்

எல்லாப் பிரஜைகளுக்கும் பேச்சு சுதந்திரமும் அபிப்பிராயத்தை வெளியிடும் சுதந்திரமும் உண்டு. ஆனால் அவதூறு, கண்யம் அல்லது ஒழுக்கத்துக்கு முரணான ஆபாசம், அல்லது அரசாங்கத்தின் அதிகாரத்தையோ அஸ்திவாரத்தையோ குலைக்கும்படியான விஷயம், இவைகளைத் தடுக்க அமுலிலுள்ள சட்டங்கள் வழங்கும்; மேற்கொண்டு சட்டங்களையும் இயற்றலாம். குறிப்பிட்ட சட்டம் இந்த கட்டுப்பாட்டுக்கு உள்பட்டதா என்று தீர்மானிக்க சுப்ரீம் கோர்ட்டுக்கு அதிகாரம் உள்ளது. அச்சுக் கூடங்களைப் பற்றிய சட்டங்கள் போன்ற சட்டங்கள் சுதந்திர உரிமைகளைக் கட்டுப்படுத்துவதால் அவைகளை ரத்து செய்யவோ, மாற்றவோ யோசனை செய்யவேண்டியது அவசியம்.

அமைதியாகக் கூட்டம் கூடவும் சங்கங்களை அமைத்துக் கொள்ளவும் உரிமைகள் இருக்கின்றன, ஆனால் பொது மக்களின் அக்கறைகளை முன்னிட்டு நியாயமான கட்டுப்பாடுகளை ஏற்படுத்த அரசாங்கத்துக்கு உரிமையுண்டு. இந்த விஷயத்தில் சர்க்கார்

விதிக்கும் கட்டுப்பாடு பொது அக்கறைகளை முன்னிட்டதா என்று தீர்ப்பு அளிக்க சுப்ரீம் கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு.

நாடு பூராவும் தடை யின்றியில் நடமாடவும், நாட்டின் எப் பகுதியிலாவது ஸ்திரவாசம் செய்யவும், சொத்து வாங்கவும், வைத்துக்கொள்ளவும், பராதீனம் செய்யவும் உரிமைகள் காணப் பட்டிருக்கின்றன. இவ் விஷயங்களிலும் பொது அக்கறைகளுக் காக சர்க்கார் கட்டுப்பாடு செய்யலாம்.

இஷ்டப்பட்ட தொழிலை நடத்த உரிமை எற்கப்பட்டிருக் கிறது, ஆனல் அந்தந்த தொழிலை நடத்த யோக்யதாம்சங்கள் விதிக்கப்படுவதை ஆட்சேபிக்க முடியாது.

குற்ற தண்டனைகளில் பாதுகாப்பு

செய்கை நடந்த காலத்தில் அமுலிலிருந்த சட்டப்படி அல்லாது ஒருவரும் எக்குற்றத்திற்கும் தண்டிக்கப்படலாகாது, அளிக்கப்படும் தண் டனையும் அச்சட்டத்தில் கண்டதற்கு மேல் படலாகாது; ஒருதடவைக்குமேல் ஒருகுற்றத் திற்கு நடவடிக்கை எடுக்கக் கூடாது, தண் டனையும் ஒரு தடவைக்கு மேல் கூடாது. தனக்கு எதிராக சாட்சி சொல்லும்படி எதிரியைக் கட்டாயப் படுத்தல் ஆகாது.

உயிருக்கும் சரீர சுதந்திரத்திற்கும் பாதுகாப்பு

சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட முறைப்படி அல்லாது எவருடைய உயிரும் அல்லது சுதந்திரமும் பறிமுதல் செய்யப்படாது. சட்டத்தின் கண் முன்பு எல்லோரும் சமம், சட்டப் பாதுகாப்பு எவருக்கும் மறுக்கப்படாது.

ஒருவரைக் கைது செய்து போலீஸ் காபந்தில் வைத்தால், அப்படி வைத்திருப்பதற்குள்ள காரணங்களைக் கூடிய சீக்கிரம் அவருக்குத் தெரிவிக்கவேண்டும். அவருக்கு வேண்டிய வக்கீலைக் கலந்துகொள்ள அனுமதி மறுக்கலாகாது. கைது செய்யப் பட்ட இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் கிட்ட இருக்கும் மாஜிஸ்ட்ரேட் முன் ஆஜர் செய்யப்பட வேண்டும்; மாஜிஸ்ட் ரேட்டின் உத்தரவு அன்னியில் மேற்கொண்டு காபந்தில் வைக்க லாகாது.

மேற்கண்ட ஷரத்து அடியிற்கண்ட நபர்களுக்குப் பொருந்தாது:— (i) அயல் நாட்டு விரோதி; (ii) பந்தோபஸ்துக்காகக் காவலில்

விலக்கு

வைக்கப்படுபவர்; ஆனால் பந்தோபஸ்துக் கைதி விஷயத்தில் ஹைகோர்ட்டு நீதிபதிகள் அல்லது அவர்கள் அந்தஸ்து உடையவர்களின் குழு காவலில் வைத்திருப்பதற்குத் தகுந்த காரணங்கள் இருக்கின்றன என மூன்று மாதங்களுக்குள் அபிப்பிராயம் தெரிவித்தால் அல்லாது மூன்று மாதங்களுக்கு மேலாக ஒருவரைக் காவலில் வைக்கலாகாது; (iii) பந்தோபஸ்துக்காகக் காவலில் வைக்கப்படுபவர்கள் சம்பந்தமாக, குறிப்பிட்ட ரகத்தாரை மூன்று மாதங்களுக்கு மேல் காவலில் வைக்கலாம் என்று பார்லிமெண்டு சட்டம் செய்யலாம்; அச்சட்டத்தில் காவலில் வைக்கக் கூடிய மொத்த காலத்தைக் கூறவேண்டும்.

அப்படி நிர்ணயிக்கப்படும் மொத்த காலத்திற்குமேல், எவரையும், நீதிபதிகள் சஞ்சயத்தால் பரிசோதனை செய்யப்பட்ட கேஸ் உள்பட, விசாரணை யில்லாமல் காவலில் வைக்கலாகாது.

அடிமை வியாபாரம், கட்டாய வேலைக்குதடை

மானிடர்களை விலைக்கு வாங்குவது, விற்பது, பேகர் போன்ற கட்டாய வேலை, பதினான்கு வயதுக்குக் கீழ்பட்ட குழந்தைகளை தொழிற்சாலை அல்லது சுரங்கத்தில் வேலைக்கு அமர்த்துவது - இவை தடை செய்யப்பட்டிருக்கின்றன மீறிச் செய்தால் தண்டிக்கக் கூடிய குற்றம். பொதுக் காரியங்களுக்காக அரசாங்கம் கட்டாய சேவையை ஏற்படுத்துவது விதியிலிருந்து விலக்கு.

குறிப்பு—அரசாங்கத்தாரால் நடத்தப்படும் அல்லது அரசாங்க நிதியிலிருந்து உதவி பெறும் கல்வி ஸ்தாபனங்களில், மதம், இனம், ஜாதி, அல்லது மொழி காரணத்தால், எப்பிரஜைக்கும் இடம் மறுக்கலாகாது என்கிற ஷரத்துப்படி, ஸ்தானங்களின் விநியோக சம்பந்தமாக சென்னை சர்க்கார் அனுஷ்டித்து வந்த வகுப்புவாரி உத்தரவு செல்லாது என்று சென்னை ஹைகோர்ட்டு தீர்ப்புக் கூறி இருக்கிறார்கள். அதன் பேரில் சென்னை சர்க்கார் சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் தாகல் செய்து இருக்கிறார்கள்.

அரசாங்கக் கொள்கைக்கு வழிகாட்டி சித்தாந்தங்கள்

இந்திய ஜனநாயக குடியரசின் வட்சியம், எல்லாப் பிரஜைகளுக்கும் சமூக, செல்வ, ராஜீயத் துறைகளில் நீதியை உரியதாக்குவது என்று அரசியலின் பூர்வ பீடிகையில் கண்டிருக்கிறது. இவ் விஷயம் அரசியல் நான்காவது பாகத்தில் 38வது பிரிவில் வியக்தமாகக் கூறப்பட்டுள்ளது. சமூக வாழ்க்கை ஸ்தாபனங்களில் எல்லாம் சமூக, செல்வ, ராஜீய நீதி நிலவும்படியான சமூக ஒழுங்கைக் கூடியவரை அமைத்து பரிபாலிப்பதனால், மக்களின் க்ஷேமத்தை வளர்க்க அரசாங்கம் முயற்சி செய்யவேண்டும். பிந்திய பிரிவுகளில் எவ்வகைகளில் முயற்சி செய்யவேண்டும் என்பது விவரிக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசியல் ஷரத்துக்களை ஜீவாதார உரிமைகளைப் போல் சோர்ட்டு மூலம் அமுல் செய்ய முடியாது, ஆனால் இவை ஆட்சி முறைக்கு அடிப்படையானவை, சட்டங்களை இயற்றுவதில் இந்த தத்வங்களைப் பொருத்துவது அரசாங்கத்தின் கடமையாகும். அரசியலில் கண்ட இதர ஷரத்துக்கள் பார்லிமெண்டு முறைப்படி ராஜீய ஜனநாயகத்தை ஏற்படுத்த அநுகூலமானவை, இந்தத் தலைப்பில் கண்ட ஷரத்துக்கள் பொருளாதார ஜனநாயகத்தை ஸ்தாபிக்க வழிகாட்டிகள். சமூகச் செல்வ நிலையில் நீதியை (நியாயத்தை) ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்று எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள், ஆனால் லட்சியத்தை அடையவேண்டிய முறைகளைப் பற்றி அபிப்பிராயங்கள் பலவிதமாக இருக்கின்றன ; அடிக்கடி சந்தர்ப்ப, சமய மாறுதல்களால் முறைகளையும் மாற்றவேண்டி வருகிறது. ஆகவே லட்சியத்தை நோக்கிச் செல்லும் மார்க்கங்களில் முயற்சி செய்யவேண்டும் என்று பொதுப் படையாகத்தான் கூறமுடியும், நிறைவேற்ற வேண்டும் என்று கட்டளையிடுவது யுக்தமல்ல என்று டாக்டர் அம்பேத்கார் அரசியல்

நிர்ணய சபை விவாதத்தில் சொன்னார். இந்த ஷரத்துக்கள் கோர்ட்டில் அமுல் செய்யப்பட லாகாது போனாலும், சர்க்காரின் நடவடிக்கைகளையும் சட்டங்களையும் கண்டிக்கவும் பரிசோதித்துப் பார்க்கவும், தேர்தல் காலத்தில் சர்க்கார் கட்சியின் சாதனைகளை மதிப்பிடவும் உபயோகம் உள்ளவை.

முக்கியமாக அடியிற்கண்ட விஷயங்களில் பிரஜைகளுக்கு உரிமைகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அரசாங்கக் கொள்கை இருக்கவேண்டும்—ஆண்களும் பெண்களும் பிரஜைகளுக்குப் போதிய ஜீவனோபாயம், பொருள் வசதிகளின் உடைமையையும் கட்டுப்பாட்டையும் பொது நன்மைக்கு உகந்த வகை வகையில் விநியோகம் செய்வது, செல்வமும் உற்பத்தி சாதனங்களும் சிலர்களிடத்தில் ஒருமிக்கச் சேர்ந்து பொது மக்களுக்கு ஹானி ஏற்படாதபடி பார்த்துக்கொள்வது, ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம வேலைக்கு சம ஊதியம், வயதுவந்த தொழிலாளர்களின் தேக வலிமையும் ஆரோக்கியமும், குழந்தைகளின் இளமைப் பருவமும் சீரழிக்கப்படல் ஆகா, அவரவர் வயதிற்கோ வலிமைக்கோ தகாத வேலைகளில் வறுமையின் கொடுமையால் ஈடுபடுவதைத் தடுப்பது, சுரண்டப் படுவதிலிருந்தும் நாதியற்று விடப்படுவதிலிருந்தும் குழந்தைகளையும் சிறுவர்களையும் காப்பாற்றுதல், வயதுகாலம், தேகஉபாதி, வேலைசெய்ய முடியாமை இக்காரணங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிக்கும், அரசாங்கம், தனது செல்வ நிலைக்குத் தக்கபடி ஏற்பாடு செய்ய வேண்டும்.

நியாயமானதும் மானிடருக்கு உகந்ததுமான வேலை நிபந்தனைகளையும், பிரசவகாலத்தில் ஸ்த்ரீகளுக்கு உதவியையும் உரியதாக்க அரசாங்கம் சட்டங்கள் செய்யவேண்டும். எவ்வித வேலை செய்பவருக்கும் ஜீவிய ஊதியம், சரியான வாழ்க்கைத் தரத்தையும், ஒய்வு நேரத்தையும் சமூக, கலாசார சந்தர்ப்ப வசதிகளை அனுபவிப்பதையும், உத்தரவாதம் செய்ய சர்க்கார் முயற்சி செய்யவேண்டும்.

ஒரே ஸிவில் சட்டம்

நாடு முழுதிலும் ஒரே விதமான ஸிவில்கோடு (சொத்து உரிமைகள் வகைரா சம்பந்தமான சட்டத் தொகுப்பு) ஏற்பட முயற்சி வேண்டும்.

இலவச ஆரம்பக் கல்வி

ஒவ்வொரு பிரஜைக்கும் இலவச ஆரம்பக்கல்விக்கு பாத்தியம் உண்டு. அரசியல் ஆரம்பத்திலிருந்து பத்து வருஷங்களுக்குள் எல்லாக் குழந்தைகளுக்கும் (14 வயது முடியும்வரை) கட்டாய ஆரம்பக் கல்வி புகட்ட முயற்சி செய்யவேண்டும்.

முன்னேற்ற மில்லாத வருக்கு வசதிகள்

தென்பில்லாத பிரிவினர்களுக்கு. முக்யமாக ஹரிஜனங்களுக்கும் பூர்வீகக் குடிகளுக்கும் கல்வி, பொருளாதாரத் துறைகளில் வசதிகள் செய்வது, சமூக அநீதியிலிருந்து காப்பாற்றுவது, அரசாங்கத்தின் கடமைகள்.

முதன்மையான கடமைகள்—ஜனங்கள் உட்கொள்ளும் உணவுத் தரத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவது, பொது மக்களின் ஆரோக்கியவாழ்வு, ஆரோக்கியத்துக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய மதுபானங்களைத் தடுப்பது. இதர பொறுப்புகள்—புராதன சின்னங்கள், சிலைகள் இவைகளைக் காப்பாற்றுவது;கிராமப்பிரதேசங்களில் தனிப்பட்ட முறையிலோ

இதர கடமைகள்

கூட்டுறவு முறையிலோ குடிசைத்தொழில்களின் அபிவிருத்தி, சர்க்கார் சேவைகளில் நீதி நிர்வாக இலாகாக்களைப் பிரிப்பது, விவசாயத்தையும் மிருக பரிபாலனத்தையும் நவீன முறைகளில் நடத்த ஏற்பாடு, ஜாதி பசுக்களையும் மாடுகளையும் அபிவிருத்தி செய்வது, அவைகளின் வதையைத் தடுப்பது, கிராமப் பஞ்சாயத்துக்களை போதிய அதிகாரங்களுடன் நிறுவல். பஞ்சாயத்துக்கள் ஆட்சியின் திறமையுள்ள உருப்புக்களாக விளங்க அவைகளுக்கு அவசியமான அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டும். இதை அனுசரித்து வரி விதிக்கவும் கிராம நிர்வாகத்தை நடத்தவும் அதிகாரங்களைக்கொண்ட பஞ்சாயத்துக்கள் சட்ட மூலம் ஐக்கிய மாகாணங்களில் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. சென்னையிலும் அம்மாதிரியான சட்டம் நிறைவேறி இருக்கிறது. சர்வதேச உறவுகளில் அரசாங்கம் செய்யவேண்டிய முயற்சி—சர்வதேச அமைதியையும் சமாதானத்தையும் வளர்ப்பது, தேசங்களுக் கிடையே நியாயமான கண்யமான உறவுகள், சர்வதேசச் சட்டத்திற்கும் ஒப்பந்தஙகளுக்கும் மதிப்பு, தேசங்களுக்கு இடையில் ஏற்படும் விவகாரங்களை மத்தியஸ்த மூலம் தீர்த்துக்கொள்வதை ஆதரிப்பது.

சர்க்கார் ஊழியங்கள்

நிர்வாகத்தின் அன்றாட வேலைகள் அநேக வித சர்க்கார் சேவகர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. 1935-ம் வருஷத்து இந்தியா கவர்ன்மெண்டு ஆக்டில் ஸர்விஸ்களைப் பற்றிய அத்தியாயம் மற்றெல்லாப் பகுதிகளை விட பெரிதாக இருந்தது. ஒவ்வொரு பிரிவும் நீண்ட, சிக்கலான ஷரத்துக்களைக் கொண்டது. ஸர்விஸ்களின் சம்பளங்கள், படிகள், ரஜா உரிமைகள், சேவா நிபந்தனைகள், ஒழுங்கு நடவடிக்கைகள் — இவைகளைப்பற்றி 240—278 பிரிவுகளில் விரிவான ஷரத்துக்கள் காணப்பட்டன. பிரிட்டிஷ் பார்லிமெண்டில் அரசியல் அமைப்பு சர்ச்சையில் இருந்த காலத்தில் இவ்விஷயம் பார்லிமெண்டின் கவனத்தைக் கவர்ந்த அளவு வேறெந்த விஷயமும் கவரவில்லை. இதற்குக் காரணம் இந்திய ராஜீய வாதிகளிடத்தில் பிரிட்டிஷ் ஸர்வீஸ்காரர்களுக்கு இருந்த அவநம்பிக்கைதான். இந்தியாவில் உயர்தர ஸர்விஸ்களின் சம்பளங்கள், பென்ஷன்கள், படிகள், ரஜா உரிமைகள், இவையெல்லாம் இந்நாட்டின் செல்வ நிலைமைக்குத் தக்கபடி இல்லை என்றும், பிரிட்டிஷாருக்குக் கொழுத்த சம்பளங்களும் சலுகைகளும் கொடுபட்டு வருமானங்கள் சுரண்டப்படுகின்றன என்றும், காங்கிரஸ் மகாசபை பல வருஷங்களாகச் சொல்லி வந்தது. புது ஆட்சியில் அதிகாரத்துக்கு வரக்கூடிய மந்திரிகள் தங்களுடைய உரிமைகளைக் குறைத்து விடுவார்கள் என்று அஞ்சி, பிரிட்டிஷ் சர்விஸ்காரர்கள் கிளர்ச்சி செய்து பார்லிமெண்டு அங்கத்தினர்களின் ஆதரவைப் பெற்று, மேலேகண்டபடி விரிவான பாதுகாப்புகளைப் பெற்றார்கள். உயர்தர சர்விஸ்களின் சேவா நிபந்தனைகள் சம்பந்தமாக, சட்டசபைகள் இயற்றும் சட்டம் எதாவது முந்தி வழங்கின நிபந்தனைகளுடன் ஒப்பிடுவதில், சர்விஸ்காரர்களுக்குப் பிரதிகூலமாயிருக்கும் அளவு செல்லாது. சிக்கன காரணமாக எந்த உத்யோகத்தையாவது எடுத்துவிட்டால் பாதிக்கப்பட்ட நபர் அல்லது நபர்

களுக்கு இந்தியா மந்திரி அல்லது கவர்னரால் நிர்ணயிக்கப்படும் நஷ்ட ஈடு அளிக்கப்படவேண்டும். இந்திய ஸிவில், மெடிகல், போலீஸ் சர்விஸ்களுக்கு நியமனங்களைச் செய்ய இந்தியா மந்திரிக்கு அதிகாரம் இருந்துகொண்டே வந்தது. தவிர, கவர்னர்-ஜெனரல் சுயேச்சாதிகாரத்தில் பார்க்கவேண்டிய அலுவல்கள் சம்பந்தமான உத்யோகங்களுக்கும், முக்கியமாக, பாதுகாப்பு, வெளிநாடு விவகாரங்கள், பாதிரியிலாகா, இவ்விலாகாக்களிலும், ஒதுக்கப்பட்ட பதவிகள் என்ற ஜாப்தாவில் கண்டவைகளுக்கும், நீர்ப்பாசன சம்பந்தமான உத்யோகங்களுக்கும். கவர்னர்-ஜெனரலே நியமனம் செய்யலாம். சட்ட சபைகளுக்கும் இந்திய மந்திரிகளுக்கும் இவைகளில் அதிகாரம் இல்லை. மேலும், மேலே கண்ட சர்விஸ்காரர் எவரும் இந்திய அதிகாரியின் உத்தரவின் பேரில் இங்கிலாந்திலுள்ள இந்தியா மந்திரிக்கு, அப்பீல் செய்து கொள்ளலாம்.

இந்திய சுதந்திர ஆக்ட் 1947

1947-ம் ௵த்து ஆக்டுப்படி இந்தியாவுக்கு சுதந்திரம் ஏற்பட்டதின் விளைவாக, 1935-ம் ௵த்து ஆக்டில் இந்தியா மந்திரியால் ஸிவில் சர்விஸ்களுக்கும் பதவிகளுக்கும் நியமனங்கள் செய்வதும், சில பதவிகளை ஒதுக்கி வைப்பதும் சம்பந்தமான ஷரத்துக்கள் ரத்து செய்யப்பட்டன. ஆனால் இந்தியா மந்திரியால் நியமிக்கப்பட்டவர்களும், சமஷ்டி கோர்ட்டு, ஹைகோர்ட்டு நீதிபதிகளும் அவரவர் விருப்பப்படி சுதந்திர இந்தியாவில் தொடர்ந்து முன்னிருந்த சேவா நிபந்தனைகள்படியே வேலை பார்க்க வசதி அளிக்கப்பட்டது. பிரிட்டிஷார் வாபசாகி அதிகார மாற்றத்தால் உயர்தர சர்விஸ்களிலிருந்து விலக இஷ்டப்பட்டவர்களுக்கு அவரவர் சேவா காலத்துக்குத் தகுந்த பென்ஷனைக் கொடுக்க இந்திய சர்க்கார் உறுதி அளித்தார்கள். இவ்வசதியை பயன்படுத்திக்கொண்டு உயர்தர சர்விஸ்களிலிருந்து பல பிரிட்டிஷாரும், சில இந்தியர்களும் விலகினார்கள். விலகின பிரிட்டிஷாருக்கும் 1947க்கு முந்தி விலகின பிரிட்டிஷாருக்கும் பென்ஷன்கள் பிரிட்டனில் கொடுபடவேண்டியவை, அவைகளுக்கு பிரிட்டிஷ் சர்க்கார் உறுதி அளித்திருந்தார்கள். இவை விஷயமாய் இந்தியாவுக்குள்ள சுவந்தை 1948-ம் வருஷத்தில் தீர்க்கப்பட்டது. யுத்த காலத்தில் இந்தியாவிலிருந்து ஏராளமான பொருள்களை பிரிட்டன் எடுத்துக் கொண்டது, யுத்தத்திற்கு வசதிகளும் பிரிட்டன் அடைந்தது.

அவைகளுக்காக பிரிட்டன் இந்தியாவுக்குக் கொடுக்க வேண்டிய கடன் ஆயிரம் கோடி ரூபாய்களுக்குமேல் இருந்தது. இதைத் தான் ஸ்டர்லிங் கடன் என்று சொல்கிறார்கள். பிரிட்டனில் கொடுபடவேண்டிய பென்ஷன்கள் சம்பந்தமாக உள்ள சுவந்தையை முதலீடு கட்டி, அத்தொகையை பிரிட்டன் கொடுக்க வேண்டிய ஸ்டர்லிங் கடனின் ஒரு பகுதியில் ஈடு செய்து, தீர்க்கப்பட்டது. ஆகவே மேற்கண்ட பென்ஷன்களைப் பற்றிய பொறுப்பு, இனி பிரிட்டிஷ சர்க்காரைச் சார்ந்தது.

சர்க்கார் சேவைகளுக்கு ஆள் எடுப்பது, சேவா நிபந்தனைகள்

1947ம் ௵ ஆகஸ்டு ௴ 15௳க்குப் பிறகு சர்க்கார் ஊழியங்களுக்கு ஆள் எடுப்பது, சேவா நிபந்தனைகள், இவையெல்லாம் சட்ட சபைகளின் ஆதிக்கத்தில் வந்துவிட்டன. மத்திய யூனியன் சேவைகள் விஷயமாய் இந்திய பார்லிமெண்டு சபைக்கு அதிகாரம், ராஜ்யங்களிலுள்ள உத்தியோகங்கள் விஷயமாக அந்தந்த ராஜ்யச் சட்ட சபைகளுக்கு அதிகாரம்.

பதவி காலம் சேவா நிபந்தனைகளுக்கு உறுதி

ஜனநாயக ஆட்சியில் மந்திரிகள் மாறிக்கொண்டிருப்பார்கள். தேர்தல்களில் வெற்றி பெறும் ராஜீயக் கட்சிகள் மாறும். ஆனால் அன்றாட நிர்வாகத்தை நடத்த சர்க்கார் ஊழியர்கள் ஸ்திரமாக இருக்கவேண்டும். ஒவ்வொரு கட்சியும் மாறும்பொழுது சர்க்கார் ஊழியர்களை மாற்றிக் கொண்டு போனால், பெருங்குழப்பம் ஏற்பட்டு நிர்வாகம் ஸ்தம்பித்து விடும். சர்க்கார் ஊழியர்கள் கட்சிப்பற்று இல்லாதவர்கள்; ஆதிக்கத்துக்கு வரும் சர்க்காரின் கொள்கைகளையும் கட்டளைகளையும் நிறைவேற்றிவைக்கக் கடமைப்பட்டவர்கள். ஆகவே அவர்களுடைய பதவிக் காலத்திற்கும் சம்பளங்கள், ரஜா போன்ற சேவா நிபந்தனைகளைப் பற்றியும் உறுதி வேண்டும்; இல்லாதவரை திறமையும் ஊக்கமும் குன்றிவிடும். ஆகவே ஸிவில் (ராணுவத்தைச் சாராத) பதவியில் இருப்பவர் எவரும் விசாரணை யன்னியில் பதவியிலிருந்து நீக்கப்படுவதோ, தாழ்த்தப்படுவதோ ஆகாது என்று அரசியல் சட்டம் கூறுகிறது. பாதிக்கப்படும் ஊழியருக்கு தகுந்த முகாந்திரங்களை எடுத்துக் காட்ட நியாயமான சந்தர்ப்பங்கள் அளிக்கப்படவேண்டும். ஆனால் குற்றச்சாட்டு ஏற்பட்டு தண்டனை அடைந்த ஊழியரை விசாரணை

யன்னியில் விலக்கலாம் அல்லது தாழ்த்தலாம். தவிர சில சந்தர்ப்பங்களில் ஊழியருக்கு விசாரணை வசதி அளிப்பது காரிய சாத்தியம் இல்லை என்று மேல் அதிகாரிக்குப்பட்டால், அந்த காரணத்தை எழுத்து மூலமாகப் பதிவுசெய்து ஒழுங்கு நடவடிக்கையை எடுத்துக்கொள்ளலாம்.

புது அரசியல்படி விதிகள் ஏற்படும்வரை, சர்க்கார் ஊழியங்களைப் பொறுத்த பழைய விதிகளே அந்தந்த ரக ஊழியங்களுக்குப் பொருந்தும்; ஆனால் இவ்வரசியல் ஷரத்துக்களுக்கு முரணில்லாத அளவுதான் செல்லும்.

சர்க்கார் ஊழியர்களின் பதவிக்காலம், சேவா நிபந்தனைகள் எப்படி ராஜீயக் கட்சிகளைப் பொறுத்து இருக்கலாகாதோ, அப்படியே, சர்க்கார் ஊழியங்களுக்கு நபர்களைப் பொருக்குவதற்கும் ராஜீயக்கட்சி சம்பந்தம் இல்லாத அதிகாரி வேண்டும். யூனியனுக்கு ஒரு பப்ளிக் சர்விஸ் கமிஷனும் ஒவ்வொரு ராஜ்யத்துக்கும் ஒரு பப்ளிக் சர்விஸ் கமிஷனும் இருக்கவேண்டும் என்று ஷரத்து இருக்கிறது. இரண்டு அல்லது மேற்பட்ட ராஜ்யங்கள் ஒரே கமிஷனை வைத்துக்கொள்ளலாம். ஒரு ராஜ்யத்தின் கவர்னர் அல்லது ராஜப் பிரமுகரால் வேண்டப்பட்டால், ஜனாதிபதியின் அனுமதியின் பேரில் யூனியன் பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் ஒரு ராஜ்யத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

பப்ளிக் சர்விஸ் கமிஷன்

யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷனின் தலைவரும் அங்கத்தினர்களும் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார்கள். கூடுமானவரை பாதி அங்கத்தினர்கள் பத்து வருஷ காலமாவது சர்க்கார் சேவையில் ஈடுபட்டவர்களாக இருக்கவேண்டும். கமிஷன் அங்கத்தினர்களின் எண்ணிக்கை, சிப்பந்திகள், அவர்களின் சேவா நிபந்தனைகள்—இவை ஜனாதிபதியால் விதிகள் மூலம் நிர்ணயிக்கப்படவேண்டும். ராஜ்ய கமிஷனைப் பொறுத்து நியமனங்களும் விதிகளும் ராஜ்ய கவர்னர் அல்லது ராஜப் பிரமுகரால் செய்யப்படவேண்டும். யூனியன் கமிஷன் தலைவர் பதவியிலிருந்து விலகிய பிறகு இந்திய சர்க்கார் அல்லது ராஜ்ய சர்க்காரின் கீழ் எவ்வித பதவியையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது.

அங்கத்தினரின் பதவிக்காலம், விலகும் வயது

பப்ளிக் சர்விஸ் கமிஷன் அங்கத்தினரின் பதவிக் காலம் ஆறு வருஷம்; மத்தியில், 65 வயது பூர்த்தியானால் யூனியன் கமிஷன் அங்கத்தினரும், 60 வயது பூர்த்தியானால் ராஜ்ய சர்விஸ் கமிஷன் அங்கத்தினரும் பதவியிலிருந்து விலகவேண்டும். பதவிக் காலம் முடியுமுன் அங்கத்தினர் பதவியைத் தானாக ராஜிநாமா செய்யலாம்.

பதவியிலிருந்து நீக்குதல்

பப்ளிக் சர்விஸ் கமிஷன் அங்கத்தினர் எவரும் ஒழுங்கீன நடவடிக்கையில் ஈடுபட்டார் என்ற குற்றத்துக்காக பதவியிலிருந்து ஜனாதிபதியால் நீக்கப்படலாம். அப்படி நீக்குமுன் அங்கத்தினரைப் பொறுத்த குற்றச்சாட்டு சுப்ரீம் கோர்ட்டுக்கு விசாரணைக்கு அனுப்பப்பட்டு, சம்பந்தப்பட்ட அங்கத்தினருக்கு வசதி யளித்து தகுந்த விசாரணை ஷை கோர்ட்டால் நடத்தப்படவேண்டும். அப்படிப்பட்ட விசாரணையின் முடிவாக, அவ்வங்கத்தினரைப் பதவியிலிருந்து நீக்கவேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டு ஜனாதிபதிக்கு யாதாஸ்து அனுப்பினால், அந்தத் தீர்ப்பின் முடிவை ஏற்றுக்கொண்டு, ஜனாதிபதி அவரை நீக்குவார். அப்படிப்பட்ட விசாரணை நடத்த ஏற்பாடு செய்வது முதல் சம்பந்தப்பட்ட அங்கத்தினரை ஜனாதிபதியோ, ராஜ்யக் கமிஷன் அங்கத்தினர் விஷயத்தில் கவர்னர் அல்லது ராஜப்பிரமுகரோ பதவியிலிருந்து தற்காலிகமாக நீக்கிவைக்கலாம்.

கூட்டு ரிஜிஸ்டர் கம்பெனியின் பங்குதார் முறையில் அல்லாது, மத்திய சர்க்கார் அல்லது ராஜ்ய சர்க்காருடன் ஒப்பந்தம் செய்யப்படும் வேலையில், சர்விஸ் கமிஷன் அங்கத்தினர், எவ்வகையிலாவது சம்பந்தப்பட்டாலாவது அக்கறை கொண்டாலாவது அவ்வித ஒப்பந்த வேலை மூலம் ஏற்படும் நன்மையல்லது லாபத்தில் பங்கு அடைந்தாலாவது, அவ்வங்கத்தினர் ஒழுங்கீன நடவடிக்கையில் ஈடுப்பட்ட குற்றம் செய்தவராகக் கருதப்படுவார்.

மேலும் அடியிற்கண்ட காரணங்களில் எதற்காகவும் சர்விஸ் கமிஷன் அங்கத்தினரை, பதவியிலிருந்து, ஜனாதிபதி நீக்கலாம்,— (1) இன்ஸால்வெண்டு என்று கோர்ட்டால் உத்தரவு ஏற்படுவது (2) பதவிக் காலத்தில் வேறு ஊதியமுள்ள உத்தியோ

யோகத்தில் ஈடுபடுவது (3) தேக உபாதி அல்லது மனோவியாதி காரணத்தால், ஜனாதிபதியின் அபிப்பிராயத்தில், வேலைக்கு லாயக்கில்லாமல் ஆவது.

யூனியன் வேலைகளுக்கு நியமனங்கள் செய்ய பரீட்சையும், இரண்டு அல்லது மேற்கொண்ட ராஜ்யங்களின் வேண்டுகோளின் பேரில் விசேஷ யோக்யதாம்சங்களைப் பெற்ற அபேட்சகர்களைப் பொறுக்கக் கூட்டுத் திட்டங்களையும் நிறுவி நடத்துவது, யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷனின் கடமைகள். ராஜ்ய சர்விஸ் கமிஷன் அந்த ராஜ்ய வேலைகளுக்கு நியமனம் செய்ய பரீட்சைகளை நடத்தவேண்டும். சம்பந்தப்பட்ட பப்ளிக் சர்விஸ் கமிஷனை அடியிற்கண்ட விஷயங்களைப் பொறுத்து யூனியன் அல்லது ராஜ்ய சர்க்கார் கலந்துகொள்ள வேண்டியது :—

பப்ளிக் சர்விஸ் கமிஷன்களின் கடமைகள்

(1) ஸிவில் உத்தியோகங்கள், பதவிகள் இவைகளைப் பூர்த்திசெய்ய அனுஷ்டிக்கவேண்டிய முறைகளும், தத்வங்களும் ;

(2) ஒரு சர்விஸ்ஸிலிருந்து மற்றொரு சர்விஸுக்கு மாற்றுவது, வரிசைக்கிரமத்தில் உயர்த்துவது. நியமனம், உயர்த்துவது, அல்லது மாற்றுவது சம்பந்தமாக அபேக்ஷகர்களின் தகுதிகள்.

(3) ஸிவில் சர்விஸ்களில் வேலை பார்க்கும் நபரைப் பொறுத்த ஒழுங்கு நடவடிக்கை, அதையொட்டிய விண்ணப்பங்கள் அல்லது மனுக்கள் ;

(4) சர்க்கார் வேலையில் ஈடுபட்டதின் காரணமாக ஏற்பட்ட செலவு தொகையை இந்திய அல்லது ராஜ்ய ஐக்கிய நிதியிலிருந்து கோருவது ;

(5) சர்க்கார் ஸிவில் உத்தியோகத்தில் ஈடுபட்டிருக்கையில் ஏற்பட்ட நஷ்டங்களுக்கு பென்ஷன் கோருவது.

வேறு விஷயம் எதைப் பொறுத்தாவது ஜனாதிபதி அல்லது ராஜ்யத்தின் கவர்னர் அல்லது ராஜப்பிரமுகர் குறிப்பு அனுப்பினால், அதைப்பற்றியும் சம்பந்தப்பட்ட கமிஷன்யோசனை கூற வேண்டும். சில விஷயங்கள் அல்லது உத்தியோகங்களைப் பொறுத்து பப்ளிக் சர்விஸ் கமிஷனைக் கலக்கவேண்டியது இல்லை, என்று ஜனாதிபதி அல்லது ராஜ்ய கவர்னர் அல்லது

ராஜப்பிரமுகர் விதிகளைச் செய்யலாம். முன்னேற்றமடையாத வகுப்பினர்களுக்கு சர்க்கார் ஊழியங்களில் ஸ்தானங்களை ஒதுக்குவது சம்பந்தமாகவும் பப்ளிக் சர்விஸ் கமிஷனைக் கலக்கவேண்டியது அவசியம் இல்லை.

ஜனாதிபதியால் செய்யப்படும் விதிகள் பார்லிமெண்டு சபைகள் முன்னும், ராஜ்ய கவர்னர் அல்லது ராஜப்பிரமுகரால் செய்யப்படும் விதிகள் ராஜ்யச் சட்டசபையல்லது சபைகள் முன்னும் ஆஜர் செய்யப்படவேண்டும்.

கமிஷன் அலுவல்களை விஸ்தரிக்க வசதி

யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷன் அலுல்களை விஸ்தரிக்க பார்லிமெண்டும், ராஜ்ய பப்ளிக் சர்விஸ் கமிஷனின் அலுவல்களை விஸ்தரிக்க ராஜ்யச் சட்டசபை அல்லது சபைகளும், சட்டமியற்றலாம். ராஜ்யத்திலுள்ள பப்ளிக் சர்விஸ் கமிஷன்களுக்கு ஸ்தல ஸ்தாபனங்களுக்கு நியமனங்கள் விஷயமான அலுவல்களையும் கொடுக்கலாம்.

செலவுகள் நிதியின் பேரில் பொறுப்பானவை

யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷன் அங்கத்தினர்களின் சம்பளங்கள், படிகள், பென்ஷன்கள், சிப்பந்திகளின் சம்பளங்கள், படிகள் பென்ஷன்கள், இந்தியாவின் ஐக்கிய நிதியின்பேரில் ஜவாப்தாரியான செலவுகள். அப்படியே ராஜ்ய கமிஷன சம்பந்தமான மேற்கண்ட இனச் செலவுகள் ராஜ்ய ஐக்கிய நிதியின்பேரில் ஜவாப்தாரியானவை.

வருஷாந்தர யாதாஸ்து

கமிஷன் வேலை சம்பந்தமாக, யூனியன் கமிஷன் பிரதி வருஷமும் ஜனாதிபதிக்கு யாதாஸ்து சமர்ப்பிக்கவேண்டும். அந்த யாதாஸ்தை, ஜனாதிபதி, பார்லிமெண்டு சபைகள்முன் ஆஜர் செய்விக்க வேண்டும். எந்த விஷயங்களில் கமிஷனனின் யோசனைகளை ஏற்றுக்கொள்ளவில்லையோ அவைகளுக்குக் காரணங்களை விளக்கும் குறிப்பையும் ஆஜர் செய்யவேண்டும். ராஜ்ய பப்ளிக் சர்விஸ் கமிஷனும், அதே மாதிரி, கவர்னர் அல்லது ராஜப் பிரமுகருக்கு வருஷாந்தர யாதாஸ்து அனுப்பவேண்டும். அதை மேலே கண்டபடி விளக்கக் குறிப்புடன் ராஜ்யச் சட்டசபை யல்லது சபைகள்முன் கவர்னர் அல்லது ராஜப்பிரமுகர் ஆஜர் செய்விக்கவேண்டும்.

தேர்தல்கள்

தேர்தல்கமிஷன்

தேர்தல்கள் சம்பந்தமான நடவடிக்கைகளை எல்லாவற்றையும் கவனிக்க ஜனாதிபதியால் தேர்தல் கமிஷன் நியமிக்கப்படும். அக்கமிஷனில், பிரதம கமிஷனர் ஒருவரும் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் எண்ணிக்கை கொண்ட இதர கமிஷனர்களும் இருப்பார்கள். கமிஷனர்களின் நியமன விஷயமாய் பார்லிமெண்டு சட்டம் இயற்றலாம். அப்படிப்பட்ட சட்டத்துக்குள்பட்டு, கமிஷனர்கள், ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார்கள். பார்லிமெண்டு சபைகள், ராஜ்யங்களிலுள்ள சட்டசபைகள் எல்லா சபைகளுக்கும் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்க வோட்டர்களின் ஜாபிதாக்களைத் தயார் செய்வது, தேர்தல்களை நடத்துவது, ஜனாதிபதி, உப-ஜனாதிபதி தேர்தல்களை நடத்துவது, தேர்தல்கள் சம்பந்தமான விவகாரங்களைத் தீர்க்க தேர்தல் மன்றங்களை நியமிப்பது,— இவை எல்லாம் கமிஷன் பார்க்கவேண்டிய அலுவல்கள். ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்கு முன்னாலும், பிந்தியும், ராஜ்யங்களில் மேல் சபைக்கு இரண்டு வருஷத்துக்கு ஒருமுறை தேர்தலுக்கு முன்னும், பிரதம தேர்தல் கமிஷனரைக் கலந்து கொண்டு பிராந்திய கமிஷனர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார்கள். கமிஷனுக்கு உதவியாக வேண்டிய சிப்பந்திகளை அவ்வப்போது ஜனாதிபதி அல்லது கவர்னர் அல்லது ராஜப் பிரமுகர் கொடுக்கவேண்டும்.

பதவி காலம்

தேர்தல் கமிஷனர்கள், பிராந்தியக் கமிஷனர்கள், இவர்களின் பதவிச் காலம், சேவா நிபந்தனைகளைப் பொறுத்து பார்லிமெண்டு சட்டம் இயற்றலாம், அப்படிப்பட்ட சட்ட ஷரத்துக்களுக் குள்பட்டு ஜனாதிபதியால் விதி மூலம் நிர்ணயிக்கப்படும்.

பிரதம தேர்தல் கமிஷனர், தேர்தல்கள் சம்பந்த அலுவல்களில் நீதி செலுத்தும் மேலான அதிகாரியானதால், அவருடைய அந்தஸ்து சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி அந்தஸ்துக்கு சமனாக பாவிக்

கப்படும். நியமிப்பது ஜனாதிபதியால் ஆனாலும், பதவியிலிருந்து நீக்குவது, சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிக்கு விதித்திருக்கும் முறைப்படி

அந்தஸ்து, பதவியிலிருந்து நீக்குவது

தான், அதாவது ஒழுங்கீனம் அல்லது திறமையின்மையைப் பொறுத்து பார்லிமெண்டு சபைகள் விசாரணை நடத்தி, குற்றச் சாட்டு ருஜுவானதாக மூன்றில் இரண்டு பங்கு பெருவாரி அங்கத்தினர்களின் ஆதரவுபெற்ற தீர்மானப்படி, ஜனாதிபதி நீக்கவேண்டும். பிரதம கமிஷனரின் சிபார்சு அன்னியில், இதர கமிஷனரையாவது பிராந்தியக் கமிஷனரையாவது பதவியிலிருந்து நீக்கக்கூடாது.

அரசியல் நகல் திட்டத்தில், அந்தந்த ராஜ்யச் சட்டசபைகளுக்குத் தேர்தல்களை கண்காணித்து நடத்த, அந்தந்த ராஜ்ய கவர்னரால் நியமிக்கப்பட்ட தேர்தல் கமிஷன் இருக்கவேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. அந்த ஷரத்துக்குப் பதிலாக அகில இந்தியாவின் தேர்தல்களை கவனிக்க ஒரே அதிகாரி இருப்பார். அவர் தான் பிரதம தேர்தல் கமிஷனர், எல்லாத் தேர்தல்கள் சம்பந்தமான நிர்வாகம் அவரிடம் இருக்கும்; பிராந்திய கமிஷனர்களும் அவருடைய சிபார்சின்பேரில் நியமிக்கப்படுவார்கள். இவ்விதம் செய்வது ராஜ்யங்களின் உரிமையைப் பறிப்பதாகும் என்று ஆட்சேபணை செய்யப்பட்டது. இதில் கவனிக்கவேண்டிய முக்ய விஷயம் என்னவென்றால், தேர்தல்கள் நேர்மையாக நடப்பதற்கு எது நல்லது என்பதுதான். தேர்தல்கள், பாரபட்சம், ஊழல்கள் இல்லாமல் நடப்பதற்கு, பிராந்தியப் பற்று இல்லாத ஒரு மத்திய அதிகாரியின் கீழ் நடத்துவது சுலபம்; தேர்தல் நடத்துவதில் ஓர்மையும் ஏற்படும். திருத்த முறையால் ஏற்படக் கூடிய நலன்களை கவனிக்கும்போது, ராஜ்யங்களின் அதிகாரங்களை எடுத்ததற்காக வருந்தவேண்டியது இல்லை.

கூட்டுத் தொகுதி

சட்ட சபைகளுக்குத் தேர்தல் தொகுதிகள், ஸ்தல பொதுத் தொகுதிகளாக இருக்கவேண்டும், அதாவது மதம், இனம் அல்லது ஜாதி காரணத்தால் எவரும் விலக்கப்படலாகாது. எல்லா சமூகத்தினரையும் கொண்ட பொதுத் தொகுதிகளாகும்.

ஏற்கனவே சொல்லியபடி, குடியிருப்பு இல்லாமை, சித்தஸ்வாதீனம் இல்லாமை, குற்றம் அல்லது ஒழுங்கீனமான அல்லது

வயது வந்தவருக்கு வோட்டுரிமை

சட்ட விரோதமான நடத்தை காரணமாக, சட்ட மூலம், தகுதியல்லவென்று கூறப்பட்டவர் நீங்கலாக; 21 வயது பூர்த்தியான ஒவ்வொரு பிரஜையும், பார்லிமெண்டில் ஜனப்பிரதிநிதி சபைக்கும் ராஜ்யங்களில் கீழ்சபைக்கும் நடக்கும் தேர்தல்களில், வோட்டுப் போட உரிமையுண்டு.

தேர்தல்கள் சம்பந்தமாக ஷரத்துக்கள்

அரசியல் சட்டத்துக்கு உள்பட்டு, சட்ட சபைகளுக்குத் தேர்தல்கள் சம்பந்தமாக பார்லிமெண்டு சட்டங்களை இயற்றலாம்; பார்லிமெண்டு சட்டங்கள் மூலம் ஏற்பாடு செய்யப்படாத விஷயங்களில், அந்தந்த ராஜ்யத்துக்கு அந்தந்த ராஜ்ய லெஜிஸ்லேச்சர் சட்டம் இயற்றலாம்.

தொகுதி நிர்ணய பிரச்னை

மேற்கண்ட ஷரத்துக்கள்படி, தொகுதிகளின் நிர்ணயம், தொகுதிகளுக்கு ஸ்தானங்கள் நிர்ணயிப்பது, இவை விஷயமாய் செய்யப்படும் சட்டம் செல்லுபடியா அல்லவா என்ற பிரச்னை எந்தக் கோர்ட்டிலும் எழுப்பலாகாது.

சட்ட சபை தேர்தல் விவகாரங்கள்

சட்ட சபைகளுக்கு நடந்த தேர்தலை ஆக்ஷேபிக்கவேண்டுமானால் தகுந்த லெஜிஸ்லேசரால் (சட்ட மண்டலம்) இயற்றப்பட்ட சட்டத்தில் குறிப்பிட்ட முறைப்படியும் அதிகாரி முன்பும், தேர்தல் மனுவை தாகல் செய்யவேண்டும்.

அரசாங்க பாஷை

உலகத்திலே வேறெந்த அரசியல் சட்டத்திலும் அரசாங்க பாஷையைப் பற்றிய ஷரத்து கிடையாது. ஸ்விட்ஸர்லாந்து தேசத்தில் நான்கு பாஷைகள் வழங்குகின்றன; மத்திய பார்லிமெண்டுகளிலும் சுப்ரீம் கோர்ட்டிலும், நடவடிக்கைகள் நான்கு பாஷைகளிலும் அனுமதிக்கப்படுகின்றன. எந்த பாஷையிலும் பேசலாம். தெரியாதவர்களுக்கு மொழி பெயர்க்க உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். பார்லிமெண்டு சட்டங்களும் கோர்ட்டுத் தீர்ப்புகளும் நான்கு பாஷைகளிலும் பிரசுரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு மொழி பெயர்ப்பும் சட்ட பூர்வமானது. அந்தந்தப் பிரதேசங்களில் அந்தந்தப் பிரதேச பாஷை உபயோகப்படுத்தப்படுகிறது. இந்தியாவிலோ இந்த முறையை அனுஷ்டிப்பது சாத்தியம் இல்லை. முக்கியமான பாஷைகள் பத்துக்குமேல் இருக்கின்றன. ஆகவே தேசத்தில் ஒர்மையை ஏற்படுத்த பலப் பிரதேசங்களிடையே தொடர்புக்கு சவுகரியமான பொது பாஷை ஒன்று அவசியம். பொது பாஷையைப் பொருக்குவதில் தேசத்தில் அதிகப்படியான ஜனங்கள் பேசும் பாஷையைப் பொருக்குவதுதான் யுக்தம் என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள். இந்தியாவில் ஹிந்தி பாஷைதான் அதிகப்படியான மக்களால் பேசப்படுவது; சுமார் 12 கோடி ஜனங்களின் பாஷையாகும். ஆகவே ஹிந்தியைப் பொது பாஷையாக ஏற்றுக் கொள்வதிலும் ஆட்சேபணை இருக்கமுடியாது.

ஆனால், ஹிந்தி அபிமானிகள் ஹிந்தியை உடனடியாக அரசாங்க பாஷையாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் ஆங்கிலத்திற்கு உடனே சீட்டுக் கொடுக்கவேண்டும் என்றும் பிடிவாதம் பிடித்து, அரசாங்க பாஷை ஷரத்து சம்பந்தமாக, அரசியல் நிர்ணய சபையில் இரண்டு மாத காலமாக காரசாரமான விவாதம் நடந்தது.

பிரிட்டிஷார், ஆட்சி புரிய ஆரம்பித்தது முதல், படிப்படியாக ஆங்கிலத்தை முக்கிய பாஷையாக ஏற்படுத்திவிட்டார்கள். கலாசாலைகளில் பாஷையைத் தவிர இதர விஷயங்கள் எல்லாம்

ஆங்கிலத்தில் கற்றுக்கொடுக்கப்பட்டன. உயர் நிலைப் பள்ளிகளிலும் சரித்திரம், பூகோள சாஸ்திரம் போன்றவை கூட ஆங்கிலத்திலேயே கற்றுக்கொடுக்கப்பட்டன. சென்ற 15 வருஷங்களாகத்தான் பள்ளிக்கூடங்களில் ஆங்கிலத்தைத் தவிர இதர விஷயங்கள் அந்தந்தப் பிரதேச பாஷையில் கற்றுக்கொடுக்க முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. சட்டங்கள் எல்லாம் ஆங்கிலத்தில் இருந்தன, பலான பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டாலும், சட்டப் பிரமாணம் உள்ளது ஆங்கிலத்திலுள்ளது தான். கோர்ட்டுக்களில் தீர்ப்புக்கள் ஆங்கிலததில் தான், ஆனால் பிரியாதுக்கள், மனுக்கள், சாட்சியம், தஸ்தாவேஜிகள் பலான பாஷைகளில் இருக்கலாம். 19,20 நூற்றாண்டுகளில் தான் உலகத்திலே விஞ்ஞானம், பொருளாதாரம், அரசியல் முதலிய சாஸ்திரங்களில் பிரமிக்கத் தகுந்த வளர்ச்சியும் முன்னேற்றமும் ஏற்பட்டன. இக்காலத்தில் நம் நாடு பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்ததால் எல்லா விஷயங்களும் நமக்கு ஆங்கில மூலம்தான் கிடைத்தன. மேலும், அரசாங்கத்தின் உதவி இல்லாததால், இந்திய பாஷை ஒன்றிலும் மறுமலர்ச்சி ஏற்பட்டு, போதிய கலைச் சொற்களைப் புகுத்தி விஞ்ஞானம், அரசியல், பொருளாதாரம் இத்துறைகளில் ஏற்பட்ட அபிவிருத்திகளையும் நுணுக்கங்களையும் விளக்கக் கூடிய பக்குவம் ஏற்படவில்லை. சென்ற 50 வருஷங்களாக வங்காளி பாஷை போற்றக்கூடிய முன்னேற்றம் அடைந்திருக்கிறது

ஹிந்தி பாஷையோ வெறும் நாடோடி பாஷை, இலக்கியத்திலே கலைச் சொற்களிலோ ஹீனஸ்திதியில் உள்ளது. துளசிதாஸ் ராமாயணத்தைத் தவிர சிறந்த காவியம் ஹிந்தியில் இருப்பதாகத் தெரியவில்லை. சென்ற 25 வருஷங்களாக ஹிந்தியைப் பரப், மகாத்மா காந்தி எடுத்துக்கொண்ட முயற்சிகளால், ஆங்காங்கு ஹிந்திப் பிரசார சபைகள் ஸ்தாபிக்கப்பட்டு, ஹிந்தி வழங்காதப் பிரதேசங்களில் ஹிந்தி படித்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்து இருக்கிறது. ஆனால் பாஷையோ வளர்ச்சி யடையவில்லை. ஹிந்திப் பிரசார சபையால் பிரசுரிக்கப்படும் புஸ்தகங்கள்பெரும்பாலும் வங்காளி பாஷையில் எழுதப்பட்ட கதைகள், நாடகங்களின் மொழி பெயர்ப்புக்களே. இதுவரை அரசாங்க உதவி இல்லாததால் இதரப் பிரதேசங்களில் ஹிந்தி பரவியிருப்பதும் திருப்திகரமாக இல்லை.

இந்த நிலைமையில் தான் ஹிந்தி பக்தர்கள் (வெறியர்கள் ?) ஆங்கிலத்தை விலக்கி அதன் ஸ்தானத்தில் உடனடியாக ஹிந்தியைத் திணிக்கவேண்டும் என்று பகீரதப் பிரயத்னங்கள் செய்தார்கள். இந்த சந்தர்ப்பத்தில் கலாசாலைகளில் கல்வி முறையைப் பற்றி விசாரிக்க ஸ்ரீ ராதாகிருஷ்ணன் தலைமையில் நியமிக்கப்பட்ட கமிஷன், நவீன சாஸ்திரங்களை போதிக்க எந்த இந்திய மொழியும் போதிய பக்குவத்தை அடையவில்லை, கலாசாலைகளிலிருந்து ஆங்கிலத்தை விரட்டினுல் விபரீத விளைவுகள் தான் ஏற்படும், மாணவர்களின் தேர்ச்சியின் தரம் படுமோசமாகிவிடும், என்று சந்தேகத்துக்கு இடமில்லாமல் அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள். அப்படியிருந்தும் ஹிந்திவாலாக்கள் விதண்டா வாதத்தை விடவில்லை. மேலும், அ. நி. சபை தயாரித்திருக்கும் அரசியல் சட்டம் ஆங்கிலத்தில் தான் தயாரிக்கப்பட்டுள்ளது. அரசியல் நிர்ணய சபையில் பெரும்பாலோர் ஆங்கிலத்தில் தான் பேசினுர்கள். நமது சட்டங்கள், அரசியல் சட்டமுள்பட, ஏற்கனவே பிரிட்டிஷார் அவ்வப்போது இயற்றிய சட்டங்களிலிருந்து வளர்ந்தவை; அரசியல், பிரிட்டிஷ் முறைகளைப் பல விஷயங்களில் பின் பற்றியிருக்கிறது. எல்லாக் கோர்ட்டுகளிலும் தீர்ப்புக்கள் ஆங்கிலத்தில் அளிக்கப்படுகின்றன. அரசாங்க இலாகாக்களில் கடிதப் போக்குவாத்தும் ஆங்கிலத்தில் தான் இருந்துவருகிறது. உடனடியாக வேறு பாஷையைக் கொண்டு வந்தால் பெருங்குழப்பம் உண்டாகி, நீதி செலுத்துவதன் தரமும், நிர்வாகத் தரமும் மிகவும் தாழ்ந்துவிடும். மேலும் நம் நாட்டில் ஏற்பட்ட ராஷ்ட்ரிய உணர்ச்சியும் ஒற்றுமையும் ஆங்கில பாஷையின் மூலம் தான் ஏற்பட்டன. இந்த வாதங்கள் எல்லாம் ஹிந்தி அபிமானிகளின் மனதில் ஏறவில்லை.

ஆங்கிலேயர்கள் நாட்டை விட்டு வெளியேறி விட்டாங்கள். ஆங்கில பாஷையையும் வெளியேற்று, என்று முரட்டுத்தனமகக் கோஷமிட்டுக் கொண்டு, அரசியல் நிர்ணய சபையின் காலத்தையும், வரிகொடுப்போர்களின் பணத்தையும் விரயம் செய்தவர்களும், காரிய சாத்தியமான விஷயங்கள் எவை என்று சிந்திக்காமல் பகுத்தறிவைப் பறிகொடுத்தவர்களுமான நபர்கள், காங்கிரஸ் கட்சியில் ஏறக்குறைய பாதிப் பேர் என்று அறிய, பரிதாபம் அடைகிறோம். அது மட்டுமல்ல எண்களைப் பொறுத்து நடந்த விவாதம் இப்பொழுது அனுஷ்டானத்திலுள்ள சர்வதே

எண்கள் இந்தியாவிலிருந்து உற்பத்தியானவை என்றதை அறியாமல், அரசாங்க ரிகார்டிகளிலும் கணக்குகளிலும் தெருக் கதவு வக்கங்களிலும், வியாபாரிகள் இதர நபர்களின் கணக்குகளிலும், தேசத்தில் எல்லா பாஷைப் புத்தகங்களிலும் பொறிக்கப்பட்டு. எழுதத் தெரியாதவர்கள்கூட பலபேர் புரிந்துகொள்ளும் வழமையிலுள்ள எண்களை நீக்கி, நாகரி எண்களைப் புகுத்த செய்யப்பட்ட முயற்சியை, ஹிந்தியைத் தாய் மொழியாகக் கொண்ட மக்களிலேயே பெரும்பாலோர் ஆதரித்திருக்க மாட்டார்கள் என்றே நம்புகிறோம். அரசியல் நிர்ணய சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஹிந்தி அபிமானிகளான இந்த 80 பிருஹஸ்பதிகளின் காட்டுவாதங்கள் ஜனங்களுக்கு அருவருப்பை உண்டாக்கின.

நீண்ட விவதாதத்துக்குப் பிறகு அரசாங்க பாஷையைப் பற்றி நிறைவேறிய சமரஸ ஷரத்தின் சாரம் வருமாறு—

1. தேவநாகரி லிபியில் எழுதப்படும் ஹிந்தி இந்தியாவின் அரசாங்க பாஷையாகும்; சர்வதேச எண்கள் உத்தியோக பூர்வமானவை.

2 ஆனால் நடை முறையில், மத்திய சர்க்காரிலும் சுப்ரீம் கோர்ட்டிலும், 15 வருஷ காலத்திற்கு ஆங்கிலமே தொடர்ந்து உபயோகப்படுத்தப்படும். பார்லிமெண்டிலும் ராஜ்யச் சட்டசபைகளிலும் இயற்றப்படும் சட்டங்கள், விதிகள், நிறைவேறும் தீர்மானங்கள் எல்லாம் ஆங்கிலத்தில்தான். இந்த கால அளவை (15 வருஷம்) பார்லிமெண்டு நீடிக்கலாம்; ஷை காலத்திற்குள், ஆங்கிலத்தோடு ஹிந்தியையும் சர்வதேச எண்ணோடு நாகரி எண்களையும் குறிப்பிட்ட அரசாங்க காரியங்களுக்கு உபயோகப்படுத்த, ஜனாதிபதி உத்தரவு செய்யலாம்.

3. (a) மத்திய சர்க்காரின் அலுவல்களிலும் கோர்ட்டு நடவடிக்கைகளிலும், ராஜ்யங்களிடையே கடிதப் போக்குவரத்திலும், ஹிந்தியையும் தேவநாகரி எண்களையும் பரப்புவதற்கு அனுஷ்டிக்க வேண்டிய முறைகளைப் பற்றி சிபார்சு செய்ய, புது அரசியல் அமுலுக்கு வந்த தேதியிலிருந்து ஐந்து வருஷ முடிவிலும் பிந்தி பத்து வருஷ முடிவிலும், ஒரு கமிஷனை ஜனாதிபதி நியமிக்கவேண்டும். அந்தக் கமிஷனில் சம்ஸ்கிருத பாஷையுள்பட முக்கிய இந்திய பாஷைகளின் பிரதிநிதிகள் இருப்பார்கள்.

தொழில்கள், கலாசாரம், விஞ்ஞானம் இத்துறைகளில் இந்தியா அடைந்திருக்கும் முன்னேற்றத்தையும், சர்க்கார் ஊழியங்களில் ஹிந்தி யல்லாதப் பிரதேசங்களின் நியாயமான பாத்தியங்களையும் கவனித்து, கமிஷன் தனது சிபார்சுகளை சமர்ப்பிக்கவேண்டும். அச்சிபார்சுகளை, பார்லிமெண்டு அங்கத்தினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் 30 அங்கத்தினர்களைக் கொண்ட கமிட்டி பரிசீலனை செய்து ஜனாதிபதிக்கு யாதாஸ்து சமர்ப்பிப்பார்கள்; அதன்பேரில் யுக்தமான உத்தரவுகள் ஜனாதிபதியால் பிறப்பிவிக்கப்படும்.

4. ராஜ்யங்களிலும் ஹைகோர்ட்டுகளிலும் மத்திய சர்க்காரில் உள்ளதுபோல் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கும்;

(a) ஆனால் எந்த ராஜ்யமும் தனது உத்தியோக காரியங்களுக்காக ஹிந்தியையோ, இதர பாஷையையோ உபயோகிக்க உரிமை உண்டு, வேறு ராஜ்யத்துடன் கடிதப் போக்குவரத்துக்கும் அந்த ராஜ்யத்தின் சம்மதத்துடன் அப்படிப்பட்ட பாஷையை உபயோகிக்கலாம்.

(b) அப்படி ஒரு ராஜ்யம் செய்யும் பொழுது ராஜ்யத்தில் பேசப்படும் இதர பாஷையையும் எதையாவது, உத்யோகபூர்வமான பாஷயாக எற்க ஜனாதிபதி கட்டளை பிறப்பிவிக்கலாம்;

(c) ஹிந்தி யல்லது வேறு பாஷைகள் எந்த ராஜ்யத்தாலாவது எற்கப்பட்டால், சட்டங்கள் முதலியவைகளின் உத்தியோக பூர்வமான ஆங்கில மொழிபெயர்ப்பும் பிரசுரிக்கப்படவேண்டும், அம்மொழிபெயர்ப்பு கவர்னரால் அத்தாட்சி செய்யப்படவேண்டும்.

(d) ராஜ்யங்களில் ஹைகோர்ட்டுகளில் நடவடிக்கைகள் ராஜ்ய பாஷையில் அனுமதிக்கப்பட்டாலும், தீர்ப்புக்கள், டிக்கிரிகள், உத்தரவுகள் ஆங்கிலத்தில் இருக்கவேண்டும்.

5. ஹிந்தியைப் பரப்புவதும் இந்தியாவின் பல கலாச்சாரங்களைப் பிரதிபலிக்கும் வகையில் இதர பாஷைகளிலிருந்து முக்கியமாக சம்ஸ்கிருதத்திலிருந்து வார்த்தைகளைச் சேர்த்து

ஹிந்தி பாஷையை அபிவிருத்தி செய்வதும் அரசாங்கத்தின் கடமையாகும்.

மேலே ஐந்தாவது பாராவில் கண்ட விஷயத்தை மட்டில் கண்டும், 10,15 வருஷங்களுக்குப் பிறகு ஹிந்தி அடைந்திருக்கும் வளர்ச்சியையும் பக்குவத்தையும் பரிசீலனை செய்து அரசாங்க பாஷையாக ஏற்றுக்கொள்ளப்படுவது கவனிக்கப்படும் என்னும், அரசியல் சட்டத்தின் நான்காவது பாகத்தில், அரசாங்கத்தின் வழிகாட்டி சித்தாந்தங்களில் ஒரு ஷரத்தாக நிறைவேற்றியிருந்தால், பொருத்தமானதாகவும் மெச்சத்தக்கதாகவும் இருந்திருக்கும். அரசாங்க பாஷையைப்பற்றிய ஷரத்து நீண்டதான அரசியல் சட்டத்திலேயே மிக சிக்கலான ஷரத்தாக அமைந்துள்ளது. பலவித அபிப்பிராயங்களை சரிக்கட்டும் வகையில் ஏற்பட்டிருக்கிறது.

குறிப்பு :—சமீபத்தில் தினசரிப் பத்திரிகைகளில் இந்தோனீசியாவின் அரசியலைப் பற்றி வெளியான செய்தியிலிருந்து, அவ்வரசியலிலும் அரசாங்க பாஷையைப் பற்றி ஷரத்து சேர்த்து இருப்பதாகத் தெரிகிறது.]

வட இந்தியாவில் வழங்கும் பாஷைகளுக்கும் ஹிந்திக்கும் சம்ஸ்கிருதபாஷை மூலம் தொடர்பு உள்ளது. வட இந்தியாவில் ஹிந்தி பரவுவது கடினம் அல்ல. திராவிட பாஷைகளான தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் பேசப்படும் தென்னிந்தியாவில் ஹிந்தி பரவுவது சுலப மல்ல. தமிழ் நாட்டில் ஒரு சாரார் ஹிந்தி பரவுவதை எதிர்க்கிறார்கள். ஆகையால், தென்னாட்டில் ஹிந்தி பரவுதலுக்கு அனுகூலமான வகையில், கலைச்சொற்களும் புதிய வார்த்தைகளும் ஹிந்தி பாஷையில் அமைக்கப் படவேண்டும். மொகலாய ஆட்சியின் விளைவாக, பல பாரசீக ஹிந்துஸ்தானி வார்த்தைகள் நம் நாட்டு பாஷைகளில் கலந்துவிட்டன; முக்யமாக ஆட்சி நிர்வாகத்தில் உபயோகப் படுத்தப்படும் சொற்கள். உதாரணங்களாக, சர்க்கார், ஜில்லா, தாலுக்கா, இலாகா, மசோதா போன்ற பதங்களைக் குறிப்பிடலாம். பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில், ரயில், கோர்ட்டு, ஆஸ்பிடல் போன்ற பதங்கள் மக்கள் பாஷைகளில் இடம் பெற்று விட்டன. இவ்வித சொற்களையும் தென்னாட்டில் வழமையில் உள்ள சம்ஸ்கிருத வார்த்தைகளையும், பொது பாஷையான ஹிந்தியில் ஏற்றுக் கொண்டால்,

தென்னிந்தியாவிலும் ஹிந்தி சுலபமாகப் பரவக்கூடும், எதிர்ப்பையும் சமாளிக்கலாம். அரசியல் சட்டத்தில் உள்ள 'ஆங்கிலச் சொற்களுக்கு ஹிந்தி வார்த்தைகளை நிர்ணயிக்க இந்திய சர்க்கார் ஒரு கமிட்டியை நியமித்தார்கள்; இக்கமிட்டி பொருக்கி எடுத்திருக்கும் வார்த்தைகள் ஹிந்தியின் வளர்ச்சியை எளிதாக்கும் வகையில் இல்லை, என்றே சொல்லவேண்டி இருக்கிறது.

திருத்தங்களும் விளக்கங்களும்

பக்கம்

95 பிரான்ஸ் தேசத்து அரசியல் திருத்த முறை, 1946-ம் ஞூ முன் பிரான்ஸில் வழங்கிய அரசியல் படி, 95 வது பக்கத்தில் கண்டு இருக்கிறது. இப்பொழுது அமுலிலுள்ள நான்காவது குடியரசு அரசியல் சட்டப்படி, அரசியல் திருத்த முறை கடினமாக்கப்பட்டு உள்ளது. பார்லிமெண்ட் சபை ஒவ்வொன்றிலும் ஐந்தில் மூன்று பங்கு பெருவாரி வேண்டும், அதற்குக் குறைந்த ஆதரவு இருந்தால் பொது ஜனங்களின் வோட்டுக்கு விடப்படவேண்டும்.

115—6 ஐரிஷ் குடியரசில் மேல் சபையான ஸெனேட் சபையின் அமைப்பு முந்திய சட்டப்படி சரி. புதிய திருத்தப்படி மேல் சபையின் 60 அங்கத்தினர்களில் 11 பேர் நியமிக்கப் படுகிறார்கள், பாக்கி நபர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். தேர்தல் ஸ்தானங்களில் ஆறு, இரண்டு சர்வகலாசாலைகளால் பூர்த்தி செய்யப் படுகின்றன. தேர்தல் மூலம், தொழில்களுக்குப் பிரதிநிதித்வம் அளிக்க, சட்ட மியற்ற வசதி இருக்கிறது. அங்கத்தினராக வர ஏற்கனவே விதிக்கப்பட்ட விசேஷ யோக்கியதாம்சங்கள் எடுபட்டு, கீழ்சபை அங்கத்தினருக்கு வேண்டிய யோக்யதாம்சங்களே விதிக்கப்பட்டு உள்ளன.

115 இதாலி தேசத்து மேல் சபையின் அமைப்பு யுத்தத்துக்கு முன்னிருந்த அரசியல் படி, சரி. புது அரசியல் படி மேல் சபையும் தேர்ந்தெடுக்கப் படுகிறது. நிதி விஷயங்கள் உள்பட எல்லாவிஷயங்களிலும், கீழ் சபைக்குள்ள அதிகாரங்கள் மேல் சபைக்கு உண்டு.

178 ஜீவாதார உரிமைகளை அமுல் செய்ய ஹேபியஸ் கார்பஸ், மான்டேமஸ் போன்ற கட்டளைகளைப் பிறப்பிக்க சுப்ரீம் கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு; ஹைகோர்ட்டுகளுக்கும் அவ்வித அதிகாரம் உண்டு.

178 ஹேபியஸ் கார்பஸ் (Habeas Corpus) காவலில் வைக்கப்பட்டிருக்கும் நபரை கோர்ட்டுமுன் ஆஜர் செய்விக்கக்கட்டளை. மான்டேமஸ் (Mandamus) சர்க்கார் அதிகாரிஅல்லது ஸ்தல ஸ்தாபனத்திற்கு, அல்லது சட்டப்படி ஏற்பட்டுள்ள அதிகாரி அல்லது ஸ்தாபனத்திற்கு அல்லது கீழ்கோர்ட்டுக்கு, சுப்ரீம் கோர்ட்டு அல்லது ஹைகோர்ட்டு, குறிப்பிட்ட காரியத்தைச் செய்ய பிறப்பிக்கும் கட்டளை. ஸர்டியோரேரை (Certiorari) கீழ் கோர்ட்டு அல்லது அதிகாரி முன்னுள்ள நடவடிக்கைகளைப் பற்றிய ரிகார்டுகளைத் தருவிக்க மேல் கோர்ட்டு பிறப்பிக்கும் கட்டளை. தடை (Prohibition) கீழ் கோர்ட்டு அல்லது அதிகாரி முன்னுள்ள நடவடிக்கையை மேல் நடத்தாமல் இருக்க மேல் கோர்ட்டு அனுப்பும் கட்டளை. கோ வாரண்டோ (Quo Warranto) அதிகாரி யல்லது உத்தியோகஸ்தர் எந்த அதிகாரப்படி குறிப்பிட்ட அதிகாரத்தைச் செலுத்தினார் என்று தெரிவிக்க பிறப்பிக்கப்படும் கட்டளை.

104 அட்டார்னி ஜெனரல்—யூனியன் மத்திய சர்க்கார் சட்ட ஆலோசகர்.

108 அட்வொகேட் ஜெனரல்—ராஜ்ய சர்க்கார் சட்ட ஆலோசகர்.

180 செஷன் — பார்லிமெண்டு சபைகள் அல்லது சட்டசபைகள் தொடர்ந்து கூடும் காலம்.

138 சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகளை நியமிப்பதில், ஜனாதிபதி, தனக்கு யுக்தம் என்றும் தோன்றும், சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகளையும் ஹைகோர்ட்டுகளின் நீதிபதிகளையும் கலந்து கொள்வார்: எல்லா நீதிபதிகளையும் கலந்து கொள்ள வேண்டும் என்று விதி கிடையாது.

149 2, 3 வரிகள் - கீழ் வரிசை நீதி உத்யோகங்களைப் பூர்த்தி செய்வதில் பப்ளிக் சர்விஸ் கமிஷனை மட்டுமல்லாமல், ஹைகோர்ட்டையும் கவர்னர் கலந்து கொள்ளவேண்டும்.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
69	14	18-7-49	18-7-47
72	24	வசதிகள்	வசதிகளைப்
78	1	...	"விஷயங்களுமே" என்ற வார்த்தைக்குப் பிறகு காமாவும் (comma), "அவை" என்பதற்குப் பிறகு முற்றுப் புள்ளியும் இருக்கவேண்டும்.
84	22	எல்லைகள்	எல்லைகளை
86	15	அவர்கள்	அவர்களின்
	16	இருக்கிறது	இருக்கின்றன
92	6	306	360
106	26,29	மாத்து	மாற்று
116	21	,,	,,
128	3	,,	,,
148	3	Coflict	Conflict
149	3	கெய்யப்படும்	செய்யப்படும்
155	29	வசூலித்கு	வசூலித்து
168	9,10	முகம்மதியார்களுக்கு	முகம்மதியர்களுக்கு
170	கடைசி	அபிப்ராயப்பட்டால்	அபிப்பிராயப்பட்டால்
181	15	சம்பந்தம்	சம்மதம்
182	30	யோசளை	யோசனை
184	14	விசாரனை	விசாரணை
186	8	கொள்சை	கொள்கை
192	13,14	அங்கத்திருக்கு	அங்கத்தினருக்கு

623.

இந்தப் புத்தகம்

●

இந்திய அரசியல் அமைப்பை சரள மான தமிழ் நடையில் தெளிவாகவும் சுருக்கமாகவும் நேரிய முறையில் எடுத்துக் கூறுகிறது இந்தப் புத்த கம்.... அரசியல் அமைப்பின் முக்கிய மான ஆதாரதத்துவங்களைப் பூர்ண மாக எடுத்துக் காட்டி அதன் முக்கிய அம்சங்களைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருக்கிறார் இதன் ஆசிரியர்.

—எஸ். பஞ்சாபகேச சாஸ்திரி
ஹைகோர்ட் நீதிபதி

●

இது சக்தி வெளியீடு

Wrapper printed at Shanti Press, Madras-1